









# இந்து ஒளி

தீபம்: 21 சுடர்: 9

HINDU OLI




## இந்து ஒளி 21வது ஆண்டுப்பூர்த்தி சிறப்பிதழ்

## 2016 - 2017

ஏவிளம்பி வருடம் மார்கழி
December 2017 - January - 2018

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

# வளர்ச்சிப் பாதையில் இந்து ஒளி



உ
சிவமயம்
# இந்து ஒளி
தீபம் - 21 சுடர் - 09
ஏவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 29ஆம் நாள் (13.01.2018)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்,
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே!

### திருவாசகம்

குறைவி லாநிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடங் கொண்டாய்
இனியுனை என்னிரக் கேனே

### திருவிசைப்பா

செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்ட
அன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே
அத்தனே பித்தனே னுடைய
சம்புவே அணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே எங்கும் ஒழிவற நிறைந்தேழ்
இருக்கையில் இருந்தவா றியம்பே.

### திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள்
சோதித்ததூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில
தேவர்சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி

திருச்சிற்றம்பலம்

## நிரந்தரத் தீர்வுக்காக நித்தமும் காத்திருக்கும் நமது இனம்

இருபத்தொராம் நூற்றாண்டில் எங்கும் மனித உரிமைபற்றி பேசுகிறார்கள். எல்லா மனிதர்களும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று உலகளாவிய ரீதியில் உச்சரிக்கப்படுகிறது. மதம், மொழி, இனம் கடந்து உலகில் மனிதம் என்ற தன்மை வளர்ச்சி பெற்றுவிட்டது. அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் அரசியலில் ஈடுபடுபவர்களின் தொகை அரிதாகிக்கொண்டிருக்கிறது. அகதிகளாகச் சென்று புலம்பெயர் நாடுகளில் பிரஜாவுரிமை பெற்றவர்கள் அந்நாட்டு தேர்தலில் நிற்பதற்கு உரிமைபெற்றிருக்கிறார்கள். தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிப்பீடங்களிலும் உள்ளார்கள். ஆனால், எம் மண்ணில் மனிதர்களுக்குரிய அடிப்படை உரிமைகளே சமமாகக் கிடைப்பதில்லை

நீண்டகாலமாக அடக்குமுறைகளினாலும், போரின் அனர்த்தங்களினாலும் அல்லற்படும் சமூகமாக தமிழினம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஒரு சிறிய நாடு இலங்கை. இயற்கைவளம் இனிதாய் உள்ள நாடு. இங்கு இரு பிரதான சமயங்கள் ஆதிக்குடிகளாக உள்ளன. பௌத்தமும் இந்து மதமும் பின்னிப் பிணைந்தவை. பாரத பூமியில் இம்மதங்கள் பிறந்தவை. ஆனால் இன்று சொல்லொணாத் துயரங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக இந்து மதத்தவர்கள் விளங்குகிறார்கள். போர் முடிந்தும் உரிமையும் கிடைக்கவில்லை, அச்சமும் தீரவில்லை. எத்தனை அரசுகளுடன் எம் இனம் பேசிவிட்டது. எத்தனை நாட்டவர்கள் எமக்கு உரிமை பெற்று தருவதாக சொல்லியும், கண்ட பயன் என்ன?

பற்று அற்றவர்களான துறவிகள் பலர் இந்நாட்டிலிருந்தும் எமக்குப் பயன் இல்லை. புத்த பகவானின் புண்ணியமான சிந்தனைகளை பலர் உணரவில்லை. எல்லாமே விசித்தரமாக உள்ளது. பல பொதுமக்கள் ஒற்றுமையாக வாழ விரும்புகிறார்கள். அரசியல்வாதிகள் உணர்ச்சிகரமாகப் பேசி பிரச்சினைகளைத் தீர்க்காது, எல்லாவற்றையும் பிற்போடுவதிலேயே காலத்தை செலவுசெய்கிறார்கள்.

மறுபக்கம் பார்க்க...

## வாழ்த்து

சீலமுந்திருவு மோங்கச் சிறப்புறு செல்வம் மேவச்
சாலவே சலன மெல்லாம் தரணிமேற் சாய்ந்துவீழ
ஆலமதுண்ட அண்ணல் அருளினாலறங்க ளோங்க
ஞாலமேலுயிர்க ளெல்லாம் நலமுடனினிது வாழ்க!

இந்நாட்டில் வாழும் இந்து மக்களின் தலையாய நிறுவனமாகிய அகில இலங்கை இந்து மாமன்றம் காலத்துக்குக்காலம் ஆட்சித் தலைவர்களிடம் அறைகூவல் விடுத்து வந்துள்ளது. எமது இனத்திற்குரிய பிரச்சினைகளைத் தீர்த்து, நிலையான அமைதியை ஏற்படுத்துங்கள் என விடுத்த வேண்டுகோள்கள் எதுவும் பயன்தரவில்லை. மாமன்றம், அமைதியான முறையில் எம் மண்ணில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, தலைவர்களை நாடி வேண்டுகோள்களை முன்வைத்த வண்ணமே உள்ளது. ஆட்சியில் இருந்தவர்கள் அறத்துக்கு மாறாக விடும் தவறுகளையும் மாமன்றம் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

எத்தனை வருடங்கள் நாம் காத்திருக்கிறோம். இம்மண்ணில் வாழ்வதைவிட, பிறநாட்டில் தஞ்சமடைவது மேலானது என பல ஆயிரம் உறவுகள் நாடு கடந்துவிட்டனர். இன்னும் மெல்ல மெல்ல நாட்டைவிட்டு நகர்ந்து கொண்டேயிருக்கிறார்கள். அழகான நாட்டில் ஆனந்தமாக, அமைதியாக வாழ்வதற்கு அரசியல்வாதிகள் ஒன்றுபட்டு ஒருமுடிவுக்கு வரவில்லை மனித மனங்கள் ஒன்றுபட்டால் எப்பிரச்சினைகளையும் தீர்க்கலாம். பகை வளர்வதனால் எதுவித பயனும் இல்லை. நம்பி நம்பி ஏமாந்து, நமக்கு ஏது வழி என்று காத்திருக்கும் மக்களுக்கு கடவுள்தான் துணை.

*குறிப்பு: இந்த இதழ் அச்சில் இருக்கும் போது, நாங்கள், மாமன்றஅறங்காவலர் சபைப் பிரதித் தலைவர் தேசபந்து தெ.ஈஸ்வரன் அவர்கள் மறைந்தசெய்தி கேட்டு வேதனையடைந்தோம்.*

*(24ம் பக்கத்தையும் பார்க்க)*

**இந்து ஒளி** | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

**இருபத்தொராவது ஆண்டுப் பூர்த்தி சிறப்பிதழ்**
**மார்கழி 2017**

ஆசிரியர் குழு : திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்

| | |
|---|---|
| *ஒரு பிரதியின் விலை* | ரூபா 100.00 |
| *வருடாந்தச் சந்தா (உள்நாடு)* | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| *வருடாந்தச் சந்தா (வெளிநாடு)* | US டொலர் 15 |

**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**தலைமையகம்:** 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை** : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk

*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*

**HINDU OLI** | *Publication of* HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS

TWENTY FIRST COMMEMORATIVE ISSUE
December 2017 - January 2018

**Editorial Board :** Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan

| | |
|---|---|
| Price | Rs. 100.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | US $ 15 (Including Postage) |

**ALL CEYLON HINDU CONGRESS**

Head Office: 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com

**Jaffna Office** : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**

**ISSN : 2012 - 9645**



# ஆன்மீகச் சுடரின் அருள்மடல்



## வாழ்க்கையின் நான்கு நிலைகள்



இந்து சமயம் என அழைக்கப்படும் தொன்மையான சனாதன தர்மத்தில் ஒரு மனிதனுடைய வாழ்க்கையை நான்கு நிலைகளாக வகுத்துள்ளனர். இதனை நான்கு ஆச்சிரம தர்மங்கள் என சொல்வார்கள். ஒரு மனிதன் பிறப்பு முதல் இறக்கும் வரை இந்த நான்கு ஆச்சிரமங்களையும் கடந்து செல்கிறான். ஆண், பெண் இருபாலாருக்கும் இது பொருந்தும்.

பிறப்பிலிருந்து முதல் இருபத்துநான்கு வருடங்களையும் பிரமச்சாரிய ஆச்சிரமம் என்று எமது சமயம் கூறுகிறது. பண்டைக் காலத்திலிருந்து இந்த ஆச்சிரமத்திலுள்ளோர் குருகுலங்களில் இணைந்து ஆன்மீகத்தோடு வாழ்வியல் கலைகளையும் கற்கிறார்கள். தமது பிற்கால வாழ்க்கைக்கு பயன்படும் வகையிலான வாழ்வியல் கலைகள் அனைத்தையும் இந்தப் பருவத்திலே பயின்று கொள்கின்றனர். இதனையே தற்காலத்தில் நாம் மாணவப் பருவம் என்கின்றோம். இருபத்துநான்கு வயதிற்கு முன்னர் கல்வி கற்றல் ஒருவருக்கு இயல்பாக வரும். அதன் பின்னர் கற்றல் என்பது சிறிது சிரமமாக இருக்கும். எனவே இந்த மாணவப் பருவத்திலுள்ளவர்கள் கல்வி கற்பதையும், தொழிற் பயிற்சிகள் பெறுவதையும் தமது முழுமையான இலக்காகக் கொள்ளவேண்டும். ஏனைய சுகபோகங்களில் கவனம் செலுத்தாது கல்வியிலும், தொழிற்பயிற்சிகளிலும் மனதை ஒருமித்தல் வேண்டும்.

இரண்டாவது கிரகஸ்த ஆச்சிரமம் எனப்படுகிறது. இது இருபத்து நான்கு முதல் நாற்பத்தெட்டு வயது வரையிலான காலமாகும். ஒருவர் முன்னர்பெற்ற கல்வியறிவையும் தொழிற்பயிற்சியையும் கொண்டு, ஒரு நல்ல தொழிலைச் செய்து, திருமண பந்தத்தில் இணைந்து பிள்ளைகளைப் பெற்று சகல இல்லற சுகங்களையும் அனுபவிக்கும் காலம் இது. இந்த கிரகஸ்த ஆச்சிரமத்திலுள்ளவர்களின் முக்கிய நோக்கம், தமது தொழிலை விருத்திசெய்து, இல்லற வாழ்வை சிறப்பாக நடத்தி, தமது பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்துப் பேணுவதாகும். இந்தக் காலப்பகுதி ஒரு குடும்பத் தலைவனுக்கும் தலைவிக்கும் மிகவும் முக்கியமானது. இந்தக் காலப் பகுதியில்தான் இவர்களை குடும்பத் தலைவன் குடும்பத் தலைவி என அழைக்கிறார்கள். அதன் காரணம் அவர்களின் பிள்ளைகள் பெற்றோருடன் தங்கியிருக்கிறார்கள். தங்களுடன் தங்கியிருப்பவர்களை நல்லமுறையில் பராமரிப்பது அவர்களது தர்மமாகும்.

நாற்பத்தெட்டு வயதிலிருந்து எழுபத்திரண்டு வயது வரையிலான காலப்பகுதி வானப்பிரஸ்த ஆச்சிரமம் என அழைக்கப்படுகிறது. இந்தக் காலப்பகுதியில் முழுமையான தங்கள் தொழிற்கருமங்களை படிப்படியாகக் குறைத்து, பெரும்பாலான பொழுதினை சமூகநல சேவைகளில் செலவிடுவதும், தாம் இளமையில் பெற்ற கல்வியறிவையும், வாழ்க்கையில் பெற்ற நல்ல அனுபவங்களையும் இளைய தலைமுறையினருக்கு வழங்கி அவர்களை நல்வழிப்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதும் வானப்பிரஸ்த ஆச்சிரமத்தை சார்ந்தவர்களின் தலையாய கடமையாகும். ஆலய தர்மகர்த்தா சபைகள் மற்றும் சமூகசேவை நிறுவனங்கள் என்பவைகளுடன் இணைந்து தமது அறிவையும் நேரத்தையும் கூடிய அளவு சமூகத்திற்கு பயன்படச் செய்யவேண்டியதும் இதேகாலப் பகுதியிலாகும்.

எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட காலப்பகுதியானது சந்நியாச ஆச்சிரமம் என சொல்லப்பட்டுள்ளது. இந்த ஆச்சிரமம் சார்ந்தோர் படிப்படியாக உலக மாற்றங்களையும் சமூகப் பொறுப்புக்களையும் குறைத்து, அதிக நேரத்தை ஆன்மீக வாழ்வில் செலவிடவேண்டும். தியானம், ஜெபம், திருமுறை பாராயணம், புராணப் படிப்பு, இறைவழிபாடு, திருத்தல யாத்திரை என்பன்வற்றை மேற்கொண்டு தமது வாழ்க்கையை முழுமையாகவே

மறுபக்கம் பார்க்க...

ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். சந்நியாச ஆச்சிரம காலத்தில் காடு சென்று தவம் செய்யவேண்டும் அல்லது மடங்களில் தங்கியிருந்து வாழவேண்டும் என்பதில்லை. அவர்கள் தமது வீடுகளில் இருந்தவாறு தாமரை இலையில் தண்ணீர்போல, குடும்ப பந்தங்களில் ஒட்டாமல் விலகியிருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையில் தலையிடாமல், ஆத்ம விருத்தியை குறிக்கோளாகக் கொண்டு வாழ்வதற்கு உரியகாலமே இதுவாகும். இந்த நிலையில் பிள்ளைகளும் தமது பெற்றோருக்கு இடையூறு கொடுக்காத வகையில், அவர்களது ஆத்ம வாழ்க்கைக்கு ஆதரவாக இருத்தல் வேண்டும்.

எமது மறுபிறவிக்கும், முத்திப்பேறுக்கும் ஆயத்தமாகும் காலமும் இதுவாகும். எந்தவிதமான சலனங்களும் இன்றி இறைசிந்தனையுடன் வாழவேண்டிய காலம். எமது முன்னோர்கள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே இந்த ஆச்சிரம தர்மங்களை வகுத்து, மனிதன் இவ்வாறு வாழவேண்டும் என சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். பண்டைய இந்த வழிமுறையானது தற்காலத்துக்கும் பொருந்தும்.

மாணவர்கள் சுகபோகங்களை பெரிதாகக் கருதாது, கல்வியில் முழுமனதையும் செலுத்தி ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டும். பின்னர் இல்லற வாழ்வில் சகல சுகங்களையும் அனுபவித்து தொழில்துறைகளிலும் வெற்றியீட்டி, தமது பிள்ளைகளையும் ஒரு நல்ல நிலைக்கு உருவாக்க வேண்டும். பின்னர் தாம் பெற்ற அறிவு, செல்வம் என்பனவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து சமூக மேம்பாட்டுக்கு உதவவேண்டும். இறுதிக் காலப்பகுதியில் தமது சகல புலன்களையும் இறைவன்பால் செலுத்தி, அந்திம காலத்திற்கும் ஆத்மவிருத்திக்கும் தம்மை ஆயத்தம் செய்யவேண்டும்.

நமது சமயம்கூறும் வாழ்க்கையின் நான்கு நிலைகளையும் முழுமையாக அனுபவித்து எமது கர்மவினைகளைப் போக்கி, தன்னையும் அறிந்து இறைவன் திருப்பாதம் சேருவதே நமது வாழ்க்கையின் குறிக்கோளாக அமையவேண்டும். இதுவே முன்னோர்கள் வகுத்த ஆச்சிரம தர்மத்தின் நோக்கமுமாகும். பரம்பொருள் எம்முள் இருந்து எம்மை வழிநடத்துவாராக!

**ரிஷி தொண்டுநாதன்**

# மாமன்றத்தின் தைப்பொங்கல் செய்தி



எமது மக்களின் தனித்துவமிக்க பண்டிகைகளுள் ஒன்றாக தைப்பொங்கல் பெருமைபெறுகிறது. தைமாதப்பிறப்பு நாளில் சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதன் ஊடாக இந்து மக்கள் தைப்பொங்கலை பக்திபூர்வமாக மட்டுமன்றி, தமிழர் திருநாள் என்ற வகையில் குதூகலமாகவும் கொண்டாடி மகிழ்வது வழக்கம். ஆனால் இன்றைய சூழல்நிலையில் உதயமாகும் தைத்திங்கள் தமிழ் மக்களுக்கு எவ்வகையிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தமுடியாத நிலையில் அமைந்திருக்கிறது.

இந்த நாட்டில் வாழும் இந்து மக்கள், குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சொல்லொணா வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் முகங்கொடுத்து எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் சொந்த வீடுகளிலிருந்து வெளியேறி சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழ்கிறார்கள். அதுவே அவர்களின் விதியாக அமைந்துள்ளது. அவர்களது பிரச்சினைகளை அரசாங்கமும் ஏனையோரும் மனிதாபிமான முறையில் அணுகவேண்டும் என்பதை காத்திரமாகக் கூறிவைக்க விரும்புகின்றோம் மேலும் தாமதியாது இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட முன்வருமாறு சகலருக்கும் அறைகூவல் விடுக்கின்றோம். தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் அரசியல் தீர்வு கிடைக்கும் வரை இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் எதிர்பார்க்க முடியாது.

இந்த நாட்டின் இந்து மக்களுக்கு விமோசனம் பெற்றுக் கொடுப்பதில் நல்லாட்சி அரசு இன்னும் எதிர்பார்த்த பங்களிப்பை வழங்காததையிட்டு இந்து மக்கள் பெரும் வேதனையடைகின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும். இந்து மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ்பேசும் மக்கள் தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கு மலரும் தை மாதத்திலிருந்து வழிபிறக்க வேண்டும். அதற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற பாரம்பரிய சொற்றொடரின்படி புதிய எதிர்பார்ப்புக்களையும் நம்பிக்கைகளையும் வைத்து தைத்திருநாள் வரவேற்கப்படுவது வழக்கம். மலரும் தைத்திங்களும் அவ்விதமாகவே அமைய வேண்டும் என்பதே இந்து மக்களது விருப்பமாகும்.

நாட்டின் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் - குறிப்பாக தமிழ் மக்களது துன்பகரமான நிலைமையை உணர்ந்து அவர்களது விமோசனத்திற்காக இந்து மக்கள் அனைவரும் தைத்திருநாளன்று இறையருள் வேண்டிப் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுக் கொள்ளுகின்றது.

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்துவந்த எல்லாவிதமான இன்னல்களும் முற்றாக நீங்கி, அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வொன்றின மூலம் அவர்களது வாழ்வில் மகிழ்ச்சியும் நிம்மதியும் விமோசனமும் கிடைப்பதற்கு மலரும் தைத்திருநாள் வழிவகுக்க வேண்டும் என ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்

**வே.கந்தசாமி**
பொதுச் செயலாளர்

# அன்னை சிவத்தமிழ்ச் செல்விக்கு சமர்ப்பணம்



*எம் மண்ணில் ஆன்மீகத் தாயாக விளங்கிய அன்னை, சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தொன்னூற்றி மூன்றாவது பிறந்தநாள் குறித்து பிரார்த்திக்கிறோம். தன் வாழ்நாள் முழுவதையும் சைவசமயத்திற்கும் தமிழ்மொழிக்காகவும் அர்ப்பணித்து அரிய சேவையாற்றிய அம்மையாரை அகில இலங்கை இந்து மாமன்றம் நீள நினைந்து போற்றுகிறது. ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கு அடைக்கலம் கொடுத்து, அவர்களை வாழவைத்த இவ் அன்னைக்கு யாம் என்ன கைமாறு செய்வோம்? தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தை பல வருடங்களாக தலைவராக இருந்து நிர்வகித்த அன்னையாரின் ஆத்மீகப்பணி தனித்துவமானது. சைவசமய பிரசங்கத்தின் ஊடாக பலரை ஆற்றுப்படுத்திய அன்னை உலகம் அறிந்த ஒருவராக நம் மத்தியில் வாழ்ந்தார். சொல்லாலும் செயலாலும் ஒன்றுபட்டு விளங்கிய அம்மையார் போர்க்காலச்சூழலில் பல அறப்பணிகளை முன்னெடுத்து வெற்றிகண்டவர். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கௌரவ உறுப்பினராக, புரவலராக விளங்கிய அம்மையாருக்கு எமது மாமன்றம் "தெய்வத்திருமகள்" என்ற கௌரவ பட்டத்தைச்சூட்டி பெருமையுற்றது. அம்மையாரின் நினைவாக மூன்று மலர்களை மாமன்றம் வெளியிட்டது. ஆண்டுதோறும் அம்மையாரின் நினைவாக தலைநகர் கொழும்பில் பிரார்த்தனை வைபவத்தை ஏற்பாடு செய்து, அவரை நன்றியோடு வாழ்த்தி வருகிறோம். 2008ஆம் ஆண்டு ஆனி மாதம் விசாக நட்சத்திரத்தில் அம்மையார் இறையடி சேர்ந்தார். அம்மையாரின் ஜனன தினம் 07.01.2018 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந் நாளை நினைவுகூர்ந்து இந்து மாமன்றத்தின் "இந்து ஒளி" 21ம் ஆண்டுப்பூர்த்தி மலர் அன்னைக்கு சமர்ப்பணமாக வெளியிடப்படுகின்றது.*

## நேர்காணல்



நல்லை ஆதீன முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

இலங்கையின் ஒரேயொரு சைவ ஆதீனமாக சிறப்புப் பெறுகிறது யாழ் நல்லூரில் அமைந்துள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம். இதன் இரண்டாவது குருமகா சந்நிதானமாகவும் இப்போதைய முதல்வராகவும் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுடனான நேர்காணல் இது.

**நல்லை ஆதீனத்தின் தோற்றம் பற்றி சொல்லுங்கள்.**

நல்லை ஆதீனம் 1966ஆம் ஆண்டில், இதன் முதலாவது குருமகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள 'கந்தகோட்டம்' என்ற இல்லத்தில் ஆதீனத்தின் செயற்பாடுகள் இடம்பெற்று வந்தன. 1972ஆம் ஆண்டிலிருந்து, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின்னால், மேற்கு வீதியில் அமைந்துள்ள - புத்தூர் மழவராயர் நம்பிக்கை நிதியத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட - கட்டடத்தில் ஆதீனம் இயங்கத் தொடங்கியது. இங்கு நாற்பது ஆண்டு காலமாக ஆதீனம் செயற்பட்டுவந்த நிலையில், கட்டடம் பழமை வாய்ந்ததாகவும், பழுதடையும் நிலைக்கு சென்று கொண்டிருந்ததாலும் சில செயற்பாடுகளுக்கு வசதி குறைந்து காணப்பட்டது. இதனால் ஆதீனத்தை புனரமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. இது விடயத்தில் பெரிய பிரித்தானியா வாழ் இந்து மக்கள் நிதியுதவி செய்ய முன்வந்தனர். இதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் இணைப்பாளராகவிருந்து செயற்பட்டு புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் நிறைவுபெற்று, 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் திறந்துவைக்கப்பட்டது.

**தங்களுக்கு நல்லை ஆதீனத்துடன் ஏற்பட்ட தொடர்பு பற்றி அறியத்தாருங்கள்.**

நல்லூர் கோயில் வீதியிலுள்ள 'கந்தகோட்டம்' இல்லத்தில் முதலாவது குருமகா சந்நிதானம் நடத்தி வந்த பஜனை மற்றும் திருமுறைப்பாடல் வகுப்புகளில் சிறுவயதினனான நானும் கலந்துகொள்வது வழக்கம். அவர் ஆற்றிவந்த சமயச் சொற்பொழிவுகளையும் நான் ஆவலுடன் கேட்டுவந்தேன். அதனால் சமய, ஆன்மீக சிந்தனைகளில் எனது நாட்டம் மேலோங்கியிருந்தது. நல்லை ஆதீனத்திற்கு அடுத்த வாரிசாக என்னை நியமிக்கலாம் என முதலாவது குருமகா சந்நிதானம் மனதில் நினைத்தாரோ தெரியவில்லை. அவ்விதமான ஒரு நிலைக்கு பக்குவப்படவைக்கும் வகையில் நான் அறியாமலேயே என்னை வழிநடத்திச் சென்றிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். அந்த வகையில் 1979ஆம் ஆண்டு 'தம்பிரான்' என்ற பட்டத்துக்குரிய நிலைக்கு என்னை உயர்த்தி, சிலமாதங்களின் பின் 'ஆதீன இளவரசு' என்ற பதவி நிலையை எனக்கு வழங்கியிருந்தார். 1981ஆம் ஆண்டில் முதலாவது குருமகா சந்நிதானம் திடீரென்று நோய்வாய்ப்பட்டு சமாதிநிலையடைந்தார். இதனால் உடனடியாகவே ஆதீனப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. அப்போது இரண்டாவது குருமகா சந்நிதானமாக நியமனம் பெற்றேன்.

**கடந்த பல வருடங்களாகவே கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றுவரும் இந்து மாமன்றத்தின் பெரும்பாலான நிகழ்வுகளில் தாங்களும் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கி வருகிறீர்கள். சில வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்திலும் பணிமனையொன்று அமைக்கப்பட்டு பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த வகையில் மாமன்ற செயற்பாடுகள் பற்றி தாங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இந்து மாமன்றம் தனது சமயம் சமூகம் சார்ந்த சேவைகளினால் தலைநிமிர்ந்து நிற்பது பலருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. இலங்கையிலுள்ள இந்து மக்கள் மட்டுமல்ல, உலகம்வாழ் இந்து மக்களும் போற்றும் வகையில் மாமன்றப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. நீண்டகாலத்திற்கு முன்பதாகவே வடபகுதியிலும் மாமன்ற சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கடந்தகால போர்நிலைமைகள் நீங்கியதன் பின்னர், அபிவிருத்தி சார்ந்த உதவிகளை பெருமளவில் மேற்கொள்வதில் மாமன்றம் கவனம் செலுத்தியிருப்பதை சிறப்பாகச் சொல்லலாம். போர்க்காலச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்குவதிலும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வாழ்வாதார உதவிகளும், மாணவர்களுக்குரிய கல்வி மேம்பாடு, மற்றும் அபிவிருத்தி சார்ந்த விடயங்களிலும் பலவகையான சமூகநலப் பணிகளை இந்து மாமன்றம் மேற்கொண்டு வருவது பெரிதும் போற்றத்தக்கது.

**மாமன்றத்தின் வெளியீட்டுப் பணியில் சிறப்பான இடத்தை வகிப்பதாக பலராலும் போற்றப்படும் 'இந்து ஒளி' ஆன்மீக இதழ் இருபத்தொரு வருடங்கள் நிறைவுசெய்வது பற்றி தங்களது கருத்தை சொல்லுங்கள்.**

காலத்திற்கு ஏற்ற வகையிலான நல்ல கருத்துக்களைச் சொல்லும் வகையில் இந்து ஒளி வெளிவந்து கொண்டிருப்பது பெருமகிழ்ச்சிக்குரியது. பழமையில் புதுமை காட்டுவது போல - மாணவர்களுக்கு மட்டுமல்ல அனைவருக்குமே பயனுள்ள வகையிலான விடயங்களுடன் இந்து ஒளி பிரகாசிப்பது போற்றத்தக்கது. ஆலய விழா சார்ந்த வகையிலும், அருளாளர்களினது நினைவு தினத்தையொட்டியும், இந்துமத சிறப்புத் தினங்களின்போதும், இந்து ஒளி சிறப்பிதழாக மலர்ந்துவருவது இந்து மாமன்றத்தின் சிறப்புப் பணிகளுக்கு மகுடமாக அமைந்துள்ளது. இந்து மாமன்றம் இந்து ஒளி சஞ்சிகையை பலவிதமான சிரமங்களுக்கு மத்தியிலும் வெளியிட்டு வருவது பெரிதும் போற்றத்தக்கது. இருபது வருடங்கள் என்பது ஒரு சாதாரணகாலம் அல்ல. இந்து ஒளி இந்த நீண்டகாலம் ஒழுங்காக வெளிவருவது ஒரு சாதனை என்பதுடன், இந்து மாமன்றத்திற்கு மட்டுமல்ல, அனைத்து இந்து மக்களுக்கும் பெருமை தரக்கூடியது. காலாண்டு சஞ்சிகையாக மலர்ந்து, பின்னர் இருமாதங்களுக்கொருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் இந்து ஒளி, எதிர்காலத்திலும் சிறப்புடன் மலர்ந்து இந்து மக்கள் அனைவருக்கும் நிறைந்த பயனைத்தரவேண்டும் என ஆசி கூறி வாழ்த்துகிறேன்.

(சந்திப்பு : அ.கனகசூரியர்)

# சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர்களுள் ஒருவராகவும் மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநராகவும் சேவையாற்றி வரும் செஞ்சொற்செல்வர் சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களை சந்தித்து உரையாடிய போது அவர் வழங்கிய கருத்துக்கள் இவை.



**இந்து மாமன்றத்துடன் இணைந்து செயலாற்றுவதில் உங்கள் அனுபவங்கள் மற்றும் மனநிலையில் தோன்றும் எண்ணங்கள் பற்றி சொல்லுங்கள்.**

கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாக மாமன்றத்துடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. இது இறைவன் தந்த வரப்பிரசாதம் என்றே கருதுகிறேன். இந்தக் காலப்பகுதியில் மாமன்றம் ஊடாக நல்ல காரியங்களை சாதிக்கக்கூடியதாக இருந்தது. மாமன்றம் யாழ்ப்பாணத்தில் பிராந்திய பணிமனையை அமைக்கத் தொடங்கிய நாளிலிருந்து அதன் செயற்பாடுகளுக்கு துணை செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. மாமன்றத்தின் யாழ்.பணிமனை இயங்கத் தொடங்கியபோது தோற்றுவிக்கப்பட்ட இந்து ஆராய்ச்சி நிலையத்தின் ஊடாக சைவவித்தகர் பயிற்சி நெறியை ஆரம்பித்து ஐந்து மாணவர்களை சமய பரப்புரையாளர்களாக உருவாக்க முடிந்ததை பெரும் பேறாகவே கருதுகிறேன். யாழ் பணிமனையில் இந்து ஆராய்ச்சி நூல் நிலையத்தை அமைப்பதிலும் என் பங்களிப்பை செய்துள்ளேன். மாமன்ற வெளியீட்டுக் குழுவிலும் அங்கம் வகித்து அறிவுசார் செய்திகளை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பும் எனக்கு கிடைத்துள்ளது.

கடந்த காலத்தில் போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்களது கல்விச் செயற்பாட்டுக்காக மாமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் உதவித்திட்டத்தை செயற்படுத்துவதில் பங்காற்றியிருக்கிறேன். மாமன்ற சமூகநல செயற்திட்டத்தின் கீழ் போர்க்காலத்தின்போதும், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதிலும் பங்காற்றியிருக்கிறேன். யாழ் மாவட்டத்திலுள்ள புற்றுநோயாளர்களுக்கு மருந்து மற்றும் மருத்துவ பால்மா வகைகள் பெற்றுக்கொள்ள முடியாத அன்றைய காலகட்டத்தில், மாமன்றம் விசேட ஏற்பாடாக கொழும்பிலிருந்து கப்பல் மூலமாக அனுப்பிவைத்த மருந்துகள் மற்றும் சத்துணவு பால்மா வகைகளை தேவையானவர்களுக்கு உரியவகையில் பங்கிட்டு வழங்குவதிலும் உதவியிருக்கிறேன். போர்க்கால சூழ்நிலைகளின்போது மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக கொழும்புக்கு செல்லவேண்டிய நோயாளர்களுக்காக மாமன்றம் அம்புலன்ஸ் வண்டியொன்றை பெரும் செலவில் கொள்வனவு செய்து, மாமன்ற யாழ் பணிமனைக்கு அனுப்பிவைத்ததன் மூலம் பெருமளவு நோயாளர்களது துயரத்தைப் போக்கும் வகையிலும் எங்களால் செயற்படமுடிந்தது என்பதையும் சொல்லிவைக்க

விரும்புகிறேன். மாமன்றத்தின் இத்தகைய அரும்பெரும் சேவைகள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றுவதில் என்னாலான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கி வருவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இது எதிர்காலத்திலும் தொடரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இந்து மாமன்றத்தின் செயற்திட்டங்களை வடபகுதியில் முன்னெடுத்துச் செல்வதில் பெரும்பங்காற்றிவருபவர் என்ற வகையில், மாமன்றத்தின் கடந்தகாலப் பணிகளையும் எதிர்காலத்தில் மாமன்றத்தின் செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றியும் சொல்வீர்களா?**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் புனருத்தாரண வேலைகளின்போது இந்து மாமன்றம் இணைப்பாளராகவிருந்து, அந்தப் பணியையும் தொடர்ந்து திறப்பு விழாவையும் முன்னின்று நடத்தியிருந்தமை ஒரு வரலாற்று நிகழ்வாகும். யாழ்ப்பாணத்தில் இயங்கும் சிவபூமி அறக்கட்டளையின் வேண்டுகோளுக்கு அமைய கீரிமலையிலுள்ள சிவபூமி மண்டபத்திற்கு அருகே மாமன்றம் மற்றுமொரு மாடிக்கட்டடமொன்றை அமைத்து சிவபூமி யாத்திரிகர் விடுதி என்ற பெயரில் செயற்படுவதற்கு உதவியிருப்பதையும் சிறப்பாகச் சொல்லலாம். மாமன்றத்தின் வன்னிப் பிராந்திய பணிமனையொன்று அமைப்பதற்கு திருமுறிகண்டி பிள்ளையார் கோவிலுக்கு அருகேயுள்ள அரச காணியொன்றைப்பெற்று அதற்கான கட்டட வேலைகள் இப்பொழுது நடைபெற்றுவருகின்றன.

யாழ் மாவட்டத்தில் சிவதொண்டர் அணி உருவாக்கப்பட்டு நல்லூர் கந்தன் ஆலய உற்சவ காலத்திலும் மற்றும் சமய வைபவங்களின்போதும் அதன் சேவை பயன்படுத்தப்பட்டு வருகிறது. யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின் போது எங்கள் பண்பாட்டிற்குரிய கொடி, குடை, ஆலவட்டம் பிடித்தல் நிறுத்தப்பட்டபோது இந்து மாமன்றம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக பேரவையின் அனுமதியுடன் ஆண்டுதோறும் பட்டமளிப்பு விழாவின்போது சிவதொண்டர் அணியினரைப் பயன்படுத்தி குடை, கொடி, ஆலவட்டம் பிடிக்கும் பாரம்பரிய பண்பாட்டு செயற்பாட்டை மீண்டும் இன்றுவரை பேணிவருவதில் மாமன்றம் பங்களித்து வருவதையும் குறிப்பிடவேண்டும்.

சமயப் பண்டிகை காலங்களில் யாழ் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகளுக்கு இந்து மாமன்றம் உணவுப் பொருட்களை வழங்கிவருகிறது. யாழ் மாவட்டத்திலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு யாழ் பணிமனையில் வைத்து வருடந்தோறும் அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்பட்டுவருகிறது.

மாமன்ற தலைமைப் பீடத்தால் வடபகுதிக்காக ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகள், நூல்வெளியீடுகள், குருபூசை, நினைவுப் பேருரைகள் போன்ற நிகழ்வுகளை வெற்றிகரமாக செயற்படுத்தி நடத்துவதில் யாழ் பிராந்திய பணிமனை பெரிதும் உதவிவருவதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். மாமன்றத்தின் இத்தகைய நற்பணிகள் எதிர்காலத்திலும் தொடரும் என்பதை திடமாகச் சொல்லமுடியும்.

**மாமன்ற வெளியீடுகள் குழுவின் தலைவர் என்ற வகையில் மாமன்றத்தின் ஆன்மீக இதழான 'இந்து ஒளி'யின் வளர்ச்சிப் பாதையில் இருபத்தொரு ஆண்டுகள் நிறைவுபற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

மாமன்றம் தனது வெளியீடுகள் ஊடாக காத்திரமான பணியினை செய்து வருகிறது. அந்த வகையில் பருவகால ஆன்மீக இதழாக முக்கியத்துவம் பெறும் 'இந்து ஒளி' இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக வெளிவருவது மிகப்பெரும் சாதனைக்குரியது. இதனை இந்துமக்கள் சிறந்த இதழாக போற்றி மதிக்கிறார்கள். மாமன்றம் எதுவிதமான இலாப நோக்கமும் இன்றி இதழை வெளியிடுகிறது. ஆன்மீக தத்துவ விளக்கம், ஆலய வரலாறுகள், ஆன்மீகப் பெரியார்களின் வரலாறு, அவர்களது பணிகள் பற்றிய தகவல்கள், கல்விசார் விடயங்கள் உட்பட ஏராளமான விடயங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நாவலர் பெருமான், சுவாமி விபுலானந்தர், யோகர் சுவாமிகள் போன்ற ஆன்மீகப் பெரியார்களின் குருபூசை மற்றும் நினைவு தினங்களின்போதும் நல்லைக் கந்தன், நயினாதீவு நாகபூஷணி அம்மன், திருக்கேதீஸ்வரம் போன்ற பல ஆலய உற்சவங்களின்போதும் சிவராத்திரி, ஆடி அமாவாசை, தீபாவளி, திருக்கார்த்திகை முதலான சமயத் திருநாட்களின் போதும் இந்து ஒளி சிறப்பிதழ்களாக மலருகின்றன என்பதும் சிறப்புக்குரியது. மாமன்றத்தின் பொன்விழா, வைரவிழா காலத்தின்போது மாணவர்கள் உட்பட அனைவருக்கும் பயன்படும் வகையிலான காத்திரமான விடயங்களை உள்ளடக்கியதாக இரு தொகுதிகளைக் கொண்ட சிறப்பு மலர்களையும் 'இந்து ஒளி' என்ற பெயரில் மாமன்றம் வெளியிட்டிருந்ததையும் சிறப்பாகச் சொல்லலாம். எதிர்காலத்திலும் மேலும் பயனுள்ள அம்சங்களுடன் இந்துஒளி ஆன்மீக இதழ் மலரும் என்பதில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையுள்ளது. வெளியீட்டுக்குழுவினருடன் இணைந்து மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களும் மற்றும் பொதுச் செயலாளர் திரு. வே. கந்தசாமி, பொருளாளர் திருமதி. அ. கயிலாசபிள்ளை ஆகியோரும் வழங்கிவரும் ஒத்துழைப்பும் பேராதரவும் 'இந்து ஒளி' ஆன்மீக இதழை ஆரோக்கியமான நிலைக்கு அழைத்துச் செல்லும் என்பதையும் உறுதியாகச் சொல்லலாம்.

(சந்திப்பு : அ. கனகசூரியர்)

# மாமன்றத் தலைவரிடமிருந்து...

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இறைபணியில் எங்களுடன் இணைந்து கொண்டிருக்கும் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருளை என்றும் உங்களுக்கெல்லாம் கிடைக்க முதலில் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆறு தசாப்தத்திற்கு மேட்பட்ட காலத்தில் கடந்த இருபத்தொரு ஆண்டுகளும் மாமன்ற வரலாற்றின் உச்சக் காலம் எனலாம். இக் காலத்தில் பொதுச் செயலாளராக பல ஆண்டுகளும் தலைவராக கடந்த சில ஆண்டுகளும் பணியாற்றுகின்ற வாய்ப்பைச் சிறியேனுக்குத் தந்திருந்தீர்கள்.

உடல் நலம் குன்றிய காரணத்தினால் கடந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு சமூகம் தரமுடியாவிட்டாலும் சிறியேனை மீண்டும் ஒருமனதாக மாமன்றத் தலைமை ஆசனத்தில் அமர்த்தியிருக்கிறீர்கள்.

நான் கடந்த சில வாரங்களாகச் சுகயீனமுற்றிருந்த வேளையில் உங்களில் பலர் காட்டிய கரிசனையும் அக்கறையும் என் மனதை நெகிழவைத்தது. அதற்கு என் உளமார்ந்த நன்றியைக் கூறும் அதேகட்டத்தில் நீங்கள் எல்லோரும் செய்த பிரார்த்தனை தான் என்னை உடல் நலம் தேறவைத்துவருகின்றது.

மாமன்றத்தின் பதவிதாங்குபவர்கள் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கடமையாற்றுபவர்கள் எல்லோரும் சேவையுணர்வுடன் இறைபணி செய்யக் கடமைப்பட்டியிருக்கிறோம். எங்களுக்குகிடைத்த வசதிகளை ஆதரவுகளை கூடியவரையில் பயன்படுத்தி மாமன்ற நலன் பேணி நாங்கள் எல்லோரும் பணியாற்றியிருக்கிறோம் என்ற மனநிறைவுடனும் நிம்மதியுடனும் தொடருவோமாக.

உங்கள் கைக்கு வரும் ஆன்மீக இதழான இந்து ஒளி 21ம் ஆண்டு நிறைவு மலராக மலர்கின்றது. இந்நாட்டு இந்து மக்களின் வரலாற்றில் இது ஒரு சாதனை. இச் சாதனையை ஏற்படுத்தத் திருவருள் என்றும் எங்களுக்கு வழிவகுத்தது.

மாமன்றத்தின் பணிகள் இந்நாட்டு இந்துமக்களின் தேவைகளுக்கு ஓரளவேனும் உதவிசெய்து வந்திருக்கின்றது. மாமன்றம் வெளியிட்ட தலைமையகப் பூர்த்திமலர், பொன்விழா மலர், வைரவிழா மலர் மற்றும் பல வெளியீடுகள் இந் நாட்டு இந்து சமய வெளியீட்டுத் துறையில் நாவலர் பெருமான் காட்டிய பாதையில் சரித்திரம் படைத்திருக்கின்றோம். இவை எமது இளம் சமுதாயத்தின் சமய அறிவுவளர்ச்சிக்கு உதவுவதுடன் எதிர்காலச் சந்ததியினர் காலம் காலமாகப் பாவிக்கக்கூடிய வரலாற்றுப் பதிவுகளாகவும் அமைந்திருக்கின்றன.

நாங்கள் இன்னும் எத்தனையோ தொண்டுகள் செய்யவேண்டும். இன்றைய காலகட்டத்தின் தேவைகளைமட்டுமல்ல எதிர்காலச் சந்ததியினரின் நன்மையையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

மேலும் இந் நாட்டில் வாழும் இந்து மக்களுக்கு மட்டுமல்ல புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் வாழும் சகோதர சகோதரிகளுக்கும் அவர்களின் வாரிசுகளுக்கும் நாங்கள் செய்யும் சேவையின் பலன் சென்றடைய வேண்டும்.



வேதனைகளும் சோதனைகளும் நிறைந்த காலகட்டத்தில் எமது மக்களின் அரசியற் தலைமை பலம் குன்றியிருந்த கட்டத்தில் மாமன்றம் துணிவுடன் இந்து மக்களின் குரலாக ஒலித்ததுடன் பல சமூக பணிகளை செய்ததை எல்லோரும் மெச்சினர். நாங்கள் இந்த இருபத்தோராம் ஆண்டு பூர்த்தி இந்து ஒளி இதழைத் தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு அர்ப்பணிக்கின்றோம். அவரின் சிந்தனையும் செயற்பாடும் எமது மக்களிடையே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் அவர் காட்டிய வழியில் மக்கள் சேவையே இறைபணி எனத் தொண்டாற்ற எங்களையும் ஊக்குவித்தது.

ஆன்மீகப் பணிகளுடன் கல்விப் பணிகள் உட்பட பல சமூக நலன் பணிகளை மாமன்றம் மேலெடுத்துச் செல்கின்றது. இதை செவ்வனேசெய்ய மாமன்ற உபகுழுக்களும் தொண்டர்களும் பாடுபடுகின்றனர். ஆனால் மாமன்றக் கட்டமைப்பை விரிவுபடுத்தி மாமன்ற பணிகளை மேலும் சிறப்புறச் செய்யவேண்டும் என்பது சிறியேனின் விழைவு. அதற்கு நீங்கள்யாவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும். மாமன்றப் பணியில் இன்னும் இளம் தலைமுறையினரை இணைக்கவேண்டும். அதில் எமது அங்கத்துவ சங்கங்கள் ஆர்வம் செலுத்தவேண்டும்.

மாமன்றத்திடமிருந்து என்ன நன்மைகள் பெறலாம் எனச் சிந்திக்காது சகலரும் மாமன்றத்திற்கு எவ்வாறு உதவ முன்வரவேண்டும். உதாரணத்திற்கு ஏதும் பிரச்சினை சம்பந்தமாக மாமன்றம் குரல் எழுப்பவேண்டும் என்றால் பிரச்சினையை மட்டும் எடுத்துரைக்காது விபரங்களையும்தந்து மாமன்றம் வெளியிடக் கூடிய கோரிக்கையின் நகலையும் தயாரித்துத் தாருங்கள். நாட்டின் நாலாபக்கங்களும் மாமன்ற பணிகள் - குறிப்பாக சிவதொண்டர் அணி– பரவ உதவுங்கள் நாங்கள் எல்லோரும் மாமன்றத்தின் தொண்டர்கள் அவர்களில் ஒருவனாகவே இந்த அன்பு அறைகூவலை இந்து ஒளி இருபத்தோராம் ஆண்டுநிறைவு மலர் மூலம் விடுக்கின்றேன்.

இறைபணியில்,

**கந்தையா நீலகண்டன்**

தலைவர்

அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்து மன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)

## இதயங்கள் பேசுகின்றன...

மாமன்றத்தின் ஆன்மீக சஞ்சிகையான "இந்து ஒளி" சைவப்பெருமக்கள் மத்தியில் எத்தகைய இடத்தைப் பிடித்திருக்கிறது என்பதை அவர்கள் அனுப்பி வைக்கும் கடிதங்களிலிருந்து அறியக் கூடியதாக இருக்கிறது. தனது வளர்ச்சிப் பாதையில் இருபத்திரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் "இந்து ஒளி" மேலும் பிரகாசிக்க இறையருளும், வாசகர்ளாகிய உங்கள் ஆதரவும் என்றும் எம்முடன் இருக்கும் என்ற நம்பிக்கையுடன், தொடரும் காலங்களிலும், பயனுள்ள அம்சங்களுடன் இறையருள் துணை கொண்டு "இந்து ஒளி" சுடர் விட்டுப் பிரகாசிக்கும் என்பதில் சந்தேகமில்லை...

கடந்தகால வாசகர்களின் பதிவுகளில் வெகுதானிய வருட ஐப்பசி-மார்கழி (தீபம் 03, சுடர் 01) இதழில் வெளியான, மட்டக்களப்பு, கல்லடி-உப்போடையிலிருந்து விபுலானந்ததாசன் என்ற வாசகர் எமக்கு அனுப்பிய வாழ்த்துக்கவிதையை இங்கு மீளவும் பதிவுசெய்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

## இந்து ஒளியே வாழ்க

இந்து ஒளியே என் இதயத் தாரகையே
கந்தாயம் தோறும் வந்து கலக்குகிறாயுள்ளமதை
தேன் சொட்டும் கட்டுரைகள் திகட்டாத அறிவுரைகள்
மின்னலெனக் கண்பறிக்கும் மேலான சித்திரங்கள்
பளபளப்பான மேனிபகட்டான கட்டமைப்பு
இளமைத் திறங்கொண்டு இன்பம் பல வீந்து

படிப்பவர் உள்ளமதை பளிச்செனவே கவர்ந்து
அடியெடுத்து வைத்து அன்னநடை போடுகிறாய்
தலைநகரில் பிறந்து தமிழ் பேசுமிடமெல்லாம்
விலையாகி நிதிநிலையை வெற்றி பெறவைக்கிறாய்
கட்டுரையின் தரம் காணாது இன்னும் வேண்டும்
திட்டமிட்டு முன்னேற சேவிக்கிறேன் முதல்வனை.

*விபுலானந்ததாசன்*

## மாமன்றத்தின் பணிகள்

### சிவத்தொண்டர் அணியும் சைவவித்தகர் பயிற்சியும்

மாமன்றம் சிவதொண்டர் அணியை ஆரம்பித்து இதனை பல இடங்களிலும் இயங்க வைக்க முயற்சிகள் செய்து கொண்டுவருகிறது. சிவதொண்டர்அணிப் பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறோம். இளைஞர்களுக்கு சிவதொண்டர் சால்வையும், யுவதிகளுக்கு சிவதொண்டர் கழுத்துப்பட்டிகளும் கொடுத்து வருகிறோம். திருக்கேதீஸ்வரத்தில் சிவத்தொண்டர் அணி சிவராத்திரி உட்பட மகோற்சவ காலங்களில் தனது பணியை ஆற்றி வருகின்றது. சிவத்தொண்டர் அணிகளை நிறுவி இயக்க பாடசாலைகளும், சகல அங்கத்துவ சங்கங்களும், ஆலயக்குழுக்களும் முன்வரவேண்டும்.

### நடுத்தீர்ப்பு மையம்

எமது ஆலயப் பிரச்சினைகள் நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடாது, நடுத்தீர்ப்பு மையம் மூலம் சுமுகமாக எம்மவரால் அப்பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் எனக் கருதி "நடுத்தீர்ப்பு மையத்தை" நிறுவி அதற்கான விதிகளை ஆக்கி இருக்கிறோம்.

### திருமுறிகண்டியில் சரவணப்பொய்கை

அரசாங்கத்தால் எமக்கு வழங்கப்பட்ட காணித்துண்டில் சரவணப் பொய்கை என்ற பெயரில் எம்மால் அமைக்கப்பட்ட கட்டடத்தில் சரவணப் பொய்கையும், பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட பெண்களால் அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவும் வகையில் ஓர் உணவுச் சாலையையும் அமைத்துக் கொடுக்கும் பொருட்டு கட்டடத்தை நிர்மாணித்து வருகின்றோம்.



# தெய்வத்திருமகளின் இந்துசமயப் பிரசுரங்கள், வெளியீடுகள்

– திருமதி பவானி முகுந்தன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

ஒரு நூலோ அல்லது ஒரு பிரசுரமோ முதன் முதலாக வெளிவரும் போது ஏற்படுகின்ற உணர்வு மிகவும் தனித்துவமானது. ஒரு வகையில் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதைப் போல மகிழ்ச்சியும் எண்ணவோட்டமும் அவற்றோடு தொடர்பு பட்டவர்களுக்கு இருக்கும். இந்த ஒப்பீட்டை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியதன் அவசியம் என்னவெனில் ஒரு நூலை வெளியிடுவது என்பது அவ்வளவு எளிதான காரியமில்லை. அர்ப்பணிப்பும், தொடர்ச்சியான உழைப்பும், விடாமுயற்சியும் வேண்டி நிற்கின்ற செயற்பாடாகவே ஒரு நூல் வெளியீடு என்பது அமைகின்றது.

ஒரு நூல் என்று சொல்லுமிடத்து அதில் குறிப்பாக நான்கு பகுதியினர் தொடர்புபடுகின்றனர். எழுத்தாளர், பதிப்பாளர் விநியோகஸ்தர், வாசகர் என்ற ஒரு சுழற்சியிலேயே நூலுருவாக்கமும் விற்பனையும் வாசிப்பும் தங்கியுள்ளன. ஒவ்வொரு படைப்பாளியும் எழுதுகிறபோது ஏன்? யாருக்கு? போன்ற கேள்விகளை முக்கியப்படுத்தியே தொடங்குகின்றார். அதே போலவே பதிப்பாளரும் ஒரு நூலைப் பதிப்பிக்க வேண்டிய தேவை என்ன என்ற கேள்வியை எப்போதும் நினைவில் கொள்வது உண்டு. விநியோகஸ்தரும் தான் ஏன் ஒரு நூலை விநியோகிக்க வேண்டும் என்ற தெரிவுடனேயே அச்செயற்பாட்டைச் செய்வர்.

தெய்வத்திருமகள் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சமயப்பிரசுரங்கள் வெளியீடுகள் என்று பார்க்கின்றபோது பகுப்பு நெறியில் ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது. இந்தப்பகுப்பு தெய்வத்திருமகளின் நூல்கள் பிரசுரங்கள் பற்றிய ஒரு முழுமையான பார்வைக்கு உதவும் என நம்புகின்றேன். இவர் ஒரு படைப்பாளியாக பதிப்பாளராக, விநியோகஸ்தராக இருந்திருக்கிறார். இங்கு அவரின் ஒவ்வொரு பரிணாமமும் அதன் காலச்சூழலும் அவரது நூல்களின் பெறுமானமாகும்.

"அறன் அறிந்து மூத்த அறிவுடையார்கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாழ்வியல் நெறிப்படுத்தலுக்கு அமைவாக தெய்வத்திருமகளும் தனது எழுத்துப்பணியில் திறன் அறிந்து தேர்ந்த பெரியோர்களையும் இணைத்துச் சென்றுள்ளார். கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தாளராகவும் வெளியீட்டாளராகவும் தடம்பதித்து வந்த அன்னை, பல்வேறு நோக்கங்களுக்காக இப்பணியைச் செய்து வந்தமையை காணக்கூடியதாக உள்ளது. அவரது இப்பணியை,

I. நூல்கள் வாயிலாக
II. பிரசுரங்கள் மூலமாக
III. பிறவற்றினூடாக

ஆவணப்படுத்தலாம்.

### தெய்வத்திருமகளின் நூல்கள்

இவரது நூல்கள் அனைத்தும் தமிழும் சமயமும் கலந்த கதம்பமாகவே அமைந்துள்ளன.

அவை,

I. முழுமையாக தெய்வத்திருமகளே எழுதி வெளியிட்டவை.
II. பிறர் எழுதியதை அவர் வெளியிட்டவை.
III. அவர் எழுதியதை பிறர் வெளியிட்டவை.

என வகுக்கலாம்.

இவற்றுள் முதலாம் வகை மக்களுக்கு சமய உணர்வும், தமிழ் உணர்வும், சமூகப் பொறுப்பும் ஊட்ட வல்ல நூல்களாக அமைந்துள்ளன. சமயத்தின் வடிவமான தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தை மையமாகக் கொண்டு சமயப்பணி, சமூகப்பணி என்பனவற்றை ஆற்றி வந்த அன்னை குறிப்பிட்ட சிலகாலப் பகுதிகளில் ஏனைய சமயப் போட்டிகளுக்கும், பொருளாதாரப் பின்னடைவு களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த நேரத்திலேதான் துர்க்காதேவி தேவஸ்தானத்தையும், தான் நடத்தி வரும் மகளிர் இல்லத்தையும் மக்கள் மயப்படுத்துவதற்காக பேனா முனைப் போராட்டத்தை ஆரம்பித்தார். அதன் வழி எமக்குக் கிடைத்தனவற்றில் "துர்க்கா தேவி ஆலய வரலாறு" (ஏழாலை பண்டிதர் மு. கந்தையா. பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா, தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் தொகுப்பு – 1963), துர்க்கா தேவி தேவஸ்தான சித்திரத்தேர் சிறப்புமலர் – 1978, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேக மலர் – 1981, மஹா கும்பாபிஷேக வெளியீடு, தடாகப் பிரதிஷ்டை மலர் – 1982, துர்க்காதேவி தேவஸ்தான துர்க்காபுரம் மகளிர் இல்லச் சிறப்பு மலர் – 1986, வாழும் வழி – 1987, இலண்டனில் ஏழுவாரம் – 1988, துர்க்காபுரம் மகளிர் இல்லச் சிறப்பு மலர் – 1992 ஆகியனவற்றை உதாரணங்களாகக் கூறலாம்.

தொடர்ச்சியான போர் அழிவுகளாலும் பாரிய இடப்பெயர்வுகளாலும் பாதிக்கப்பட்ட மக்கள் மத உணர்வை இழந்து விடுவார்களோ, சமய சடங்காசாரங்களை மறந்து விடுவார்களோ என எண்ணி மக்களின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாக, நீண்ட புராணங்களை அல்லது பாரிய இலக்கியப் படைப்புகளை உருவாக்குவதோ அல்லது அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதோ உடனடிச் சாத்தியமாகாது என்பதை உணர்ந்து, பக்தி உணர்வை வளர்க்கவல்ல பாமாலைகளைப் புனைந்தும்



தொகுத்தும் வெளியிட்டார். அவற்றிலே திருவிளக்கு வழிபாடு, நவராத்திரிப் பாமாலை, ஸ்ரீலலிதா சகஸ்ர நாம ஸ்தோத்திரம் தமிழ் விளக்கத்துடன் – 1990, சைவக்கிரியைகளும் விரதங்களும் – 1991, கூட்டுவழிபாட்டுப் பாமாலை – 1990, "அருள் ஒளி" (மாதாந்த, சமய சஞ்சிகை) பெண்மைக்கும் இணையுண்டோ – 2001 ஆகியனவற்றை ஆலயங்கள் மீது மக்களைப் பக்தி கொள்ளச் செய்தல் என்ற வகையில் வெளியீடு செய்துள்ளார். அதேபோல் கலாநிதி சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அறநிதிய வெளியீடான "சைவக்கிரியைகளும் விரதங்களும்" என்ற நூலில் விரதகாலம் பற்றிய தகவல்கள், அதனை அனுஷ்டிக்கும் முறை, அனுஷ்டித்தோர் அடையும் பயன், அவர்தம் விரிவான வரலாறு, தெய்வ அருள் என்பன பற்றி விரிவாகப் பேசப்படுகின்றதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

### பயணக் கட்டுரைகள்

சமயப்பணிகளுக்கும், சமயப்பிரசாரங்களுக்கும் மேலான மதிப்பை இன்று உலக நாடுகள் வழங்கி வருகின்றன. அந்தவகையில் உலகம் போற்றிய உத்தமியான தெய்வத்திருமகளும் இந்தியா, மலேசியா, இலண்டன், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சமயப்பிரசாரத்தின்மூலம் பல தடவைகளில் பயணம் செய்து பெற்ற அனுபவங்கள் காலத்துக்குக்காலம் நூல்களாக வெளிவந்துள்ளன. அவற்றிலே "இலண்டனில் ஏழு வாரம்" என்னும் நூலிலே,

> "விஞ்ஞானப் பொலிவுடனும், நவநாகரிகப் பெருமையுடனும் விளங்கும் மேலைநாட்டுக்கும் சென்று இப்பணியை ஆற்றவேண்டும் என்று பலகாலம் விரும்பியதுண்டு. அவ்விருப்பத்தைத் துர்க்கை அம்பாளின் திருவருள் 1987ஆம் ஆண்டு மே மாதத்தில் நிறைவேறவைத்து இலண்டன் மாநகருக்குப் பயணமாகும் வாய்ப்பினை அளித்தது. கீழ் நாட்டுக் கலாசாரத்துக்கும் மேல் நாட்டுக் கலாசாரத்துக்கும் வேறுபாடு உண்டு என்று பொதுவாகப்பேசிக் கொள்வார்கள். ஆனால் மெய்ப்பொருள் தரிசனம் கண்ட சுவாமி விவேகானந்தர், சத்திய தரிசனம் கண்ட மகாத்மா அடிகள், கலாநுட்பம் தெரிந்த கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி என்பவர்களின் பொற்பாதம் வருடிய புண்ணிய பூமியாக இலண்டன் மாநகரம் என் அகக்கண்களில் காட்சியளித்தது. என்றாலும் புறக்கண்களில் அக்காட்சிஎத்துணை அனுபவத்தைக் கொடுத்தது என்பதையும் அங்கு பெற்ற நல் அனுபவங்களையும் இச்சிறுநூல் வாயிலாக வடித்துத்தருவதில் பெருமையடைகிறேன்"
>
> (முன்னுரை – இலண்டனில் ஏழுவாரம் பிரயாணநூல் வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் – 1988

என நயந்திருப்பது அன்னையின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஒருமைப்பாட்டை நன்கு உணர்த்துகின்றது. தான் செய்த புண்ணிய யாத்திரைகளினாலும், சொற்பொழிவுப் பிரயாணங் களினாலும் தான் பெற்ற அனுபவங்களை நூல் வடிவிலே அமைத்துத்தந்த தெய்வத்திருமகளின் பணி பாராட்டிற்குரியதேயாகும்.

### அறிவொளிகாட்டிய சான்றோர் வரிசையில்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துடன் ஒன்றிய தெய்வத்திருமகளிற்கு வாழ்வில் திசை காட்டிய பேரறிஞர்களின் பெருந்தன்மைகளை தன் அனுபவச் சுவைகளோடு அருந்தமிழில் உருவாக்கிய நூலே "அறிவொளிகாட்டிய சான்றோர் வரிசையில்" ஆகும். இந்நூலிலே தனக்கு இலக்கண இலக்கியங் களைக் கற்பித்த சுந்தரராஜ ஐயங்கார் முதல் மகாவித்துவான் எப்.எக்ஸ்.ஸி. நடராஜா, சுவாமி தனிநாயகம் அடிகள், ஈழநாடு கே.பி. ஹரன், அதிபர் ச. அம்பிகை பாகன், திருமதி சிவநாயகி தியாகராஜா, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, காந்தி மாஸ்ரர், காரைநகர் வைத்தீஸ்வரக் குருக்கள் வரை ஒன்பது சான்றோர்கள் இந் நூலில் இடம்பெற்றுள்ளனர். இத்தகைய ஒரு நூலை எழுதவேண்டும் என்ற இவரது முயற்சி போற்றத்தக்கது. எம்மத்தியில் சேவையாளர்கள் தோன்றவேண்டும், சமூகம் எழுத்தாளர்களைத் தரமறிந்து போற்ற வேண்டும், தமிழையும் பிறமொழிகளையும் ஆய்வு செய்து இறவாத புகழுடைய பல் நூல்கள் வெளிவரவேண்டும், அத்தகைய நூல்களை ஆக்குவோரை இனங்காண வேண்டும், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரை சமூகத்துக்கு அறிமுகஞ் செய்து வைக்கவேண்டும் என்ற வேணவா இருந்தமை அவரது வெளியீட்டிலிருந்து தெரிகின்றது.

### நூலுருப்பெற்ற சொற்பொழிவுகள்

சொல்லும் செயலும் ஒருங்கே அமைந்த தெய்வத்திருமகளின் சொற்பொழிவுகள் பல நூலுருப் பெற்றுள்ளன. அவற்றிலே "கந்தபுராணச் சொற்பொழிவு" – 2000, "பத்துச் சொற்பொழிவுகள்" அறநிதிய வெளியீடு – 1990, "மலேசியா, சிங்கப்பூர் சொற்பொழிவுகள்" – 1971 ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். ஒரு சமயவாதியாக, சமூக சேவகியாக, தமிழ்த்தாயாக விளங்கிய அன்னை சாதாரண பெண்கள் மேடையேறிப் பேசுவதற்கு தயக்கம் காட்டிய காலகட்டத்தில் தமது இனிய குரல் வளத்தால் ஆன்மீகப் பிரசங்கங்களில் தனக்கென தனியான ஒரு இடத்தைப் பெற்றிருந்தார். இவரது பேச்சுத்திறனைப் பாராட்டி மதுரை ஆதீனம் "செஞ்சொற்செம்மணி" என்ற பட்டத்தை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

> "கேட்டார் பிணிக்கும் தகையவாய்க்கேளாரும்
> வேட்ப மொழிவதாம் சொல்"

என்ற குறளுக்குப் பொருத்தமாய் செந்தமிழ் அமிழ்தத்தில் சைவத்தைக் குழைத்தெடுத்துத் தித்திக்கத் தித்திக்கத் தந்தவற்றை எதிர்கால சந்ததியும் பருக வேண்டும் என்ற நோக்கோடு நூலுருக் கொடுத்தவையே மேற்கூறிய நூல்களாகும். சொற்பொழிவுகளை நேரிலே கேட்பது போன்ற உணர்வைத்தரும் இந்நூல்கள் வாயிலாக செஞ்சொற்செம்மணி இன்றும் வாழ்கிறார்.

### பதிப்புப்பணியில் தெய்வத்திருமகள்

ஆற்றலும் அனுபவமும் உடைய கல்வியிற் பெரிய சான்றோரின் அனுபவங்களைக் கொண்டமைந்த நூல்கள் பல எமக்குக் கிடைக்காது போயுள்ளன. பல எழுத்தாளர்களது பொருள் வளமின்மையால் கையெழுத்துப் பிரதிகளாகவே கறையானுடன் சங்கமித்து விட்டன சில இன்றும் அச்சுவாகனம் ஏறாமல் பெட்டிகளிலே அடையுண்டு இருக்கின்றன. துர்க்காதேவியையே பேச்சாகவும் மூச்சாகவும் கொண்ட அன்னையவர்கள் அம்பாளின் அருட்சீலத்தை யாரெல்லாம் எழுதினார்களோ அவற்றையெல்லாம் தேடியெடுத்து பதிப்பித்தும் வெளியிட்டும் வைத்துள்ளார்.

அளவெட்டி, அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின் "துர்க்காதேவி பாமாலை", வட்டுக்கோட்டை துர்க்காதாசன் திரு. த. கந்தசாமி அவர்களின் "ஸ்ரீ துர்க்காதேவி தோத்திரம்", ஆவரங்கால் பண்டிதர் திரு. ச. சுப்பிரமணியம் அவர்களின் "அன்னை துர்க்கா அருட்பெயர் நூற்றெட்டு", சி. விநாசித்தம்பி அவர்களின் "தெல்லியூர் ஸ்ரீ துர்க்காதேவி அநுபூதியந்தாதி", திருப்பாதிரிப்

புலியூர் சைவப்புலவர் க.பா. வேல்முருகன் அவர்களது "துர்க்காதேவி அந்தாதி", வயாவிளான் திரு. க. ஸ்ரீதரனின் "துர்க்கா துதி", அபிராமி அந்தாதி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் "திருத்தொண்டர் பெரியபுராணம்", தெல்லிப்பழை ம.சி. சிதம்பரப்பிள்ளையின்" சுவாமி இராமதாஸ் அருளுரைகள் (தமிழாக்கம்)" அளவெட்டி பண்டிதர் மா. மாணிக்கம் அவர்களின் "கந்தபுராண வரலாற்றுச் சுருக்கம்" (1989), சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரனாரின் "சைவபோதம் முதலாம் புத்தகம்" (1984), கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்களின் "அரியதும் பெரியதும்" முதலாம் பாகம் (1984), 2ஆம் பாகம் (1988), ஸ்ரீலலிதா சகஸ்ரநாம ஸ்தோத்திரம் தமிழ் விளக்கத்துடன் (1990) ஆகிய பல அரிய நூல்களைப் பதிப்பித்தும், மீள்பதிப்புச்செய்தும் வெளியிட்டும் வைத்துள்ளார். "யான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம்" என்ற வாக்கிற்கிணங்க தான் நுகர்ந்த அமிழ்தை தமிழ் கூறும் சைவ உலகும் நுகர வேண்டுமென்ற அவாவுடன் தெய்வத் திருமகள் ஆற்றிய இப்பணி மகத்தானது.

### திருமகளின் படைப்புகளும் பிறர் வெளியீடும்

மண்ணில் நல்லவண்ணம் வாழ்கின்ற பெருமக்களின் வாழ்க்கை வளமும், படைப்புகளும் நூல் வடிவில் வைத்துப் போற்றப்படுதல் இயல்பேயாகும். அன்னையின் பேரால் அரும்பெரும் நூல்கள் பல அவரது மணிவிழா மலராகவும், பவளவிழா மலராகவும், அமுதவிழா அறக்கொடை விழாக்களின் நினைவாகவும் வெளிவந்துள்ளன. அவற்றுள் சிவத்தமிழ் இன்பம், சிவத்தமிழ்ச் செல்வம் சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், "வாழும் வழி" என்பன குறிப்பிடத்தக்கன ஆகும். 1985ஆம் ஆண்டில் நடைபெற்ற மணிவிழாவில் "சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்" என்ற நூலில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஜே.பி. அவர்களது "ஆலயங்களும் ஆராதனைகளும்" என்ற கட்டுரையோடு கூடவே 25 அறிஞர் பெருமக்களதும் கட்டுரைகள் அடங்கியுள்ளன. மணிமேகலைப் பிரசுரத்தாரால் வெளியிடப்பட்ட "வாழும்வழி" என்ற நூல்,

1. மனிதப்பிறவியை மதித்திடுமின்!
2. மனம் போல வாழ்வு,
3. உலகம் உவப்பு,
4. நல்ல பெண்மணி,
5. மனைமாட்சி,
6. ஈதல் இசைபட வாழ்தல்,
7. தருமம் என்ற ஒரு பொருளுளது,
8. நெஞ்சில் உறுதி வேண்டும்,
9. தாய்மொழிப் பற்று,
10. செய்நன்றி மறவேல்,
11. சிக்கன வாழ்வே சீரியவாழ்வு,
12. முயற்சி திருவினையாக்கும்

என்னும் தலைப்புகளில் முரசொலி பத்திரிகை வார வெளியீட்டில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடான "செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பாராட்டு விழா மலர்" (1974), கனடா அகிலன் அசோசிஷியேற்ஸ் வெளியீடான "சிவத்தமிழ்ச் செல்வியின் தீந்தமிழ் இன்பம் (சொற்பொழிவுகளின் தொகுப்பு) ஆகியவை பிறரால் வெளியீடு செய்யப்பட்ட தெய்வத் திருமகளின் வாழ்வும் வாக்குகளும், படைப்புகளுமாகும்.

### சிறு பிரசுரங்கள்

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தை பிரஸ்தாபப்படுத்துமுகமாகவும் துர்க்கா மகளிர் இல்லத்தை பிரசாரப்படுத்துமுகமாகவும், ஆலயங்கள் மீது மக்களை பக்தி கொள்ளத் தூண்டுமுகமாகவும் சமயசடங்காசாரங்களை வழங்குமுகமாகவும் பல பிரசுரங்கள் தெய்வத்திருமகளின் வழிகாட்டலிலும், எழுத்தாக்கத்திலும் வெளியிடப்பட்டுள்ளன.



மக்கள் விரும்பிப் படிப்பதற்கும், மனனம் செய்வதற்கும், தினந்தோறும் ஓதி மகிழ்வதற்கும் ஏற்ற வடிவங்களாக பல பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வப்போது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது கூட மக்களை இறையமைதி கொள்ள வைக்கு முகமாகவும் பல பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். அன்னையின் பிரசுரங்களுக்கு உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் அமோக வரவேற்பும் மதிப்பும் வழங்கப்பட்டன. இவை பத்திரிகைப் பிரசுரங்களாகவும், துண்டுப் பிரசுரங்களாகவும், கையேடுகளாகவும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### தெய்வத்திருமகளின் பிற கட்டுரைகள்

மதரீதியாக 'சமயப்பொறை' உடைய அன்னை எந்த சமயம்சார்ந்த நிகழ்வுகளிலும் தன்னை அன்போடு அழைத்தவர்களது அழைப்பை ஏற்றுக் கலந்து கொண்டமை போல, யார் எந்நூலுக்கு வாழ்த்துரையோ, நயவுரையோ, முன்னுரையோ கேட்டாலும் தனது மனதிற்கு சரியென்றுபட்ட படைப்புகளுக்கெல்லாம் தனது பேனாவினால் அணி செய்துள்ளார். பல கோவில்களது கும்பாபிஷேக மலர்களிலும், விழாமலர்களிலும் தனது கட்டுரை களையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார். பாடசாலை முதற்கொண்டு பல்கலைக்கழகங்கள் வரையான கல்விச் சாலைகளின் வெளியீடுகளிலே சமயம் சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

சமூகத்தோடு இயைந்த தனது சமய வாழ்வில் உள்ளும் புறமும் தூய்மை இலங்க வாழ்ந்த அன்னையின் எழுத்துப்பணி கிராமம், நகரம், உள்நாடு, சர்வதேசம் எனப் பரந்து விரிந்து எழுத்துலக மெங்கும் தடம்பதித்துள்ளது.

### முடிவுரை

'என்கடன்பணி செய்துகிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் அருள்வாக்கை நினைவுபடுத்தி அவர் வழியிலே சென்று சைவத்தையும் தமிழையும் பேணி மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த தெய்வத்திருமகள் நாவன்மையோடு எழுத்து வன்மையையும் காட்டிச் சென்றுள்ளார். மனிதர்கள் என்றும் புனிதர்களாக வாழ்வதற்கு பெரிதும் வழிகாட்டுவது அனுபவ ஞானமே. ஆழ்ந்த அறிவும் அனுபவ முதிர்ச்சியும் கொண்ட எங்கள் அன்னையின் அருந்தமிழில் வெளிவந்த ஆக்கங்கள் பெருஞ்சிறப்புவாய்ந்த பண்புகளையும் முக்கிய வரலாற்றுத் தகவல்களையும், சமூகப் பொறுப்பு வாய்ந்த தகவல்களையும் சுமந்து வந்திருந்தமை நோக்கத்தக்கதாகும்.

மாறிவரும் நவீன உலகிற்கு அமைவாகப் பல புதிய கருத்துக்கள், அறிவியல் சார்ந்த அணுகுமுறைகளுடன் குறித்த ஒரு விடயப்பரப்பு சம்பந்தமான நிலையான கருத்தோடு மக்களது மனங்களில் பாரம்பரியக் கருத்துக்களினையும், பண்பாட்டுக் கலாசார அம்சங்களினையும் புகுத்தி புத்துணர்வூட்டு முகமாக ஆக்கங்களைப் புனைந்துள்ளார்.

ஒரு எழுத்தாளராக, பதிப்பாளராக, பிரசுரிப்பாளராக பல நூல்கள், பிரசுரங்கள், பிற ஆக்கங்களை வெளியிட்ட தெய்வத்திருமகள் சமயம் சார்ந்த இலக்கிய ஆக்கத்திற்கு ஒரு புதிய திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளார்.

*(நன்றி: தெய்வத் திருமகளின் வாழ்வும் பணிகளும். மாமன்ற வெளியீடு)*

# ஆளுமைமிக்க அம்மையாரின் ஆலய முகாமைத்துவம்



தி. செல்வமனோகரன் MPhil,
வருகைதரு விரிவுரையாளர், இந்து மெய்யியல் - இந்து நாகரீகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஆலய முகாமைத்துவம்

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமயப் பணிகளில் தலையாயது என வர்ணிக்கப்படுவது தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அவர் செய்த ஆலயப் பணியே. இக்கோவில் கதிர்காமர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. தான் இந்தியாவில் இருந்து கொண்டு வந்த சக்கர மந்திரத் தகட்டை அவர் வேப்ப மரத்தின் கீழ் நிறுவினார். கோவிலைக் கட்டி தேவி சிலையையும் நிறுவினார்[19].

1825-1953 வரையான காலம் ஆலயப் பெருமை வெளித் தெரியவில்லை. நீண்ட காலம் இக்கோவிலை கார்த்திகேசு உடையாரே பராமரித்து வந்துள்ளார். 1953இல் நாகநாதர், தர்மகர்த்தா பொறுப்பை எடுத்த பின்பே பல மாற்றங்களை கொண்டு வந்தார். அதில் முக்கியமானது தனி நபர் அதிகாரத்தை இல்லாதொழித்து அறக்காவலர் சபையை நிறுவியமையாகும். அதனூடாக ஆலயம் மீட்புருவாக்கம் செய்யப்பட்டது. திரு. சே. தியாகராசா என்பவர் ஆலயத்தின் தலைவராகிறார். அவருடைய காலத்தில் ஆலயம் வளர்ச்சியடையத் தொடங்குகிறது.[20] இவர் சுகவீனமுற்ற காரணத்தால் 1970இல் நிர்வாகச்சபையிலிருந்து விலகுகிறார். அத்தலைமைப் பதவிக்கு மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர். திரு. தெ. து. ஜயரத்தினம் தெரிவு செய்யப்படுகின்றார். இவர் 6 வருட காலம் தலைவராகப் பதவி வகித்தார். சிறந்த நிர்வாகியான இவருடைய காலம் ஆலய வரலாற்றில் மிக முக்கியமானது. இக்காலத்தில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆலயத்திற்கான வருவாய் அதிகரித்தது. அதனால் ஆலய செயற்பாடுகள் விரிவடைந்தன. திருமுறை மடம், வாகனசாலை, நந்தவனம், நீர் விநியோகம், மலசலகூடம், மற்றும் ஆலயப் புனருத்தாரணம் எனப் பல்பணிகள் நடைபெற்றன. மேற்சொன்ன இவரது செயற் பாடுகளே ஆலயத்தின் புகழுக்கும் விரிந்த செயற்பாட்டிற்கும் அடித்தளமாயின.

அம்மையார் 1959இல் ஆலயத் தொண்டர் சபையுடன் தன்னை இணைத்துக் கொண்டார். இவர் 1963ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாலயத்தின் திருப்பணிச் சபை உறுப்பினராகவும் 1966இல் நிர்வாக சபைத் தனாதிகாரியாகவும் சிறப்புறப் பணியாற்றி வந்தார். 1977இல் நிர்வாக சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இதனை,

"ஆலய நிர்வாக சபைக்குப் புதிய தலைவரை நியமிப்பது பற்றி ஆலோசிக்கப் பட்டபோது துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டியின் நாமம் தான் எல்லோருடைய வாயிலும் இருந்து வெளிவந்தது. திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களும், நிர்வாக சபையினரும், ஊர்ப் பொதுமக்களும் இம் முடிவுக்கு ஏகமனதாக ஆதரவு தந்தனர்".[21]

எனும் வரிகளால் அறியலாம்.

அன்று தொட்டுத் தன் இவ்வுலக வாழ்வின் இறுதி வரை துர்க்கையின் மீது கொண்ட பக்திமையால் அவ்வாலய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார். இதற்குச் சிறந்த உதாரணமாக இலங்குவது ஆலய நிர்வாக சபைத் தலைவர் பதவியை ஏற்ற 1977இல் தனது ஐம்பதாவது வயதில் அரச ஆசிரியப் பணியிலிருந்து தாமாகவே ஓய்வு பெற்றார். துர்க்காதேவியின் முழுநேர அணுக்கத் தொண்டரானார். இதனை,

"பேச்சு தமிழ்ச் சைவம், மூச்சு அம்பாளின் பணி. இப்பணியினால் பெண்ணினம் பழிக் கிடமாகாது அம்பாளின் அருளுக்காளாக வேண்டும் இது தான் சிந்தனை"[22]

எனத் தெளிவுற புலவர் விசாலாட்சி எடுத்துரைக்கின்றார். ஆலய முகாமைகள் யாவும் ஆண்களின் ஆதிக்கத்தில் இருந்த காலம் அது. பெண்கள் சமூக, சமயப் பணிகளில் - பொறுப்புக்களில் அதிகம் பங்கு பற்றாத காலமது. ஆனால் துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத் தலைமையைப் பொறுப்பெடுத்து முப்பத்தொரு வருடங்கள் திறம்பட நடாத்தியவர் இவர். இதனை.

"திருக்கோயில் முகாமை என்பது ஆண்களுடன் மாத்திரமே இணைத்துப் பேசப்பட்டு வருவதொன்று. அருளொளி பரப்பிலும் பார்க்க அதிகார ஒலிபரப்பிலேயே சம்பந்தப்பட்டிருந்த ஒரு பதவியினை தனது அடக்கமுடைமை சார்ந்த தூர திருஷ்டியினாலும் ஆழமான இறை விளக்கத் தெளிவாலும் ஒரு பெரும் சமூகப் பணியாக மாற்றிக் காட்டியவர் இப்பெருமாட்டி"[23]

எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி உரைப்பது மனங்கொள்ளத்தக்கது. இவ்வாறன அம்மையார் மணியகாரராக மாறியது எவ்வாறு என்பதும் ஆலயத்தினை





# சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் ஈழத்திருத்தலயாத்திரை

அமெரிக்கா ஹவாய் ஆதீன குருமகா சந்நிதானம் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் உலகின் பல பாகங்களில் இருந்தும் வருகை தரும் 65 அடியவர்கள் சகிதம் இலங்கைக்கு ஒரு திருத்தல யாத்திரை மேற்கொள்ள உள்ளார். சுவாமிகளினது இந்த யாத்திரை பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் வரவேற்பு உபசாரத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இரண்டு வாரங்கள் நடைபெறும் இவ் யாத்திரையில் சுவாமிகளும் குழுவினரும் நல்லூர் கந்தசுவாமி கோயில், யோகர் சுவாமி சமாதி ஆலயம், சிவதொண்டர் நிலையம், வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம், யாழ் கடையிற் சுவாமி கோயில், வேதாந்தமடம் போன்ற பிரசித்திபெற்ற தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ள உள்ளார்.

குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சி அடையச் செய்தது. வருவாயைக்கூட்டி சமூகப்பணி புரிந்ததும் எவ்வாறு என்பதும் கேள்விக்குரியதாகவே உள்ளது.

யாழ்ப்பாண ஆணாதிக்க சமூகத்தில் ஒரு பெண் ஆலயத்தின் தலைவராகியதோடு தன் இறுதிக்காலம் வரை (1977-2008) தலைவராகத் தொடர்ந்து பதவி வகுத்தமை ஆச்சரியத்துக்குரியதே. எந்த யாழ்ப்பாண பெண்ணும் பெறாத இடத்தை சைவத்தமிழ் உலகில் இவர் பெற்றார். இவ்வாறன பெரும் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த வலிதான காரணங்கள் எவை எனும் வினா எழுதல் இயல்பே.

'நடுத்தர குடும்பத்தில் பிறந்து இள வயதிலேயே பெற்றோரை இழந்த தங்கம்மா அக்காலம் முதலே குடும்பச்சுமையை சுமக்கும் ஒருவரானார்.[24] பின் ஆசிரியராகி இலங்கையின் பல பாகங்களிலும் பணி புரிந்தார். அக்காலத்தில் தன்னைப் பொதுப்பணி புரியும் ஒரு மனிதராக்கி கொண்டார். தலைமைத்துவப் பண்பு வளர்ச்சி பெற இவர் ஆசிரியராகப் பணிபுரிந்த கிறிஸ்தவ, இஸ்லாமியச் சூழல்களே காரணமாயின. திருச்சபைக் கன்னியர் மடப்பள்ளிகளில் அருட் சகோதரிகளின் வாழ்வியல் முறை, ஒழுக்கம் என்பன இவரைக் கவர்ந்தன. தானும் பிரமச்சாரியாய் ஒழுக்கத்தோடும் பண்போடும் இறுதி வரை போராடி வாழ அதுவே வித்திட்டது என்கிறார். அதே போல இஸ்லாமியரின் நேரந்தவறாத் தொழுகை, பாரம்பரியப் பேணுகை, கட்டுப்பாடு என்பனவும் இவரின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தின. சமூகத்தில் ஒரு பெண்ணாகப் பெற்ற அனுபவம், வாழ்வியற் சிக்கல்கள் என்பனவும் இவரில் தாக்கத்தினை ஏற்படுத்தின. மேற்படி அனுபவங்களே அவரை சிறந்த நிர்வாகியாக தலைமைத்துவம் மிக்கவாராக உருவாக்கின.



ஆசிரியப்பணியில் இருந்த காலத்திலேயே செய்த பொதுப்பணிகளை, சைவசித்தாந்த வகுப்பு திருமுறை ஓதல் ஓதுவித்தல், புராண படனம், பிரசங்கம் என்பனவும் இந்தியாவில் பல மாநாடுகளில் பங்குபற்றியமையும் ஆதீனங்கள் கொடுத்த விருதுகளும் பட்டங்களும் நூல் வெளியீடுகளும் அதுவரை எப்பெண்மணியும் பெற்றிராத பெருமையையும் சிறப்பையும் இவருக்கு தந்தன. இவற்றின் நீட்சியால் துர்க்காதேவி தேவஸ்தானம். அம்மையாருக்கு 'துர்க்கா துரந்தரி' எனப்பட்டம் வழங்கிற்று. சபை உறுப்பினராய் தனாதிகாரியாய் பொருளாதார நற்பணி புரிந்த அம்மையாரின் தலைமைத்துவத்திற்கான பரிசு இது துரம் - பொறுப்பு; தரி - தரித்தவள்; துர்க்கையின் பொறுப்புக்களை ஏற்றவர்.

அம்மையாரின் பிரபலம், சைவத்தமிழ் உலகிற்கு ஆற்றிய தொண்டு, சரளமான குரலால் ஆற்றும் பிரசங்கம் என்பன யாவரையும் அம்மையாரின் பால் ஈர்த்தது. அம்மையாரே துர்க்கா துரந்தரியாய் பணிபுரிந்தார். இவற்றை மனதிற் கொண்டே ஆலயநிர்வாகம் இவரைத் தன் தலைவராகக் கொண்டது. அம்மையாரின் பிரபல்யம், இதனால் ஆலயத்திற்கு ஏற்பட்ட பிரபல்யம் - வருவாய், அம்மையாரின் பணி என்பன ஆணின் அதிகாரத்தினையும் தாண்டி சமூகத்திடம் நற்பெயரை ஏற்படுத்திற்று. இவரைத் தலைவராக்குவதை இன்றியமையாத



தாக்கியது. அத்தோடு அம்மையார் மேற் சொன்ன காரணங்களையே தன் ஆலயக் காரியங்களுக்குக் கருவிகளுமாக்கினார். கோபுரம், கேணி, புதிய மண்டபங்கள் என ஆலயத்தை விஸ்தரித்தார். திட்டமிட்ட அவரின் செயற்பாடே ஆலயத்தினதும் ஆலயம் முன்னெடுத்த சமூகப்பணிகளினதும் அடிப்படையாயிற்று.

ஆலயத்தின் எல்லாச் செயற்பாட்டையும் ஆவணப்படுத்தினார். கும்பாபிஷேக மலர், சித்திரத் தேர் சிறப்பு மலர், தடாகம் பிரதிஷ்டை விழா சிறப்புமலர் போன்றன இதற்கு உதாரணங்களாகும். ஊடகங்களில் உரிய வகையில் விளம்பரப்படுத்திப் பிரபல்யப்படுத்தினர். இவரின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்தன. இதனால் நன்கொடைகள் ஆலயத்திற்கு அதிகரித்தன. இவரின் பணி தொடர்பாக பேராசிரியர் நா. சண்முகலிங்கன் கூறும் செய்திகள் மிகமுக்கியமானவை.

(1) கும்பாபிஷேகத்தோடு கர்ப்பக்கிரகத்தில் விஷ்ணு துர்க்கையை சாத்வீக வடிவத்தில் நிறுவியமை.

(2) ஆகம விதிப்படி ஆலயம் கட்டப்பட்டு விஷ்ணு துர்க்கை போக வடிவத்திற்கு மாற்றம் பெற்றமை.

(3) சடங்குகளில் மாற்றங்களை ஏற்படுத்தியமை.

(4) சண்டிஹோமமும் யந்திர வழிபாடும்

(5) புதிய வழிபாட்டு முறைகள்

மேற்படி மாற்றங்கள் ஆலய வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின. கோர வடிவத்திற்கு அஞ்சிய மக்கள் சாத்வீக ரூபத்தை விரும்பி வணங்கினர். ஆலயத்தின் கட்டிடம் மற்றும் அழகியல் பக்தர்களைக் கவர்ந்தன. யாழ்ப்பாணத்தில் அது வரை இல்லாத சண்டி ஹோமத்தின் அறிமுகமும் ஸ்ரீசங்கரர் வழி உருவாக்கம் பெற்ற ஸ்ரீசக்கர வழிபாடும் மக்களைக் கவர்ந்தன. அத்தோடு பிற ஆலயங்களில் இல்லாத எலுமிச்சம்பழ விளக்கு ஏற்றல், சுமங்கலி பூசை, திருவிளக்குப் பூசை என்பனவும் அதற்கு ஒலி பெருக்கியில் அம்மையார் கொடுக்கும் விளக்கங்களும் ஆலயத்தின் பால் மக்களை ஈர்த்தன. இளம் பெண்களுக்கு நல்ல துணை, மாங்கல்யபலம், நோய் நீக்கம் வாழ்வியற் தேவைகள் எனப் பல தளங்களில் மக்கள் பூசை செய்தனர். அப்பக்தி வழிபாடு அடியவர்க்குப் பயன் தர மேலும் பக்தர்களின் வரவு அதிகரித்தது என அறிய முடிகிறது.[25]

இவ்வாலயத்திற்கான பக்தர்களின் வருகை, ஆலயத்தின் கட்டுமானம் ஆலய வருமானம் என்பன துரித வளர்ச்சியடைந்தன. 1965ல் ரூபா 29.75 ஆக இருந்த உண்டியல் வருமானம் 1970ல் ரூபா 864.02 ஆகவும் 1977 ரூபா 14,325.55 ஆகவும் 1978ல் ரூபா 23,439.63 ஆகவும் 1980ல் ரூபா 1,12,556.40 ஆகவும் துரித வளர்ச்சி கண்டது.[26] இப்பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஆலயத்திருப்பணிகளும் ஆலயத்தின் பெயரால் சமூகப்பணிகளும் பெரு வளர்ச்சி கண்டன.

இவ் வருவாய் அதிகரிப்புக்கு முக்கியமான காரணமாக அமைவது ஆலயத்தில் புதிய சடங்குகளை அறிமுகம் செய்தமையாகும். வேலைவாய்ப்பு, திருமணம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சடங்குகள் இவை. இவற்றால் ஆலயத்திற்கு அடியவர் வருகை அதிகரித்தது; ஆலயத்தின் கீர்த்தி பரவிற்று. இதனாலும் அடியவர் வருகை பெருகிற்று. ஒரு காலகட்டத்தில் ஈழத்தவரிடம் நவராத்திரி பூசை மட்டுமே சக்தி விரதமாக செல்வாக்குப் பெற்றிருந்தது. துர்க்காதேவி ஆலயத்தின் எழுச்சி – அம்மையாரின் புதிய வழிகாட்டல் தேவி வழிபாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திற்று. இன்று ஈழத்தில் சிறுவர் முதல் பெரியோர் வரை யாவராலும் அனுஷ்டிக்கப்படுகின்ற கேதார கௌரிவிரதம், வரலக்சுமி விரதம் போன்றனவற்றின் பிரபல்யத்திற்கும் இவ்வாலயமே காரணமாயிற்று.

ஆலயத்தின் புனிதத்துவத்தைக் கெடுக்கும் சடங்குகளை நிராகரித்தார். இவ்வாலய வழிபாட்டு முறைகள் சமஸ்கிரத/ ஆகம வழிபாடு, நாட்டார்வழிபாடு, புதிய வழிபாடு என்ற தளங்களில் நோக்கப்படுகின்றன.[27] ஆயினும் ஆரம்பத்திலிருந்த மிருகபலியிடல் உள்ளிட்டவை நிராகரிக்கப்பட்டன. ஆலயம் ஆன்மீக உணர்வுடன் கலந்த புனித பிரதேசமாக்கப்பட்டது. சின்னமேளம், சிறு களியாட்டம், வாணவேடிக்கைகள் என்பன நிறுத்தப்பட்டன. ஆன்மீகக் கலைகள் முன்னிறுத்தப்பட்டன. யாழ்ப்பாணக் கலாசாரத்தில் சின்னமேளம் முதலிவை இல்லாதொழிந்து போக இவ்வாலயமும் காரணமாயிற்று.

ஈழத்தில் மட்டுமல்ல தான் சென்ற மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, உள்ளிட்ட நாடுகளில் இவ்வாலயம் பற்றிப் பிரசங்கித்தும் கலந்துரையாடியும் வந்தார். இதனூடாக இவ்வாலயத்தைத் தரிசிக்கவெனப் பல புதிய அடியார் கூட்டம் உருவாகத் தலைப்பட்டது. அப்பக்த கூட்டம் பெருகிப் பெருகி இறைவியை வழிபடுவதும் ஆலய வளர்ச்சிக்கும் திருப்பணிக்கும் தேவையான – தேவைக்கதிகமான பணவுதவியைப் புரியவும் தொடங்கியது. அவ்வரவுகளை வைத்துக் கொண்டு ஆலயத்திற்கு அவசியமான பல பெரும் பணிகளை அவர் செய்தார்.

1965இல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவின் பின்னான ஆலய வளர்ச்சி மிகப் பெரிது. இவ்வளர்ச்சியின் பின்னூக்கியாக விளங்கியவர் அம்மையார் எனக் கூறின் அது மிகையாகாது. ஆலய உள் வீதிச் சுற்று மண்டபம் மற்றும் முருகன், மகாலட்சுமி முதலான பரிவாரத் தெய்வங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 1978இல் அழகிய சித்திரத் தேரும் அமைக்கப்பட்டது. 1981, 1991 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் நடாத்தப்பட்டன. 1982இல் கல்யாண மண்டபம் அமைக்கப்பட்டது. அடியார்க்கு அன்ன தானம் வழங்குவதற்காக "அன்னபூரணி" மண்டபமும்

கட்டப்பட்டது. அதேயாண்டில் ''துர்க்கா புஷ்கரணி'' எனும் நீர்த் தடாகம் அமைக்கப்பட்டது. வேதாகமப் பாடசாலை நடாத்தப்பட்டது. நாட்டின் தேவையையும் நலன் விரும்பிகளின் எண்ணத்தையும் நிறைவேற்றும் முகமாக துர்க்காபுரம் மகளிர் இல்லம் 1982.02.03 இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு வளரும் சிறுமிகள் சைவத் தமிழ்ப் பண்பாட்டோடு இன்று வரை வளர்க்கப்படுகின்றார்கள்.

இவை தவிர 1994ஆம் ஆண்டு வரை தேவஸ்தான பூசையைப் பக்தியோடு திறம்பட நடாத்தி வந்த இவர் தலைமையிலான நிர்வாக சபை 1995, 1996 காலங்களில் போர்ச் சூழலால் ஏற்பட்ட இடப் பெயர்வுகளால் நித்திய, நைமித்திய பூசைகளைச் சரிவரச் செய்ய முடியாமற் போயிற்று. மீளவும் யாழ்ப்பாணம் வந்து ஆலயத்தைச் சென்று பார்த்த நிகழ்வை,

“1996ஆம் ஆண்டு மே மாதம் வலிகாமம் திரும்பினோம். ஆலயத்தைப் போய்ப் பார்த்த பொழுது அழவேண்டிய நிலை தான் எமக்கு ஏற்பட்டது. “ஆரொடு நோகோம் ஆர்க்கெடுத் துரைப்போம்” என்ற நிலையில் அம்பாளிடமே சரணடைந்தோம். அம்பாளின் கட்டடங்களுக்கு மாத்திரம் சேதம் ஏற்படாமல் இருந்தது நாம் செய்த புண்ணியப் பயனாகும்.” [28]

எனத் தன்னனுபவத்தை அம்மையார் பதிவு செய்கிறார். உட்கோவில், வெளிக் கோயில் இராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டன. அம்மையார் தான் 2008இல் தேகவியோகம் அடையும் வரை இவ்வாலயத் திருப்பணிகளும், பூசைகளும் சிறப்புற நடைபெற வழிசமைத்தார். அம்மையாரின் ஆலயப் பணியை, ''திருக்கோயில்கள் கல்வி நிலையங்களையும் கலை நிலையங்களாகவும் நீதி நிலையங்களாகவும் அறச்சாலைகளாகவும் விளங்கின. காலப்போக்கில் கோயில்களில் தளர்வு ஏற்பட்டுவிட்டது. இதனை ஒழித்துக் கோயில்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும் எனப் பெருவிருப்புடன் செயலாற்றி வருபவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர் தங்கம்மா அப்பாக் குட்டி'' என சிவஸ்ரீ. க. வைத்தீஸ்வரக் குருக்கள் கூறியுள்ளமை சாலப்பொருத்தமானதே.[29] ஆலயம் என்பதில் இறைபணியாற்றி நின்ற அம்மை சமூகப்பணிகளும் பல புரிந்தார். ''மக்களுக்கு எவ்வகையிலும் பயன்படாத'' பல கோயில்கள் இருக்கும் இக்காலத்தில் கோயிலை மையமாக வைத்துக் கொண்டு மக்கள் முன்னேற்றத்திற்காக எல்லாத் துறைகளிலும் அன்னையார் தொண்டாற்றி வருகிறார்.[30] இதனாற்றான் உதயன் பத்திரிகையாசிரியர் தன் தலையங்கத்தைப் பின்வருமாறு தீட்டினார் போலும்.



“தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலையும் அதன் நிர்வாகி பெருமாட்டி தங்கம்மா அப்பாக்குட்டியையும் குடாநாட்டில் உள்ள ஆலய நிர்வாகிகளுள் முன்னுதாரணமாகக் கொள்ளட்டும். ஆலய வருவாயை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் புதிய சிந்தனையும் நன்னோக்கும் பிறக்கட்டும்” [31]

ஆலயத்தை மையமாகக் கொண்டு பணியாற்றிய அம்மையார், புதிய சிந்தனையும் செயலாக்கமும் மிக்க ‘அருள் ஒளி’ எனும் சஞ்சிகையையும் வெளியிட்டு வந்துள்ளார்.

**பிற ஆலயங்களில் அம்மையாரின் பணி**

துர்க்கா தேவி ஆலயப் பணியோடு அவ்வாலயத்தின் ஊடாக மருதனார்மட இராமநாதன் கல்லூரியின் பரமேஸ்வரனாலய மணவாளக் கோல விழாவையும் திறம்பட நாடாத்தி வந்தார். நலிவுற்ற ஆலயங்களில் புனரமைப்பு மற்றும் பிற தேவைகளையும் அறிந்து உதவி புரிந்தார். தன் தலைமையிலான ஆலயம் மட்டுமல்லாது பிற ஆலயங்களுக்கும் உதவியமை அவர் சைவ சமய வளர்ச்சி மீது கொண்டிருந்த நாட்டத்தைத் தெளிவு படுத்துகிறது.

பல்லவர் கால நாயன்மார்கள் தல யாத்திரை சென்றும் அங்கு பதிகங்கள் பாடியும் சைவத்தை பிற சமயங்களின்றும் மீளெழுச்சி பெறச் செய்தனர்.[32] அதே போல அம்மையாரவர்களும் நவீன காரைக் காலம்மையாராய் தல யாத்திரை செய்து பஜனைகள் நடாத்தி சைவ வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றினார்.[33]

அம்மையாரின் பணியால் சைவவழி நின்ற யாழ்ப்பாணச் சமூகம் துர்க்கை வழிபாட்டின் பாலும் ஈர்க்கப்பட்டது. இதனால் பல கிராமிய பெண் தெய்வங்கள் துர்க்கை ரூபம் பெற்றன. புதிதாக துர்க்கை அம்மன் கோவில்கள் உருவாக்கம் பெற்றன.[34] துரித வளர்ச்சியும் அடைந்தன. இதற்கு உதாரணமாக கோணாவளை சாயி துர்க்கா கோவில், மிருசுவில் ஞான துர்க்கா கோவில், நாயன்மார்கட்டு துர்க்கையம்மன் கோவில், சிறப்பிட்டி விஷ்ணு துர்க்கை கோவில் போன்றனவும் அல்வாய், கொட்டாஞ்சேனை, கட்டுடை போன்ற இடங்களில் ஏற்பட்ட புதிய துர்க்கா கோவில்களையும் சுட்டலாம். இதைவிட பல ஆலயங்களில் பரிவார தெய்வமாக - முக்கியத்துவம் பெற்ற சந்நிதியாக துர்க்கை இடம் பெறத் தொடங்கினாள். வெள்ளவத்தை கதிரேசன் கோவில், கொட்டாஞ்சேனை பிள்ளையார் கோவில் போன்றன இதற்குச் சிறந்த உதாரணங்கள் ஆகின்றன. புலம் பெயர் நாடுகளிலும் துர்க்கா வழிபாடு பிரபல்யம் பெற்றது. லண்டன் கனக துர்க்கா கோவிலை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இதனைத்தவிர அம்மையார் ஏனைய ஆலயங்களுக்குச் செல்லல் பிரசங்கம் செய்தல், ஆலய நிர்மாணத்திற்கு

*தொடர்ச்சி 30ம் பக்கம்...*

# தைப்பூச திருநாளும் அதன் சிறப்பும்

சைவவித்தகர் வெற்றிவேல் சசிகரன்

தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமானது தைப்பூசம் ஆகும். 27 நட்சத்திர மண்டலங்களில் எட்டாவது நட்சத்திரம் பூசம் ஆகும். தை மாதத்திலே வரும் பூச நட்சத்திர புண்ணிய நாள் தைப்பூச விழாவாக கொண்டாடப்படுகின்றது. தைப்பூசம் வரும் நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக (பூரணை நாளாக) இருக்கும்.




தைப்பூசம் முருகப்பெருமானுடைய விஷேட தினமாகும். அன்றைய தினம் குழந்தைகளுக்கு தோடு குத்துதல், ஏடு தொடக்குதல் போன்றவற்றை சிறப்பாக செய்து வைப்பார்கள். மற்றும் அடியார்கள் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள். இந்த நாளில் ஆறுபடை வீடுகள் உள்ளிட்ட அனைத்து முருகன் கோவில்களிலும், எல்லா சிவன் கோவில்களிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

தைமாதம் உத்தராயண காலத்தின் ஆரம்பம். உத்தராயணம் என்பது தேவர்களின் பகல் பொழுது என்பதால் தை மாதம் அவர்களின் காலைப் பொழுதாகும். பூரணை தினத்தில் சிவாம்சமான சூரியன் மகர ராசியில் இருக்க, சக்தி அம்சமான சந்திரன் கடகராசியில் (பூசம் நட்சத்திரம்) ஆட்சி பெற்றிருக்க சூரிய சந்திரர்கள் பூமிக்கு இருபுறமும் நேர்கோட்டில் நிற்க "தைப்பூச திருநாள்" ஆமைகின்றது.

தைப்பூச நன்னாளானது உலக சிருஷ்டியின் ஆரம்ப நாளாகவும் கொள்ளப்படுகின்றது. சிவசக்தி ஐக்கியம் இந்நாளிலேயே நிகழ்ந்ததாகவும் ஐதீகம். சிவனின்றேல் சக்தியில்லை, சக்தியின்றேல் சிவனில்லை என்று கூறப்படுகின்றது. அதாவது சிவனும் சக்தியும் இணைந்ததாலேயே உலகம் சிருஷ்டிக்கப்பட்டு இயக்கம் நிகழ்ந்தது என்பது பொருளாக அமைகின்றது.

சிவசக்தி இணைந்த இப்புண்ணிய தினத்தில் முதலில் உருவாகியது நீரென்றும், அதன் பின் தொடர்ந்து நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை உருவாகின என்றும் நம்பிக்கை கொள்கின்றோம். எனவே உலக இயக்கத்திற்கு ஆதாரமாக அவசியமாகவுள்ள பஞ்சபூதங்களும் சிருஷ்டிக்கப்பட்ட வழிகோலிய புனிதமிகு நன்னாளாக இத் தைப்பூச தினத்தைப் போற்றி வழிபாடு செய்கின்றோம். இது வழிவழியாக இந்துக்கள் கைக்கொண்டுவரும் நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைகின்றது.

இயற்கையை வழிபடும் பாரம்பரியத்தின் ஒரு வெளிபாட்டை விளக்கும் தினமாகவும் தைப்பூசம் பெருமை பெறுகின்றது. அவனின்றி ஒரு அணுவும் அசையாது என்பர். அந்த அவனாகிய இறைவன் இறைவியுடன் இணைந்து கலந்தமையாலேயே உலக இயக்கம், இயற்கையின் அதாவது பஞ்சபூதங்களினூடாக நிகழ்கின்றது என்பதை நினைவில் கொள்ள வழிவகுக்கும் நாள் இந்நாள்.



உலகிலேயே உயிரினங்கள் யாவற்றினதும் தோற்றத்திற்கும் வாழ்வுக்கும் செயற்பாடுகளுக்கும் மறைவிற்கும் இயற்கையே காரணியாக அமைகின்றது. இயற்கையை மீறி எதுவும் செயற்படமுடியாது. அதாவது நம்பிக்கைக்கு மேலான சக்தியாகிய இறைசக்தியை மீறிச் செயற்படமுடியாது. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இயற்கையே விதியாக அமைகின்றது. இதை வலியுறுத்துவதும் இத்தைப்பூச நன்னாளின் ஒரு அம்சமாகும்.

தேவர்களின் குருவாகக்கொள்ளப்படும் குரு பகவான் பூசநட்சத்திரத்தின் தேவதையாகக் கொள்ளப்படுகின்றார். இவர் அறிவின் தேவதையாகவும் போற்றப்படுகின்றார். பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்கள் இருவருக்கும் சிவபிரானாகிய நடராசப்பெருமான் சிவதாண்டமாடிக் காணுப்படி செய்தநாளாகவும் தைப்பூசம் விளங்குகின்றது.

அத்துடன் வாயுபகவானும், வர்ணபகவானும், அக்கினி பகவானும் சிவபிரானின் அதீத சக்தியை உணர்ந்த நாளாகவும் இந்நாள் போற்றப்படுகின்றது. அதாவது இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தியாக இறைவனே உள்ளமை உணர்த்தப்பட்ட புண்ணியநாள் இத் தைப்பூச நன்னாளாகும்.

சிவனுக்குரிய சிறப்பு மிக்க நன்னாட்களில் ஒன்றாகக் கொள்ளப்படும் இத் தைப்பூச நன்னாளானது முருகப் பெருமானுக்குரிய விசேட நாளாகவும் விளங்குகின்றது. சிவசக்தி ஐக்கியமான முருகப்பெருமான் மாட்சிமை பெறும் தினமாகவும், முருகப் பெருமான்

அன்னையிடம் வேல் வாங்கிய திருநாளும் இதுவாக அமைகிறது. சிவனின் அருளினால் தோன்றிய முருகன் அன்னையின் சக்தியையும் பெற்று சிவசக்தியின் பேரருள் மிக்கவராக இத் தைப்பூச நாளில் திகழ்வதால் முருகன் ஆலயங்களில் அபிஷேகம், திருவிழா முதலியன நிகழ்த்தப்படுகின்றன. முருகனை வேண்டிப் பலர் இந்நாளில் விரதமிருப்பர்.

முருகப்பெருமானுக்கும், தைப்பூசத்திற்கும் உள்ள இத்தகைய தொடர்பின் காரணமாகவே இந்த நாளில் அனைத்து முருகன் கோயில்களிலும் சிறப்பு விழாக்கள் நடத்தப்படுகின்றன.

தைப்பூசத்தை முன்னிட்டு பழனி முருகன் கோயிலுக்கு தமிழகம் மட்டுமல்லாது அண்டை மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விரதம் இருந்து ஆயிரக்கணக்கான முருக அடியார்கள் பாத யாத்திரையாக வருகிறார்கள்.

பாதயாத்திரையாக வரும் பக்தர்கள், மார்கழி மாத ஆரம்பத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங்குவார்கள். சஷ்டிகவசம், சண்முக கவசம், திருப்புகழ் போன்ற பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்து தைப்பூசத்தன்று பழனி முருகன் கோயிலில் சிறப்பு வழிபாடு செய்து விரதத்தை முடிப்பார்கள்.

ஈழத்தில் மாவிட்டபுரம் கந்தன், இணுவைக் கந்தன், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் போன்ற சரித்திர முக்கியத்துவமான தலங்களிலும் தைப்பூசம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

ஆறுமுகப் பெருமானின் அருளை அடைவதற்கு தைப்பூசம் உகந்த நாள். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுளிலும் முருகனடியார்கள் பலர் பாதயாத்திரையாகச் சென்று தைப்பூசத்தன்று முருகனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

தைப்பூசத்தன்று முருகனுக்கு காவடி நேர்த்திக்கடன் செலுத்துவதையும் பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். தீராத நோய்கள் ஏற்பட்டு அவதிப்படும் பட்சத்தில், முருகக் கடவுளுக்கு காவடி எடுப்பதாக வேண்டிக் கொண்டால் அவர்களைப் பீடித்துள்ள நோய் அகன்று உடல் ஆரோக்கியம் பெறுவதை எண்ணற்ற பக்தர்கள் உணர்வுப் பூர்வமாக அனுபவித்துள்ளனர். தங்களின் வேண்டுதல் நிறைவேறியதும், பழனி முருகன் கோயிலில் பக்தர்கள் தைப்பூச தினத்தன்று காவடி நேர்த்தியை செலுத்துகிறார்கள். முருகன் உறையும் எல்லா தலங்களிலுமே காவடி எடுக்கும் பக்தர்கள் உள்ளனர்.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்று வாழ்க்கையை நம்பிக்கையுடன் சூரிய பகவானுக்குப் பொங்கலிட்டு வழிபட்டு எதிர்நோக்கும் நாம் தைப்பூச நன்னாளிலே நம்மை வாட்டிவதைக்கும் துன்ப, துயரங்கள் யாவும் துடைத்தெறியப்பட வேண்டும் என்று நம்மை காத்தருளும் மாபெரும் சக்தியான சிவசக்தியை மனதிருத்தி பிரார்த்தனை செய்வதுடன் வாழ்விலே நலங்கள் சூழ, வாழ்வு சிறக்க வாழ வழிகிட்ட வேண்டும் என்று விரதமிருந்து வேண்டுதல் செய்து தொழுகின்றோம்.

இத்தினத்தில் புண்ணிய நதிகளில் நீராடுவது சிறப்பாகும். அவ்வாறு நீராட இயலாதவர்கள் புண்ணிய நதிகளை நினைத்துப் போற்றி வழிபட்டு நீராடுதல் வேண்டும். வாழ்வில் ஒளியேற்றும் இத் தைப்பூச நன்னாள் பல்வேறு நற்செயல்கள் தொடங்கும் நாளாக அமைகின்றது.

"தைப்பூச திருநாளில் தொட்டதெல்லாம் துலங்கும்" என்பது பழமொழியாக அமைவதால் ஏடு தொடக்கம், புதிர் எடுத்தல், புதி துண்ணல், பெண் குழந்தைக்கு காது, மூக்கு குத்துதல், திருமணப் பேச்சுக்கள் ஆரம்பித்தல், ஒப்பந்தங்கள் செய்தல் போன்ற நற்செயல்கள் மேற் கொள்ளப்பெறுகின்றன.

இத் தைபூசத்திருநாளிலே தொடங்கும் செயல்கள் தொய்வின்றி இனிதே நிறைவேறும் என்பது காலம் காலமாக நாம் கொண்டுள்ள நம்பிக்கையாகும். நம்பிக்கையே வாழ்வை வழி நடத்தும் சக்தி. எமக்கும் மேலான சக்தியொன்று உண்டு. அந்தச் சக்தியின் மீது அதாவது உலகைப் படைத்து, காத்து, அருளி, அழித்து, மறைக்கும் அந்த மாபெரும் சக்தி மீது பக்திகொண்டு நம்பிக்கையுடன் வழிபட்டால் தன்னம்பிக்கை தானே நமக்கு வந்துவிடும்.

இறை சக்தியாகிய மாபெரும் சக்தியும் நமக்குத் துணைசெய்யும். எம்மை வழிநடத்தும் என்ற நம்பிக்கை நம்மனதில் மேலோங்கிவிட்டால் தன்னம்பிக்கை தானே வந்து நம் வாழ்வை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளச் செய்யும்.

தமிழ்க் கடவுளான முருகனுக்குச் செய்யப்படும் வேண்டுதல் பிரார்த்தனைகளில் முக்கியமானது காவடி எடுப்பதுதான். இந்தக் காவடி எடுப்பதன் காரணம் என்ன?

அகத்திய முனிவர் தனது சீடர்களில் ஒருவரான இடும்பனை அழைத்து, தனது வழிபாட்டிற்காக கயிலை சென்று அங்கு முருகனுக்கான கந்த மலையிலுள்ள சிவசக்தி சொரூபமான சிவகிரி, சக்திகிரி எனும் இரு சிகரங்களையும் கொண்டு வரும்படி கூறினார்.

அகஸ்தியரின் கட்டளைக்கிணங்க இடும்பனும் கயிலை சென்று இவ்விரு மலைகளையும் இருபுறமும் தொங்க, காவடியாகக் கட்டி எடுத்துக் கொண்டு வந்தான். முருகன், இவ்விரு கிரிகளையும் திருவாவினன்குடியில் நிலைபெறச் செய்யவும், இடும்பனுக்கு அருளவும் விரும்பி ஒரு திருவிளையாடலை நிகழ்த்தினார்.

இடும்பன் வழி தெரியாமல் திகைத்த போது, முருகன் குதிரை மேல் செல்லும் அரசனைப் போல் தோன்றி இடும்பனை ஆவினன் குடிக்கு அழைத்து வந்து சற்று ஓய்வெடுத்துச் செல்லும்படி கூறுகிறார்.

இடும்பனும் காவடியை இறக்கி வைத்து ஓய்வெடுத்து விட்டுப் புறப்படும் போது காவடியைத் தூக்க முடியாமல் திண்டாடினான். ஏன் இப்படி காவடியைத் தூக்க முடியாமல் போனது என்று சுற்றிப் பார்க்கும் போது சிவகிரியின் மேல் ஒரு சிறுவன் கோவணாண்டியாய் கையில் தண்டுடன் நிற்பதைக் கண்டான். இடும்பனும் சிறுவனை மலையிலிருந்து கீழே இறங்கும்படி வேண்டினான்.

ஆனால் அந்த சிறுவன் இந்த மலை "தனக்கே சொந்தம்" என்று உரிமை கோர, கோபமுற்ற இடும்பன் அச்சிறுவனைத் தாக்க முயன்றான். அப்போது இடும்பன் வேரற்ற மரம் போல் கீழே சரிந்து விழுந்தான்.

இதைக் கண்ட அகஸ்தியர், இடும்பனின் மனைவியுடன் சென்று வேண்ட, முருகன் இடும்பனுக்கு அருளாசி புரிந்ததுடன் இடும்பனைத் தனது காவல் தேவதையாகவும் நியமித்ததுடன் இடும்பன் போல் காவடியேந்தி சந்தனம், பால், மலர் போன்ற அபிஷேகப் பொருட்களை தன் சன்னதிக்கு எடுத்து வரும் பக்தர்களுக்கு அருள் பாலிப்பதாகவும் முருகன் வரமளித்தார். இந் நிகழ்வு முதல் முருகனுக்கு காவடி எடுக்கும் பழக்கம் வழக்கமாகி விட்டது என்பது வரலாறு.

ஒவ்வொரு மனிதனுக்கும் இன்பமும் துன்பமும் இரண்டு சுமைகளாக சரி சமமாக இருக்கிறது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்த இரண்டு சுமைகளையும் தாங்கித்தான் ஆக வேண்டும். இதற்கு கடவுள் பக்தி எனும் ஆன்மீக எண்ணம் இந்த இரண்டு சுமைகளையும் எளிமையாகச் சுமக்க உதவும் மையக் கோலாக உள்ளது என்பதே உண்மை.

உலக சிருஷ்டியின் சிருஷ்டிகர்த்தாவின் மாபெரும் சக்தியின் உண்மையை உள்ளத்தில் இருத்தி அச்சம் இல்லாத நிம்மதியான பெருவாழ்வை எதிர் கொள்ள இத்தைப்பூச நன்னாளிலே சிவசக்தி பேரருளை நாடி வழிபடுவோம்...

# தமிழர் திருநாள்



தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை. தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக, பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது.

தமிழர் திருநாள்... தைப் பொங்கல், அறுவடைத் திருநாள் என கூறப்படும் பொங்கல் பண்டிகை, தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேஷமாக கொண்டாடப்படுகிறது. தமிழர்களால் விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். மலேசியா,இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் பொங்கல் பண்டிகையன்று அரசு விடுமுறையும் கூட விடுகிறார்கள்.

பொங்கல் பண்டிகையின் தோற்றம் எப்போது என்று உறுதியாகத் தெரியவில்லை. 1000 ஆண்டுகளுக்கு முன்பு வந்தது இந்த பண்டிகை என்று ஒரு கூற்று உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இது கொண்டாடப்படுகிறது என்று இன்னொரு கூற்றும் உள்ளது. சங்ககாலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும் பெண்கள் விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல். உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்தது வழிபட்டனர்.

சோழர் காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு புதியீடு என்று பெயர் இருந்தது. அதாவது, ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள். உழவர்கள் தை மாதத்தின் முதல் நாளில், அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இதுதான் பின்னர் பொங்கல் பண்டிகையாக மாறியது என்கிறார்கள்.

நீர் வளம் கொண்ட இடங்களில் மூன்று வேளாண்மை நடக்கும். நீர் வளமில்லா இடங்களில் மழை நீர்த் தேக்கத்தால் ஒரு வேளாண்மைதான் விளைக்க முடியும். ஆகவே, மார்கழி (சிலை) அல்லது தை (சுறவை) மாத அறுவடையே நாடெங்கும் நிகழும். அறுவடை முடிந்து பெற்ற புத்தரிசி, கரும்பு, மஞ்சள், பனங்கிழங்கு, நம்முடைய கொடிவழிக் காய்கறிகள் (குறிப்பாக அவரை, புடலை, கத்திரி, வாழை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு) போன்றவை படையலாக வைக்கப்படும். செந்நெற் பச்சரிசியைப் பெரும்பாலும் தவிடு போக்காமல் நீர் சேர்த்துச் சமைத்து பருப்புக் குழம்புடன் உண்பதும் மரபு. பொங்கு என்ற சொல் கொதித்தல், மிகுதல், சமைத்தல், செழித்தல் எனப் பொருள்படும். பொங்குவதால் பொங்கல். பொங்கல் விழாவை தமிழர் என்னும் இனக்குழு தொடர்பான விழா என்று தெளிவாக உணரமுடியும்.

பொங்கல் பண்டிகை மொத்தம் 3 நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகிப் பண்டிகை. அடுத்த நாள் பொங்கலிடும் நாள். 3வது நாள் மாட்டுப் பொங்கல். நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை, சூரியன், விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல் வாய்ப்பாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது.

## போகிப் பண்டிகை

போகிப்பண்டிகையானது தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளாகிய பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் "பழையன கழித்து, புதியன புகவிடும்" நாளாகக் கருதப்படுகிறது. பழையவற்றையும், உபயோகமற்றவையும் விட்டெறியும் நாளாகக் கருதப்படுகிறது. போகியன்று, வீட்டின் கூரையில் பூலாப்பூ செருகப்படும். அன்றைய தினம், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள் தேவையற்றபொருட்களை அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும். வீடு மட்டுமல்ல மனதில் இருக்கும் தீய எண்ணங்களும், தவறான எண்ணங்களும் நீக்கப்படவேண்டும் என்பது இதில் உள்ள தத்துவமாகும்.

இதையொட்டியே பொங்கலுக்கு முன் வீட்டிற்கு புது வர்ணம் பூசி வீட்டை அழகு படுத்துகிறார்கள். பொங்கல் சமயத்தில் வீடு புதுப் பொலிவுடன் காணப்படும். இது கிராமங்களில் பொங்கல் சமயத்தில் காணக் கிடைக்கும் இனிய காட்சியாகும். பழந்துயரங்களை அழிப்பதான இப்பண்டிகையைப் "போக்கி" என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி "போகி" என்றாகிவிட்டது. அக்கால வழக்கப்படி வருடத்தின் கடைசிநாள் என்பதால் நடந்து முடிந்த நல் நிகழ்வுகளுக்கு நன்றி கூறும் நாள் போகி என்போரும் உண்டு. போகிப் பண்டிகையின் போது இனிப்பு, வடை, பாயாசம் போன்றவை இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும்.

## பொங்கல் பண்டிகை


இரண்டாவது ஆவது நாளான பொங்கல், விசேஷமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. பொங்கலன்று அதிகாலை எழுந்து தலையில் நீராடுவர். வீட்டு முற்றத்தில் கோலம் இட்டு



முற்றத்திற் கோலமிட்டு தலை வாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி பொங்கலிடத் தொடங்குவர். சாணத்தில் பிள்ளையார் பிடித்தும் வைப்பார்கள். அதன் நடுவில் பானை வைப்பர். புதுப்பானையில் புது அரிசியிட்டு முற்றத்தில் பொங்க வைப்பார்கள். புதுப்பானை எடுத்து, மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையைச் சுற்றிக் கட்டி, புதுப் பாலில், புது அரிசியிட்டு, வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள். புதிய மஞ்சள் கொத்தையும் புதிய கரும்பையும் புதிய காய்கறிகளையும் அன்று பயன்படுத்துவர். பொங்கல் பொங்கி வரும் வேளையில் குடும்பத் தலைவன், மனைவி மக்களுடன் கூடி நின்று "பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!" என்று உரக்கக் கூவி அரிசியை இருகைகளாலும் அள்ளிப் பானையில் இடுவர். தனது முதற் பயனை கதிரவனுக்குப் படைத்துப் பின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பே தான் நுகர்வான். இது தமிழரின் பண்பாடாக தொன்றுதொட்டு உள்ளது. வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து, பொங்கி வரும்போது குலவையிட்டும், "பொங்கலோ பொங்கல்", "பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக" என்ற குரலோடு பொங்கல் பானையை இறக்க வேண்டும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும், நலமும் நிலவும் என்பது ஐதீகம்.

## மாட்டுப் பொங்கல்

மூன்றாவது நாள் விழா மாட்டுப் பொங்கல். மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கல் நாளின் மறுநாள் தமிழர்களால் கால்நடைக்காக கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். இது பட்டிப் பொங்கல் அல்லது கன்றுப் பொங்கல் எனவும் அழைக்கப்படுகிறது. உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்திற்கு நன்றி கூறும் நாளே இந்நாளாகும். மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகக் கொண்டாடுகின்றனர்.



அன்று மாடுகள் கட்டும் தொழுவத்தினை புதுப்பொலிவுபெறச் செய்து கொள்வார்கள். கால்நடைகளை குளிப்பாட்டி சுத்தம் செய்வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு பளபளக்கும் வகையில் வண்ணம் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டிவிடுவார்கள். கழுத்துக்கு தோலிலான வார் பட்டையில் ஜல், ஜல் சலங்கை கட்டி அழகு படுத்துவார்கள். திருநீறு பூசி குங்குமப் பொட்டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் தயார் செய்வார்கள்.

உழவுக்கருவிகளை சுத்தம் செய்து சந்தனம், குங்குமம் வைப்பார்கள். விவசாயத்தில் பயன் படுத்தப்படும் அனைத்து கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தாம்பாளத் தட்டுகளில் தோட்டம் காடுகளில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டப்படும். இதன் பின் பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.

ப ண் டை ய கா ல ம்
தொட்டு ஏறுதழுவுதல் என்னும் வீரவிளையாட்டும் நடைபெற்று வந்தமையை இங்கு நாம் பெருமையுடன் நினைத்துப் பார்க்க வேண்டும். இப்போதும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் காளை பிடிக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டு இந்நாளில் நடைபெறும்.

பொங்கலிட்ட பிறகு எச்சில் தண்ணீர் தெளித்தல் என்றொரு மரபு மதுரை மாவட்டத்தில் உண்டு. "பொங்கலோ பொங்கல் மாட்டு பொங்கல் பட்டி பெருக பால் பானை பொங்க நோவும் பிணியும் தெருவோடு போக" என்று கூறி மாடு பொங்கல் உண்ட எச்சில் தண்ணீரை தொழுவத்தில் தெளிப்பர்.

## காணும் பொங்கல்

காணும் பொங்கல் என்பது பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காவது நாள் இடம்பெறும் விழா ஆகும். காணும் பொங்கலை கன்னிப் பொங்கல் அல்லது காணும் பண்டிகை என்றும் அழைப்பர். உற்றார், உறவினர், நண்பர்களை காணுதல் மற்றும் பெரியோர் ஆசி பெறுதல் என்பன அடங்கும். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பட்டி மன்றம், உறி அடித்தல், வழுக்கு மரம் ஏறல் என்று வீர சாகசப் போட்டிகள் சகலமும் இடம் பெறும். இது பெண்களுக்கு முக்கியமான பண்டிகை ஆகும். பொங்கல் பானை வைக்கும்போது அதில் கட்டிய புது மஞ்சள்கொத்தினை எடுத்து முதிய தீர்க்க சுமங்கலிகள் ஐவர் கையில் கொடுத்து ஆசி பெற்று அதனை கல்லில் இழைத்து பாதத்தில் முகத்தில் பூசிக்கொள்வார்கள்.

கரும்பு-ஜல்லிக்கட்டு-பொங்கல்.. பொங்கல் பண்டிகையின் மூன்று முக்கிய அம்சங்கள், கரும்பு, ஜல்லிக்கட்டு, இனிப்புப் பொங்கல்தான். இவை இல்லாமல் பொங்கல் நிறைவடையாது. அன்று முழுவதும் கரும்பு சாப்பிடுபவர்களும் இருக்கிறார்கள். அதேபோல பொங்கல் பண்டிகையின்போது கிராமங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளும் விசேடமானவை. அலங்காநல்லூர், பாலமேடு, காஞ்சரம்பேட்டை ஆகியவை ஜல்லிக்கட்டுக்கு பெயர் போனவை. இதில் அலங்கா நல்லூர் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு களமாகும். தமிழர்களின் திருநாளாக, உழவர் திருநாளாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையை, உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவி வாழும் தமிழர்கள் கொண்டாடிவருவதும் நன்றியுடன் நோக்கப்படவேண்டியதே. அதேசமயம், பல்வேறு பகுதிகளில் தமிழர்கள் பட்டு வரும் பல்வேறு அவதிகள் ஒழிந்து, வரும் ஆண்டில் எல்லா வளமும், நலமும் பெற்று அமைதியுடன் வாழவும் சூரிய தேவனைப் பிரார்த்திப்போம்.

***(நன்றி: மதுரைத் தமிழ்ச்சங்க நூலக வலைப்பு.)***



# மார்கழி மாத சிறப்பு

மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என பகவான் கிருஷ்ணர் இம்மாதத்தை சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

இந்த மாதம் ஆன்மீகத்தில் தேவர்களுக்கான அதிகாலை நேரமாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே இந்த மாதம் முழுவதும் இறைவழிபாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வருடத்தின் ஒன்பதாவது மாதம் மார்கழி ஆகும். இம்மாதம் தனுர் மாதம் என்றும் அழைக்கப்படுகிறது. இம்மாதம் முழுவதும் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு வாசலில் வண்ணக்கோலம் இட்டு இறைவழிபாடு செய்வது வழக்கமாக மேற்கொள்ளப்படுகிறது.

ஓசோன் படலமானது பூமிக்கு மிகஅருகில் இம்மாதத்தில் உள்ளது. எனவே சுத்தமான காற்றை சுவாசித்து உடல்நலனைப் பேணும் பொருட்டு அதிகாலை வழிபாடு இம்மாதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும் அதிகாலை இறைவழிபாடு பற்றி மாணிக்கவாசகர் திருவெம்பாவையிலும், ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையிலும் போற்றியுள்ளனர்.

மார்கழியில் அதிகாலை வழிபாட்டில் கோவில்களில் வேதங்களுக்குப் பதிலாக திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆழ்வார் பாசுரங்கள் பாடப்படுகின்றன.

இம்மாதத்தில் மிருகசீரிட நட்சத்திரத்தில் என்றும் பதினாறு மார்க்கண்டேயர் பிறந்தார். எனவே மரணத்தை வெல்லும் மாதம் மார்கழி என்று மார்க்கண்டேய புராணம் குறிப்பிடுகிறது. மிருத்யுஞ்ச ஹோமம் செய்ய இம்மாதம் சிறந்தாகக் கருதப்படுகிறது.

இம்மாதத்தில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, அனுமன் ஜெயந்தி, பாவை நோன்பு, திருவெம்பாவை நோன்பு, படி உற்சவம், விநாயகர் சஷ்டி விரதம், உற்பத்தி ஏகாதசி போன்ற விழாக்கள், பண்டிகைகள், விரதமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

மார்கழி மாத முதல் தைப்பொங்கல் தினம் வரை வீட்டிலுள்ள திருமணமாகாத பெண்கள், அதிகாலைவேளை எழுந்து நீராடி, வீட்டின் முன்வாசலில் நீர்தெளித்து அரிசி மாவினால் கோலமிட்டு அதன் நடுவில் பசுவின் பசுஞ்சாணத்தினால் பிள்ளயார் பிடித்து அதன்மீது பூசணிப்பூ அல்லது அறுகம்புல் வைத்து வழிபடுவர். தைப்பொங்கல் தினத்தன்று பொங்கல் செய்து சூரியவழிபாட முடிந்தபின்பு அதுவரை சேர்ந்த பசுஞ் சாணகப் பிள்ளையாரை ஓர் ஓலைப் பெட்டியினுள் வைத்து நைவேத்தியம் படைத்து நீர்நிலையில் சேர்ப்பிப்பது வழக்கம்.

## விநாயகர் சஷ்டி விரதம்

இவ்விரதம் கார்த்திகை மாதம் வளர்பிறை பிரதமை முதல் தொடங்கி மார்கழி மாதம் வளர்பிறை சஷ்டி வரை மொத்தம் 21 நாட்கள் கடைப்பிடிக்கப்படுகிறது.

விநாயக விரத முடிவில் ஆண்கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் 21 இழைகளாலான காப்பினைக் கட்டிக் கொள்கின்றனர். இவ்விரதத்தை அனுட்டிப்போர் முதல் 20 நாட்களும் ஒரு வேளை மட்டும் உணவினை உட்கொள்கின்றனர். கடைசிநாள் முழுஉபவாசம் மேற்கொள்கின்றனர்.

விரதத்தின் நிறைவு நாளன்று பலவிதமான உணவுப்பொருட்களை தானமாகக் கொடுப்பர். இவ்விரதத்தின் பலனாக நல்ல வாழ்க்கைத்துணை, நற்புத்திரப்பேறு, சகல காரிய சித்தி ஆகியன கிடைக்கும்.

## திருவெம்பாவை நோன்பு

திருவெம்பாவை நோன்பு என்பது மார்கழியில் வரும் திருவாதிரைக்கு ஒன்பது நாட்களுக்கு முன்பு கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது திருவாதிரையோடு சேர்த்து விரத நாட்கள் மொத்தம் பத்து நாட்கள் ஆகும்.

இந்நோன்பில் அதிகாலையில் எழுந்து நீராடி சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜரை வழிபடுவர். இவ்விரதத்தின்போது ஒரு வேளை அவித்த உணவினை மட்டுமே உண்பர். விரதத்தின் இறுதி நாளான ஆருத்திரா தரிசன தினத்தன்று சிவகாமி அம்பாளுக்கும் நடராஜப் பெருமானுக்கும் மகா அபிடேகம் இடம்பெற்று தேரோட்டமும் இடம்பெறும்.

ஒன்பது நாட்களும் இவ்விரதத்தினை கன்னிப் பெண்கள் கடைப்பிடிப்பர். அதிகாலை வேளை துயிலெழுந்து திருவெம்பாவைப் பாடல்களை இசைத்தவாறே இல்லந் தோறும் சென்று தம்தோழியரை அழைத்துக்கொண்டு திருக்குளத்தில் நீராடி கோயிலுக்குச் சென்று வழிபடுவது மரபு. இவ்விரதத்தின்போது கோயில்களிலும் திருவெம்பாவை பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்வழிபாட்டில் சர்க்கரை வெல்லம் கலந்த பிட்டு படைக்கப்படுகிறது. இதனால் இப்பூசை பிட்டுப்பூசை என்று அழைக்கப்படுகிறது.

## பாவை நோன்பு

ஆயர்பாடியில் கோபியர்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் ஆற்றிற்குச் சென்று நீராடி மண்ணால் செய்த காத்யாணி தேவியை வழிபட்டு தங்களுக்கு நல்ல கணவன் கிடைக்க வழிபாடு நடத்தினர். பெண்கள் கடைப்பிடித்த விரதமாயின் இவ்விரதம் பாவை நோன்பு என்று வழங்கலாயிற்று.

ஆண்டாள் பாவை நோன்பினை மேற்கொண்டே அரங்கனை கணவனாக அடைந்தாள். ஆண்டாள் பாவை நோன்பின்போது நெய், பால் முதலியவற்றை உண்ணாமலும், கண்ணுக்கு மையிடாமல், தலையில் மலர் சூடாமல் புறஅழகில் நாட்டம் செலுத்தாமல் இறைநாட்டத்தில் மட்டும் மனதினைச் செலுத்தி பாவைநோன்பினை மேற்கொண்டாள்.

எனவே கன்னிப்பெண்கள் நல்ல கணவன் கிடைக்க மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி கோவிலுக்குச் சென்று ஆண்டாள் எழுதிய திருப்பாவையைப் பாடி வழிபாடு நடத்துகின்றனர்.

திருமணமான பெண்கள் மகிழ்ச்சியான மணவாழ்வு நீடிக்க வேண்டியும், குடும்ப நலன் வேண்டியும் இவ்விரத்தினை மேற்கொள்கின்றனர்.

## திருவாதிரை

திருவாதிரை திருவிழா மார்கழியில் பௌர்ணமியை ஒட்டிய திருவாதிரை நட்சத்திர நாளில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவானது சிவபெருமானின் வடிவமான ஆடலரசன் நடராஜருக்கு கொண்டாடப்படுகிறது.

திருவாதிரையைக் கொண்டே சிவபெருமானுக்கு ஆதிரையன் என்ற பெயர் வழக்கத்தில் உள்ளது.

இவ்விழா பற்றி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். திருவாதிரை, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகத்தின் ஒரு சில பகுதிகள், இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் ஆகியோரால் மிகவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாட்டில் திருச்சிற்றம்பலம் என்னும் தில்லை சிதம்பரத்திலும், உத்தரகோசமங்கையிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவின்போது திருவாதிரைக்களியும், ஏழுகறிக்கூட்டும் இறைவனுக்கு படைக்கப்படுகின்றன. "திருவாதிரைக்கு ஒருவாய் களி" என்பது இவ்விழா பற்றிய பழமொழியாகும்.

இவ்விரதம் சிவனுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. இவ்விரத வழிபாடு மேற்கொண்டால் நடனக்கலையில் சிறந்து விளங்க எம்பெருமானின் ஆசிகிட்டும் என்பதான ஐதீகமும் காணப்படுகின்றது.

## வைகுண்ட ஏகாதசி

வைகுண்ட ஏகாதசி மார்கழியில் வளர்பிறை ஏகாதசியில் கொண்டாடப்படுகிறது. வைகுண்ட ஏகாதசியில் திருமால் வழிபாடு மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது.



பெரும்பாலும் எல்லா இந்து மக்களாலும் இத் தினத்தில் விரதமுறை மேற் கொள்ளப்படுகிறது. திருமாலை வழிபடும் விரத முறைகளில் இது மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

காயத்ரிக்கு மிஞ்சிய மந்திரமும் இல்லை, ஏகாதசிக்கு மிஞ்சிய விரதமும் இல்லை என்பது இவ்விரதம் பற்றிய பழமொழியாகும். இவ் விழாவில் சொர்க்கவாசல் திறப்பு என்பது முக்கிய நிகழ்சியாகும்.

வைகுண்ட ஏகாதசி அன்று துளசி நீரினை மட்டும் உட்கொண்டு பகல் மற்றும் இரவு விழித்திருந்து திருமால் பற்றிய பாடல்கள் பாடி விரதமுறை மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரத வழிபாடு வைகுந்த பதவி என்னும் மோட்சத்தை நல்கும்.

## உற்பத்தி ஏகாதசி

மார்கழி மாத தேய்பிறை ஏகாதசி உற்பத்தி ஏகாதசி என்று அழைக்கப்படுகிறது. இத்தினத்தில் விரதமுறை மேற்கொண்டு திருமாலை வழிபட சகல சௌபாக்கியங்கள் கிடைக்கும். பகையை வெல்ல உதவும்.

## படி உற்சவம்

ஆண்டுதோறும் டிசம்பர் 31-ந்தேதி மலைமேல் உள்ள முருகன் கோவில்களில் படி உற்சவம் என்ற விழா சிறப்பாக நடைபெறுகிறது.

அன்றைய தினம் பக்தர்கள் குழுக்களாக மலைப்படிகளில் ஒவ்வொரு படியிலும் நின்று திருப்புகழ் பாடல்களைப் பாடுகின்றனர். இவ்விழா அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் மிகவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

## அனுமன் ஜெயந்தி

மார்கழி மாதத்தின் மூலநட்சத்திரத்தோடு கூடிய அமாவாசை அன்று அனுமன் ஜெயந்தி தமிழ்நாட்டில் கொண்டாடப்படுகிறது. இராம- இராவண யுத்தத்தில் இராம பகவானுக்கு மிகவும் துணையாக நின்ற ஸ்ரீ அனுமன் சிரஞ்சீவி வரம் பெற்ற ஓர் மகானாக இன்றுவரை உயிருடன் இருப்பதாகவே நம்பப்படுகின்றது. அதனால் வைணவ ஆகம முறையில் பூசை செய்யப்படும் கோயில்களில் அனுமனுக்குப் பூசை வழிபாடுகள் செய்வது கிடையாது.

அனும ஜெயந்தி அன்று விரதம் மேற்கொண்டு மன உறுதி, ஆற்றல், தைரியம் ஆகியவற்றை அருளுமாறு பிரார்த்தனை மேற்கொள்ளப்படுகிறது.

## மார்கழியை சிறப்பு செய்தவர்கள்

இம்மாதத்தில் 63 நாயன்மார்களில் வாயில் நாயனார், சடைய நாயனார், இயற்பகை நாயனார், மானக்கஞ்சாற நாயனார், சாக்கிய நாயனார் ஆகியோரின் குருபூசை நடத்தப்படுகிறது.

பன்னிரு ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வார் ஜெயந்தி இம்மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

ரமண மகிரிஷி, அன்னை சாரதா தேவியார், பாம்பன் சுவாமிகள் ஆகியோர் இம்மாதத்தில் தோன்றியோர் ஆவர்.

மார்கழியில் கோலம் இட்டு சாணத்தினால் பிள்ளையார் பிடித்து மாக்கோலத்தில் வைத்து பிள்ளையார் வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது.

படி உற்சவம் நடத்தி முருப்பெருமான் இம்மாதத்தில் சிறப்பிக்கப்படுகிறார்.

திருவாதிரை கொண்டாட்டத்தில் சிவபெருமான் வணங்கப்படுகிறார்.

வைகுண்ட ஏகாதசி விரம் கடைப்பிடித்து திருமால் போற்றப்படுகிறார்.

பெண்கள் பாவை நோன்பின் மூலம் ஆதிசக்தி அன்னையை வழிபடுகின்றனர்.

இவ்வாறாக மார்கழியில் பிள்ளையார், முருகப்பெருமான், சிவபெருமான், திருமால், ஆதிசக்தி என எல்லா கடவுளரும் வழிபடப்படுகின்றனர்.

*(நன்றி: "மாதங்களும் விரதங்களும்")*

## மாமன்றத் தலைவரின் அஞ்சலி



இந்நாட்டில் தமிழ் மக்களிடையே தனக்கெனத் தனி இடம்பிடித்து அவர்களின் உள்ளங்களில் உயர்ந்து நின்றவரும், மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளராகப் பல ஆண்டுகள் இருந்து நமபிக்கைப் பொறுப்பாளர் சபையின் பிரதித் தலைவராகவும் தொண்டாற்றிய உத்தமரை இழந்து விட்டோம்.

பாரதத்திலிருந்து இந்நாட்டிற்கு வந்து, வர்த்தகத்துறையில் மட்டுமில்லாது ஆன்மீகப் பணியிலும் ஒரு புதுப்பாதையை வகுத்த வரலாற்று நாயகன் ஸ்ரீ வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளையின் அருமைப் புதல்வனாகப் பிறந்த தேசபந்து ஈஸ்வரன் அவர்கள், தனது தந்தையின் பெயரின் முதலெழுத்துக்களான வி.ரி.வி யிற்குமகிமை சேர்த்துத் தந்து ஈஸ்வரன் குழாமே ஒரு குடும்பமாக வரலாறு படைத்துவிட்டு மறைந்துவிட்டார் என்று கூறுவதிலும் பார்க்க, தமிழுணர்வும் இறைபக்தியும் நிறைந்த ஒரு சந்ததியை உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கிறார் என்று கூறுவதே பொருத்தமாகும்.

இன்று, இந்நாட்டில் தலைசிறந்த ஆலயங்களைப் பேணிப்பாதுகாத்து, இறையருளை எங்கள் மக்களுக்குப் பெற்றுத்தந்ததுடன் மட்டுமல்லாது அவர்களுக்கு ஆன்மீக அறிவையும் உணர்வையும் ஊட்டி அவர்களின் வாழ்க்கையின் தரத்தை உயர்த்திய தளபதியை இழந்து விட்டோம். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் முதல் பல ஆன்மீக அறிஞர்களை இந் நாட்டிற்கு அழைத்துவந்து அரிய சேவை பல ஆற்றிய தளபதி மறைந்தாலும், அத் தளபதி வழிவந்த படை அப் புனித வழியில் பணியைத் தொடர வழிவகுத்துவிட்டுத்தான் சென்றிருக்கின்றார் என்பதை சோகத்துடன் ஆனால் நிம்மதியுடன் கூறலாம்.

அமரர் ஈஸ்வரன் ஏறிய மேடைகள் யாவற்றிலும் - எழுதிய ஒவ்வொரு ஆக்கத்திலும், இளம் சமுதாயத்தின் சிந்தனைகளை உயர்த்தும் கருத்துக்களை உதிர்த்த சிந்தனைச் சிற்பியாக இருந்தது மட்டுமல்லாது, தன்னுடன் சேர்ந்து மற்றவர்களையும் சிந்திக்கவைத்த ஓர் அறிவாளி அவர் என்றால் மிகையாகாது.

போட்டிகளும் பூசல்களும், துவேச உணர்வுகளும் நிறைந்த மண்ணில், வர்த்தகத்துறையில் தமிழ்ச்சமூகத்திற்கு சிறப்பான இடத்தைப் பெற்றுத்தந்த வர்த்தகப் பெருமகன் அவர். இந்நாட்டு வர்த்தகத்துறையில் எமது இனத்திற்கு பெருமையையும் புகழையும் தேடித்தந்ததுடன், அவர் காட்டிய உன்னத வழியில் தனது அடுத்த சந்ததியையும் வளர்த்து விட்டிருக்கிறார் என்பதையும் எடுத்துக் காட்டுவது என கடமை.

மொரீசியஸ் நாடு அதன்பிரதிநிதியாக அந்நாடு தேர்ந்தெடுத்த இராசதந்திர தூதுவர்; இந்நாட்டு வர்த்தகத்துறையில்வர்த்தக சம்மேளனங்கள் பொறுப்புகளை வழங்கிக் கௌரவித்த தமிழ்மகன் அவர்; எந்த அரசு பதவியில் இருந்தாலும் தன் இனத்தின் மானத்தைப்பேணி ஆட்சியாளரும் தேடிவந்த சமூகத்தலைவரும் அவரே. புலவர்களும் பண்டிதர்களும் நிறைந்த சபைகளிற்கூட ஆழமிகுந்த கருத்துக்களைக் கொட்டிய சொற்பொழிவாளர் மட்டுமல்லாது, தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பணிபுரிந்தவர்களுக்குத் தலைமைதந்த வழிகாட்டியுமாக நின்றார். ஆலயங்களின் புனிதத்தையும் தெய்வீகச் சூழலையும் வளர்த்து ஆண்டவன் அருளை எமது மக்களுக்குப் பெற்றுத்தந்த தர்மகர்த்தா இவர். இப்படிப் பல படிகளில் ஏறி – உயர்ந்து உச்சியிலிருந்து அறிவொளி பரப்பி வழிகாட்டிய சூரியன் அவர்.

அமரர் இந்த உலகிலிருந்து மறைந்துவிட்டாலும், என்றும் தொடந்தும் எங்கள் உள்ளங்களிலெல்லாம் நிறைந்து வாழ்வார். அந்த உத்தமர் காட்டிய உன்னத வழியில் வாழ நாங்கள் முயற்சிப்பதே அவரின் ஆன்மா சாந்தியடைய நாம் செய்யவல்ல கடமையாகும்.

அமரரை இழந்து வாடும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு, அமரரின் இழப்பு எங்கள் எல்லோருக்கும் எற்பட்ட இழப்பாகும் என்று கனக்கும் உள்ளத்துடன், அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் பாதாரவிந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்



# நாவலர் வகுத்த புதுப்பாதை

பேராசிரியர் க. கைலாசபதி

தம்மைச் சமயகுரவர்கட்கு ஒப்பிடுதல் சிறிதும் பொருந்தா தென்றும், அவர்களது அடிப்பொடிக்குள்ள மகத்துவத்தில் ஆயிரத்திலொன்றுதானும் தமக்கு இல்லையென்றும் நாவலர் பணிவடக்கத்துடன் கூறியுள்ள போதும், நாவலரைப்பற்றி எழுதிய பலர் அவரை ஐந்தாம் குரவர் என்றே வருணித்திருக்கின்றனர். முன் வந்த சமய குரவர்கள் புறச்சமயங்களைச் சாடித் தஞ்சமயத்தை நிலைநாட்டினர். அவரோடு ஐவராமென்ன, பரசமய கோளரியாக விளங்கியவர் நாவலர் என்பது யாவருமறிந்ததொன்றே.

தனது காலத்துக் கேற்றவை எவை என்பதனையும், இன்றியமையாதன எவை என்பதையும் சிந்தித்துத் தெளிந்து அவற்றைச் செயற்படுத்தியமையே நாவலரது சிறப்புக்கும் தனித்துவத்துக்கும் அடிப்படையாகும். அதாவது நாவலரின் தற்கால உணர்வே அவரை அவரது சமகாலத்தவர் பலரினின்று வேறுபடுத்தித் தனிச்சிறப்புடையராய்க் காட்டுகின்றது. நாவலர் வரலாற்றுப் பெருமகன். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆவசியகமாயிருந்த சிற்சில கருமங்களை நிறைவேற்றியவர். நன்கு ஆற்றப்பட்ட அக் கருமங்கள் பிறருக்கு ஆதர்சமாக அமைந்தன. அவையே புதுப்பாதை காட்டும் புதுப்பணிகளாயும் அமைந்தன.

பிறர் நலம் என்ற மகோன்னதமான இலட்சியத்துக்குத் தம்மை அர்ப்பணித்ததே நாவலர் காட்டிய புதுப் பாதைக்கு வித்தாகும். இவ்வித்திலிருந்து விரிந்தனவாக ஐந்து முதன் முயற்சிகளைக் குறிப்பிடலாம்.

1. தமிழிலே முதன் முதலாகப் பிரசங்கம் செய்தார்.
2. தமிழிலே கட்டுரை என்பது முதலில் இவரால் நல்ல முறையில் எழுதப்பட்டது.
3. தமிழில் எழுந்த பாடநூல்களுக்கு இவரே வழிகாட்டி.
4. வசன நடையிற் குறியீட்டு முறையை முதன் முதலிற் புகுத்தினார்.
5. சைவ – ஆங்கில பாடசாலையை முதன் முதல் ஆரம்பித்தவர்.

மேற்கூறிய ஐந்து முயற்சிகளும் நாவலருக்கு முன்னர் எவராலும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறவேண்டியதில்லை. ஆயினும், தமிழ் –சைவம் என்ற கோட்பாட்டிற்குள் இவற்றைப் பழுதறச் செய்து முடித்தவர் நாவலரே. ஏறத்தாழ 1820ஆம் ஆண்டளவிலிருந்தே, சென்னைக் கல்விச் சங்கம் சில தமிழ் நூல்களையும் வெளியிட்டு வந்தது. சென்னையில் அக் காலத்திற் புகழுடன் விளங்கிய வித்துவான் சிதம்பர பண்டாரம், தாண்டவராய முதலியார், சிவக்கொழுந்து தேசிகர் முதலிய இயற்றமிழ்ப் போதனாசிரியர்கள் இச்சங்கத்து முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். வெள்ளைக்காரத் துரைமாரின் கருத்துக்கிணங்கச் சில பழைய தமிழ் நூல்களைப் புதுப்பித்தும், சில ஆங்கில நூல்களை மொழி பெயர்த்தும் வெளியிட்டனர். ஆனால், நாவலரே தமிழ் மாணவருக்கு ஏற்ற புதிய பால பாடங்களை எழுதினார். இது பற்றி அக் காலத்திற் சென்னையில் வெளிவந்த Native Public Opinion என்னும் ஆங்கிலப் பத்திரிகை மதிப்புரையாகக் கூறியுள்ளது மனங்கொளத்தக்கது:

"இந்த அறிஞர் எழுதிய பாலபாடங்களைத் தவறாது இங்குள்ள வித்தியாசாலைகளில் உபயோகித்தல் வேண்டுமென்று நாம் திடமாகச் சொல்லுவோம்; இச் சென்னையிலுள்ள வித்தியா சங்கத்தார் வெளியிடும் வசன பாட புத்தகங்களைக் காட்டிலும் நாவலர் பாலபாடங்கள் எவ்வாற்றானும் சிறந்தவையாகும். வித்தியா சங்கத்தார் வெளியிட்ட புத்தகங்களை நாவலரவர்கள் எழுதிய பாலபாடங்களோடு ஒப்பிட நினைத்தமைதானும் தவறெனலாம்."

மாணவரின் மனவளர்ச்சியையும் கல்வி வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு 'சுதேசிய'த் தேவைகளை நிறைவேற்ற நாவலர் பாலபாடங்களை எழுதியதன் தருக்கரீதியான முடிவே அவர் எழுதி வெளியிட்ட இலங்கைப் பூமிசாஸ்திரம். அவர் எழுதத் தொடங்கியிருந்த தமிழ், ஆங்கிலம்–தமிழ், வடமொழி–தமிழ் அகராதிகளும் இத்தகைய கல்வித் தேவையினால் உந்தப் பெற்றனவே.

உரைநடையை எழுதியதிலும் நூல்களைப் பதிப்பித்ததிலும் நாவலருக்கு முன்னோடிகள் பலரிருந்திருக்கின்றனர். ஆனால், அவர்களுக்கும் நாவலருக்கும் நோக்கு நிலையில் வேறுபாடுண்டு.

ஐம்பெரும் புது முயற்சிகள் எமது சமுதாயத்துக்கு மிகவும் வேண்டற்பாலனவாயிருந்த நற்சாதனைகளாயமைந்தன. ஆதீனங்களோடு சமயமும், சமஸ்தானங்களோடு புலமையும் முடங்கிக் கிடந்த சூழ்நிலையில் இவையிரண்டையும் பரந்துபட்ட மக்களுக்கு உடைமையாக்க முனைந்தமையே நாவலரது தலையாய புதுமுயற்சியாகும்.

நாவலர் புதிதாகச் செய்த முயற்சிகள் அவரது பெரு நோக்கத்துக்கு ஏதுக்களாகவே கருதப்பட்டன என்பது நினைவில் நிறுத்த வேண்டியது. இவற்றின் மூலம் "சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையே" தன்னை இருபது வருட காலம் இரவும் பகலும் தொண்டாற்றச் செய்தது என்று "சைவசமயிகளுக்கு விக்கியாபனம்" (1868) என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார். பேராசை மட்டும் இருந்தாற் போதுமோ? வழிவகைகளும் காணல் வேண்டுமன்றோ! இவற்றைத் தனது எதிர்க்கட்சியினரிடமிருந்தே பெருமளவிற்குப் பெற்றுத் தமதாக்கிக் கொண்டார். "நாமும் ஏன் அந்தப் பாதிரிமார்கள் போலக் கிளம்பி நமது சைவசமயத்தைப் பரப்பலாகாது?" என்ற கேள்வி நாவலருக்கு உதித்தது.

மேலைநாட்டுக் கல்வி – கலாசார ஆதிக்கத்தின் பண்பையும், பயனையும் நாவலர் கண்டு தனித்து நின்று, சமர் புரிந்தார். காலமும் இடமும் நோக்கி எதிரியின் பாணங்களுக்குப் பதிற்பாணங்கள் சமைத்தமையே அவரது வரலாற்றுப் பணியின் இரகசியமாகும். இதனை எத்துணை அழுத்திக் கூறினும் தகும்.

இவ்வுண்மையினையே தனக்கேயுரிய நடையிற் பின்வருமாறு கூறியுள்ளார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

"உண்மையை நோக்குமிடத்துப் பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழல் அமையாதிருந்தால் ஆறுமுக நாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை."

தனது காலத்துச் சின்னஞ் சிறியது மனிதரிலிருந்து வேறுபட்டுப் 'புதுமை'யில் அடிபட்டுப் போகாமலும், பழமையில் அமிழ்ந்து போகாமலும் இரண்டையும் தரம் பிரித்து இனங்கண்டு புதுவழி கண்டமையாலேயே, "தத்துவ விசாரணி" பத்திராதிபர், "சென்னை முதல் ஈழமீறாகவுள்ள இத்தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கிணை இல்லாதவர்" என்று நாவலரை வருணித்தார். சி. வை. தாமோதரம் பிள்ளை தமது சேனாவரைய விளம்பரத்திலே (1868) நாவலரவர்கள் "தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர்" என்று விசேடித்தமை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்றே தோன்றுகிறது.

# இந்து ஒளி சஞ்சிகையின் இருபத்தொரு ஆண்டு நிறைவும் யாழ்.பிராந்திய பணிமனையின் பங்களிப்பும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழான "இந்து ஒளி" தனது வரலாற்றுப் பாதையில் இருபத்தொரு ஆண்டுகளை நிறைவு செய்வது மாமன்றத்திற்கு மட்டுமல்ல இந்து மக்கள் அனைவருக்குமே மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இதற்கும் மேலாக இந்த இருபத்தொராவது ஆண்டில் "இந்து ஒளி" நூறு சுடர்களுக்கும் மேலாகப் பிரகாசித்து சாதனை படைத்துள்ளது. உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் "இந்து ஒளி" (தீபம் :21 சுடர்:09) 103ஆவது சுடர் என்பது பெருமைக்குரிய விஷயம்.

இந்து ஒளி அறிமுகமான வரலாறு தனித்துவமானது. ஏற்கனவே வெளிவந்த இந்து ஒளி இதழ்களில் இதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. 1996ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் திருக்கார்த்திகை திருநாளன்று அறிமுகமான இந்த சஞ்சிகை மாமன்றத் தலைமையகத்திலிருந்து காலாண்டிதழாக வெளிவந்துகொண்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மாமன்ற யாழ் பணிமனையில் அமைந்துள்ள இந்து ஆராய்ச்சி நிலைய வெளியீடாக இந்து ஒளி மலரத் தொடங்கியது. அதே ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இருமாத இதழாக "இந்து ஒளி" வெளிவரத் தொடங்கியிருப்பதும் சிறப்புக்குரியது.

இந்து ஒளி சஞ்சிகை இந்து மக்கள் மத்தியில் பேரபிமானமும் பெருமதிப்பும் பெற்றுத் திகழுவதற்கும் இருபத்தொரு ஆண்டு காலத்தை சிறப்பான வளர்ச்சியுடன் நிறைவுசெய்வதற்கும் மாமன்ற முகாமையுடன் இணைந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் வழங்கிவரும் ஆதரவும் ஊக்குவிப்புமே காரணம் என்பதை மறுக்க முடியாது. "இந்து ஒளி" சஞ்சிகை உரிய காலத்தில் தவறாது வெளிவரவேண்டும் என்பதில் மாமன்றத் தலைவர் கொண்டிருக்கும் ஆர்வமும் உறுதிப்பாடும் என்றென்றும் போற்றுதற்குரியது.

2012ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்ற மாமன்ற முகாமைப் பேரவையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது மாமன்ற வெளியீடுகள் குழுவின் தலைவராக சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும், குழுவின் செயலாளராக நானும் தெரிவு செய்யப்பட்டதால் "இந்து ஒளி" யை யாழ் பணிமனையிலிருந்து வெளியிடும் செயற்பாட்டுக்கு மாமன்றம் வழிவகுத்தது. இது விடயத்தில் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பதவி ரீதியாக இணைந்து பணியாற்றக் கூடியதாக எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். மாமன்றத்தின் ஓர் உறுப்பினராகவிருந்து தொடர்ந்தும் "இந்து ஒளி" ஆன்மீக இதழுக்கு பங்களிப்புச் செய்து வருவதில் திருப்தியடைகிறேன்.

"இந்து ஒளி" ஆன்மீக இதழ் ஆரோக்கியமானதாக அமையவேண்டும் என்பதில் தொடர்ந்தும் செயற்பட்டுவரும் மாமன்ற வெளியீடுகள் குழுவின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களது தீவிர பங்களிப்பும் மாமன்ற யாழ் பிராந்திய நிர்வாக அலுவலர் திரு. வீ.ஜெயசிங்கம், நிர்வாக உதவி மற்றும் கணினி தொடர்பான செயற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் செல்வி.தனலட்சுமி செல்வராசா ஆகிய இருவரினதும் உதவியும் ஒத்துழைப்பும் பெரிதும் போற்றுதற்குரியன.

"இந்து ஒளி" இதழில் வெளியாகும் விஷயங்களுள் கணிசமான அளவு மாமன்ற யாழ் பிராந்திய பணிமனையிலிருந்து கணினிப் பதிவு செய்யப்படுகின்றன. கட்டுரைகளுடன் ஆசிரியர் தலையங்கம், ஆன்மீகச்சுடரின் அருள்மடல் என்பன இரவோடு இரவாக எழுதப்பட்டு பகலில் கணினியில் பதிவாகிறது என்பது ஒருசிலருக்கு மட்டும் தெரிந்த ரகசியம். மாமன்ற தலைமையகத்தில் பணியாற்றும் திரு.முருகையா பிரணவன் அவர்களும் கணினிப் பதிவு, படத்தொகுப்பு வடிவமைப்பு போன்ற செயற்பாடுகளின் ஊடாக "இந்து ஒளி" இதழின் வெளியீட்டுக்கு சிறப்பான வகையில் பங்களிப்பை செய்துவருகிறார். இந்து ஒளியை ஒரு கவர்ச்சிகரமான சஞ்சிகையாக வடிவமைப்பதிலும் தரமானதாக அச்சிடுவதிலும் செயற்படும் யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தினரும், குறிப்பாக அதன் முகாமைத்துவ அதிபர் திரு.பொன். விமலேந்திரன் அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மாமன்ற யாழ் பிராந்திய மணிமனை இந்து ஒளி வெளியீட்டுடன் இணைந்திருப்பதால் பணிமனை தொடர்பான சிறு அறிமுகமொன்று இங்கு அவசியமாகிறது. யாழ் நல்லூர் கோவில் வீதி, 211/17 ஆம் இலக்கத்திலுள்ள திருமதி பேரம்பலம் அவர்கள் நன்கொடையாகத் தந்த காணியில் அமைந்துள்ள பிராந்திய பணிமனை கட்டடம் 2009ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் இங்கு இந்து ஆராய்ச்சி நிலையமும் இந்து பிரசாரகர் பயிற்சி நிலையமும் இயங்கத் தொடங்கின. இந்து ஆராய்ச்சி நிலையத்தில் நூலகமும், கணினிப் பயிற்சி நிலையமும் 2010 ஜனவரி 16ஆம் திகதியிலிருந்து செயற்பட்டு வருகின்றன.

மாமன்றத்தின் உப தலைவரான சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் யாழ் இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநராக சேவையாற்றிவருகிறார்.

மாமன்ற யாழ் பிராந்திய பணிமனையில் அவ்வப்போது பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சிவதொண்டர் அணி மாநாடு சிவதொண்டர் அணி பயிற்சிப் பட்டறை நூல் வெளியீடுகள் நினைவுப் பேருரைகள் நினைவு தின நிகழ்வுகள் ஆய்வரங்குகள் கருத்தரங்குகள் போன்றன இடம்பெற்றுள்ளன. பிராந்திய பணிமனை ஊடாக சமயம் சமூக நலன் மற்றும் கல்வி சார்ந்த பல செயற்திட்டங்களை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மாமன்றம் மேற்கொண்டு வருகிறது.

*யாழ் மண்ணிலிருந்து அ.கனகசூரியர்*

## "கடவுளைக் கண்ணால் காண முடியுமா?"

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்



அரசமரத்தடியில் தியானத்தில் இருந்த பெரியவரிடம், "கடவுளைக் கண்ணால் காண முடியுமா?" என்று கேட்டான் ஒரு மாணவன்.

"உன் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன் ஒரு கேள்வி. தம்பீ! இந்த உடம்பை நீ கண்ணால் பார்க்கின்றாயா?"

"ஆம். நன்றாகத் தெரிகின்றது."

"அப்பா! அவசரப்படாதே. எல்லாம் தெரிகின்றதா?"

"என்ன ஐயா! தெரிகின்றது. தெரிகின்றது என்று எத்தனை முறை கூறுவது? எல்லாந்தான் தெரிகின்றது?"

"அப்பா! எல்லா அங்கங்களும் தெரிகின்றனவா?"

"ஆம்! தெரிகின்றன."

"முழுவதும் தெரிகின்றதா?"

அவன் சற்று எரிச்சலுடன் உரத்த குரலில் "முழுவதும் தெரிகின்றது" என்றான். "தம்பீ! உடம்பின் பின்புறம் தெரிகின்றதா?"

மாணவன் விழித்தான்.
"ஐயா! பின்புறம் தெரியவில்லை."

"என்ன தம்பீ! முதலில் தெரிகின்றது தெரிகின்றது என்று பன்முறை பகர்ந்தாய். பின்னே பின்புறம் தெரிய வில்லை என்கின்றாய். நல்லது. முன்புறம் முழுவதுமாவது தெரிகின்றதா?"

"முன்புறம் முழுவதும் தெரிகின்றதே."

"அப்பா! அவசரங்கூடாது. முன்புறம் எல்லாப் பகுதிகளையும் காண்கின்றனையோ? நிதானித்துக் கூறு...."

"எல்லாப் பகுதிகளையும் காண்கின்றேன். எல்லாம் தெரிகின்றது."

"தம்பீ! இன்னும் ஒருமுறை சொல். எல்லாம் தெரிகின்றதா? நன்கு சிந்தனை செய்து சொல்."

"ஆம்! நன்றாகச் சிந்தித்தே சொல்கின்றேன். முன்புறம் எல்லாம் தெரிகின்றது."

"தம்பீ! முன்புறத்தின் முக்கியமான முகம் தெரிகின்றதா?"

மாணவன் துணுக்குற்றான். நெருப்பை மிதித்தவன் போல துள்ளினான். தன் அறியாமையை எண்ணி வருந்தலானான்..

தணிந்த குரலில் பணிந்த உடம்புடன். "ஐயனே! முகம் தெரியவில்லை!" என்றான்.

"குழந்தாய்! இந்த ஊன உடம்பில் பின்புறம் முழுதும் தெரியவில்லை. முகம் தெரியவில்லை. நீ இந்த உடம்பில் சிறிதுதான் கண்டனை. கண்டேன் கண்டேன் என்று பிதற்றுகின்றாய். அன்பனே! இந்த உடம்பு முழுவதும் தெரிய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும். சொல்."

"ஐயனே! இருநிலைக் கண்ணாடிகளின் இடையே நின்றால் உடம்பு இருபுறங்களும் தெரியும்."

"தம்பீ! இந்த ஊன் உடம்பை முழுவதும் காண்பதற்கு இருநிலைக் கண்ணாடிகள் தேவைப்படுவதுபோல், ஞானமே வடிவாய் உள்ள கடவுளைக் காண்பதற்கும் இரு கண்ணாடிகள் வேண்டும்."


"ஐயனே! அந்தக் கண்ணாடிகள் எந்தக் கடையில் விற்கின்றன? சொல்லுங்கள். இப்போதே வாங்கி வருகின்றேன். பெல்ஜியத்தில் செய்த கண்ணாடியா?"

"அப்பனே! அவை பெல்ஜியத்தில் செய்ததன்று. வேதாகமத்தில் விளைந்தவை. ஞானமூர்த்தியைக் காண இருநிலைக் கண்ணாடிகள் வேண்டும். ஒரு கண்ணாடி திருவருள், மற்றொன்று குருவருள். இந்தத் திருவருள் குருவருள் என்ற இரு கண்ணாடிகளின் துணையால் ஞானமே வடிவான இறைவனைக் காணலாம்.

"தம்பீ! திருவருள் எங்கும் நிறைந்திருப்பினும் அதனை குருவருள் மூலமே பெற வேண்டும். திருவருளும் குருவருளும் இறைவனைக் காண இன்றியமையாதவை."

# மனிதனே அழித்துவரும் மனிதனின் கற்பகவிருட்சம் – II துளசி

முருகையா பிரணவன்



நந்தவனத்தில் எத்தனை செடிகள் இருந்தாலும், அது நந்தவனமாகாது. அதே நேரத்தில் ஒரு துளசி செடி மட்டுமே இருந்தாலும் அது நந்தவனம் ஆகிவிடும் என்கிறது வேதம். துளசியின் இன்னொரு பெயர் பிருந்தை. 300க்கும் மேற்பட்ட துளசி வகைகள் இருந்தாலும், வெண்துளசியைத்தான் நாம் அதிகம் பயன்படுத்துகிறோம்.

**வேறு பெயர்கள்:**

துழாய், திவ்யா, பிரியா, துளவம், மாலலங்கல், விஷ்ணுபிரியா, பிருந்தா, கிருஷ்ணதுளசி, ஸ்ரீதுளசி, ராமதுளசி

**இனங்கள்:** நல்துளசி, கருந்துளசி, செந்துளசி, கல்துளசி, முள்துளசி, நாய்துளசி (கஞ்சாங்கோரை, திருத்துழாய்)

**தாவரப்பெயர்கள்:** Ocimum, Sanctum, Linn Lamiaceae, Labiatae (Family)

**வளரும் தன்மை**

வடிகால் வசதியுள்ள குறுமண் மற்றும் செம்மண், வண்டல்மண், களி கலந்த மணற்பாங்கான இருமண், பாட்டு நிலம் தேவை. கற்பூரமணம் பொருந்திய இலைகளையும் கதிராக வளர்ந்த பூங்கொத்துகளையும் உடைய சிறுசெடி. தமிழகமெங்கும் தானே வளர்கின்றது. துளசியின் தாயகம் இந்தியா. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுக்கும் பரவியுள்ளது. துளசியை விதை மற்றும் இளம் தண்டுக் குச்சிகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யலாம். மண்ணில் கார அமில நிலை 6.5 - 7.5 வரை இருக்கலாம். வெப்பம் 25 டிகிரி முதல் 35 டிகிரி.

பயன் தரும் பாகங்கள்: இலை, தண்டு, பூ, வேர் அனைத்துப் பகுதிகளும் மருத்துவ குணம் வாய்ந்தவை.

துளசி (Ocimum tenuiflorum) மூலிகை செடியாகும். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுகிறது. ஏறத்தாழ 50 சென்ரிமீட்டர் வரை வளரக் கூடிய இச்செடியின் அனைத்துப் பாகங்களும் மருத்துவக் குணம் கொண்டவை. இது கோயிற் பூசைகளில் குறிப்பாக பெருமாள் கோயில்களில் பயன்படுத்தப்படுவதால் கோயிற் பூந்தோட்டங்களில் வழக்கமாகக் காணப்படுகிறது. வீடுகளில் துளசியை வளர்த்து தினமும் பூசிக்கும் வழக்கமும் உண்டு.

**மூலிகைகளின் அரசி!**

'துளசி இலை நல்லது..அதை சாப்பிட்டால் சளி போய்விடும்...' என்ற ஒற்றை சொல்லில் உள்ளடக்கப்படும் துளசி, கட்டுப்படுத்தும் நோய்களின் எண்ணிக்கை ஓராயிரம். அதனால்தான் இதனை 'மூலிகைகளின் அரசி' என்கிறார்கள். நோய் வருமுன் காத்து, வந்த நோயை விரட்டி, எதிர்காலத்திலும் நோய் வராத அளவுக்கு எதிர்ப்புச் சக்தியை கொடுக்கும் அற்புத ஆற்றல் வாய்ந்தது.

நாம் நினைப்பதுப் போல நோய் நிவாரணி மட்டுமல்ல.. சுற்றுச்சூழலிலும் இதன் பங்கு மகத்தானது. இருபத்துநான்கு மணிநேரமும் காற்றிலுள்ள கார்பன்டை ஆக்ஸைடை ($CO_2$) கிரகித்து ஆக்சிஜனாக ($O_2$) வெளியேற்றும் அற்புத பணியை செய்கிறது. இந்த பணியை பெரும்பாலான தாவரங்கள் செய்தாலும், துளசிக்கும் மற்ற தாவரங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. துளசியிலுள்ள மருத்துவ குணம் வாய்ந்த பொருட்களால் வளிமண்டலத்திலுள்ள புகைக் கிருமிகள் போன்ற மாசுக்கள் சுத்திகரிக்கப்படுகின்றன. அதனால் சுத்தமான காற்று கிடைக்கிறது. துளசி, அதிகம் உள்ள இடங்களில் கொசுக்கள், நுளம்புகள் வராது.

**காய்ச்சலுக்கு கைகண்ட மருந்து!**

மாதம் ஒரு பெயரில் புதுப்புது காய்ச்சல் வந்துகொண்டே இருக்கிறது... ஒவ்வொரு காய்ச்சலுக்கும் பெயர் வைப்பதில் காட்டும் வேகம், நிவாரண நடவடிக்கைகளில் காட்டுவதில்லை. ஆனால், இதுவரை வந்த காய்ச்சல், இனி வரப்போகும் காய்ச்சல் என எந்தக் காய்ச்சலாக இருந்தாலும், துளசியிடம் இருக்கிறது தீர்வு. இதை உலகளவில் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். ஏற்கனவே ஜப்பானியர்கள், வைரஸ் காய்ச்சல், என்செபலாடிடிஸ் எனப்படும் மூளைக்காய்ச்சல் ஆகியவற்றுக்கு துளசியைப் பயன்படுத்தி வெற்றி பெற்றுள்ளனர். "10 துளசி இலையுடன் 5 மிளகை நசுக்கி, 2 டம்ளர் நீர்விட்டு, அரை டம்ளர் சுண்டும்படி காய்ச்சி, குடித்து விட்டு, சிறிது எலுமிச்சை சாறை அருந்தி, கம்பளிக் கொண்டு உடம்பு முழுக்க மூடிக்கொண்டு படுத்தால் மலேரியா காய்ச்சல் கூட படிப்படியாக குறையும்" என்கிறது சித்த மருத்துவம்.

**இருமலை இல்லாமல் செய்துவிடும்!**

சளி த்தொல்லைக்கான நிவாரணத்தையும் தன்னுள் கொண்டுள்ளது துளசி. உடலில் வெப்பத்தை உண்டாக்கி கோழையை அகற்றுவதுடன், உடலில் உள்வெப்பத்தை ஆற்றும் குணமும் இதற்கு உண்டு. துளசி சாறுடன் கொஞ்சம் தேன் கலந்து கொடுத்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, இருமல் குணமாகும். இருமல், சளி, ஜலதோஷம் உள்ளிட்டவைகளுக்கு இலவசமாக கிடைக்கும் அருமருந்து துளசி. இருமலைக் கட்டுப்படுத்தும் யூஜினால் உள்ளிட்ட வேதிப்பொருட்கள் இயற்கையாக இதில் உள்ளன.

**ரத்த அழுத்தம் குறையும்!**

இன்றைக்கு முக்கிய நோய்களாக மூன்றை சொல்லலாம். "நீரிழிவு" என்ற சர்க்கரை நோய், "ஒபிசிட்டி" என்ற உடல் பருமன், "பிளட் பிரசர்" என்ற ரத்த அழுத்தம். இவை மூன்றில் ஒன்று நம்மில் பலருக்கும் இருக்கிறது. தினமும் சில துளசி இலைகளை மென்று தின்றாலே சர்க்கரையின் அளவு கட்டுப்படும். எடையைக் குறைக்க, எத்தனை தூரம் ஓடினாலும், நடந்தாலும், 'நான் தினமும் வளர்கிறேனே அம்மா' என ஊட்டச்சத்து பானம் குடித்த குழந்தைப் போல தொப்பை மட்டும் வளர்ந்துகொண்டே

இருக்கிறது. தொலைக்காட்சி விளம்பரங்களைப் பார்த்து, ஆயிரக்கணக்கான பணத்தை செலவழித்து எது எதையோ வாங்கி சாப்பிட்டும் பயனில்லை என புலம்புபவர்களுக்கான தீர்வும் துளசியிடத்தில் இருக்கிறது. துளசி சாற்றையும், எலுமிச்சை சாற்றையும் கலந்து சூடுபடுத்தி, சிறிது தேன் கலந்து உணவுக்கு பின்பு உட்கொண்டு வந்தால் கொஞ்சம் கொஞ்சமாக உடல் எடை குறையும். துளசி இலை, முற்றிய முருங்கை இலைகளை சம அளவு எடுத்து சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த சாற்றில் 50 மில்லி எடுத்து, 2 சிட்டிகை சீரகப்பொடி சேர்த்து காலை, மாலை இருவேளையும் 48 நாட்கள் உண்டு வந்தால் ரத்த அழுத்தம் குறையும். இதை சாப்பிடும் காலத்தில் உப்பு, புளி, காரம் குறைக்க வேண்டும்.

**தோல் நோய் தொல்லை, இனி இல்லை!**

துளசி இலையை எலுமிச்சை சாறு விட்டு விழுது போல் அரைத்து, தோல் நோய்களுக்கு பற்றுப் போடலாம். இதனால் சொறி, சிரங்கு போன்றவை குணமாகும். துளசி இலையுடன், அம்மான் பச்சரிசி இலையை சம அளவு எடுத்து அரைத்து பருக்கள் உள்ள இடத்தில் தடவினால் முகப்பரு மறையும்" என்கிறார்கள் சித்த மருத்துவர்கள்.

**என்றும் இளைமை!**

இவையெல்லாம் விட, என்றும் இளமையுடன் திகழ உதவுகிறது துளசி நீர். சுத்தமான செம்பு பாத்திரத்தில், கொஞ்சம் நல்ல தண்ணீரை ஊற்றி, அதில் ஒரு கைப்பிடி துளசியைப் போட்டு 8 மணி நேரம் மூடி வைத்து பின்பு அந்த நீரைக் குடிக்க வேண்டும். இதை வெறும் வயிற்றில் 48 நாட்கள் செய்து வந்தாலே எந்த நோயும் அண்டாது. அத்துடன் தோல்சுருக்கம் நீங்கி, நரம்புகள் பலப்படும். பார்வை குறைபாடு நீங்கும்.

**உடலுக்கான கிருமிநாசினி!**

துளசி அதி அற்புதமான கிருமிநாசினி. வீட்டுக்கு கிருமிநாசினி பயன்படுத்துவதுப் போல மனித உடலுக்கான கிருமிநாசினியாக பயன்படுகிறது துளசி. ஆனால், நாம் தான் பயன்படுத்துவதில் அக்கறைக்காட்டுவதில்லை. தினமும் துளசி இலையை மென்று சாறை விழுங்கி வந்தால் குடல், வயிறு, வாய் தொடர்பான பல பிரச்னைகள் வாழ்நாள் முழுக்க வரவே வராது. வாய் துர்நாற்றம் இருக்கவே இருக்காது. 'உடலில் வியர்வை வாடை போகவே மாட்டேங்குது' என கவலைப்படுபவர்கள், குளிக்கும் நீரில் முதல் நாளே துளசி இலைகளை ஊறவைத்தால், வியர்வை துர்நாற்றம் போய் உடல் மணக்கும்.

மொத்தத்தில் துளசி இலையை தினமும் மென்று தின்பதனாலும், குடிநீரில் போட்டு குடிப்பதனாலும் அனேக நோய்களை விரட்டலாம் என்கிறது சித்த மருத்துவம்.

துளசி இலைக்கு மன இறுக்கம், நரம்புக் கோளாறு, ஞாபகச் சக்தி இன்மை, ஆஸ்துமா, இருமல் மற்றும் பிற தொண்டை நோய்களை உடனுக்குடன் குணமாக்கும் சக்தி உண்டு. துளசி இலைச் சாறில் தேன், இஞ்சி முதலியன கலந்து ஒரு தேக்கரண்டி அருந்தலாம். சளி, இருமல் உள்ள குழந்தைகளுக்கு தினமும் மூன்று வேளை மூன்று தேக்கரண்டி இந்த துளசிக் கஷாயம் கொடுத்தால் போதும்.

**மருத்துவ பயன்கள்**

மூலிகைகளின் ராணியான துளசி, அதன் மருத்துவ குணத்தால், ஆயுர்வேத மருத்துவத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் இதன் இலைகள் மட்டுமின்றி, அதன் பூக்களிலும் எண்ணற்ற மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளது. மேலும் பெரும்பாலான தென்னிந்திய வீடுகளில் துளசி கட்டாயம் வளர்க்கப்படும் செடிகளுள் ஒன்று. எனவே உங்கள் வீட்டிலும் துளசி செடி இருந்தால், உங்களுக்கு ஏற்படும் பல்வேறு ஆரோக்கிய பிரச்சனைகளுக்கு வீட்டிலேயே தீர்வு காணலாம்.

**காய்ச்சல்**

காய்ச்சல் இருக்கும் போது, உடனே மாத்திரையை வாங்கிப் போடாமல், துளசி இலையை வாயில் போட்டு மென்று வாருங்கள். இதனால் துளசியானது காய்ச்சலை குறைத்துவிடும்.

**தொண்டைப்புண்**

தொண்டைப் புண் இருக்கும் போது, துளசியை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரால் வாயை கொப்பளித்தால், தொண்டைப்புண் குணமாகும்.

**தலை வலி**

உடலில் வெப்பம் அதிகம் இருந்தால், தலை வலி வரக்கூடும் என்பது தெரியுமா? ஆம், அப்படி வரும் தலை வலிக்கு துளசி மிகவும் சிறப்பான நிவாரணி. அதற்கு துளசியை அரைத்து, அதில் சந்தனப் பொடி சேர்த்து கலந்து, நெற்றியில் பற்று போட்டு வந்தால், நல்ல நிவாரணம் கிடைப்பதோடு, உடல் சூடும் குறையும்.

**கண் பிரச்சனைகள்**

கருப்பு துளசியின் சாறு கண்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வைத் தரும். அதிலும் கண்களில் புண் இருந்தால், கடுமையான அரிப்பு, எரிச்சல் ஏற்படும். அப்போது துளசியின் சாற்றினை கண்களில் ஊற்றினால், விரைவில் குணமாகும்.

**வாய் பிரச்சனைகள்**

ஈறுகளில் ஏதேனும் பிரச்சனை இருந்தாலோ அல்லது வாய் துர்நாற்றம் அடித்தாலோ, அப்போது துளசியை உலர வைத்து, பொடி செய்து, அத்துடன் கடுக எண்ணெய் ஊற்றி பேஸ்ட் செய்து, ஈறுகளில் தடவி தேய்த்து கழுவ வேண்டும். இப்படி செய்தால், வாய் பிரச்சனைகள் அகலும்.

**இதய நோய்**

தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் துளசி இலையை சாப்பிட்டு வந்தால், அவை இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தி, இதய நோய் வரும் அபாயத்தைக் குறைக்கும்.

**சளி, இருமல்**

இருமல் கடுமையான சளி மற்றும் இருமலால் அவஸ்தைப்பட்டால், துளசி இலையை மென்று அதன் சாற்றினை விழுங்கி வாருங்கள். இதனால் அதில் உள்ள மருத்துவ குணத்தால், சளி, இருமல் பறந்தோடிவிடும்.

**நீரிழிவு**

நீரிழிவு நோயாளிகள் துளசி இலையை சாப்பிட்டு வந்தால், அதனால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைந்து, இன்சுலின் சீராக சுரக்கப்பட்டு, நீரிழிவை கட்டுப்பாட்டுடன் வைக்கும்.

**சிறுநீரக கற்கள்**

துளசி இலையை சாறு எடுத்து, அதில் சிறிது தேன் சேர்த்து கலந்து குடித்து வந்தால், சிறுநீரக கற்கள் மற்றும் சிறுநீரக பாதையில் ஏதேனும் தொற்று இருந்தாலும் குணமாகும்.

**மன அழுத்தத்தைக் குறைக்கும்**

மன அழுத்தம் என்பது தற்போது அதிகம் உள்ளது. உங்களுக்கு மன அழுத்தமில்லாத வாழ்க்கை வாழ ஆசை இருந்தால், துளசி இலையை தினமும் சாப்பிட்டு வாருங்கள். இதனால் அதில் உள்ள அடாப்டோஜென் மன அழுத்தத்தைப் குறைக்கும்.

# தெய்வத்திருமகள், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு அர்ப்பணிக்கப்படும் 'இந்து ஒளி' இருபத்தொராவது ஆண்டுப்பூர்த்தி சிறப்பிதழ் வெளியீடும் 2018-2019 (பங்குனி) காலப்பகுதிக்கான கையடக்கப்பஞ்சாங்க வெளியீடும்

இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்றமும், கொழும்பு மகளிர் இந்து மன்றமும் இணைந்து நடாத்துகின்ற, தெய்வத்திருமகள், சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 10வது ஆண்டு நினைவை முன்னிட்டு அம்மையாருக்கு அர்ப்பணிக்கப்படும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக சஞ்சிகையான 'இந்து ஒளி' யின் 21வது ஆண்டுப் பூர்த்தி சிறப்பு மலர் வெளியீடு மற்றும் 2018-2019 (பங்குனி) காலப்பகுதிக்கான திருக்கணித-வாக்கிய பஞ்சாங்கங்களின் தொகுப்பாகிய கையடக்கப் பஞ்சாங்க வெளியீடு ஆகிய நிகழ்வுகள் நிகழும் ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 08ம் நாள் (21-01-2018) அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் காலை 10.00 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் முன்னிலை வகித்து ஆசி வழங்க, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதன்மைச்செயலாளர் ஸ்ரீ எல். ரமேஷ் பாபு அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பிக்க, மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்து ஒளி இருபத்தொராவது ஆண்டுப் பூர்த்தி சிறப்பு மலரை ஸ்ரீ எல். ரமேஷ் பாபு அவர்கள் வெளியிட்டு வாழ்த்துரை நிகழ்த்துவார்.

2018-2019(பங்குனி) காலப்பகுதிக்கான கையடக்கப் பஞ்சாங்கத்தினை நாவலர் நற்பணி மன்ற நிறுவுனர் திரு. ந. கருணைஆனந்தன் அவர்கள் வெளியிட்டுவைத்து வாழ்த்துரை நிகழ்த்துவார்.

கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் "சைவசமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்கு" எனும் தொனிப்பொருளில் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எல்லா வயதினருக்கும் பயன்தரக்கூடிய பெறுமதியான கட்டுரைகள் உள்ளடங்கியதாக மலர்ந்துள்ள இம்மலரானது அரிய பொக்கிஷமாகும்.

கையடக்கப்பஞ்சாங்கமானது முக்கியமான இரு பஞ்சாங்களாகிய திருக்கணிதம்-வாக்கியம் ஆகிய இரண்டினதும் சுருக்கமாக - ஆனால் முக்கியமான விடயங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

---

*17ம் பக்கத் தொடர்ச்சி*

பணவுதவி செய்தல். ஆலய மலர்களுக்கு ஆசியுரை - வாழ்த்துரை வழங்குதல், கட்டுரை எழுதுதல் எனப் பல பணிகளை முன்னெடுத்தார். இதனால் யாழ்ப்பாணத்து மக்கள் இதர சமயங்களுக்குச் செல்லாமல் தடுக்கப்பட்டனர். சைவதமிழ் பண்பாட்டைப் பாதுகாத்தனர். அம்மையார் பிரசங்கத்தின் மூலம் கூறிய கிரியை விளக்கங்கள் மக்களுக்கு புதுத்தீர்ப்பை ஏற்படுத்தின.

அடிக்குறிப்பு

19. சண்முகலிங்கன்,நா., 2013,**துர்க்கையின் புதிய முகம்**, ப.74.
20. சிவவாசிகர்.சு.,தணிகாசலம்.க., (இணைக் காரியதரிசிகள்) 1978, 'தலவரலாறும் திருப்பணி வளர்ச்சியும்". **தெல்லிப்பழை அருள் மிகு துர்க்காதேவி ஆலயம் சித்திரத்தேர் சிறப்புமலர்**, பக்-18-20.
21. **மேலது**, ப.25.
22. தங்கம்மா அப்பாக்குட்டி,செல்வி, 1997,'முன்னுரை", **துர்க்காபுரம் மகளிர் இல்ல 15ஆண்டுகள் நிறைவு மலர்**, ப.30.
23. சிவத்தம்பி கார்த்திகேசு, 2005,'வாழ்த்துரை" **வாழ்க அன்னை**, ப.18.
24. சண்முகலிங்கன்.நா., 2013, **துர்க்கையின் புதிய முகம்**,ப.74.
25. **மேலது**, பக்.86-106.
26. **மேலது**, ப.77.
27. **மேலது**, ப.88.
28. தங்கம்மா அப்பாக்குட்டி,செல்வி.1997,'முன்னுரை" **தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக மலர்**, ப.02.
29. வைத்தீஸ்வரக்குருக்கள்,க., 2005,'ஆசியுரை", **வாழ்க அன்னை**, ப..5.
30. கந்தையா.பொ., 2005,'வாழ்த்துரை". மு.கு.நூ., ப.30.
31. ஆசிரியர் தலையங்கம், **உதயன் பத்திரிகை**, 04. 07. 1993.
32. கைலாசபதி, க.,1999, **பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்**, பக். 71-106.
33. தங்கம்மா அப்பாக்குட்டி,செல்வி, 1991, "முன்னுரை", **தெல்லிப்பழை துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை பத்தாண்டுகள் நிறைவு மலர்**, ப.3.
34. சண்முகலிங்கன்,நா., 2013, மு.கு.நூ., பக் 119-196.

*(நன்றி: இலங்கையின் வைசத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் - ஓர் ஆய்வு, யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறையின் வழிபாட்டலில் மாமன்ற வைரவிழா வெளியீடு 07.03.2015)*

# வாழ்வை வளப்படுத்தி இருப்பை வெளிப்படுத்தும் சமயக்கல்வி

த.மனோகரன்
(உபதலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்)
(செயலாளர் - மாமன்ற கல்விக்குழு)

மனிதகுலம் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று சீரிய வழிகாட்டி மனித வாழ்வைச் செப்பனிடும் உயர்ந்த தத்துவங்களே சமயங்கள். மிருகங்களும் பறவைகளும் ஊர்வனவும் நீர்வாழ் உயிரினங்களும் பிறக்கின்றன இறக்கின்றன. இடைப்பட்ட காலத்தில் உண்கின்றன உறங்குகின்றன. இனப்பெருக்கம் செய்கின்றன. மனிதவாழ்வும் அவ்வாறேயாயினும் பகுத்தறிந்து சிந்தித்து நல்லவற்றையும் அல்லாதவற்றையும் எடைபோட்டு சீர்தூக்கி நோக்கும் பகுத்தறிவென்ற ஆறாம் அறிவுக்கு உரித்தானவர்கள் மனிதர்கள். மனிதகுலம் வழிதவறிச் செல்லாத வண்ணம் வழிகாட்டுபவையே என்று சமயங்களைக் கொள்ளலாம்.

அந்தவகையிலே மனிதகுலம் என்று தோன்றியதோ, அது சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றதோ அன்றே இந்துமதம் தோற்றம் பெற்றதெனலாம். உலகின் ஆதிமுதல் சமயம் இந்து சமயம் என்பதை எதுவித மறுப்போ மாற்றுக்கருத்தோ இன்றி சகலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். உலகிலுள்ள ஏனைய சமயங்களுக்கு வரலாற்றுக்காலம் உண்டு. ஆனால் இந்து சமயத்தின் ஆரம்பம் எவராலும் கண்டறியப்படவில்லை-கண்டறியப்படமுடியாத ஆதியானது. தோற்றம் தெரியாதது போன்றே தோற்றுவித்தவர் யாரென்று குறிப்பிட்டுக் கூறமுடியாதது இந்து சமயம். இந்து சமயக் கோட்பாடுகள் தத்துவங்கள் அனைத்தும் இறையருள்பெற்ற ஞானிகள், முனிவர்கள், சித்தர்கள் போன்ற பேரருளாளர்களுக்கு பரம்பொருளின் அருளால் காலத்திற்குக்காலம் உணர்த்தப்பட்டு மனிதகுல மாண்பின் நோக்கில் எடுத்தியம்பப்பட்டவையாகும். நல்லனவற்றை ஏற்கும் பண்பு இந்துசமயத்தின் தனிச்சிறப்பு. அதனாலேயே உலகம் ஏற்று பெருமையுடன் கைக்கொள்ளும் பேற்றை அது கொண்டுள்ளது.

இவ்வாறான பெருமைமிகு நம்சமயம் இந்நாட்டில் பெற்றுள்ள வரலாற்றை நோக்குவோம். இலங்கைத்தீவின் வரலாற்றைக் கூறும் ஆவணமாக புத்தபிக்குகளால் ஆக்கப்பட்ட மகாவம்சம் கொள்ளப்படுகின்றது. அது இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட விஜயன் என்ற அரசகுமாரன் இத்தீவில் அடியெடுத்து வைத்த காலம் முதல் மகாவம்சத்தில் பதிவுகள் உள்ளன. இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரான சம்பவமாக அது உள்ளது. குறித்த அரசகுமாரனுடன் எழுநூறு அவனது தோழர்களும் வந்ததாகவும் அவர்களில் உபதிஸ்ஸன் என்ற பிராமணனொருவனும் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


விஜயனின் வருகை இத்தீவில் இந்துசமயத்தின் தொன்மைக்குக் கட்டியம் கூறிநிற்கின்றது. புத்தசமயம் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன்பான காலத்திலேயே விஜயன் வருகை இடம்பெற்றுள்ளது.

விஜயனுடன் வந்த பிராமணனான உபதிஸ்ஸன் இலங்கைத்தீவின் நாலாபக்கங்களிலுமிருந்த ஐந்து சிவாலயங்களைச் சென்று தரிசித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. வரலாற்றுரீதியான ஆய்வாளரான சேர் போல் ஈ பீரிஸ் என்ற சிங்கள அறிஞர் தனது ஆய்வின் மூலமும் இதனை வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியுள்ளார். அவை வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்திலுள்ள நகுலேஸ்வரம், கிழக்கு மாகாணத்தின் திருக்கோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரம், வடமாகாணத்தின் மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரம், வடமேல்மாகாணத்திலுள்ள சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரம், தென்மாகாணத்தின் தேவேந்திரமுனை (தெவிநுவர) யிலுள்ள தொண்டீஸ்வரம் என்பனவாகும். தொண்டீஸ்வரம் தென்னிலங்கையிலுள்ள பிரசித்திபெற்ற விஷ்ணுவாலயமாக விளங்குவதுடன் ஏனைய நான்கும் சிவாலயங்களாகச் சிறப்புடன் துலங்குகின்றன.

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் இந்நாட்டை ஆக்கிரமித்த காலத்தில் குறித்த ஐந்து சிவாலயங்களும் சிதைக்கப்பட்டதாக வரலாறு பகர்கின்றது. எது எவ்வாறாயினும் இத்தீவின் ஆதிமுதல் சமயம் இந்துசமயம் என்பதும் சிவவழிபாடே இந்நாட்டில் ஏனைய சமயங்கள் புகுமுன் வழக்கிலிருந்தது என்பதும் தெளிவாகின்றது. இந்துசமயம் எந்த அளவு தொன்மையானதோ அதே அளவு இந்நாட்டின் இந்துசமயமும் தொன்மையானது எனலாம். ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் திருக்கேதீஸ்வர திருத்தலத்தின் மீது "விருதுகுன்றமா மேருவில்" என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகமும் அதே போல் திருக்கோணேஸ்வரத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரான் மீது "நிரைகழலரவம்"என்று ஆரம்பிக்கும் திருப்பதிகமும் பாடப்பட்டுள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கேதீஸ்வரப் பெருமான் மீது "நத்தார் படை ஞானன்" என்ற ஆரம்பம் கொண்ட திருப்பதிகத்தையும் பாடியுள்ளார். இதுவும் குறித்த இரு சிவாலயங்களின் தொன்மைக்கு சான்றுகளாகின்றன.

சடங்குகள், சம்பிரதாயங்களுக்கு அப்பால் இந்நாட்டில் நாம்பிறந்து வாழும் நம்நாட்டில் நமது சமயத்தின் வரலாற்றை பண்டைய இருப்பை தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஊரிலும், கிராமத்திலும் காணப்படும் திருக்கோயில்களின் வரலாற்றை, பெருமையைத் தெரிந்து வைத்திருப்பது வரலாற்றுக் கல்வியின் நமது சமயத்தின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும். அது நமக்குப் பெருமையும் சேர்க்கும். நமது பண்டைய, பாரம்பரிய இருப்பை உலகிற்கு வெளிப்படுத்தும்.

இந்து சமயத்தை அறிந்து கொள்வதற்கு இந்துசமய பாடம் விளங்குவது போன்று இந்து நாகரீகத்தை, இந்துக்களின் நாகரிகத்தை அறிந்து கொள்வதை நோக்காகக்கொண்டது இந்து நாகரிக பாடம். இந்து சமயக் கல்வியென்பது சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவற்றைத் அறியப்படுத்துவதுடன் நின்றுவிடாது வரலாற்றுப் பாரம்பரியங்கள், கலைகள், பண்பாடுகள் உள்ளிட்ட அனைத்தையும் விளக்குவதாக அமைவது சிறப்பும் பெருமையும் கொண்டது. சமயபாடத்தின் பெறுமதியை உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது காலத்தின் தேவையாகும்.



# இருக்கு வேதம்

## கூறும் அறிவியல் கருத்துக்கள்

ஸ்ரீமான் நாராயண மூர்த்தி
மதுரை - தமிழ்நாடு

அறிவியல் :

* சிறப்பான மருத்துவ குறிப்புகளை சித்தர்களின் ஓலைச்சுவடிகளில் காண முடிகிறது. அகத்தியர் — மூலிகை மருத்துவத்திலும் (Microbiology), போகர் — கனிம மருத்துவத்திலும் (Chemical Components), புலிப்பாணி விலங்குகளை (Biotechnology) பயன்படுத்திய மருத்துவ முறைகளிலும் சிறப்பான குறிப்புகள் தந்துள்ளனர். கதிரியக்க குறிப்புகளையும், அணு அளவில் மாற்றங்களை நிகழ்த்தக் கூடிய ரசவாத குறிப்புகளையும் சுவடிகளின் காணமுடிகிறது. கி.மு 3000 ஆண்டளவில் அணுவின் அமைப்புகளை மாற்றி வேறு ஒரு கனிமமாக மாற்றும் வித்தையை போகர் குறிப்பிட்டுள்ளார்.

* இரத்தும் உறிஞ்சும் அட்டைகளை(Leach) வைத்து இப்போது ஆராய்ச்சிகள் உலக அளவில் நடைபெறுகின்றன. முதல் முதலில் 1020ல்தான் இது பற்றிய ஆராய்ச்சிகள் ஆரம்பித்தன. ஆனால் 2500 வருடங்களுக்கு முன்பே ஆயுர்வேதத்தில் இது பற்றிய குறிப்புகள் உள்ளன. மருத்துவ கடவுளாக கருதப்படும் தன்வந்திரி பகவானின் கையில் மருத்துவ உபகர்ணங்களுடன் இரத்தும் உறிஞ்சும் அட்டை (Leach) உள்ளது.

* அகத்திய சங்கிதை என்ற நூலில் ஒரு மின்கலத்தை (Battery) தயாரிக்கும் முறை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

**வானவியல்:**

இருக்கு வேதத்தின் குறிப்புகளை கொண்டு கி.பி 1315ல் சாயனாச்சாரியர் என்ற விஜய நகரப்பேரரசின் அறிஞர் ஒளியின் வேகத்தை குறிப்பிட்டுள்ளார். "ஓ, சூரிய கடவுளே அரை நிமிடமளவில் 2022 யோசனைகள் கடந்து வரும் உன்னை வணங்குகிறேன்" ஒரு யோசனை என்பது 9 மைல்கள். நிமிஷா என்பது 8/75 வினாடிகள்.. அவருடைய குறிப்பின்படி ஒலிவேகம் -186.413.22 மைல்/வினாடி. நவீன கணிப்பு 186.300மைல்கள்/வினாடி.

* சூரிய கதிர்களில் ஏழு வர்ணங்கள் உள்ள விபரம் கி.மு.1500 முன்பே அறியப்பட்டு இருக்கு வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதையே ஏழு குதிரைகளாக தேரில் பூட்டியுள்ளதாக காட்டினர். நவீன கருத்தின்படி 1671ல் நியூட்டன் முதன்முதலில் ஸ்பெக்டரம் என்று அதனை குறிப்பிட்டார்.

* வேதங்களின்படி. ஒரு பூசையினை செய்வதற்குமுன் சங்கல்பமாக கூறப்படுகின்ற வாக்கியத்தில் உலகம் ஆரம்பித்த நாளில் இருந்து இன்றைய நாளினை குறிக்கிறோம். "த்விதீய பரார்த்தே, ஸ்வேத வராககல்பே, வைவஸ்வத மன்வந்த்ரே, அஷ்டாவிம்ஸ்திதமே, கலியுகே" என்று வரும். இதன்படி

ஒரு மகாயுகா = 4 யுகங்கள் = 43.20.000 வருடங்கள்

ஒரு மன்வந்திரம் = 30.84.48.000 வருடங்கள் (71 மகாயுகம் +1 க்ரேதா யுகம்)

ஒரு கல்பம் = 432.00.00.000 (14 மன்வந்திரம்+1 க்ரேதா யுகம்) அல்லது 1000 மகாயுகம்

ஒரு கல்பம், இதுதான் உலகத்தின் வயதும்.

நவீன முறைப்படி 454.00.00.000 ரேடியோமெட்ரிக் முறையில் கணிக்கப்பட்ட வயது. பூமியுடனேயே பிறந்ததாக சொல்லப்படும் நிலவின் மாதிரி கற்களிலும் ஆராய்ச்சி செய்து இது உறுதிபடுத்தப்பட்டது.


**கணிதம்:**

கி.மு -3000 ஆண்டளவில் நீளம், எடை ஆகியவற்றை குறிக்கும் அளவீடுகள் தமிழில் வரையறுக்கப்பட்டன.

முன்பே கணிப்பிடப்பட்டு வழக்கில் இருந்துவந்த வானவியல் கொள்கைகள், கணித வரைபாடுகள், எண்கள் ஆகியன பொது ஆண்டுக்கு முன் 1500 ஆண்டளவாகிய வேதகாலத்தில் வேதங்களில் பதிவுசெய்யப்பட்டன.

பொது ஆண்டுக்கு முன் 200 ம் ஆண்டளவில் அதற்கு முன்பு தமிழில் "சுழியம் என வழங்கப்பட்டுவந்த 0 பூஜ்யம் என்று குறிப்பிடப்பட்டது.

பொ.ஆ.பி 400 — 1200 ஆண்டு காலப்பகுதியில் கணித சாஸ்திரத்திற்கான முக்கியமான காலகட்டம்.



கணிதவியல் வல்லுனர்கள் ஆர்யபட்டா, பாஸ்கரா, ஸ்ரீதரா ஆகியோரின் காலம். அதற்கு முற்பட்ட காலப்பகுதியில் ஒரு நாளின் காலப்பகுதியானது நாழிகை விநாடி என பஞ்சாங்க முறையில் கணிக்கப்பட்டு வந்தது. அதனை ஆர்யபட்டா ஒரு நாள் என்பது 23 மணிகள்,56 நிமிடங்கள், 4 வினாடிகளும் 0.1 விகிதத்தையும் கொண்டது என்று கணித்தார். நவீன கணக்குப்படி 23 மணி,56 நிமிடம்,4 வினாடி மற்றும் 0.091 விகிதம் என்று கணிக்கப்பட்டுள்ளது. அவருடைய ஆர்யபாட்டியா என்ற நூலில் ஏற்கனவே பல ஆயிரம் ஆண்டுகள் பாவனையில் இருந்துவந்த நாள், கோள், திதி, பஞ்சாங்கம் முறைகளை ஒவ்வொரு கோள்களின் தொலைவும், அது சூரியனை சுற்றி வரும் நாட்களும் நவீன கணிப்புடன் ஒப்பிடும் அளவிற்கு மிகச்சரியாக விளக்கிக் கூறினார்.

**யோகா:**

இன்றைக்கு உலகம் முழுவது கொண்டாடிக் கொண்டிருக்கும் யோகாசன முறைகள் பதஞ்சலி முனிவரால் வழங்கப்பட்டது. இவர் கி.மு 147ல் வாழ்ந்தவர்.

காசியப முனிவர் முதன்முதலில் அணு என்ற ஒன்றை குறிப்பிட்டார். அணுவையும்(atom) பிளந்து பரம அணு (நியூட்ரான்?) என்று ஒன்று உள்ளதையும் குறிப்பிட்டார்.

## இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர் விடுதி

அமரர் கலாநிதி வேலாயுதபிள்ளை அவர்களின் கருத்து வித்தாக 1998 இல் ஆரம்பிக்கப்பட்ட விடுதி மாமன்றத்தின் ஓர் முக்கிய தொண்டாக இன்றும் தொடர்கின்றது. வன்னிப் போரினால் பாதிக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு புனருத்தாரண முகாம்களில் இருந்த 273 பிள்ளைகளை இங்கு கொண்டுவந்து அவர்களுக்கு கல்வி கற்க ஒழுங்கு செய்து இன்று சுதந்திரப் பறவைகளாக சமூகத்துடன் இணைய வழிவகுத்தது இவ்விடுதி செய்த பணியின் முக்கியமான வரலாறு. இவ் விடுதியில் வாழ்ந்து கல்விகற்ற இளைஞர்கள் பலர் இன்று நல்ல நிலைக்கு உயர்ந்து இருக்கிறார்கள்.

ஒவ்வொரு போயா தினத்தன்றும் மதிய போசனமும், மாதாந்தம் இரு நாட்கள் இரவு போசனமும் வழங்கும் சாயிசமித்தி, ஒவ்வொரு அமாவாசை தினமும் மதியபோசனம் வழங்கும் முத்துகிருஷ்ண சுவாமி, வருடாந்தம் நிதியுதவி தரும் இந்து வித்தியாவிருத்திச் சங்கம், பல வழிகளில் நிதியுதவி வழங்கிவரும் மனிதநேயர் திரு. வி. கயிலாசபிள்ளை குடும்பத்தினர் ஆகியோருக்கு எமது நன்றிகள். மாணவர் விடுதியில் இப்போது ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளுமாக மொத்தம் 150 பேர் இருக்கிறார்கள். முதியோர்கள் விடுதியில் முதியவர்கள் பராமரிக்கப்படுகிறார்கள்.

விடுதியில் பராமரிக்கப்படும் பிள்ளைகளின் பிறந்த தின நிகழ்வை ஒவ்வொரு மாதமும் கொண்டாட ஒழுங்கு செய்திருக்கின்றோம். இது அவர்களின் உள வலிமையை மேம்படுத்தும் என்பதற்காக விடுதிகள் குழு தலைவர் திருமதி. அ. கயிலாசபிள்ளை அவர்களினால் முன்னின்று செயற்படுத்தப்படுகின்றது.

**மாணவர் விடுதிக்கு உதவுங்கள்**

அகில இலங்கை இந்து மாமன்றம் சக்தி இல்லத்தில் நடத்தும் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர் விடுதியில் இருக்கும் பிள்ளைகளுக்கு உணவு வழங்க விரும்பும் அன்பர்கள் நாளாந்த அடிப்படையில் பின்வருமாறு நன்கொடைகளைத்தந்துஉதவலாம்.

| | |
|---|---|
| காலை உணவு | ரூ. 20,000/- |
| மதிய உணவு | ரூ. 30,000/- |
| இரவு உணவு | ரூ. 30,000/- |


இன்றைய காலகட்டத்தில் பல வயோதிபர்களுக்கும், பிள்ளைகளுக்கும் வாழ்வாதார உதவி தேவைப்படுகின்றது அப்படியான தேவையை நாடும் ஒரு வயோதிபருக்கு அல்லது பிள்ளைக்கு மாதாந்தம் ரூ. 30,000/- வீதம் நிதியுதவி செய்வது பெரும் புண்ணியம். மேலும் சிலருக்கு மருத்துவ உதவி அவசியம் தேவை. காலத்துக் காலம் விண்ணப்பதாரிகளின் தேவையை ஆராய்ந்து அவசிய தேவை இருப்பின் மாமன்றம் முடியுமானவரை உதவி செய்து வருகின்றது.

விடுதிப் பணிகளுக்கு உதவுபவர்கள் கீழே தரப்பட்டிருக்கும் விடுதிக் கணக்கிற்கும் ஏன்னய பணிகளுக்கு பொதுக்கணக்கிற்கும் பணம் அனுப்பலாம்.

Bank: Union Bank of Colombo PLC
Branch: Colombo
Account No. 80101000001330 (**பொதுக்கணக்கு**) or 80101000001349 (**விடுதிக்கணக்கு**)
Swift Code: UBCLLKLC



# உருத்திராக்கம்




**செல்வி வாகினி தயாபரன்**

உயர்தரம் - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை


ஒருவரின் ஆளுமையை மாற்றவும், அவருக்கு நேரான நன்நோக்கு உண்டாக்கவும் வல்ல பல்வேறு ஆற்றல் மிக்க பண்புகள் உருத்திராக்க மணிகளுக்கு உண்டு. உருத்திராக்கத்தின் ஆற்றல் பல காலமாக மக்களுக்குத் தெரிந்திருந்த போதும், எண்பதுகளின் பிற்பகுதியில் தான் இது மேலும் பிரபல்யம் அடைந்தது. குறிப்பாக, இந்தியாவிலுள்ள வாரணாசிப் பல்கலைக்கழகத்திலுள்ள தொழில்நுட்ப நிறுவனத்தில் டாக்டர். கஹாஸ் ராய் தலைமையிலான அறிவியலாளர்களின் ஆய்விற்குப் பின்னரே உருத்திராக்கம் புகழ்பெற்றது. இவர்கள் உயிர் வேதியியல் துறை (Bio-chemistry) மின் தொழில் நுட்பத்தின் மனநோய் மருத்துவத் துறை (Psychiatry) பொது மருத்துவத் துறை, உளவியல் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து உத்திராக்கம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இவர்கள் உருத்திராக்கத்தின் ஆற்றலை அறிவியல் நோக்கில் நிறுவியதுடன், தாம் கண்ட முடிவுகளை மீண்டும் செய்து காட்ட இவர்களுக்கு முடிந்தது.

உருத்திராக்கத்திற்கு, சக்தி மிக்க மின்காந்தப் பண்புகள் (Electromagnetic) காந்த முனைகளால் ஈர்க்கப்படும் தன்மை (Pargmagnetic) அனுக்க நிலை மின்பாய்வுள்ள தன்மை (Inductive) ஆகியன உள்ளன என்பதை இவர்கள் நிலை நிறுவினர். மேற்கூறிய ஆற்றல்கள் உருத்திராக்கத்தின் முகப்புகள் அல்லது முகங்கள் மேற்பரப்பிலுள்ள பகுப்புகளின் எண்ணிக்கை பொறுத்து அமையும். ஒரு குறிப்பிட்ட முகத்தையுடைய உருத்திராக்கத்தையோ அன்றேல் ஒரு தொகுதி முகங்கள் கொண்ட உருத்திராக்க மணிகளையோ அணிவோருக்கு, ஒரு குறிப்பிட்ட வகை மின் துடிப்புகள் (Transformation in the personality) வாழ்க்கையை நோக்கும் தன்மை, தன் ஆர்வம், மனத்திட்பம் ஆகியன மாற்றம் பெறுகின்றன. மேலும் இந்த ஆய்வாளர்கள், உருத்திராக்க மணிகளை அணிவதால் இதயத்துடிப்புக் கட்டுப்படுத்தப்பட்டு, அதன் வழியாக மூளைக்குச் செல்லும் இரத்த அளவு சம சீராக்கப்படுகிறது என்பதையும் நிறுவினர்.

உயர்ந்த மன அழுத்தம் கூர்ந்த மனக்குவிவு ஆகியவை ஒருவருக்கு ஏற்படும் போது, மூளைக்கும் மூளையிலிருந்து இரத்த ஓட்டம் பீறிட்டும் செல்வது நோக்கத் தக்கது. இந்த மணிகளின்துணையுடன்ஒருவகைச்சாந்தம்ஒருமுகக்குவிவு, கூர்ந்த குவிவு ஆகியவற்றை எளிதில் பெறமுடிகிறது. அத்துடன் உருத்திராக்கம் அணிவோருக்கு குறிப்பிடத்தக்க அளவு மனத்திடத்தையும், உள்ளார்ந்த பலத்தையும் அளிப்பதாகக் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. பொதுப் பயன்பாட்டிற்கான உருத்திராக்க மணிகளைவிட, ஒன்றிலிருந்து இருபத்தொரு முகங்கள் வரை உள்ள அதிக ஆற்றலுள்ள உருத்திராக்க மணிகளுமுண்டு. இவை ஒவ்வொன்றும் நமது மனதையும், நம்மைச் சுற்றியுள்ள ஆக்கபூர்வமான சக்திகளையும் ஒரு நிலைப்படுத்தி, செழிப்பு, ஆக்கம், உள்ளுணர்வுத் திறன், எதிர்கால நிகழ்வுகள் குறித்து ஆய்தல், பாலின ஒத்திசைவு போன்ற சிறப்புப் பண்புகளை அளிக்கின்றன. உறுதியாக, உருத்திராக்கங்கள் நாம் இன்னும் திறம்படச் செயலாற்றவும், இன்னும் வெற்றி காணும் வாழ்க்கையை வாழவும் உதவுகின்ற வியத்தகு மணிகளாகும்.

உருத்திராக்க மணிகள் அணிபவர்களுக்கு மன அழுத்தம் குறைந்துள்ளதையும் அவர்கள் கண்டனர். இவ்வாறு மன அழுத்த நிலை குறைவது, தொடர்ச்சியாகச் சாந்தப்படுத்தும் மருந்துகளை அதிக அளவில் உட்கொள்வதால் மட்டுமே செய்ய முடிந்துள்ளது. உருத்திராக்க மணிகள் ஆக்கப்பூர்வமான அதிர்வலைகளை வெளிக் கொணர்ந்து ஒருவருக்கு உடலிலும் மனதிலுமுள்ள எதிர்மறை உணர்வுகளை வெளியேற்றுகின்றன.

இந்த ஆய்வாளர்களால் நரம்பு மாற்றிகள் (Neuro Transmiters) டொபமைன் (Dopamine), செறொரின் (Serotinin), போன்ற செயல்பாடுகளில் உருத்திராக்க மணிகளை அணிவதால் ஏற்படும் தாக்கங்களையும் நிலைநாட்ட முடிந்தது. இத்தகைய தாக்கங்களினால் ஒருவரது ஆளுமையிலும் மனப்பாங்கிலும் ஆக்கபூர்வமான மாற்றங்கள் நிகழ்கின்றன. உருத்திராக்கத்தை அணிவோர், தமக்கு ஏற்படும் ஏனைய நன்மைகளுடன், அவர்களுடைய மன அழுத்த நிலை எதிர்பாராத அளவு குறைந்திருப்பதையும் கண்டனர். இத்தகைய மன அழுத்த நிலைகுறைவு, இதுவரை சாந்தப்படுத்தும் மருந்துகளை அதிக அளவில் தொடர்ந்து உட்கொள்வதால் பெறப்பட்டுள்ளது மட்டுமே உருத்திராக்க மணிகள், ஆக்கபூர்வமான அதிர்வலைகளை வெளிக்கொணர்ந்து ஒருவருக்கு உடலிலும், மனதிலுமுள்ள எதிர்மறை உணர்வுகளை வெளியேற்றுகின்றன. உருத்திராக்க மணிகள் ஒருவரை "அல்பா மன நிலைக்கு" (Alpha state of mind) இட்டுச் செல்கின்றன.

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கமும் அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நடாத்திய 20-10-2017 அன்று முள்ளியவளை, ஊற்றங்கரை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற '40ல் திருமணங்கள் 40' திட்டத்தின் இரண்டாம் தொகுதியான 07 திருமணங்களின் பதிவுகள்..











10-11-2017 அன்று புத்தளம் இந்து மத்திய கல்லூரியில் க.பொ.த. (சா.த) மாணவர்களுக்கு, மாமன்ற கல்விக்குழுத் தலைவர் திரு மா. கணபதிப்பிள்ளை, செயலாளர் திரு.த.மனோகரன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் மாமன்றத்தால் நடாத்தப்பட்ட செயலமர்வு.





27-11-2017ல் புவக்பிட்டி தமிழ் மகாவித்தியாலயத்தில் க.பொ.த. (சா.த) மாணவர்களுக்கு, மாமன்ற கல்விக்குழு தலைவர் திரு மா.கணபதிப்பிள்ளை, செயலாளர் திரு.த.மனோகரன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் மாமன்றத்தால் நடாத்தப்பட்ட செயலமர்வு.







24-09-2017 ல் வரக்காபொல காளியம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை ஆண்டுவிழாவில், மாமன்றத்தின் சார்பில், மாமன்ற கல்விக்குழுச் செயலாளர் திரு.த.மனோகரன் அவர்களால் இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டது.

மாமன்ற சிவதொண்டர் அணி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், வந்தாறுமூலை அகத்தியர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.



## 10-12-2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற, ஆன்மீகப் பெரியார் தலங்கம க. இராமச்சந்திரா அவர்களின் ஆக்கங்களின் தொகுப்பு (ஆங்கிலத்தில்) நூல் வெளியீட்டு நிகழ்வின் பதிவுகள்



மங்கள விளக்கேற்றும் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி (ஹாவாய் சைவ ஆதீனம், அமெரிக்கா), கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன (இயக்குநர்,"சர்வோதயா"), பிரதம விருந்தினர், கலாநிதி க. கனக-ஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணியும் மாமன்ற நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைத் தலைவரும்), வைத்தியகலாநிதி இ. பரராஜசேகரம், திரு.இ.பாலசுப்பிரமணியம் மற்றும் திரு. மா.தவயோகராஜா (மாமன்ற பிரதித்தலைவர்) ஆகியோர்



அமரருக்கு அஞ்சலி செலுத்தும் அவரின் புதல்வர்கள் வைத்தியகலாநிதி பரராஜசேகரம் மற்றும் பாலசுப்பிரமணியம்



பேராசிரியர் 'குமாரவயலூர்' தி. பாலச்சந்திரன் ஓதுவர் வழங்கும் 'பண்ணிசை அரங்கு.



பண்ணிசை வழங்கிய ஓதுவார் மற்றும் அணிசெய் கலைஞர்கள். வைத்தியகலாநிதி இ.பரராஜசேகரம் அவர்களால் கௌரவிக்கப்படுகின்றனர்.



வைத்தியகலாநிதி இ. பரராஜசேகரம் அவர்களின் வரவேற்புரை



ஆன்மீகச்சுடரின் அருளுரை



கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன அவர்களின் உரை



அமரரின் புதல்வர்களிடமிருந்து நூலின் முதற்பிரதியை கலாநிதி க.கனக-ஈஸ்வரன் பெறுகின்றார்.



கலாநிதி க.கனக ஈஸ்வரனிடமிருந்து சிறப்புப் பிரதிகளை முறையே, ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி, கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன, திரு.மா.தவயோகராஜா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.



கலாநிதி க.கனக-ஈஸ்வரன் அவர்களை கௌரவிக்கிறார் திரு.மா.தவயோகராஜா




கலாநிதி க.கனக-ஈஸ்வரன் அவர்களின் உரை



கலந்துகொண்ட அவையினரில் ஒரு பகுதியினர்.



திரு. இ. பாலசுப்பிரமணியம் அவர்களின் நன்றியுரை.

## அகில இலங்கை இந்து மாமன்றமும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் இணைந்து 01.12.2017 அன்று மட்டக்களப்பில் நடாத்திய "நாவலர் மாநாடும் சிவதொண்டர் ஆன்மீக எழுச்சி சிந்தனைக்களமும்"



நாவலர் பெருமானின் திருவுருவத்துடன் மங்கள வாத்தியசகிதம் ஊர்வலமாக வருதல்





கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் திருமதி சாந்தி கேசவன், மாமன்ற உபதலைவரும் சமூகநலன் குழுத் தலைவருமான திரு. சி. தனபாலா, மற்றும் மாணவர்கள் சார்பில் கல்லூரி மாணவி ஒருவரும் மங்கள விளக்கேற்றினர்.



நல்லை ஆதீன குருமுதல்வரின் ஆசியுரை



கலந்துகொண்ட அவையோரில் ஒரு பகுதியினர்



அவைக்களிக்கப்பட்ட நடன நிகழ்ச்சி



கௌரவ சீ. யோகீஸ்வரன் அவர்களின் தலைமையுரை




மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகளை நல்லை ஆதீன முதல்வர் மற்றும் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர்.




பாடசாலை மற்றும் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகளை திரு.சி. தனபாலா அவர்கள் வழங்கினார்.



விழாவின் அதிதிகள் மாமன்றப் பிரதிநிதிகளால் கௌரவிக்கப்பட்ட வேளையில்... உடன் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் சி.தனபாலா ஆகியோர்.



மட்.மாவட்ட இந்து இளைஞர் பேவை செயலாளர் திரு. சா.மதிசுதனின் நன்றியுரை

**வரலாற்றுப் பெருமைமிகு, ஸ்ரீ கௌரி அம்பாள் உடனுறை கேதீச்சர நாதர் அருள்பொழியும் திருக்கேதீச்சரத் திருத்தலத்தில், இந்திய அரசின் நிதிஉதவியுடன் நடைபெற்றுவரும் மகா மண்டப கருங்கற்றிருப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. நிறைவடைந்துள்ள அத்திருப்பணிகளின் எழிற்கோலங்கள் சில...**







## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையுடன் அகில இலங்கை இந்து மாமன்றமும் ஏனைய இந்து நிறுவனங்களும் இணைந்து 16.12.2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா மற்றும் குருபூசை நிகழ்வு"



வைத்தியகலாநிதி இ.லம்போதரன் அவர்களின் சிறப்புரை



மாணவி ஒருவரின் நாவலர் பற்றிய உரை





மாணவ மாணவியருக்கான பரிசில்கள் வைத்தியகலாநிதி சி. சோமசேகரம், சிவத்திரு சுப்பிரமணியம் செட்டியார் ஆகியோர் உள்ளிட்ட கௌரவ மற்றும் சிறப்பு அதிதிகளால் வழங்கப்பட்டன.







மாணவ மாணவியருக்கான பரிசில்கள் பேராசிரியர் சி.பத்மநாதன், திரு.சி.தனபாலா மற்றும் அ.உமாமகேஸ்வரன் ஆகியோரால் வழங்கப்பட்டன.



நன்றியுரை - திரு.க.சுந்தரேசன்

## தெய்வத்திருமகள், சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தொண்ணூற்றுமூன்றாவது பிறந்தநாள் அறக்கொடை விழா 07-01-2018 அன்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வின் பதிவுகள் சில...



அன்னையின் திருவுருவத்திற்கு மாலை அணிவிக்கும் பிரதம விருந்தினர்









ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் (ஹாவாய் சைவ ஆதீனம், அமெரிக்கா), முன்னைநாள் பிரதம நீதியரசர் உயர்திரு க. ஸ்ரீபவன், தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் திருமதி ஜெயஸ்ரீ பாலகிருஷ்ணன் ஆகியோரின் உரைகள்.








2018ம் ஆண்டுக்கான 'சிவத்தமிழ்' விருதினைப் பெற்றுக் கொண்ட திரு. நா.தவநாதன் தம்பதியர் (நிர்வாகச் செயலாளர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்), இசைவித்தகர் திரு. வி.கே.நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், அளவெட்டி), வாழ்நாட் பேராசிரியர் கலாநிதி உமா குமாரசாமி ஆகியோர்.



'அருள்ஒளி' சிறப்புப்பிரதியை பிரதம விருந்தினரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கௌரவ த. சித்தார்த்தன் அவர்கள்.

## 14-01-2018 அன்று மாமன்றத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வு.



மாமன்றப் பிரதித்தலைவர் திரு. மா.தவயோகராஜா அவர்கள் பொங்கல் பொங்கும் வேளையில்..



பொங்கல் நிறைவடைந்து சூரிய பகவானுக்கு நிவேதனம் செய்து வழிபடும் மாமன்ற தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், பிரதித் தலைவர் திரு. மா.தவயோகராஜா, பொதுச் செயலாளர் திரு.வே.கந்தசாமி உபதலைவர் திரு.சி.தனபாலா மற்றும் உறுப்பினர்களும் பணியாளர்களும்..

யோகிகள் வியத்தகு வகையில், மனதைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாக இருந்திருக்கின்றனர். அதாவது உடலில் தன்முனைப்புடன் கூடிய செயல்கள், தன்முனைப்பற்றுச் செய்யும் செயல்கள் இரண்டையும், குறிப்பாக உருத்திராக்க மணிகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தக் கூடியவர்களாக இருந்தனர். இவர்கள், உடலின் பாதுகாப்பிற்கு எந்த விதத் துணிகளும் அணியாமலேயே இமாலய மலையின் கடுங்குளிரைத் தாங்கினார்கள். இவர்கள் தமது உடலிலுள்ள வெப்பத்தை வெளிக்கொணரும் போது அதைக் கட்டுப்படுத்தி அதன்வழி குளிரைத் தாங்கினார்கள். இது சாதாரணமாக செய்யத்தக்க செயலல்ல.

உருத்திராக்க மணிகளுக்குச் சில விளக்க முடியாத, ஆனால் வியக்கத்தக்க மின்காந்தப் பண்புகளும், அழுத்த முறைப் பண்புகளும் [Acupressure] உண்டு என்பதைப் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். கழுத்தைச் சுற்றி உருத்திராக்கத்தை அணிவதால், அது இரத்தச் சுற்றோட்டத்தைக் கட்டுப்படுவதுடன் நமக்கு உகந்ததாகவும் ஆகிறது. நமது இதயத் துடிப்புகளை கட்டுப்படுத்துவதால் சாத்தியமாகிறது.

உடலில் அல்லது மனதில் அசாதாரண நிலையோ அன்றேல் ஏதாவது நோயோ இருந்தால் அவற்றைச் சுட்டிக் காட்டும் சுட்டியாக இரத்தச் சுற்றோட்டம் விளங்குகிறது. எடுத்தக்காட்டாக ஒருவர் உயர்ந்த மன அழுத்த நிலையையோ அன்றேல் உறுப்பு உறுப்புகளில் சீர்கேட்டையோ உணரும் நேரத்தில் அவருடைய இரத்தச் சுற்றோட்ட வீதம் அதிகமாகிறது. இதற்கு மாறாக இரத்தச் சுற்றோட்டத்தைக் கட்டுப்படுத்துவதால் அவருடைய மன அழுத்த நிலை குறைகிறது. சோமடைசேசன் (Somatisation) அதாவது சீரற்ற சுவாசமும் இரத்தச் சுற்றோட்டமும் கட்டுப்படுத்தப்பட்டவுடன் அதற்கான காரணி அதன் முக்கியத்துவத்தை இழந்து விடுகிறது. இந்த அடிப்படை விதிமுறையைக் கொண்டே எல்லா சைகோ பார்மகோலொஜின் (Psycho pharmacological) மருந்துகளும் செயல்படுகின்றன. இரத்தச் சுற்றோட்டம் சாதாரண நிலைக்கு வந்ததும், ஒருவருக்கு மனத்தெளிவு ஏற்படுத்துவதுடன், உடல் மனம் ஆகிய இரண்டின் செயல்பாடுகளிலும் கூர்ந்த நோக்கு உண்டாகின்றது.

உருத்திராக்கம் நமக்கு, உடலில் இலேசாக இருக்கும் உணர்வையும் சாந்தத்தை அளிக்கிறது. அத்துடன் அது நமது ஒட்டு மொத்த நலத்தையும் திறனையும் மேம்படுத்துகிறது. உருத்திராக்க மணிகளை அணிவதால் மட்டும் ஏற்படும் வியத்தகு விளைவுகளைக் கண்ட பலர், இம்மணிகள் தெய்வீகமானவை இறைவனால் மக்களுக்கு வழங்கப்பட்டவை எனக் கருதி அவற்றை வணங்கினர்.

உண்மையான உருத்திராக்க மணிகளை அணிந்த ஆயிரக்கணக்கான மக்கள், அவை தமக்கு இரத்த அழுத்தம், மனச்சோர்வு, மற்றும் நரம்புக் கோளாறு உட்பட்ட மனத்துடன் தொடர்பான தொல்லைகள் ஆகியவற்றிலிருந்து குறிப்பிடத்தக்க நிவாரணம் கிடைத்ததாக கூறுகிறார்கள். அதை அணிவோருக்குத் தன்னம்பிக்கை, உள்ளார்ந்த பலம் (Inner Strength) இரண்டையும் குறிப்பிடத்தக்க அளவில் மேலோங்கச் செய்வதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பயன்பாட்டிலுள்ள உருத்திராக்க மணிகளை விட, மிகச் சக்தி வாய்ந்த ஒன்று முதல் இருபத்தொரு முகங்கள் வரையான உருத்திராக்க மணிகளும் உண்டு. இவை ஒவ்வொன்றும் நமது மனதையும், நம்மைச் சுற்றியுள்ள ஆக்கப்பூர்வமான சக்திகளையும் நேர்ப்படுத்தி, அவற்றைச் செழிப்பு (Prosperity), படைக்கும் ஆற்றல் (Creativity), உள்ளுணர்வுத் திறன் (Inductivity), எதிர்காலத்தில் வரக்கூடிய நன்மை, தீமை பற்றி ஆய்ந்து நோக்கும் திறன், பாலின ஒத்திசைவு போன்றவை சிறப்பாக செயல்படவும், மேலும் வெற்றியுள்ள வாழ்க்கையை நாம் வாழவும் உதவுகின்றன.

பயன்பாட்டிலுள்ள உருத்திராட்சங்களும் அவற்றின் முக எண்ணிக்கைகளும்






# பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

முன்னொரு காலத்திலே, பாண்டிய நாட்டை அரிமர்த்தன பாண்டியன் என்ற அரசன் ஆண்டு வந்தான். சிவபெருமானிடத்தில் நிறைந்த பக்தியும், நல்ல அறிவும், ஒழுக்கமும் நிறைந்த அரசன் அவன்.

திருவாதவூரான் என்ற சிறந்த அமைச்சரின் ஆலோசனையுடன் நல்லாட்சி புரிந்து வந்தான்.

மதுரை மாநகரிலே, மீனாட்சி அம்மையின் துணையுடன், சோமசுந்தரப் பெருமான் என்னும் திருப்பெயர் கொண்டு அருள்புரியும் சிவபெருமான், பாண்டிய நாட்டிலே ஒரு திருவிளையாடலைப் புரிய விரும்பினார்.

அவரது திருவிளையாடலின் பயனாக, மதுரை மாநகருக்கே அழகு சேர்த்து, அரவணைத்து ஓடும் வைகை ஆறு, பெரும் வெள்ளமாக உருவெடுத்தது.

இராட்சத வேகத்துடன், பொங்கிப் பெருகி வந்த பெருவெள்ளம், ஆற்றின் கரைகளை எல்லாம் "பட பட " என்று உடைத்தெறிந்து கொண்டு மதுரை மாநகருக்குள் புகுந்தது. அந்த வெள்ளப் பெருக்குக்குத் துணை செய்வது போன்று, அடைமழை பொழிந்தது. நகரமே மழை இருட்டில் மூழ்கிப் போனது.

மக்களின் வீடுகள், வாசல்கள், மாடங்கள், மரங்கள் யாவும் வெள்ளப் பெருக்கில் சிக்கி அடியற்று வீழ்ந்தன. ஆடு, மாடு முதலிய வீட்டு மிருகங்களை வெள்ளம் அடித்துக் கொண்டு போனது. பெருகி வந்த வெள்ளத்தில், மக்கள் இருக்க இடமின்றி, ஒதுங்கக் கூரையின்றித் துன்புற்றார்கள்.

துன்பப்பட்ட மக்கள் தங்கள் துயரைத் தீர்க்க யாரிடம் செல்வார்கள்? மக்களுக்கெல்லாம் காவலனாக விளங்குபவன் அரசன் அல்லவா ? அதனால், மதுரை மாநகரத்து மக்கள் யாவரும் அரசனின் மாளிகையை நோக்கி ஓடோடிச் சென்றார்கள். அரசனின் மாளிகை வாயிலில் நின்றுகொண்டு, " அரசே, ஆபத்து, .... ஆபத்து..... எங்களைக் காப்பாற்றுங்கள் ... " என்று கதறினார்கள்.



மக்களின் அவலக் குரலைக் கேட்டு அரிமர்த்தன பாண்டியன் வாயிலுக்கு விரைந்தோடி வந்தான்.

" அரசே.... வைகை ஆற்று வெள்ளம் பெருகி மதுரை மாநகருக்குள் புகுந்து வீடு வாசல்களையெல்லாம் அடித்துக் கொண்டு போகின்றது. வெள்ளத்துடன், மழையும் சேர்ந்துகொண்டு எங்களை வாட்டி வதைக்கிறது. நீங்கள்தான் காக்க வேண்டும்" என்று மக்கள் ஒரே குரலில் கதறினார்கள்.

"கவலைப் படாதீர்கள். ஆற்று வெள்ளத்தினால் உடைக்கப்பட்ட கரைகளையெல்லாம் உடனடியாகக் கட்ட ஏற்பாடு செய்கிறேன். " என்று கூறி அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களைக் கொடுத்து அனுப்பிய அரசன், தனது மந்திரிகள், சேனாதிபதிகள் மற்றும் பிரதானிகளை அழைத்து ஆலோசனை செய்தான்.

"வைகை ஆற்றின் கரைகள் மிகவும் நீளமானவை. அதனை உடனே உயர்த்திக் கட்டாவிட்டால், பேரழிவு ஏற்படும். ஒரு சிலரின் துணையுடன் இதைச் செய்து முடிக்க முடியாது. ஆகவே, மதுரை மாநகரத்து மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கரைகளைக் கட்டி முடிக்க வேண்டும்" என்று முடிவு செய்தான் அரசன்.


மதுரை மாநகரத்தில் வாழ்ந்துவந்த குடும்பங்கள் எல்லாவற்றையும் கணக்கிட்டு ஆற்றுக் கரைகளை ஒரு குடும்பத்துக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் பிரிக்கும்படி செய்தான்.

அப்படிப் பிரிக்கப்பட்ட பங்குக்கு உரியவர்கள் அவற்றை மண் போட்டு உயர்த்திக் கட்ட வேண்டும் என்று முரசு அறைந்து அறிவிக்கும்படி சொன்னான்.

முரசு அறைந்து அறிவிப்போர்கள் மாநகர் முழுவதும் வீதிவீதியாகச் சென்று அச் செய்தியை அறிவித்தார்கள்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு பங்கு பிரித்துக் கொடுக்கப் பட்டது. அன்று மாலைக்குள் கரையின் பங்குகளை அடைத்துவிட வேண்டும் என்றும், தவறுபவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் அரசன் உத்தரவிட்டான்.

அதன்படி, மதுரை மாநகர மக்கள் அனைவரும் வைகை ஆற்றின் கரையில் கூடினார்கள். அவர்கள் மண்வெட்டிகள்,



உரிய நேரத்தில் அடைக்காவிட்டால், அந்தப் பகுதியாலே வெள்ளம் பாய்ந்து, கடைசியில் முழுக்கரையையுமே உடைத்துவிடும்.

அரசனின் தண்டனையும் எனக்குக் கிடைக்கும். ஐயா.... தினமும் காலையில் உன்னை என் பிள்ளையாகப் பாவித்துத்தான் எனது முதற் பிட்டை உனக்கு நிவேதனம் செய்து வந்திருக்கிறேன். இந்தக் கஷ்டத்திலிருந்து நீதான் ஐயனே என்னைக் காக்க வேண்டும்... " என்று சிவபெருமான் முன்னிலையில் கண்ணீர் விட்டுக் கதறினாள்.

தினமும் காலையில் அவள் அன்புடன் படைத்த பிட்டை உண்டு மகிழ்ந்திருந்த சோமசுந்தரக் கடவுள் புன்னகை புரிந்தார்.

கடப்பாரைகள், கயிறுகள் முதலிய பலவகைக் கருவிகளை எடுத்து வந்தார்கள். உடல் வலிமை குறைந்தவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியைக் கட்டி முடிக்கக் கூலியாட்களைக் கூட்டி வந்திருந்தார்கள்.

அனைவரும் சேர்ந்து வேகமாக வேலையை ஆரம்பித்தார்கள். சுற்று வட்டாரத்து மேட்டுப் பகுதிகளிலிருந்து மண்ணை வெட்டியெடுத்து, கூடைகளில் நிரப்பி, வைகை ஆற்றுக் கரைகளில் கொண்டுபோய்க் கொட்டி, கரைகளை உயர்த்தும் வேலையில் ஈடுபட்டார்கள்.

இவ்வாறு, மதுரை மாநகரின் எல்லையில் வைகைக் கரைகளை உயர்த்தும் வேலை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அந்தக் கரையில் ஒரு சிறு பகுதி மட்டும் அடைக்கப்படாமல் கிடந்தது. அந்தப் பங்கை அடைக்க வேண்டிய பொறுப்பு யாருமற்ற ஓர் அநாதைக் கிழவிக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த அநாதைக் கிழவியின் பெயர் செம்மனச்செல்வி. அவள் மதுரை மாநகரின் தென்கிழக்குத் திசையில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தாள். அவளுக்கு உற்றார் உறவினர்கள் யாருமில்லை.

வயது முதிர்ந்து, முதுகு கூன் விழுந்துவிட்ட அந்த ஏழைக் கிழவி, பிச்சையெடுத்து வயிறு வளர்க்க விரும்பாமல், பிட்டு அவித்து அதனை வீதி வீதியாகச் சென்று விற்று வாழ்க்கை நடத்தி வந்தாள்.

அவள் சிவபெருமான் மீது அளவற்ற பக்தியும், பாசமும் கொண்டவள். தினமும் காலையில், தான் அவிக்கும் பிட்டின் முதற் பங்கைச் சோமசுந்தரக் கடவுளுக்கு நிவேதனம் செய்துவிட்டு அதன்பின்னரே பிட்டு விற்பனையை ஆரம்பிப்பாள்.

வைகை ஆற்றுக்கரையின் ஒரு பகுதியை அடைக்கும் பொறுப்பு அவளுக்குக் கொடுக்கப்பட்டபோது, அவள் மனம் கலங்கிக் கண்ணீர் வடித்தாள். யாருமற்ற அநாதைக் கிழவியான அவள், சோமசுந்தரக் கடவுளின் சந்நிதிக்கு ஓடினாள்.

"ஐயனே, இதுவும் உன் சோதனையா? இந்த அநாதைக் கிழவிக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள யாருமில்லை. கரையை நானே கட்டுவதென்றால், என் உடம்பில் பலம் இல்லை. கூலிக்கு ஆள் வைத்துச் செய்வதற்கும் கையிலே காசு இல்லை. என்னுடைய பங்குக் கரையை

அவரது திருவிளையாடல் அரங்கேறும் கட்டம் வந்து விட்டதே.

தம்மையே உற்றம், உறவு என்று எண்ணி அன்பு காட்டிய கிழவிக்கு உதவி புரிந்து, அதன் மூலமே ஒரு திருவிளையாடலை நடத்தத் திருவுளம் கொண்டார்.

உலக மக்களை உய்விக்க எந்தக் கூலியும் எதிர்பாராமல் அளப்பரிய கருணை புரிந்து அருளும் பெருமான், அநாதரவாய் நின்ற அந்த ஏழைக் கிழவிக்கு அருள் புரிவதற்காக ஒரு கூலியாளாக உருவம் கொண்டார்.

காண்பவர்கள் கண்களைச் சுண்டியிழுக்கும் பேரழகுடன், சிவந்த மேனியும், ஒளிவீசும் முகமும் கொண்டு விளங்கிய சிவபெருமான், இடுப்பிலே அழுக்குப் படிந்த பழைய துணியை அணிந்து கொண்டார்.

அவரது தோளின்மீது ஒரு மண்வெட்டி இருந்தது. தலையிலே சும்மாடு வைத்து, அதன்மேலே, மண் அள்ளிக் கொட்டுவதற்குப் பயன்படும் கூடையைக் கவிழ்த்துக்கொண்டு, புன்னகையுடன் அவளருகே வந்தார்.

செம்மனச்செல்வியின் அருகே சென்ற அவர், எல்லாருக்கும் கேட்கும்படி, " கூலிக்கு ஆள் வேண்டுமா? .... கூலிக்கு ஆள் வேண்டுமா? ..... " என்று குரல் கொடுத்துக் கூவினார்.

கலங்கி நின்ற செம்மனச்செல்வியின் காதுகளில் அந்த வார்த்தைகள் தேனாகப் பாய்ந்தன. கூன் விழுந்த உடலுடன் நின்ற அந்த முதிய கிழவி, தன் தலையை நிமிர்த்தி, தெய்வீக அழகு சொட்டும் அந்தத் திருமுகத்தைப் பார்த்தாள்.

"அப்பனே, நீ கூலிக்கு வேலை செய்வாயா? " என்று கேட்டாள்.

"அதுதானே அம்மா என் தொழில் ? " என்றார் இளைஞன்.

"அப்பா, வைகையாற்றுக் கரையில் ஒரு பங்கை அடைக்கும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆனால், அதனை அடைக்க என் உடம்பிலே பலம் இல்லை. கையிலே காசும் இல்லை. எனக்காக அந்தப் பங்குக் கரையை நீ அடைத்துத் தருவாயா, ஐயனே ?" என்று கேட்டாள் அவள்.

இளைஞன் சிரித்தார். " சரி அம்மா, அப்படியே செய்வேன். ஆனால், அதற்குக் கூலி என்ன தருவாய் ?" என்று கேட்டார்.

"ஐயா, உனக்குக் கூலியாகத் தருவதற்கு என்னிடம் காசு பணம் இல்லை. ஆனால், உனக்குக் கூலியாக உனது பசி தீரச் சுடச்சுட பிட்டு அவித்துத் தருவேன்" என்றாள்.

"சரி தாயே, உன்னுடைய பிட்டையே கூலியாக வாங்கிக் கொள்வேன். இப்போது எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது.

சுடச்சுடப் பிட்டு அவித்து இப்போதே தந்தாயானால், அதை உண்டு பசியாறிவிட்டு நான் உனது பங்குக் கரையை ஒரு நொடியில் அடைத்து விடுவேன்" என்றார் ஈசன்.

பெரும் மகிழ்ச்சியடைந்த செம்மனச்செல்வி, தனது குடிசைக்கு ஓடோடிச் சென்று, தேவையான பொருட்களையும், பாத்திரங்களையும் எடுத்து வந்தாள். ஆற்றங்கரையில், ஒரு மர நிழலில் நெருப்பை மூட்டி விரைவாகப் பிட்டை அவித்து, அதை உதிர்த்துக் கை நிறைய அள்ளி, அந்தத் தெய்வக் கூலியாளிடம் அன்புடன் கொடுத்தாள்.

மகிழ மர நிழலில் அமர்ந்து, அந்தப் பிட்டைச் சுவைத்து ரசித்துச் சாப்பிட்டார் இறைவன். வயிறார உண்டபின், " சரி தாயே, இப்போது பசி தீர்ந்து விட்டது. இனி நான் உன்னுடைய பங்குக் கரையை ஒரு நொடியிலே அடைத்துவிட்டு எனது கூலியை வாங்கிக் கொள்வேன் " என்று கூறிவிட்டு வைகைக் கரையை நோக்கி விரைந்து நடந்தார்.

வைகைக் கரையில், கரையை உயர்த்திக் கட்டும் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. வேலைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்த தலையாரியிடம் சென்று, செம்மனச்செல்வியின் பங்குக் கரையைக் கட்டுவதற்குத் தான் வந்திருப்பதாகக் கூறித் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார்.

இடுப்புத் துண்டை இறுக்கிக் கட்டிக்கொண்டு வேலையைத் தொடங்கினார்.

ஆனால், அவர் வேலை செய்த விதமே விசித்திரமானதாக, விளையாட்டாக இருந்தது. மண்ணை வெட்டிக் கூடையில் நிரப்புவார் தூக்கிப் பார்ப்பார். அதிக பாரமாயிருக்கிறதென்று சொல்லி, மண்ணைக் கொட்டி விடுவார். மீண்டும், குறைவாக மண்ணை எடுத்துச் சென்று, ஆற்றின் கரையில் கொட்டிவிட்டு வருவார். பின்பு, கடும் வேலை செய்து களைப்புற்றவர்போல் மர நிழலில் படுத்து விடுவார். சிறிது நேரம் தூங்கியபின் எழுந்து, முன்னரே கிழவியிடம் வாங்கி வைத்திருந்த பிட்டை உண்ணுவார். பின்னர் சிறிது நேரம் வேலை செய்வார். இவ்வாறு மிகவும் நிதானமாக, விளையாட்டாக வேலை செய்தார்.

மாலை வேளை நெருங்கிற்று. தலையாரி கரையைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தான். செம்மனச்செல்வியின் பங்கு மட்டுமே அடைபடாமல் இருந்ததையும், அதன் காரணமாக் முழுக்கரையுமே உடையும் அபாயம் ஏற்பட்டு இருந்ததையும் கண்டு கடும் கோபம் கொண்டான்.

"இந்தப் பகுதியை அடைக்கும் கூலிக்காரன் எங்கே? " என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

சற்றுத் தூரத்திலே, ஒரு மர நிழலில் படுத்துறங்கிக் கொண்டிருந்த அந்தத் தெய்வீக இளைஞனைச் சுட்டிக் காட்டினார்கள் சேவகர்கள்.

"அவனை இழுத்து வாருங்கள் " என்று தலையாரி கட்டளையிட்டான். சேவகர்கள் அந்த இளைஞனை உறக்கத்திலிருந்து எழுப்பித் தலையாரியிடம் அழைத்து வந்தார்கள்.

"ஏனடா.... செம்மனச்செல்வியின் பங்கை அடைப்பதற்கு நியமிக்கப்பட்ட கூலிக்காரன் நீதானே?" என்று தலையாரி கேட்டான்.

மாறாத புன்னகையுடன், " ஆம்" என்று தலையசைத்தார், இறைவன்.

"அப்படியானால், உனக்குத் தரப்பட்ட வேலையைச் செய்து முடிக்காமல், விளையாடுவதும், உறங்குவதுமாக நேரத்தை வீணடிக்கிறாயே ? " என்று தலையாரி கோபத்துடன் கேட்டான்.

"எல்லாமே எனது திருவிளையாடல்தான்" என்று கூறுவதுபோல், அந்தத் தெய்வீக இளைஞன் எவ்விதமான பதிலும் கூறாமல் புன்சிரிப்புடன் கம்பீரமாக நின்றார்.

கள்ளங் கபடமற்ற, தெய்வீக அழகு சொட்டும் அவரது முகத்தயும், கம்பீரமான அவரது தோற்றத்தையும் கண்டு, அவரைத் தண்டிக்கப் பயந்த தலையாரி, உடனே அரசனிடம் சென்று முறையிட்டான்.

செய்திகேட்டு வேகமாக அந்த இடத்துக்கு வந்த அரசன் அரிமர்த்தன பாண்டியன், அந்தத் தெய்வீக உருவத்தைப் பார்த்து ஒரு கணம் திகைத்து நின்றான். ஆயினும், அந்த இளைஞனின் விளையாட்டுத் தனத்தால், கரை கட்டும் வேலை பாழாவதையும், மக்கள் படும் துன்பத்தையும் எண்ணி ஆத்திரம் கொண்டான்.

அதே வேளை, நடந்ததெல்லாவற்றையும் கேள்வியுற்று, என்ன நடக்குமோ என்ற கவலையுடன் அந்த இடத்திற்கு வேகமாக வந்து சேர்ந்த செம்மனச்செல்வி, இக் காட்சியைக் கண்டு திகைத்து நின்றாள்.

"அடே கூலிக்காரப் பயலே, நீ என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உன்னுடைய பொறுப்பில்லாத தன்மையால் முழுக்கரையுமே பாழாகப் போகிறதே? இதற்கு என்ன சொல்கிறாய்? " என்று பாண்டியன் கேட்க......

அவனை நிமிர்ந்து பார்த்துப் புன்சிரிப்புடன் மௌனமாக நின்றார் அந்தத் தெய்வக் கூலியாள்.

"என்னடா? என்னுடன் பேச மாட்டாயா ? ... நான் இந்த நாட்டு அரசன் என்பதை மறந்து விட்டாயா? " என்று கடுஞ் சினத்துடன் கேட்ட அரிமர்த்தன பாண்டியன், தனது பக்கத்திலே நின்ற அடியாளை நோக்கி, " உம்,... இவனுக்குத் தண்டனை கொடுங்கள் " என்று கட்டளையிட்டான்.

அரசனுக்குப் பக்கத்திலேயே மலைபோல நிமிர்ந்து நின்றிருந்த அடியாள் தன் கையிலிருந்த நீண்ட பிரம்பை வேகமாக உயர்த்தி...........

அந்தத் தெய்வீக இளைஞனின் சிவந்த முதுகில் ஓங்கி அடித்தான்.

அதே கணம்............

அந்த அடி,..........

அரசன் மேலும்,............

அங்கு சூழ்ந்துநின்ற அத்தனை மனிதர் மேலும்,.............

வானத்துத் தேவர் மேலும்,.............

நரகத்து அசுரர் மேலும்,.............

............. ஓங்கி வீழ்ந்தது.

ஓங்கி வீழ்ந்த அடியின் வேதனையைப் பொறுக்க முடியாமல், யாவரும் " ஆ " என்று அலறினார்கள்.

அதே வேளை, ..... தெய்வ மேனியில் அந்த அடியை வாங்கிக்கொண்ட இறைவன், புன்சிரிப்புடன் மறைந்து போனார்.

பல நாட்களாகப் பெய்து கொண்டிருந்த அடைமழையும், பெரு வெள்ளமும் அந்த ஒரே வினாடியில் அடங்கி விட்டன.

வானத்திலிருந்து ஒரு விமானம் இறங்கி வந்து, நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக் கலங்கி நின்று கொண்டிருந்த செம்மனச்செல்வியின் அருகே நின்றது. பக்திப்பரவசத்துடன், கிழவி அந்த விமானத்திலே ஏறிக்கொள்ள, அந்த விமானம் விண்ணில் விரைந்து, பறந்து சென்று மறைந்தது.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்து, அதிசயித்து நின்றுகொண்டிருந்த அரிமர்த்தன பாண்டியனும், ஏனைய மக்களும் உண்மையை உணர்ந்து, வந்திருந்தவர் இறைவனே என்பதைத் தெரிந்து கொண்டு, நிகழ்ந்த தவறுகளுக்காக மனம் வருந்தி, " ஐயனே,... ஐயனே,... எங்களை மன்னித்துவிடு, இறைவா ... " என்று அலறி அழுதார்கள்.

அப்போது, விண் மேகங்களுக்கிடையிலே, ஒரு ஜோதிப் பிழம்பாக இறைவனாகிய சிவபெருமான் தமது துணைவியாரான உமாதேவியாருடன் தோன்றி, " அரிமர்த்தன பாண்டியனே, செம்மனச்செல்வியின் பக்தியின் மேன்மையை உலகக்கு உணர்த்தவே நாம் இந்தத் திருவிளையாடலைப் புரிந்தோம்" என்று கூறி அவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து மறைந்தார்.

தெய்வக்குரல் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியும், பக்திப் பரவசமும் அடைந்த அரசனும், மக்களும் " தென்னாடுடைய சிவனே, போற்றி.... எந்நாட்டவர்க்கும் இறைவா, போற்றி ... " என்று கூறி, சிவபெருமானின் கருணையைப் போற்றி நின்றார்கள்.

"கடவுளை நம்பினோர், கைவிடப்படார்"

*(நன்றி : "பெரியபுராணக் கதைகள்")*

## மாமன்றத்தின் சமூகநலன்பணிகள்

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் வேதனைகளாலும் சோதனைகளாலும் வாடுகின்ற எமது உடன்பிறப்புக்களுக்கு உதவிகள் வழங்குவதில் கண்ணும் கருத்துமாகச் சேவையாற்றி வந்திருக்கிறோம். மாமன்ற வரலாற்றின் அரைவாசிப்பகுதிக்கு மேல் மாமன்றம் சமூகப்பணிகள் மூலம் இறைபணியில் நின்று இருக்கிறோம். மாமன்றத் தலைமையகக் கட்டிடத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தை இந்து மக்களின் தேவைகளை உணர்ந்து பாவித்து வருகின்றோம்.

யாழ் மண்ணில் ஓர் அலுவலகத்தை நிறுவி அங்கு இந்து ஆராய்ச்சி நிலையம், சைவவித்தகர் பயிற்சி நிலையம் என்பவற்றை நிறுவி யாழ் மண்ணில் பல்வேறு பணிகளையும் செய்து வருவதுடன் மட்டும் நின்றுவிடாது கிழக்கு மாகாணத்தில், மன்னாரில், வன்னியில், மலையகத்தில் எல்லாம் எமது சேவையைப் பரப்பியிருக்கிறோம்.

மக்கள், போரின் கொடுமையால் பாதிக்கப்பட்ட உள்நாட்டிலேயே அகதிகளாகி நிர்க்கதியாகி தவித்த போது அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் மாமன்றம் முன்னோடியாக இருந்தது. வடக்கில் மக்கள் இடம் பெயர்ந்தபோது அவர்களைத் தேடி உதவி செய்தோம்.

பெற்றோர்களின் ஆதரவை இழந்த பிள்ளைகளுக்கு உதவியாக தென்னிலங்கையில் ஒரு முன்னோடியாக இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் இலவச மாணவர் விடுதியை நிறுவி நடாத்துகின்றோம்.

போரினால் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து தவித்து வெளியேறிய மக்கள், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்கள், இயற்கை அனர்த்தங்கள், முக்கியமாக மண்சரிவு, வெள்ளம், சுனாமி போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என எமது உடன் பிறப்புக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருந்த வேளையெல்லாம் ஓடிச் சென்று அவர்களின் பசியைப் போக்க எம்மாலான உதவிகளை வழங்கினோம்.

திருமுறிகண்டிக்கு அருகாமையில் சரவணப் பொய்கையுடன் கூடிய முருகப்பெருமானின் வழிபாட்டிடம் ஒன்றும் அதனுடனிணைந்து போரினால் பாதிக்கப்பட்டு ஆண் தலைமைத்துவத்தை இழந்த பெண்களுக்கான வாழ்வாதாரத்திட்டமாக ஒரு சிற்றுண்டிச் சாலையும் அமைக்கப்பட்டு வருகின்றது.



அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரும், யாழ் மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள், கடந்த 2017 கந்தசஷ்டி நிகழ்வின்போது திருச்செந்தூர் ஆலயத்தில் நிகழ்த்தியிருந்த தொடர் சொற்பொழிவு தொடர்பான ஒரு பார்வை.

### திருச்செந்தூரில் முருகன் சந்நதியில்
## செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

ஆற்றிய

# ஆறுமுகநாவலர் அடிச்சுவட்டை பின்பற்றிய வகையிலான சிறப்புச் சொற்பொழிவு



கடந்த அக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற முருகப்பெருமானுக்குரிய சிறப்புத் திருவிழாவான கந்தசஷ்டி விரத காலத்தில் திருச்செந்தூர் திருத்தலத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் தொடர் சொற்பொழிவை பன்னாட்டு அடியார்கள் கேட்டுச் சுவைத்தனர். இந்தியாவின் தமிழகம் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, கனடா, லண்டன், அவுஸ்திரேலியா, ஜேர்மன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்து கூடிய பலர் அவரது பேச்சை செவிமடுத்து கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய கோவில் அறங்காவலர் தெ.பெரமநாயகம் செஞ்சொற்செல்வருக்கு மலர்மாலை சூட்டி, பொன்னாடை அணிவித்து நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். இந்த தொடர் சொற்பொழிவுக்கு லண்டன் பக்த பிரமுகர் திரு.விஸ்வநாதன் யோகநாதன் அனுசரணை வழங்கினார். நிகழ்ச்சிகளை நெறிப்படுத்திய சிவஸ்ரீ பா.பாலசுப்பிரமணிய குருக்கள், திரு.மகாமணி ஆகியோருக்கு திரு.எச்.எச்.விக்கிரமசிங்க மலர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தினார்.

முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் ஆலய கலையரங்கில் கலாநிதி ஆறு.திருமுருகனின் தொடர் சொற்பொழிவு இடம்பெற்றமை சைவத் தமிழர் பெற்ற அளப்பரிய பேறென்றே சொல்லக் கூடியதாக இருந்தது. ஆறுமுகநாவலர் முதன்முதலாக திருவாசகத்தை பதிப்பித்தார். நாவலர் பெருமானின் காலத்திற்கு பின்பாக எமது தாய்நாட்டின் அறிஞர் ஒருவர் மூன்றாவது தடவையாக தமிழ்நாட்டில் தொடர் உரையாற்றினார் என்ற பெருமையையும் ஆறு. திருமுருகன் அவர்கள் பெற்றுள்ளார்.

கந்தசஷ்டி கலாசாரம், விழிக்குத் துணை, மேன்மை கொள் சைவ நீதி, ஆத்மீக சிந்தனைகள் என்ற தலைப்புகளில் இவரின் பேச்சுக்கள் செறிந்திருந்தன. கச்சியப்பரின் கந்தபுராண வரலாறே தமிழ்க் கலாசாரமாக அமைகிறதென்று இவர் குறிப்பிட்ட போது சபையோர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். ஏட்டு வடிவத்தில் இருந்த கந்தபுராணத்தை தமிழ் அச்சு வடிவில் ஆறுமுக நாவலரே முதன்முதலாக பதிப்பித்தார் எனவும், இதனை தமிழ்நாட்டின் பெரும் தமிழறிஞர்களே பாராட்டியுள்ளதாகவும் ஆதாரத்துடன் இவர் விளக்கினார். இதன் வாயிலாக நாவலர் பெற்ற மகிமை எமது நாட்டு மக்களையும் சேர்கின்றதென இவர் கூறிய போது சபையினர் உற்சாகப்பட்டு கைதட்டினார்கள். கந்தபுராண வரலாறு எமது தமிழ் கலாசாரத்தையும் பண்பாட்டையும் உள்ளடக்கம் கொண்டுள்ளதாக இவர் சுட்டிக் காட்டினார்.

"விழிக்குத் துணை" என்பது முருகப்பெருமானின் பாதக்கமலத்தையே அடியவர்கள் உற்று நோக்க வேண்டும். முருகப்பெருமான் குழந்தை வடிவானவன். அந்த குழந்தை சினப்பட்டு வெறும் கச்சையுடன் மலையில் சென்று அமர்ந்தமையின் உட்பொருளை பக்தர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். முருகப்பெருமான் தாழ்ந்த குல வேடுவப் பெண்ணை தனது மனைவி வள்ளியாக ஏற்றுக் கொண்டார் என்றால் இதன் மூலம் அடக்கம் பெற்றுள்ள கந்தபுராண தத்துவத்தை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். வேடுவ குலப் பெண்ணான வள்ளியை அவளது வேண்டுகோளை ஏற்று தன் மனைவியாக்கிக் கொண்ட முருகன் மெய்யடியார்களின் வேண்டுதல்களை புறக்கணிக்கவே மாட்டார். கந்தபுராணம் எமக்கு கதைகள் ஊடாக மாபெரும் தத்துவ பொருளையே சுட்டி நிற்கிறது. எம்மிடையே சாதி வேறுபாடு என்பது இல்லை. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவர் கூற்றே கந்தபுராண செய்தியாக தருகின்றது. அத்துடன் ஒருவர் பிழை செய்யின் அதனை மன்னிக்கும் பண்பையும் கந்தபுராணம் எமக்கு பாடமாகத் தருகின்றது. அரக்கனாகிய சூரனை துவம்சம் செய்து அவனை சேவலும் மயிலுமாக முருகன் அரவணைத்தமை "பகைவனுக்கருள்வாய்" என்ற தர்ம சிந்தனைப் பண்பை கந்த புராணம் போதிக்கின்றது. கந்தபுராண கருத்துக்களை மிக ஆழமாக

மனத்தே பதித்துவிட்டால் முருகப்பெருமான் அப்படிப்பட்ட நெஞ்சங்களை தேடிவருவருவார். இது சத்தியம் என்றும் ஆறு.திருமுருகன் தனது பேச்சிலே எடுத்தியம்பினார்.

அடியார்கள் கருணை காட்டுவதை செயற்படுத்த வேண்டும். பறவைகள் மிருகங்களை நேசிக்க வேண்டும். காகங்களை பாடமாக எடுத்துக் கொள்ளுங்கள். உணவு கிடைத்தால் காகம் கூவி அழைக்கின்றது. பகிர்ந்தே உண்கின்றது. அதிகாலையில் கண்விழித்து இரைதேடி கூவி அழைத்து மாலையில் குளித்து தனது உறைவிடம் சேரும். காகங்களை பற்றி ஔவைப் பாட்டி பாடியிருக்கின்றார். காகத்தின் விருந்தோம்பும் பண்பினை நாம் கைக்கொள்ள வேண்டும். மிருகமாகிய நாயை பாருங்கள். நன்றியறிவுள்ள மிருகம் அதுவாகும். இத்தகைய பண்புகளாலேதான் எமது முன்னோர்கள் பறவைகளையும் மிருகங்களையும் இறைவனுக்கு வாகனமாக அமைத்தார்கள். எங்காவது மனித வடிவை வாகனமாக அமைத்துள்ளார்களா? என்றும் திருமுருகன் மேலும் எடுத்துக் கூறினார்.

ஆறு, கடல், மரம் ஆகிய இயற்கை செல்வங்களை நாம் வணங்க வேண்டும். நல்லாட்சியானது ஒரு நாட்டில் இடம் பெற்றால் அங்கே அமைதி நிலவும். நாட்டு மக்கள் மகிழ்வாக வாழ்வார்கள். நல்லாட்சி ஒரு நாட்டில் இடம்பெறாவிட்டால் அந்நாடானது செழிக்கமாட்டாது. வறட்சியும் பஞ்சமும் பிணியும் அங்கே ஏற்படும். "வரப்புயர நீர் உயரும் குடி உயர கோன் உயரும்" என்பது ஔவையின் கூற்றாகும்.

நல்லாட்சி தமிழ்நாட்டில் இருந்தமையை அநபாயச் சோழ மன்னன் வாயிலாக நாங்கள் அறிகின்றோம். மனுநீதி கண்ட நாடாக தமிழகம் ஒரு காலத்தில் திகழ்ந்தது. முல்லைக் கொடிக்கு கொழு கொம்பாக தனது தேரையே கொடுத்த பாரி மன்னன் வரலாறும் எமக்கு ஒரு பாடமே என்று அவர் குறிப்பிட்டார்.

தொடர் உரையின் இறுதி நாளில் தமிழக மக்களுக்கு ஆறு.திருமுருகன் நன்றிக்கடன் தெரிவித்த போது எங்கள் கண்களில் நீர் கசிந்தது. எமது மக்கள் விடிவுக்காக தமிழக மக்களாகிய நீங்கள் குரல் எழுப்பியதை மறக்க முடியாது. சிலர் தீயில் தங்களை ஆகுதியாக்கிக் கொண்டார்கள். இவற்றை இலங்கைத் தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள். இன்னமும் சிறையில் அடைக்கப்பட்ட பல இளைஞர்களும் யுவதிகளும் விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களை நான் சிறையில் சென்று பார்த்து ஆறுதல் கூறி வருகின்றேன். அவர்களுக்காகவும் தயவு செய்து பிரார்த்தனை செய்யுங்கள் என்று மன்றாட்டமாகக் கூறினார்.

வடமொழியில் உபவாசம் என்றால் 'அருகிருத்தல்' என்று பொருள்படும். உபவாசம் என்பது முருகன் அருகே இருந்து விரதம் பிடிப்பதாகும். அதற்கு சிலர் தவறான விளக்கம் கொண்டுள்ளனர். பால் பழம் அல்லது ஒரு வேளை சோறு உண்டுவிட்டு 'உபவாசம்' கடைப்பிடிப்பது விரதமல்ல. திருச்செந்தூர் வந்து முருகன் அருகிருந்து நோன்பு செய்வதென்பது நீங்கள் பெற்ற பெரும் பேறாகும் என்றும் ஆறு.திருமுருகன் தனது உரையில் விளக்கமளித்தார்.

திருச்செந்தூரில் ஆறு.திருமுருகன் அவர்களது பேச்சினை லண்டன் தமிழர் தகவல் ஆசிரியரான திரு. சிவானந்த ஜோதி ஒழுங்கு செய்திருந்தார்.

**இணுவையூர் ச.சிறிரங்கன்.**
**லண்டன்.**

## மாமன்றத்தின் ஆன்மீகப்பணிகள்

எமது மக்களிடையே ஆன்மீக உணர்வையும் இறைபக்தியையும் வளர்த்து அவர்களை எமது சமய வழியில் வாழ வழிவகுக்கும் பல பணிகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். என்ற திருப்தியுடன் கூற எங்களுக்கு இறையருள் கிடைத்திருக்கின்றது.

ஆலய வழிபாட்டை மையமாகக் கொண்ட எமது சமயத்தில் மக்களை ஆன்மீக வழிபாட்டில் இட்டுச் செல்வதில் தொடர்ந்தும் ஆலயங்கள் வகிக்கும் முக்கிய பங்கை எவரும் மறுக்கமுடியாது. ஆலயங்களைப் பேணி ஆலயவழிபாடுகளை முறையாக நடத்துவதில் பெரும்பாலான ஆலய நிர்வாகங்கள் தங்கள் பொறுப்பைச் செவ்வனேயாற்றி வருகின்றன. எனவே பின் தங்கிய இடங்களிலும் குறிப்பாக எமது இந்து மக்களுக்கு சவாலாக இருக்கும். சூழலில் உள்ள ஆலயங்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்வதை மாமன்றத்தின் கடமை என்பதையும் மறவாது செயற்பட்டு வந்திருக்கிறோம்.

மேலும் ஆன்மீகக்கருத்தரங்குகள் மூலமும்,"இந்து ஒளி" போன்ற எமது வெளியீடுகள் மூலமும் மக்களிடையே ஆன்மீக ஞான ஒளியைப் பரப்பி வருகிறோம்.




# திருவெம்பாவை – திருப்பாவை

# ஒரு முழுமைப் பார்வை

பேராசிரியர் என்.சுப்பிரமணியம்
தமிழ்த்துறைத் தலைவர்
- நாகர்கோவில் தெ.தி. இந்துக்கல்லூரி

மாணிக்கவாசகர் அருளியது திருவெம்பாவை. ஸ்ரீ ஆண்டாள் அருளியது திருப்பாவை. முன்னது திருவண்ணாமலையில் மலர்ந்தது. பின்னது ஸ்ரீ வில்லிப்புத்தூரில் மலர்ந்தது. இரண்டுமே இசைப் பூங்கொத்துக்கள். திருவெம்பாவையில் 20 செஞ்சொற்சித்திரங்கள் மிளிர்கின்றன. திருப்பாவையில் 30 செஞ்சொற்சித்திரங்கள் ஒளிர்கின்றன.

மாணிக்கவாசகர் திருவாதவூர் தந்த அருட்செல்வர். பாண்டிய நாட்டு அமைச்சராகப் பணியாற்றியவர். கல்வியும் ஒழுக்கமும் மிக்கவர். மன்னரால் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டமும் பெற்றவர்.

ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூர் தந்த அருட்செல்வி. நந்தவனத் துளசியருகே விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்ட அற்புதக் குழந்தை. இதயத்துடிப்பெல்லாம் கடவுட் தாகமாக வளர்ந்த சின்னஞ்சிறுமி. பெருமை மிக்க பெரியாழ்வாரிடம் வளர்ந்தமையால் ஆழ்வார் திருமகளார் என்னும் நற்பெயரும் பெற்றார்.

மன்னருக்காகக் குதிரைகள் வாங்கச் சென்று திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குருவருள் பெற்றார் மாணிக்கவாசகர். குதிரைக்குரிய பணத்தை அறச்செயல் புரிந்து அரசுப் பணியில் பிழைபட்டார். கோதையோ கடவுளுக்குக் கட்டிய மாலையைத் தானே சூடி அழகு பார்த்தபின் கோயிலுக்குத் தந்து சமயாசாரத்தில் பிழைபட்டாள். மாணிக்கவாசகரைச் சிவபிரான் ஆட்கொண்டார். சூடிக் கொடுத்த நாச்சியாரைப் பெருமாள் ஆட்கொண்டார். இருவருமே இறை ஒளியில் கலந்த பெருமையினர். இருவருமே இறை ஒளியைத் தம்தம் அழகிய பாடல்களில் வழங்கிய அற்புதமான திவ்ய ஞான தீபங்கள்.

திருவாசகத்தின் அங்கமாகப் பன்னிரு திருமுறையில் குடியேறியது திருவெம்பாவை. நாச்சியார் திருமொழியுடன் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் குடியேறியது திருப்பாவை. பன்னிரு திருமுறையும், நாலாயிர திவ்யப் பிரபந்தமும் தமிழகத்தின் ஆன்மீகப் பண்பாட்டு விழிகள். பாவைப் பாட்டுகளோ அவ்விரு விழிகளின் 'பாவைகளாக' ஒளிர்பவை.

**'உத்திஷ்டத ஜாக்ரத' என்னும் உபநிடதக் குரல்:**

துயில் நீக்கம் என்னும் ஆன்மீக மையம் கொண்ட ஆன்மீக அலைகள் இரு பாவைகளிலும் விரிகின்றன. சிறுமியர் தம்மொத்த வயதினரை அதிகாலையில் எழுப்புகின்றனர். நீராட அழைக்கின்றனர். துயில் எழுப்புதலும், நீராட அழைத்தலும் இனிய ராகங்கள். வைகறையில் மானுடத்துக்கு இதைவிட இனிமை வேறு எதுவுமில்லை. துயில் எழுப்புதல் ஆன்மாவின் துயில் நீக்கம் உணர்த்துகின்றது. ஆன்மீக அருளாளர்கள் அனைவரும் அழைத்த அழைப்பின் சாரம் இதுவே. 'உத்திஷ்டத ஜாக்ரத' என்னும் உபநிடதக் குரலுக்கு மாணிக்கவாசரும் ஆண்டாளும் தந்த செந்தமிழ்ச் சொல்லோவியங்கள் இவை. துயில் எழுப்புதல் என்னும் ஆன்ம விழிப்பூட்டல் உலக இலக்கிய அரங்கில் இத்துணை அழகியல் (aesthetic) நலத்துடன் பதிவுற்றுள்ளதா என்பதனை அறிதல் வேண்டும். பாவைப் பாட்டுக்கள் நிச்சயம் தமிழ்ப் பெருமிதங்களில் முக்கியமானது.



**வைகறை வாசலின் இன்சொற்கோலங்கள்:**

'எழுமின் விழுமின்' என்னும் உபநிடதக் குரலுக்கு மணிவாசகரும், ஆண்டாளும் தந்த இன்னமுதப் பாவைப் பாடல்களின் நுழைவாயில் நாடகப் பாங்கினது.



உள்ளே துயில்வோர் வாசலில் எழுப்புவோர். நேரமோ இருள் நீங்கும் அதிகாலை. எழுப்பும் குரலிலோ நட்புரிமை. சிலபோது எள்ளல், சிலபோது நகையாடல், சிலபோது செல்லக் கடிந்துரைகள் ஆனால் எப்போதும் நேயமிகு நெருக்கம் (intimacy).

"வன்செவியோ நின்செவிதான்?" (1*) என்று கேட்பவள் திருவெம்பாவைத் தோழி. "ஊமையோ அன்றிச் செவிடோ?" (9) என்று வினவுபவள் திருப்பாவைத் தோழி.

"ஒள்நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ?" (4) என்பது திருவெம்பாவைக் குரல். "எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ?" (15) என்பது திருப்பாவைக் குரல்.

"நாளை வந்துங்களை நானே எழுப்புவன் என்றவள் நாணாமே போனதிசை பகராய்!" (5) என்பது திருவெம்பாவையின் செல்லக் கடிந்துரை. "கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ?" (10) என்பது திருப்பாவையின் செல்லக் கடிந்துரை.

இவ்வழகிய உரையாடல் சித்திரங்கள் பாவைப் பாட்டுக்களின் நுழைவாயில் வரவேற்பு இனிமைகள் அழகியல் ஆர்வமும், ஆன்மீகத் தேடலும் உடையவர் தம் உள்ளத்தை எளிதில் பிணிக்கும் எழிலார்ந்த கோலங்கள் ஆழ்ந்து நோக்குவோர்க்கோ லௌகீகத் துயிலுணர்த்தும் அற்புதக் குரல்கள்!

[*: அடைப்புக் குறிப்புக்குள் உள்ளவை திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல் எண்கள்]

**நீராடல் சித்திரச் சோலையும் நோன்பின் சித்திரகூடமும்:**

இரு பாவைப் பாடல்களுக்கும் அமைந்த பொதுமையம் ஆழமானது. எனினும் அவற்றிடையே நுட்பமான வேறுபட்ட பரிமாணங்களும் (dimensions) உள. நீராடலின் சித்திரம் திருவெம்பாவையில் விரிகிறது. நோன்பின் சித்திரம் திருப்பாவையில் விரிகிறது.

வாழ்க்கையை இனிய நோன்பின் புனித நீராடலாக அனுபவிக்கும் ஆழப்பார்வையின் விகசிப்பாகவே திருவெம்பாவை ஒளிர்கின்றது. இயற்கை அரங்கின் அழகெல்லாம் உருகி நிற்கும் தடாகம் மணிவாசகக் கண்களில் இறைத் தடாகம் ஆகின்றது. பொய்கையின் கருங்குவளையும் செந்தாமரையும், நீலமேனியாள் உமையையும் செந்தழல் வண்ணன் சிவனையும் நினைவூட்ட — அங்கம் குருகினம் அம்மையின் கைவளையையும், பின்னும் அரவம் அப்பனின் பாம்பணியையும் நினைவூட்ட — தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தல் நீராடும் பொய்கையினையே பரம்பொருட்சுனை ஆக்குகின்றது.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்

அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்

தங்கள் மலம்கழுவுவார் வந்து சார்தலினால்

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த

பொங்குமடு ..

என ஆனந்தமடைகிறது பாடல். இப்பார்வையின் பரவசத்தில் இன்னும் ஆழங்காற்படும்போது வாழ்க்கை அரங்கே இறைத்தடாகமாகின்றது. வாழும் வாழ்க்கையே பரமானந்த நீராடல் ஆகின்றது. பாய்ந்து பாய்ந்து — பாடிப் பாடி — குடைந்து குடைந்து — ஆடி ஆடி — தோழியருடன் ஆனந்த நீராடும் வைகறை இனிமையே — திருவெம்பாவையின் ஞானமொழியில் — ஆன்மீக வாழ்க்கையின் அற்புதக் குறியீடாகின்றது.

மாமத யானை மரத்தில் மறைந்திடும் அழகியல் நுட்பமிது. பார்முதல் பூதம் பரத்தில் மறைந்திடும் ஆன்மவியல் பரவசம் இது.

வாழ்க்கையை உன்னதமான இறைக்காதல் நோன்பின் சித்திரகூடமாகக் காணும் காட்சிக்கு இட்டுச் செல்கிறது திருப்பாவை. "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர்" என்று தொடங்குகிறது கோதையின் பாவை. நெய்யும் பாலும் நீக்கிடல், மலரும் மையும் ஒதுக்கிடல், செய்யத் தகாதன தவிர்த்திடல் — என்னும் விரத நெறிச் சித்திரங்களை அது தருகிறது. "குள்ளக் குளிர்ந்து நீராடல்" இங்கு விரத அங்கமே. துயில் எழுப்பும் குரலே நீட்சி கொள்கிறது. நந்தகோபன் மாளிகைக் காவலனை உணர்த்தி — நந்தகோபனைத் துயிலெழுப்பி — அன்னை யசோதையைத் துயிலெழுப்பி — பூவைப்பூ வண்ணனைத் துயிலெழுப்பி — அவனைப் போற்றி மகிழ்கின்றது கோதையின் பாவை. நோன்பின் நிறைவில் அவன் அருளால் பற்ற நல்லுடையும் பல்கலனும் அணிந்திடும் குதூகலம் அங்குண்டு. "மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடி இருந்து குளிர்ந்து" உண்ணும் பேறு உண்டு. அனைத்துக்கும் மேலாக, சிங்கமென நடந்துவந்து கண்ணன் சிங்காதனமிருந்து அருளும் பேரருட் காட்சியும், பறை பெற்றுய்தல் என்னும் கைங்கரியப் பிராப்தியின் பேரானந்தமும் சித்திரகூடச் சிகரக் காட்சியாகின்றன.



எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும், உன் தன்னோடு

உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்

மற்றை நம் காமங்கள் மாற்று..

என்பதுவே வாழ்க்கையையே நோன்பாகக் காணும் கோதைப் பார்வை.

### திருவெம்பாவையின் சிவமணமும், திருப்பாவையின் மால்மணமும்:

இறைமுகட்டின் புகழை இடையறாது ஒலிக்கும் இன் அருவி ஓசை பக்தி இலக்கியங்களின் பொதுமை. இறைப்புகழ் ஒன்றே பக்தர் நோக்கில் 'பொருள்சேர் புகழ்'. "போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யாதலே" நோக்கம். எனவே "என்னானாய் என்னானாய் என்னின் அல்லால் — ஏழையேன் என் சொல்லி ஏத்துகேனே" என்னும் நெகிழ்வொலியை அனைத்துப் பக்தி இலக்கியங்களிலும் பொதுப் பண்பாகவே காணலாம்.

மாணிக்கவாசகரின் திருப்பாவை சிவமணம் கமழ்வது. ஆண்டாளின் திருப்பாவை மால்மணம் கமழ்வது. மத்திட்டுக் கடைந்த தயிரில் மிதக்கும் வெண்ணெய்த் திரட்சியாக இறைமுன்பு நின்று நெகிழும் போற்றித் துதிகளை இரு பாவைகளும் ஏந்துகின்றன.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்

போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்

போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்

போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்

போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்

போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்

போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்

போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்

எனப் பாடித் துதிக்கின்றது திருவெம்பாவை.

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி

சென்றங்கு தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி

பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி

கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி

குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி

வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி

என்றென்றும் உன் சேவகமே ஏத்திப்பறை கொள்வான்

இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்

எனப் பாடித் துதிக்கின்றது திருப்பாவை.

நெஞ்சம் நெகிழ்தலே பக்திவயல்களின் வளமை ஆதாரம். இறைப்புகழ்த் தொடர்களே நெஞ்சம் நெகிழ்தலின் ஊற்றுக்கண்கள். இறைப்புகழ்த் தொடர்கள் தத்துவக் களத்திலோ — புராணக்களத்திலோ — உரிமை கெழுமிய உறவுப் பிணைப்பிலோ — அல்லது இவை மூன்றும் விரவிய இனிய சுரப்பிலோ கிளர்ந்தெழுகின்றன. இரு பாவைகளும் இவ்வகையான இறைப்புகழ்த் தொடர்களால் மனம் பிணிக்கின்றன. மனம் நெகிழச் செய்கின்றன. இருபாவைகளின் சிவமணமும், மால்மணமும் ஒன்றையொன்று வெல்லும் வண்ணம் உன்னதம் பெறுகின்றன.

"தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்து ஈசன்" (2) என்றும், "ஆரழல்போல் செய்யா, வெண்ணீறாடி — மையார் தடங்கண் மடந்தை மணவாளா" (11) என்றும், "செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை — அங்கண் அரசே அடியோங்கட்கு ஆரமுதே"(11)

என்றும், "கண்ணார் அமுதமுமாய் நின்றான்" (18) என்றும், "என்னானை என்னரையன் இன்னமுது" (7) என்றும், இன்னும் பலவாறாகவும் தித்திக்கும் தொடர்களில் சிவமணம் தருகின்றது திருவெம்பாவை.

"ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம் — கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்" (1) என்றும், "ஆழி மழைக்கண்ணா" (4) என்றும், "மாயன் மணிவண்ணன்" (16), "சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்" (14) என்றும் பலவாறு புகழ்கின்றது திருப்பாவை. "மாயனை மன்னு வடமதுரை மைந்தனை — தூய பெருநீர் யமுனைத் துறைவனை — ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை — தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை" (5) என வேகப் படிக்கட்டுகளேறித் துரத்தித் தொட முயல்கிறது கோதை தமிழ்.

**மழைக்காட்சி:**

மழைக்காட்சியின் மனக் குளிர்ச்சியில் இரு பாவைகளும் பெறும் பரவசமும் குறிக்கத் தக்கது. இறையருளின் சாசுவதக் குறியீடு மழை. விண்ணும் மண்ணும் இணையும் அழகிய மழைக்காட்சி அழகியலாரின் கலைக்கண்களுக்கு என்றுமே பெருவிருந்து. எங்குமே பெருவிருந்து. உலகின் அனைத்து மொழிகளிலும் இதன் ஈர்ப்பும் பதிவும் உண்டு. ஆன்மீகத் தளம் கொண்ட அகப்பார்வையிலும் மழைக்காட்சி அற்புத விருந்தேயாகும். உலக ஆன்மிக இலக்கியச் சொல்லோவிய அருங்காட்சியகத்துக்கு இரு பாவைகளும் தந்த அற்புதச் சித்திரங்கள் இவை.

கார்மேகத்தில் உமையவள் திருமேனி அழகையும், மின்னல் தெறிப்பில் அவளது இடையொளிக் கீற்றையும், இடிமுழக்கில் அன்னையின் பொன்னஞ் சிலம்போசையினையும் காண்கிறது திருவெம்பாவை.

முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். (16)

என்பது திருவெம்பாவைப் பாடல்.

திருப்பாவையோ மேகநிறத்தில் திருமாலின் திருமேனியினையும், மின்னல் சுழற்சியில் திருக்கைச் சக்கர அருள் சீற்றத்தையும், இடிமுழக்கத்தில் பாஞ்சஜன்யத்தின் பேரொலியையும், வீசும் மழைச் சரங்களில் சார்ங்கக் கணைப் பொழிவையும் கண்டு பரவசங் கொள்கிறது.

ஆழிமழைக் கண்ணா! ஒன்று நீ கை கரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி
ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய் (4)

என்பது திருப்பாவைப் பாட்டு.

'உவமை என்னும் தவலருங் கூத்தி' பாங்குற ஆடும் பல்வண்ணக் கூத்தில் ஒன்றே இப்பாடல்களின் உத்தியாக மிளிர்கின்றது என்னும் 'உத்தி ஆய்வு — மனச்சித்திர எல்லை' தாண்டிய ஸஹ்ருதய நோக்குடைய அனுபூதித் தேடலார்க்கே இப்பாடல்களின் விஸ்வ விசாலமும், ஆன்மிக ஆழமும் வசப்படும். பழகிய பாதையின் குறுகிய ஓடையில் சுழலும் எந்திரச் சிந்தனைத் தளைப்பட்டு ஆன்மிகம் நிராகரிக்கும் நுனிப்புல்லர்க்கும், கலகப்பிரியச் சித்தாந்த நிறக் கண்ணாடியர்க்கும் இங்கு நுழைதிறம் வாய்ப்பதில்லை.

ரிச்சர்ட் பாக் எழுதிய ஜோனதன் லிவிங்ஸ்டன் ஸீகல் (Jonathan Livingston Seagull — Richard Bach) ஓர் அழகிய சுட்டு. அலைதழுவும் கடற்கரையில் தாம் பறப்பதெல்லாம் ஊனும் மீனும் தேடவும் தின்னவுமே என்பது பெரும்பான்மைக் கடற்பறவைகளின் பார்வை. ஊனும் மீனும் தின்பது வான்வெளி நீந்தலின் உயர்சுகத்துக்காக என்பது நாயகப் பார்வையின் பார்வை. பசியாற்றும் தரையிறக்கம் இலட்சியமன்று வான் ஏறும் உயர்பறப்பே இலட்சியம். இப்பார்வைத் தகுதியே பாவை மழைப்பாட்டுக்கும் தேவை. எனில் படிப்பவர் பாட்டில் நுழைவர் பாடல் படிப்பவருள் நுழையும்.

**திருவெம்பாவையின் ஞானச் சிறகும், திருப்பாவையின் காதல் சிறகும்:**

மாணிக்கவாசகரின் பக்தி நெகிழ்வில் 'ஞானக் காட்சிகளே' ததும்புகின்றன. ஞானப் பார்வையின் சொற்சித்திரங்களே திருவெம்பாவையின் பரம்பொருட்காதல் அனுபவத்தை இனிமை செய்கின்றன. "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் — சோதியை யாம் பாடக் கேட்டேயும், வாள்தடங்கண் மாதே வளருதியோ?" (1) என்னும் தொடக்கமே ஆதியந்தமில்லா அற்புதச் சோதியாகப் பரம்பொருளைச் சுவைக்கிறது. "பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர் — போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே" (10) என்னும் போது (அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் எனப்) புராண மொழியில் தரப்படும் ஏழுநிலைத் தாழ்மன மண்டலங்களிலும் ஊடுருவி நீளும் பாதமலர் அழகும் எவ்வகைப் பொருள் முடிவிலும் நீட்சிகொண்டு நிமிரும் போதார் புனைமுடி நலமும் ஞானச் சித்திரங்களாகவே அகம் நுழைகின்றன. அடிமுடி தேடிய அண்ணாமலைப் புராணத்தின் அற்புதச் சுட்டாக உணரினும் இவ்வரிகளின் ஞான மணத்தை நன்கு உணரலாம்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே (9)

என்னும் போதும் பரம்பொருளின் காலாதீதச் சித்திரமே மனம்கொள எடுத்துரைக்கப் படுகின்றது.

"விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப்பொருளை" (4) என்னும் போதும், "ஆர்த்தபிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" (12) என்னும் போதும், "பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர் — விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி" (18) என்னும் போதும் ஞானச் சுவையே காதற் சுவையாகின்றது.

ஆண்டாளின் இனிய பிரவாகம் காதல் வெள்ளம். பள்ளமடை திறந்த உணர்ச்சி வேகம். அழகியல் மீதூர்ந்த அமுதச் சித்திரங்களும், புராணக் கால்வழி எழும் புனைவுச் சித்திரங்களும் அவள் ஆழ்மனம் உணர்ந்த அற்புத சத்தியங்கள் அவளது பாவனா சக்தியின் அற்புத தரிசனங்கள்.

கோதைக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் ஆயர்பாடி ஆகின்றது. தோழியர் ஆயர் கன்னிகையர் ஆகின்றனர். வடபத்ரசாயி

திருக்கோயில் நந்தகோபன் மாளிகை ஆகின்றது. அங்கு எழுந்தருளியவன் ஆயர்பாடிக் கண்ணனாகின்றான். 'இடைப்பேச்சும் இடைநடையும்' இயல்பாகின்றன. தானே இடைச்சிறுமி ஆகின்றாள்.

கோதை வாழ்வது "சீர்மல்கும் ஆய்ப்பாடி" (1). அங்கு புழுங்கும் நெய்யும் பாலும் விரதவிலக்குப் பெறுகின்றன (2). சூழநிற்பவை "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்" (3). "காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து" ஆய்ச்சியர் மத்தினால் எழுப்பும் தயிர் அரவம் (7)ஒலிக்கின்றது. எருமைகளைப் பனிப்புல்லுக்குச் சிறுமேய்ச்சலிடும் காட்சியும் (8), எருமை தன் கன்றுக்கிரங்கிப் பால்சோர நனைத்து இல்லம் சேறாகும் காட்சியும் (12) அங்கு காணலாம்."பாற்சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து குளிர்ந்து" (27) உண்ணல் என்னும் குதூகல மாட்சியும் அங்கு உண்டு.

இந்த ஆயர்பாடி நாயகன் கண்ணன். அவன் "ஆயர்குலத்து அணிவிளக்கு" (5). அவனை "ஓங்கி உலகளந்த உத்தமன்" (3) என்றும், "பேய்முலை நஞ்சுண்டு – கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி – வெள்ளத்தரவில் துயில் அமர்ந்த வித்து" (6) என்றும், "புள்ளின் வாய் கீண்டான்" (13) என்றும், "ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில் – ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்தான்" (25) என்றும் பலவாறு புராணக் கீற்றுகளால் புனைந்து மகிழ்கிறாள் ஆண்டாள்.

புராணக் கீற்றுகள் மாணிக்கவாசகரிடம் ஞானச்சிறகு விரிக்கும் ஆண்டாளிடம் காதல் சிறகு விரிக்கும். இருவர்தம் பாவைப் பறவைகளும் ஆன்மவெளியில் பறக்கும் உயரங்களோ ஒன்றுக்கொன்று தாழ்ந்ததன்று பறக்கும் எழிலோ ஒன்றுக்கொன்று குறைந்ததன்று. வாதவூரரும், வில்லிப்புத்தூரியும் தந்த அழகிய பாவைப் பாடல்களில் நாம் காண்பதெல்லாம், நாம் ருசிப்பதெல்லாம் ஆன்மீக அமுதவளமே.

# மாமன்றத்தின் வெளியீட்டுப் பணிகள்

கடந்த இரு தசாப்தங்களாக மாமன்றம் வெளியீட்டுத்துறையில் செய்துவரும் பணிகளை எமது மக்கள் பாராட்டி வருகின்றார்கள். அவர்கள் தரும் அந்த ஊக்கத்திலே மாமன்றம் இந்து மக்களின் சமய அறிவினை விருத்தி செய்ய இவ்வெளியீடுகள் மூலம் நல்லதொரு பணியை ஆற்றுகின்றது என்பதனை திருப்தியுடன் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## 'இந்து ஒளி'

20 வருடங்களுக்கு மேல் "இந்து ஒளி" சஞ்சிகை ஒழுங்காக வெளிவந்து கொண்டிருக்கிறது. காலாண்டிதழாக சுடர்விட்ட இந்து ஒளி சமீபகாலத்தில் இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவருவதுடன் சில விசேட சிறப்புமலர்களும் வெளி வருகின்றன. தவத்திரு யோகர் சுவாமிகளின் 50வது ஆண்டு குருபூசை சிறப்புமலர் கூடப் பலரினதும் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

## 'வைரவிழாமலர்'

வைரவிழாவையொட்டி 2016இல் "இந்து ஒளி வைரவிழா மலர்" இரு பாகங்களாக வெளிவந்தது. அவ் வைரவிழா மலரில் வெளிவந்த கட்டுரைகளும் ஆக்கங்களும் மிகவும் முக்கியமானது. கருத்தாழம்மிக்க இம்மலர் எம்மக்களிடையே சிறந்த வரவேற்பைப் பெறுகின்றது.

## 'இந்து ஒளி - இருபதாவது ஆண்டுப்பூர்த்தி சிறப்பிதழ்'

இந்து ஒளி இதழ் தனது இருபதாவது அகவையினை பூர்த்தி செய்ததை முன்னிட்டு 20வது ஆண்டு நிறைவுச் சிறப்பு இந்து ஒளியையும் கடந்த 2017ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று வெளியிட்டு வைத்தோம்.

## 'கையடக்கப் பஞ்சாங்கம்'

2016ம் ஆண்டு முதல்முதலாக திருக்கணித வாக்கிய பஞ்சாங்கங்களின் சுருக்கத் தொகுப்பு ஒன்றினை கையடக்க அளவில் வெளியிட்டிருந்தோம். அதற்கு சிறப்பான வரவேற்பு கிடைத்த காரணத்தினால் 2017-2018ம் ஆண்டு காலப்பகுதிக்கும் கையடக்கப் பஞ்சாங்கத்தினை வெளியிட்டோம். அதேபோன்று இவ் வருடமும் 2018-2019 ஆண்டு காலப்பகுதிக்கான கையடக்கப் பஞ்சாங்கமும் வெளியிடப்படுகின்றது.

## 'இந்து மக்களுக்கு ஒரு கையேடு'

இந்து மக்களின் நாளாந்நத வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்துள்ள வாழ்வியல் முறைகள் பற்றிய மிக எளிய விளக்கங்கள் அடங்கிய வழிகாட்டி நூலாகும். விவேகானந்த சபையில் ஆண்டுதோறும் நடாத்தப்படும் விவேகானந்த பரீட்சைக்கு இக்கைநூல் மிகவும் உறுதுணையாகவுள்ளது. அத்துடன் அந்தியேட்டி போன்ற நினைவு நிகழ்வுகளில் அமரத்துவமடைந்தோரின் ஞாபகார்த்தமாக வழங்கவும் இந்நூல் பெருமளவில் கொள்வனவு செய்யப்படுகிறது. இது இந்து மக்கள் யாவராலும் வரவேற்கப்படும் ஒரு கை நூலாகும். இதனை ஆங்கிலத்தில் "A Compendium for Hindus" என்ற பெயருடன் வெளியிட, எவ்வித பிரதியுபகாரமும் பாராது அயராது உழைத்த ஆசிரியை திருமதி. திலகா விஜயரத்தினம் அவர்கட்கு இந்து மாமன்றம் என்றும் தலைவணங்குகின்றது.

# சாமகானமும் பழந்தமிழ் இசையும்

சுவாமி விபுலானந்தர்



சாமவேதகான மரபினை வல்லார்வாய்க் கேட்டுணர்ந்த பொக்ஸ் திராங்வேய்ஸ் (A.H.Fox Strangways) என்னும் பேரறிஞர் தாமியற்றிய பாரதநாட்டு இசைமரபு )The Music of Hindustan, Oxford Press) என்னும் நூலிலே கூறிய முடிபுகளுள்ளே ஈண்டைக் கேற்பன ஒருசிலவற்றைத் தருகின்றோம்.

ப்ரதமம், த்விதீயம், த்ருதீயம், சதுர்த்தம் என்னும் நான்கினோடு மந்திரம் என ஒன்று சேர்ந்து ஐந்து சுவரங்களே இருக் பிரதிசாக்கியத்திலே வழங்கப்பட்டன. ப்ருகத்தேவதா, தைத்திரியப் பிரதிசாக்கியம் என்னும் பழைய நூல்களிலே இவற்றோடு க்ருஷ்டம், அதிஸ்வரம் என இரண்டு, முறையே முதலிலும் சுற்றிலும் சேர்க்கப்பட்டுச் சுவரங்கள் ஏழாயின.

ஸ்வரிதம், உதாத்தம், அநுதாத்தம் என்னும் ஓசை விகற்பங்களை மேற்கண்ட ஏழினொடும் பொருத்தும் முறையிலே நாரதசிக்ஷையென்னும் நூல் க்ருஷ்டம் (ம) ஸ்வரிதம் எனவும், ப்ரதமம் (க) உதாத்தம் எனவும், த்விதீயம் (ரி) அநுதாத்தம் எனவும், த்ருதீயம் (ச) ஸ்வரிதமெனவும், சதுர்த்தம் (நி) உதாத்தம் எனவும், மந்திரம் (த) அநுதாத்தமெனவும், அஸ்திவரம் (ப) ஸ்வரிதம் எனவும் வழங்கியது.

நாரத சிக்ஷையைக் குறித்தும் அது கூறும் முடிபினைக் குறித்தும் சற்று விரிவாக விசாரிப்பது இவ்வாராய்ச்சிக்குப் பயன்தருவதாகும்.

இளங்கோவடிகள் ஆய்ச்சியர்குரவையினுள்ளே 'முதுமறைதேர் நாரதனார் முந்தை முறை நரம்புளர்வார்' என்புழிக் குறித்தது நாரதிசிக்ஷையையேயாமென அடியார்க்குநல்லாருரையினால் அறிகின்றாம். சிக்ஷா என்பது வேதத்தின் ஆறங்கங்களுள் ஒன்று. அது வேதமந்திரங்களை ஓசை பிறழாது உச்சரித்தற்குரிய மரபினைக் கூறுவதாதலின் இசை நூலாகும். மேற்குறித்த இருக் பிராதிசாக்கியம் முதலியனவும் சிக்ஷ நூல்களே. அவை சட்ஜம் முதலிய சுவரங்களைக் குறிப்பிடாதொழிய நாரதசிக்ஷ அவை தம்மைக் குறிப்பிடுகிறது. *ம க ரி ச நி த ப* என ஏழு சுவரங்களையும் மத்திமக்கிரமத்திற்கு (குரற்கிரமத்திற்கு) உரிய அமரோசையாக இந்நூல் நிறுத்துகிறது. *ம ச ப* என்னும் மூன்றினையும் ஸ்வரிதம் என வைத்தலால் இவை நன்னான்கு அலகு பெறுவன என்பதைக் குறிப்பிடுகிறது. (மத்ததிமக்கிரமத்தில் 'ப' மூன்று அலகு பெறுதல் பின் காட்டப்படும்.). ஆரோசையாக வைப்பின் *ம ப த நி ச ரி க* என நின்று 'ப' உதாத்தமாகும். வேதநூல் வழக்கிலுள்ள 'உதாத்தம்' என்னும் பதத்தின் சிதைவு தமிழிலே 'துத்தம்' என வந்ததே என்றெண்ண வேண்டியிருக்கிறது.

பழைய பாணன் முதலிலே நரம்புகளுக்குப் பெயரிடாது ஒன்றிரண்டு என எண்களாற் குறிப்பிட்டிருக்கலாம். வேத நூற்றொன் மரபும் இதுவே. பின்பு மகளிர் குரலினொடு இசைந்து நிற்கும் நரம்பினைக் குரல் என்றும் 'தலையின தாரஞ்செய்யும் தாரம்' என்றபடி முதலிலே தோன்றிய நரம்பினைத் தாரம் எனவும் வழங்கியிருக்கலாம். இவ்விரண்டினுக்கும் இடமாகவும் வலமாகவும் பிறப்பு முறையில் இடம்பெற்ற உழையானது 'இடத்து' என்னும் பொருளில் 'உழை'யென்னும் பெயரை எய்தியிருக்கலாம். கிளை நரம்பிற்கு இறுதியாதலின் கைக்கிளை அப்பெயர் பெற்றது. இதனை அடையின்றிக் 'கிளை'யெனவும் பழைய நூல்கள் கூறும். இளி, பட்டடை, அடிமணையென்னும் பொருள் பெறுமென முன்னர்க் காட்டினாம். விளிப்பெயர்க் காரணம் தெரியவில்லை.

சட்ஜம் முதலாக உள்ள பெயர்கள் எழுந்ததற்பின் தென்னாட்டு இசைமரபு தோன்றியிருப்பின், அப்பெயர்கள் தமிழிலும் ஏற்கெனவே வந்திருக்க வேண்டும். அங்ஙனம் வாராமையே பழந்தமிழிசை மரபு பரதம், நாரதசிக்ஷ யென்னுமிவற்றிற்கு முந்தியதென்பதற்குச் சான்றாகிறது. அஃதன்றியும் அகத்தியனார் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்னே, இசைமரபும் இசைக்கருவிகளும் தென்னாட்டிலிருந்தனவென்பதற்கு இருபெருஞ் சான்றுகள் உள. தொல்காப்பியப் பாயிரவுரையிலே அகத்தியனார் தெற்கே வந்த வரன்முறையினைக் கூறுமிடத்துப் 'பொதியின் கணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து' என்பது ஒரு சான்று. பெருங்கதை வத்தவ காண்டத்து 'யாழ்பெற்றது' என்னும் பாடலிலே

'தலமுத லூழியிற் றானவர் தருக்கறப்
புலமக ளாளர் புரிநரப் பாயிரம்
வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச்
செலவுமுறையெல்லாஞ் செய்கையிற் றெரிந்து
மற்றை யாழுஞ் கற்றுமுறை பிழையான்'

என்பது மற்றொரு சான்று.


இராவணமன்னனும் அவனது அவைக்களத்தோரும் 'இசைக் கருவியுடையேம்' எனத்தருக்குற்றிருப்ப, அதனினும் மிக்கதொன்று அமைத்துக் காட்டி அன்னாரது தருக்கினைக் குறுமுனிவர் அடக்கினாராதலின் அவர் இராவணனைக் கந்தருவத்தால் (இசையினால்) பிணித்தவரானார்.

தமிழிசை மரபு வேதநூன்மரபோடு தொடர்புடையது என்பதற்கு ஐயப்பாடில்லை. ஆனால் இரண்டும் இயற்கை முறையிலே தனித்தனியாக எழுந்திருக்க வேண்டும். நாம் மேலதிகாரத்திற் காட்டியதுபோல ஒரு நரம்பிலே பல சுவரங்களைத் தோற்றுவிக்கும் வீணைக்கருவி வடநாட்டிற்குரியது. ஓரிசைக்கு ஒரு நரம்பாக அமைந்த

யாழ்க்கருவி தென்னாட்டுக்குரியது. 'ஆயிரநரம்பியற்று ஆதியாழாகும்' எனக் கூறப்பட்ட நாரதவீண 'தானவர் தருக்கறுத்தல்' காரணமாகப் படைக்கப்பட்டதாயின் தானவர் கையிலிருந்த யாழ்க்கருவி அதனினும் முந்தியது என்பது சொல்லாமலே யமைகிறது. ஆதலினாலே ஆதியாழ் எனக் கொங்கு வேளும், அடியார்க்கு நல்லாரும் பிறருங் குறிப்பிடுவது 'ஆதியாழ்' அன்று என்பதும், ஏழைப்பாணனும் இடையனும் குமிழங் கொம்பினாலும் மரல் நாரினாலும் அமைத்த வில்யாழே ஆதியாழ் எனப் போற்றுதற்குரியதென்பதும் தெளிவாகிறது. அஃதன்றியும் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மறைந்ததும் பழந்தமிழ் நாட்டு நாகரிகத்தோடு தொடர்புடையதுமாகிய முகீஞ்சதாரோ (Mohen-Jo-Dara) நாகரீகத்திலே 'மிதுனம்' எனப்பிற் காலத்து வான நூலிலே வழங்கப்படுத் விண்மீன்கூட்டம் 'யாழ்' என்னுந் தமிழ் மொழியினாலே வழங்கப்பட்டதெனவும் இணைமக்கள் இணையாழ்க் கருவிகள் என்னுமிவற்றினாலே குறியீடு செய்யப்பட்டதெனவும் வணக்கத்துக்குரிய ஹீராஸ் (Fr. Heras) என்னும் பேரறிஞர் எடுத்துக் காட்டினமையின். வேதகாலத்திற்கு மிக முந்தியே தமிழ் யாழ் இருந்ததென்பது முடிவாகின்றது.

*நன்றி: "சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் - தொகுதி 03", கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம். தொகுப்பாசிரியர்கள் - வித்துவான் சா.இ.கமலநாதன் (B.A), வ.சிவசுப்பிரமணியம் (B.A) – 1997)*

## பாமாலை



# விவேகானந்தர் வாழ்க!

(அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கமும் யாழ்.மத்திய கல்லூரி இந்து மாமன்றமும் இணைந்து, 12-01-1999ல் யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடாத்திய சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி தின வைபவத்தில் இடம்பெற்ற பாடல். யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் நயினைக் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட இப்பாடலை, வைபவத்தின் போது இன்னிசை வேந்தன் திரு.தி.கருணாகரன் பாடியிருந்தார்.)

1

பாரதத்தின் முன்னோர்கள் செய்த பேற்றின்
பக்குவத்தில் வேர்விட்டு(ப்) பண்பாடென்னும்
சாரத்தை ஊட்டமகாய்(த்) தானாயேற்று(ச்)
சார்இந்துத் தத்துவத்தைத் தகவாய்க்கொண்டு
சீரொக்கும் கிளை ஓச்சி நிழலாய் ஆக்கி(ச்)
செம்மையெனும் பூமலர்த்தி(ச்) சமரசத்தின்
பேரொக்கும் நறுமணத்தை(ப்)பெருக்கிநின்று
பீடுபெறு பெட்டகமே விவேகானந்தர்.

2

பல்வளமும் செழித்தநகர் கல்கத்தாவின்
பழங்குடியில் நரேந்திரராம் நாமங்கொண்டு
தொல்புகழை வெளிக்கொணரத் தோன்றிவந்து
தூயவழி துணைவலியாய்(த்)துலக்கிநன்கு
கல்விவழி தனையுயர்த்தி நின்றபோதும்
கனன்றிட்ட மெய்ப்பொருளை(க்) காண நின்று
சொல்லவலார் யாரோ? வென் றெங்கு மேகி(த்)
தூயகுரு இராமகிருஷ் ணரிடமேயானார்.

3

சாத்திரத்தின் பயிற்சியொரு ஞானமற்றும்
சார்ந்துவரு மானுடத்தின் தொண்டுக்கான
ஏத்திவரு பணிகளுக்காய்(த்) தம்மை ஆக்கி
ஏற்றமிகு மெய்ப்பொருளைத் தேடிநின்றார்
சீர்த்திபெற அப்பொருளைக் காணும் போதில்
திருப்திபெறா தலைந்துகலந்து தேறாநின்றார்
கீர்த்திபெறு குருராம கிருஷ்ணரிந்தாள்
கிட்டியதும் கேள்வியெல்லாம் அடங்கப்பெற்றார்.

4


காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரோ!
கனன்றிட்ட ஞானஒளி காட்டக்கண்டு
கேட்டவழி மெய்ப்பொருளிற் தானும் ஒன்றும்
கேண்மையென யோகமதைக் கிட்டிவென்றார்
ஊட்டவரு பிறப்பதுவும் உலகுய்ய
உருவெடுத்த உருவென்றே உணரப்பெற்றார்
கூட்டுவித்த குரு அவரும் முழுதும்தந்து
குவலயத்தைக் காத்திடெனக் கூறிச்சென்றார்

5

சீடர்களின் முதல்வரெனத் திகழ்ந்துராம(க்)
திருவுடைய கிருஷ்ணரின் பெயராலெங்கும்
நாடறியப் பெருமடங்கள் நிறுவி ஞான
நற்கருமம் புரிந்துண்மை நாட்டிவந்தார்
நாடறியக் குமரிமுதல் இமயமீறாய்(ப்)
பயன்பெருக இறைபயணம் செய்து எங்கும்
தேடரிய இறை உயர்வை மக்களெல்லாம்
தெவிட்டாது மாந்திடவே சேவைசெய்தார்.

6

அனைத்துமத மாநாட்டில் சிக்காக்கோ
அதிர்ந்திடவே ஞானஒளிக் கொடியையேற்றி
அனைத்துலகை சாந்தியிலே ஈர்த்து இன்பம்
எய்திடவே பணிமுடித்து இயற்கையானார்
தனித்துவக்கச் சத்தியத்தின் வெற்றிக்காக
இடர்வரினும் எதிர்நின்று கருமம் ஆற்றும்
தனித்துவத்தை மக்களெலாம் தகவாய் ஏற்க(த்)
தந்தவிவே கானந்தர் தாழ்கள் வாழ்க!



# விரதங்களும் விஞ்ஞானமும்

செல்வி சோமசுந்தரம் இந்துஜானி
இந்துநாகரிகம் - சிறப்புக்கலை, மூன்றாம் வருடம்.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவையின் கூற்றுப்படி எமது மனித வாழ்வு பயனுடையதாகவும், ஆரோக்கியம் உடையதாகவும் அமைவது இன்றியமையாததாகும். அதற்காக வேண்டியே எமது முன்னோர்களால் உருவாக்கப்பட்டவையே விரதங்களாகும். விரதங்களில் பலவிஞ்ஞான முறைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இருப்பினும் எமது முன்னோர்கள் உடலினை பாதுகாக்க அன்றே விரதங்களை அனுட்டித்துள்ளனர்.

விரதம் என்பது. "மனம் பொறிவழிபோகாமல் நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடுதலாகும்" என ஆறுமுக நாவலர் கூறுகின்றார்.

மெஞ்ஞானம் சொல்லும் கருத்தை நாம் கடைப்பிடித்தால் உடலும், உள்ளமும்சிறப்பாகஇருக்கும். "பட்டினிகிடந்தால்பயன் கிடைக்கும்" என்று சொன்னால் யாரும் பின்பற்றமாட்டார்கள். ஆன்மீக ரீதியாக விரதம் இருந்தால் வியக்கும் பலன் கிடைக்கும் என்று சொன்னால் ஏற்றுக்கொள்வார். அல்லது மருத்துவம் அல்லது விஞ்ஞானம் மூலம் வாரம் ஒரு நேரமாவது உண்ணாமல் இருந்தால் உடலுக்கு நல்லது என்று சொன்னால்தான் ஏற்றுக் கொள்வார்கள். அன்றைக்கு ஆன்மிகத்தில் கூறிய கருத்துக்கள்தான் இன்றைக்கு விஞ்ஞானரீதியாக கடைப்பிடிக்கப்படுகிறது.

ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து உடலை புதுப்பிப்பதே விரதத்தின் நோக்கமாகும். இந்துக்கள் மத்தியில் வாரம் ஒருமுறையாவது விரதம் இருக்கும் வழக்கம் பண்டைய காலம் முதல் உள்ளது. கடவுளின் பெயரால் விரதம் நடைமுறையில் உள்ளது. ஆனால் இந்த விரதங்களுக்கு பின்னால் மாபெரும் மருத்துவ பலன் உள்ளது தற்போது விஞ்ஞானிகளின் ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும் வாரம் ஒரு முறை விரதம் இருந்தால் இதயம் சம்பந்தமான பிரச்சினைகள் வராது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

உச்சி முதல் உள்ளம் கால்வரை நாம் உபயோகிக்கப்படும் ஒவ்வொரு பொருட்களிலும் ஆன்மிகமும் விஞ்ஞானமும் கலந்திருக்கிறது. அந்த விதத்தில் தான் நம் முன்னோர்கள் விரதங்களை அமைத்திருக்கின்றார்கள். நமது விரதங்கள் அறிவியல் தத்துவப்படியே உள்ளன. அமாவாசை பௌர்ணமி விரதம் இருக்கிறோமே' எதற்காக? இந்த நாட்களில் சூரிய சந்திர ஒளிகளில் ஊடுருவி வரும் புறஊதாக்கதிர்களின் தாக்கத்தால் உடல் நலனிற்கு கெடுதல் விளையும் என்பதனால் தான் இக்கதிர்களின் கதிர்வீச்சால் சமைத்த உணவுப்பண்டங்களில் விசத்தன்மை ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆகவே அன்று உணவை தவிர்த்து விரதம் இருக்கிறோம். இதனை விஞ்ஞானிகள் இன்றே கூறுகின்றனர். ஆனால் எமது முன்னோர்கள் அன்றே கூறிவிட்டனர்.

மேலும் இரவும் பகலும் நிற்காமல் இயங்கிக்கொண்டிருக்கும் நமது உடல் உறுப்புக்களிற்கு ஓய்வு கொடுக்கவேண்டித்தான் விரதம் மேற்கொள்கின்றோம். காரணம் எப்போதும் இயந்திரம் ஓய்வின்றி இயங்கிக்கொண்டிருந்தால் அது விரைவில் பளுதடைய வாய்ப்பு உள்ளது அல்லவா! அதை போல தான் நாமும் ஓய்வு இல்லாமல் உணவு உண்டு கொண்டிருந்தால் உடலில் உள்ள உறுப்புக்கள் யாவும் விரைவில் பழுதடைய வாய்ப்புள்ளது என மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

கிராமப்புறங்களில் விநாயகர் குளத்தங்கரையில் அரசமரத்தடியில் இருப்பார். விநாயகக் கடவுளிற்கு விரதம் இருப்போர் குளத்தங்கரையில் அரசமரத்தின் நிழல் படிந்த நீரில் குளிப்பார். அது உடல் நலத்திற்கு நல்லது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மேலும் பெண்கள் அவ் அரசமரத்தை சுற்றி வழிபடுவர். மரத்தை சுற்றிவரும்போது கிடைக்கும் காற்று பெண்களின் கர்ப்பப்பையில் ஏற்படக்குடிய குறைபாடுகளை நீக்கக்கூடியது. அது மட்டுமன்றி விரதம் இருக்கும் பெண்கள் துளசிச்செடியை மூன்று முறை சுற்றி வழிபடுவது வழக்கமாகும். சுற்றிவரும்போது கிடைக்கும் காற்று பெண்களின் ஆரோக்கியத்திற்கு உதவுகிறது. 'சுத்தம் சுகம் தரும்' என்பதற்கு இணங்க விரதம் இருப்பவர்கள் எப்போதுமே சுத்தமாக இருப்பார்கள்.

விரதம் இருப்பதன் காரணமாக உடலின் மெட்டபாலிசம் புதுப்பிக்கப்படுகிறது. உடலியக்கம் சீரடைகிறது. தனது பணிகளை புத்துணர்வுடன் உடல் உறுப்புக்கள் செய்வதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். விரதம் இருக்கும் நாட்களில் உடல் இயக்கம் சீராவதாகவும், இரத்தஓட்டம் சீராவதாகவும் மருத்துவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாதம் ஒருமுறை விரதம் இருந்தால் மாரடைப்பிற்கான சாத்தியத்தினை தவிர்கலாம். எனஇங்கிலாந்து விஞ்ஞானிகளின் ஆயிவில் தெரியவந்துள்ளது.

ஆலயத்தில் விரதம் இருப்பவர்கள் தண்ணீர் அருந்தாமல் பானக்கம் மட்டும் அருந்துவர் பானக்கம் என்பது சக்கரை, தேசிக்காய், இளநீர் முதலியன கலந்து தயாரிக்கப்படும் ஓர் நீராகாரமாகும். பட்டினி கிடக்கும் வயிற்றினுள் வெளிப்படும் அதிக சக்திமிக்க வெப்பம், வாய்வு, பித்தம் இவற்றை தணித்து உடல்சமனிலையைப் பேணுவதற்கும், தாகத்தை ஓரளவு தணிக்கவும் உதவுகிறது.

உடலின் சுமை குறைவதால் மிகக்கடுமையான நோய்களைக்கூட உண்ணாநோன்பின் மூலம் நீக்கிவிடமுடியும். விரதத்தின் போது உடலில் நோயுற்ற திசுக்களே முதலில் கரைக்கப்படுகின்றன. கொழுத்த உடல்கொண்ட மனிதனின் உள்ளுறுப்புக்களின் வீணாகச்சுற்றியிருக்கும் பகுதிகள் விரத்தின் மூலம் கரைக்கப்படுகின்றன. விரதமே மனித உடலைக்காக்கின்ற மாபெரும் சக்தி ஆகும்.

விரதத்தின் போது உண்ணாமல் இருப்பதனால் உடல் ஓய்வடைகின்றது. எல்லா உறுப்புக்களிற்கும் அமைதி கிடைக்கிறது. நரம்புகளில் தளர்ச்சி நீங்குகின்றன. வெப்பநிலைமாறி நன்மை ஏற்படுகிறது. கழிவுப்பொருள்களை உடலில் இருந்து வெளியேற்ற இயற்கை கொள்ளும் வழிகளில் விரதம் மிகவும் சிறந்ததாக அமைகிறது. இரத்தமும், நிணநீர்பகுதியும் தூய்மையாக்கப்படுகின்றன. காமஉணர்வு தணிகிறது. தூயநினைவுகள் வளர்கின்றன. மனதில் சக்தி, பகுத்தறிகின்ற ஆய்வுநிலை, நினைவுகூரும் சக்தி, இணைத்துக்காணும் அறிவு அதிகமாகிறது. உண்ணாநோம்பினால் இளையவரும் முதியவரும் புதுப்பிக்கப்படுகிறார்கள். ஈரல் சிறுநீரகம் சுவாசப்பை இரத்தக்குழாய்கள் தோல்பகுதிகள் என்பவற்றில் தேங்கி நிற்கும் கழிவுப்பொருள்கள் நச்சுப்பொருள்கள் அகற்றப்படுகின்றன.

**'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்குக் கூற்றங்குதித்தலும் கை கூடும்'**

என்பது வள்ளுவர் கூறும் கருத்து ஆகும். உடல் உறுப்புக்களில் மாத்திரம் அல்லாமல் உடலியல் செயல்களிலும் இது நிகழ்கிறது. விரதம் இருக்கும் போது மட்டுமே நம் உடலில் இருக்கும் சக்தியையும் நாம் தினமும் வீணாக்கும் சக்தியின் அளவையும் புரிந்து கொள்ள முடியும்.

விரதம் இருத்தலில் உணர்வு உறுப்புக்களில் முக்கியத்துவம் பெறுவது வாய்யென்னும் உறுப்பாகும். பிறஉணர்வு உறுப்புக்கள் ஒருசெயலை மட்டுமே செய்யும். ஆனால் வாய்மட்டும் இருசெயலை செய்யும். சுவைத்தல் மற்றும் பேசுதல் என இருசெயல்களை தவிர்ப்பதே அனேக விரதங்களின் அடிப்படை நோக்கமாகும்.

விரதம் மேற்கொள்ளும் போது உணர்வு உறுப்புக்களின் பங்களிப்பு அளப்பெரியது என விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்கின்றனர். உணர்வு உறுப்புக்கள் ஒவ்வொன்றும் பஞ்சபூதங்களின் அடிப்படையாக அமைந்துள்ளன.

| | |
|---|---|
| கண் - நெருப்பு | வாய் - நீர் |
| காது - ஆகாயம் | மூக்கு - காற்று |
| தொடு உணர்வு - மண் | |

நமது உணர்வு உறுப்புக்களின் செயலை ஒரு நோக்கத்துடன் தற்காலிகமாக நிறுத்தும் போது அது விரதம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நம் உடல்சக்தி அதிகமாக உணர்வு உறுப்புக்கள் மூலம் வீணாக்கப்படுகிறது. அந்த உறுப்புக்களை செயற்படாமல் இருக்கச்செய்தால் அதில் வீணாகும் சக்தி நம்முள்ளே சேமிக்கப்பட்டு பலம், ஆற்றல் உள்ள மனிதராய் வாழமுடியும். நமது உடலின் சக்தியை அதிகமாக செலவிடும் உணர்வு உறுப்பு கண் ஆகும். கண்ணைக்காட்டிலும் அதிகமாக சக்தியை செலவுசெய்யும் உறுப்பு ஜீரண உறுப்புக்களாகும். ஜீரண உறுப்புக்களை பாதுகாக்கவேண்டுமாயின் விரதம் இருத்தல் அவசியம் என விஞ்ஞானமும் ஏற்றுக்கொண்டுள்ளது. தற்காலத்தில் நோய்கள் என வைத்தியசாலைகளிற்கு சென்றால் மருத்துவர்கள் ஒருநாளில் ஒருவேளை உணவாவது உண்ணாமல் இருந்தால் போதும் நோய்கள் குணமாகிவிடும் எனக்கூறுகின்றார்கள். இதையே நமது முன்னோர்கள் நோய்கள் வராமல் நம்மை பாதுகாக்க உண்ணாவிரதத்தினை மேற்கொண்டார்கள்.

"அன்னத்தை அடக்கியவன் ஐந்தையும் (கண், காது, மூக்கு, வாய், உடல்) அடக்குவான்" இவைகளை கட்டுப்படுத்தும் போது நம்மனம் உடல் சக்தியுடையதாக மாறுகிறது என்பதனை அத்தனை ஆராச்சியாளர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நமது வயிறு 15 நாட்களிற்கு ஒருமுறையாவது காலியாக இருக்க வேண்டும் என மருத்துவர்கள் கூறுகின்றார்கள். இதனையொட்டித்தான் அமாவாசை பௌர்ணமி என விரதங்கள் எல்லாம் வரையறுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. இந்த அடிப்படையில்தான் எல்லா மதங்களும் விரதத்தினை தலையாய கடமையாக மேற்கொள்கின்றன.

ஏகாதசி விரதமும் அறிவியல் விதிப்படிதான் அமைந்துள்ளது. நாம் சாப்பிடும் உணவு செரிமானம் ஆவதற்கு புவியீர்ப்பு விசை முக்கிய காரணமாகும். புவியீர்ப்பு விசையினால் ஏற்படும் கீழ்நோக்கிய அழுத்தம் இல்லை என்றால் நம் உடல் கழிவுகள் வெளியேறமுடியாது. ஆகா வயிற்றில் இருக்கும் உணவுகள் வெளியேறுவதும் புவியீர்ப்பு விசை சார்ந்து இருக்கிறது. வீட்டுப் பெரியவர்கள் முக்கியமா விரதம் இருக்கும் நாள் ஏகாதசியாகும். குறிப்பிட்ட நாளில் புவியீர்ப்புவிசை அதிகமாக இருக்கும். காரணம் சூரியனில் இருந்து சந்திரன் அதிகம் தூரம் விலகிவரும் நாட்களில் பூமியில் அதன் ஈர்ப்புச்சக்தி அதிகரிப்பதாக விஞ்ஞானம் கூறுகிறது. உதாரணமாக அமாவாசையில் இருந்து ஒவ்வொரு நாளும் 12 டிகிரி தூரம் சந்திரன் சூரியனில் இருந்து விலகுகிறது. அவ்வாறு தினம்தோறும் பிரிந்து அமாவாசையில் இருந்து 11ம் நாளான ஏகாதசி அன்று சூரியனில் இருந்து சந்திரன் 132 டிகிரியில் விலகி இருப்பதால் அந்நாளில் பூமியில் குறிப்பிட்ட அளவு புவியீர்ப்பு விசை அதிகரிக்கிறது என்கிறார்கள்.

ஆக புவியீர்ப்பு விசை அதிகமாக இருக்கும் பட்சத்தில் உடலில் ஜீரண மண்டலம் அதிக கீழ் நோக்கிய விசையால் ஈர்க்கப்படும். உண்ணும் உணவை செரிமானம் செய்யும் பொருட்டு அதிகமான விசையுடன் இயங்கும். அந்நாளில் நாம் அதிகமாக உணவு உட்கொண்டால் ஈர்ப்பு விசையின் வேகத்திற்கு உணவு செரிக்காமல் அஜீரணக் கோளாறு மற்றும் வயிற்றுப் பிரச்சினைகள், வாய்வுத் தொல்லைகள் ஏற்படலாம். எனவேதான் இந்த நாளில் விரதம் மேற்கொள்கின்றோம். இயந்திரங்களை அவ்வப்போது கழுவி செர்விஸ் செய்வதைப்போல வயிற்றுக்குள் உணவுபோடாமல் கழிவுசெய்யப்படும் செர்விஸ் விரதம் எனக்கொள்ளலாம். உடலும் ஓர் இயந்திரமே அதற்கு முறையான செர்விஸ் தேவை. அத்தகைய "periodical service" தான் விரதங்கள்.

உடல்நலம் மனநலம் பொதுநலம் கலந்த விரதங்களை அதன் புராதன கதைகளை மட்டும் கேட்டு புரியடாமல் விட்டுவிடாமல் அதன் காரணங்களை அறிந்து அதற்குள் உள்ள விஞ்ஞானத்தை(மருத்துவத்தை) புரிந்து பின்பற்றினால் இந்த உலகமே புதியதாய் மாறும் என்பதில் சந்தேகமில்லை.

**'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'**


**உசாத்துணைகள்**


01. அகில் 2003 நமது விரதங்களும் பலன்களும் நர்மதா பதிப்பகம் சென்னை

02. சாமி.சிதம்பரனார் 2003 சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம் தாமரை பப்ளிகேஷன் சென்னை

03. லட்சுமி ராஜரத்னம் 2006 பண்டிகைகளும் பலன்களும் பூம்புகார் பதிப்பகம் சென்னை

04. இந்து ஒளி 2007 பொன் விழா சிறப்பு மலர் அகில இலங்கை இந்துமாமன்றம் கொழும்பு



# சிவயோக சுவாமிகள் காட்டிய வழி

**பவானி வரதராஜன்,** ஆசிரியை.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கொப்ப மனுக்குலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ அருமையான நல்லுபதேசங்களை சுவாமிகள் உலகுக்கு அளித்துள்ளார். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற சாதி, சமயம்கடந்த நிலை, சமரச சன்மார்க்க நெறி, எளிமை, உயிர்களிடத்து அன்பு, ஜீவகாருண்யம், சமயம் விதிக்கும் சமயக்கிரியைகள், உள்ளத்தில் உத்தமனைக் காணும் அகவழிபாடு, ஆன்ம ஈடேற்றம் இவைகளைப் பெரிதும் பேசியிருக்கிறார் சுவாமியவர்கள். மக்களோடு மக்களாக வாழ்ந்து மெய்நெறியில் வாழ வழிகாட்டிய பெருமகான் மனத்துக்கண் மாசிலனாகி, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், நான்கினையும் அறவே ஒழித்து அறவாழ்க்கை வாழ்ந்த புனிதரே சுவாமிகள். அவரின் தூய்மையான துறவு வாழ்க்கையினை ஞானப் பொக்கிஷமான நற்சிந்தனை மூலம் நன்கு அறியலாம்.

தன்னை அறிந்து மெய்ப்பொருளைக்காண விழைந்த சுவாமிகள் ''ஓதி உணர்ந்தும் தன்னையே, தவத்தையாற்றி அறிவதும் தன்னையே'' என கூறி, நானார், என்னுள்ளமார் என சிந்தித்துக் கண்டு கொண்டார்.

மக்களைத் தன் பால் ஈர்க்கும் எண்ணம் சுவாமிகளிடம் இருந்ததாகத் தெரியவில்லை. இஷ்ட சித்திகள் எய்தவும் விட்டிலன் பாவினை ஒன்றும் பண்ணவும் விட்டிலன் என சிந்துக்கள் செய்யும் ஆற்றல் தனக்கிருந்தும் அவற்றைச் செய்யும் வாய்ப்புக்களை தன் ஞானகுரு தனக்கு மனமுவந்து அளிக்கவில்லை எனக்குறிப்பிடுகிறார்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்ம ஈடேற்றம் பெற வழிகாட்டிய ஒப்பற்ற ஒரு ஞானகுருவாக விளங்கினார்.

நல்லூர் முருகனிடம் ஆறாத பக்தி கொண்ட சுவாமிகள் அடிக்கடி அவரைத் தரிசிக்க செல்லும் வழக்கமுடையவராயிருந்தார்.

இறைவனே செல்லப்பர் வடிவில் வந்து தன்னை ஆண்டுகொண்டார் என்பதை,

*இருவீணையார் மதிமயங்கி இடர்பட்டுக்கடப்பேனைக்*
*கருணையினால் ஆண்டு கொள்ளக் கடவுள் திருவுளங் கொண்டு*
*அருள் மேனி தாங்கி அவனியிலே வந்தானைத்*
*திருவிழும் நல்லை நகர்த் தேரடியில் கண்டேனே.*

எனப் பாடிப்பரவசமடைகிறார். மேலும்,

*ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்*
*பேசாதனவெல்லாம் பேசினான் - கூசாமல்*
*நின்றேன் நீ யாரடாவென்றே அதட்டினான்*
*அன்றே யான் பெற்றேன் அருள் -*

எனவும் கூறினார். செல்லப்பா சுவாமிகளின், ஒருபொல்லாப்பும் இல்லை அப்படியேயுள்ளது. ஆரறிவார் எனக்கூறி வாசகத்தை உணர்ந்த அந்நிலையில்தான் அடைந்த சுகத்தை,

*அயலறியாத ஆனந்தம் பெற்றேன்*
*மயலறியாத மௌனத்திலுற்றேன்*
*செயலறியாத சிவத்தினைக் கற்றேன்*
*இயமநியமாறி யாவையும் அற்றேன்*

எனவும் பலபட கூறி மகிழ்கின்றார்.

ஞானவைராக்கியம் பெற்ற சுவாமிகளின் அருட்பார்வையாலும் நல்லுபதேசங்களாலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இறைநிலையை உணர்ந்தார்கள்.

சற்குரு தரிசனம் ஒருவனுக்கு உய்யும் நெறிகாட்டும் என ஞான நூல்கள் கூறுவதற்கேற்ப சுவாமிகளை மக்கள் தரிசிக்கத் தொடங்கினர்.

தன்னை வந்தடைந்தவர்களின் மனோநிலையினை உணர்ந்து அவர்களைத் தூயவர்களாக்கி பக்தியில் திளைக்கச் செய்து அவர்களுக்கு நன்னெறி காட்டியுள்ளார்.

உண்மை
முழுவதும் அறிந்திட்டா
இது முடிந்த முடிவு
இதை உணர்

என்றும்

ஒரு பொல்லாப்பும் இல்லை
எதற்கும் ஏங்காதே பயப்படாதே
வருவது வந்து போகட்டும் பொருட்படுத்தாதே

எனவும்

இறை நம்பிக்கையும்,
மனத்துணிவும் தான் வையகத்தில்
வாழ்வாங்கு வாழ வழிகாட்டுமென

அழுத்தியுரைப்பார்.

இனி மக்களின் உயர்வுக்கு இன்றியமையாதது ஒழுக்கம் என்பதனை,

*ஒழுக்கம் விழுப்பம் தரும் தம்பிமாரே*
*ஓமென்று சிந்தை செய்வீர் தம்பிமாரே*
*அழுக்காறு, அவா, வெகுளி தம்பிமாரே*
*ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே*
*வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே*
*மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே*
*நாப்பிளக்க பொய்யுரைத்துத் தம்பிமாரே*
*நாட்டில் பொருள் தேட வேண்டாம் தம்பிமாரே*
*ஓதி உணரவேண்டும் தம்பிமாரே*
*உய்ய வழியது காணும் தம்பிமாரே*

எனச் சிவத்தியானத்தின் மூலம் தான் புலன்களையடக்கி ஆளலாம் எனச் சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

இவையெல்லாம் குறிப்பாக நாளைய நற்பிரசைகளான இளைஞர்களுக்கு காலமறிந்து அவர் கூறும் உபதேசங்கள் பொன்போல் போற்றத்தக்கவை.

இறைவனின் திருநாமத்தை வழுத்திய வண்ணமிருந்த அவருள்ளம்

*நாமஞ் சொல்லுவோம்.*
*சிவநாமஞ்சொல்லுவோம்*
*நமனை வெல்லுவோம்.*
*நாமே அவனென்று*
*நடந்து செல்லுவோம்.*
*சோம சுந்தரன் பாதங்காணுவோம்*
*சும்மா விருக்கிற சூட்சம் பேணுவோம்*

எனவும்

"நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே, ஆகையால் நாம் அவருடைய உடைமை, அனைத்தும் சிவன் செயல் அவனன்றி அணுவும் அசையா, தெய்வத்தை நம்பு முழுமனதுடன் நம்பு எனவும் இறையருளைப் பெறுவதற்கு சிறந்த வழி பக்திநெறி எனவும் அல்லும் பகலும் திருவடியினையே எண்ணித்தொழவேண்டும் பக்தியால் கும்பிட்டுப் பாடிட வேண்டும் எனவும். சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம், அடியாரைப் பணிதல் ஐந்தெழுத்தோதல், குருபாதம் பணிதல், ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டும்" எனவும் கூறியிருக்கிறார்.

*"அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு -*
*வேல்வேல்*
*ஆசானடிக்கீழ் அமர்ந்து நீ நில்லு*
*கொஞ்சம் கொஞ்சமாய் மனதை வெல்லு -*
*வேல்வேல்*
*கூடாத கூட்டத்தை விட்டு நீ - செல்லு.*

என்றும்

*அன்பு சிவமென்ற ஆன்றோர் திருவாக்கை இன்பமுடன் போற்றியிருப்பதுவுமெக்காலம்*

என்றும், எல்லாவற்றையும் அன்பாகக் காணும் சுவாமிகள் அன்பு ஒன்றே சிவப்பேற்றைத் தருமென உபதேசித்தார். சுவாமிகள் கடவுள் என்று சொல்லிக் கொண்டு அங்குமிங்கும் ஓடி அங்கலாய்த்துத் திரிவோரை தாம் கற்ற நூலறிவினைக் கொண்டு கடவுளைக் கண்டு விட்டதாகப் பிதற்றித் திரிவோரை, போலிவேடதாரிகளை மிகவும் கடுமையாக சாடியுரைக்கிறார்.



*அங்குமிங்கும் ஓடியே அவதிப்படுகிறாய்*
*பங்குபோட்டுப் பார்க்கிறாய் பரிதவித்து வாடுகிறாய்*
*எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம்*
*என்று வாது பேசுகிறாய்*
*சாதி சமயமென்று சண்டைப்படுகிறாய்*
*தத்துவத்தையறியாமல் சங்கடப்படுகிறாய்*
*ஓதியுமுணராமல் உண்மையறிந்தவன்போல்*
*ஊரெங்கும் சென்று பிரசங்கம் பண்ணுகிறாய்*

எனக் கூறிக் கொண்டார்.

உலகம் உய்ய அனைவருக்கும் இனிய இலகுதமிழில் அண்ணன்மாரே, தம்பிமாரே, ஆச்சிமாரே கேளீர் அருமையான தெய்வம் நாங்கள் அதையறிந்து வாழ்வீர் இன்ன தன்மை என்று நம்மை எடுத்துச் சொல்வாருண்டோ என்ன பயம் எங்களுக்கு எல்லாம் சிவமன்றோ அவனன்றி ஓரணுவும் அசையாதெனப் பெரியோர் அன்று சொன்ன நிறை மொழியை மறுப்பதுவும் சரியோ அங்கிங்கெனாதபடி எங்கும் சிவமென்று அறிந்தடங்கி அகிலத்தில் வாழ்வதுவே நன்று என்று அருளுபதேசம் புகன்றார்.

*சிவபக்தி மாத்திரம்தான் மனிதனைப் பாக்கியவானாக்கும் மற்றவையனைத்தும் பிரயோசனமற்றவை ஆகையால் இதைவிடாமல் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப்படாதே வெற்றியுன் சொந்தம்.*

*வெளிமாதிரியொன்றும் செய்யாதே. உள்ளுக்குள் பெலத்துக்கொள் தரும நெறியில் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திரு முன்னிலை என்று சாதனைசெய். கடவுள் உள்ளும் உள்ளவர்*

இப்படிப்பலப்பல அருளுபதேசங்களை தமது திருமுகங்கள (கடிதங்கள்) வாயிலாகவும் கூறிச் சென்றுள்ளார்.

தொண்ணூற்றொராண்டுகளாகத் தோன்றிநின்று அருள்புரிந்த சுவாமிகள் 1964ம் ஆண்டு பங்குனித்திங்கள் ஆயிலிய நட்சத்திரவேளையில் திருவடிக்கலப்புற்றார்.

''குருபரன் அடியினை ஏத்துதல் இன்பம்''

God has become father, mother and guru. He has become this mango tree also. He has become you and he has become I.

—YOGA SWAMIGAL.

# இறைவனின் அர்த்த நாரீஸ்வர வடிவம்

திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்

சக்தியின்றி சிவமில்லை; சிவமின்றிச் சக்தியில்லை என்பதனை எடுத்தியம்பும் திருவடிவந்தான் சிவனது அர்த்தநாரீசுவரர் வடிவம். சிவபெருமான் தான் ஒரு பாதியாகவும் பார்வதி மற்றொரு பாதியாகவும் இத் திருவடிவத்தில் இயங்குவார். இவ்வுலகம் முழுவதும் ஒரு சக்தியின் ஆற்றலால் இயங்குகின்றது. அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள். அவள் மனோ பாவத்தையும், வாக்குத் தன்மையையும், உடல் வலிமையினையும் எமக்கு அளிப்பவள். அன்பே சிவம் என்பது தான் எமது சமய நெறியின் மூலமந்திரம். இங்கே அன்பு என்பதற்கு பாத்திரமானவள் பெண். இயல்பாக பெண்களிடத்திலேதான் அன்பு, தூய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம் யாவும் இயல்பாகவே நிறைந்திருக்கும். பெண்மையின் தாய்மை சுகத்தினை அநுபவிப்பதற்காகவே சிவபிரான் பன்றிக் குட்டிகளுக்கு தாயாக மாறி அவற்றிற்கு பாலூட்டினார். அதனாற்றான் அடியார்கள் இறைவனை வழிபடுமிடத்து, "பால் நினைந்தூட்டு தாயினும் சாலப் பரிந்து நீ..." என்றும், "தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்" என்றும், அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்றும் பாடியிருக்கிறார்கள். இத்தகைய பெண்மையின் மகத்துவத்தினை உலகிற்கெல்லாம் எடுத்துக்காட்ட திருவுளம் கொண்ட வடிவந்தான் அர்த்தநாரீசுவரர் வடிவம். சிவத்தினின்றும் சக்தியை பிரிக்கமுடியாது. சிவன் சக்திமான், அவர் பெண்ணாகிய பெருமான் என ஞானசம்பந்தர் பாடியுள்ளார். அவர் பெண்ணாகி ஆணாகி உள்ளார் என்பது மாணிக்கவாசகரின் வாசகம். சிவ என்பதில் 'சி' என்ற எழுத்தின்பொருள் யாவும் இறுதிக் காலத்தில் தன்னிடத்திலே ஒடுங்க, தான் ஒடுங்கியாய் உள்ள தன்மையினைக் குறிப்பதாகும். 'வ' என்பதன் பொருள் சிவனின் அருட்குணமாகிய சக்தியைக் குறிப்பது. சிவ என்பது குணி குண சம்பந்தமாக உண்டான பொருள். அச்சம்பந்தம் சூரியனின் ஒளி போன்றது. ஞானியர், முனிவர்கள், பக்தர்கள் நாத்தழு பேறச் 'சிவசிவ' என மெல்ல இசைப்பர். சிவ சிவ என்றிடத் தீவினை மாளும். சிவசிவ என்பதன் மகத்துவம் சிவனும் சக்தியும் இரண்டறக் கலந்துள்ளமையினைக் காட்டுவதாகும். எனவே சிவபிரான் ஆற்றும் அருட் செயல்கள் யாவற்றிற்கும் ஆதாரமாய் நின்று இயக்குபவள் சக்தியேயாம். இதனை உமாபதி சிவாசாரியார் திருவருட்பயன் வாயிலாக,

தன்னிலமை மன்னுயிர்கள் சாராத் தருஞ்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்

எனப் பாடியுள்ளார்.

எனவே, இறைவன் இத்தகைய பெருமைமிகு சக்தியை தன் இடப்பாகத்தே வைத்து பெண்மைக்கு பெருமை அளித்துள்ளார். எமது சமய நெறியின் தாற்பரியம் எந்த மங்கல காரியத்திற்கும் ஆண் பெண் இருவரும் பங்கு கொள்வதாகும்.

அர்த்த நாரீசுவரர் திருவடிவம் பற்றி புராணங்கள் எடுத்தியம்பியுள்ளன. புராணக்கதைகள் வாயிலாக எல்லாவித அறிவுமட்ட மக்களும் சமய நெறியினை சரிவர கடைப்பிடிக்க துணை புரிவதாகும். படைப்பு கடவுளான பிரமன் பிரபஞ்சத்தில் மானிட இனங்களைத் தோற்றுவிக்க பிரசாபதி என்னும் ஆண் இனத்தைத் தோற்றுவித்து மானிட இனங்களை உலகில் ஏற்படுத்துமாறு கட்டளையிட்டான். பிரசாபதியினால் பிரமா கூறிய கட்டளையை நிறைவேற்ற முடியவில்லை. இச்செயலினால் பிரமா மிக்க குழப்பமடைந்ததுடன் சிவபிரானை வழிபட்டு உலகின் சந்ததி விருத்தி ஏற்படுவதற்கு வழிவகுக்கும்படி வேண்டினான். சிவபிரான் திருவுளங்கொண்டு ஆண் பெண் இருவரும் இணைந்தால்தான் உலகில் சந்ததி தோன்றும் என்பதனை காட்டுவதற்காக அர்த்தநாரீசுவராக உருவம் கொண்டு பிரமனுக்கு காட்சி அளித்தார். ஆண்பாதி பெண்பாதி உருவம் கொண்ட அர்த்த நாரீசுவரர் உருவத்தினை கண்ட பிரமன் தனது தவறினை உணர்ந்தான். சந்ததி விருத்தி உலகில் தோன்ற பெண்களும் முக்கியமானவர்கள் என்பதையும் ஆண் பெண் இருவரது இணைப்பினாலேதான் சந்ததி தோன்றும் என்ற உண்மை யினையும் அர்த்தநாரீசுவரர் திருவுருவம் காட்டுவதாகும்.



எமது சமய நெறியில் தெய்வ வழிபாடு ஆற்றுமிடத்து தனியான கடவுளரின் பெயரை மட்டும் கூறாமல் பார்வதி பரமேஸ்வரா, லக்ஷ்மி நாராயணா என்றுதான் வழிபாட்டினை ஆற்றுவர். சிவபிரான் சக்தியை இடப்பாகத்தில் வைத்ததுபோல மகாவிஷ்ணு தன் சக்தியை இதயக் கமலத்திலும் பிரமா தன் நாவிலும் வைத்துள்ளார். இவை யாவும் எமது சமய தத்துவத்தின் மகத்துவமாகும்.

அர்த்த நாரீசுவரர் தொடர்பான பிறிதொரு புராணக் கதையுமுண்டு. சிவபிரான் மீது மிகுந்த பக்தி கொண்டவர் பிருங்கி முனிவர். கைலாசமலையில் சிவபிரான் பார்வதியுடன் வீற்றிருப்பார் பிருங்கி முனிவர். சிவபிரானை மட்டும் வலம் வந்து வணங்கி விட்டுச் செல்வார். இவ்வாறு தினமும் சிவபிரானை மட்டும் வணங்கிச் செல்லும் பிருங்கி முனிவர் மீது பார்வதி தேவியார் கடும் சினம் கொண்டார். எனவே பிருங்கி முனிவரைப் பார்த்து, ''சிவபிரானை மட்டும் வணங்கி எம்மை வணங்காதபடியினால் தசைகளும் குருதியும் அற்றுப் போகும்'' எனச் சாபமிட்டார். அதனால் பிருங்கி முனிவர் ஓர் எலும்புக்கூடு போலானார். நிற்கமுடியாது தவித்தார். சிவபிரான் தம் அடியார்கள் படும் துன்பத்தினை கண்டு இரங்கி அருள் புரிபவர். பிருங்கி முனிவரின் உடல் நிலையினைக் கண்டு இரங்கி அவருக்கு மூன்றாவது காலை வழங்கினார். இதனால் பெருமகிழ்வடைந்த பிருங்கி முனிவர் சிவபிரான் தன்பால் காட்டிய பரிவினை எண்ணி சிவபிரான் முன்னிலையில் மூன்று கால்களால் நடனம் ஆடினார். தொடர்ந்து பிருங்கி முனிவர் தமது வழிபாட்டு முறையில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை. சிவபிரானை மட்டும் வழிபட்டு வந்தார். இச்செயலினை கண்டு பொறுமையிழந்த பார்வதி தேவியார் சிவபிரானை குறித்து நோன்பினை நோற்றார். அத்துடன் சிவபிரானிடமிருந்து வரத்தினைப் பெற்றார். அவ் வரத்தின்படி சிவபிரானின் இடப்பாகம் முழுவதிலும் இடம் பெற்றாள். சிவனும் பார்வதியை இணைந்த நிலை ஏற்பட்டது. இதனைக் கண்ட பிருங்கி முனிவர் மனம் தளராது சிவபிரானை மட்டும் வழிபட வண்டுருவம் எடுத்து சிவன் பார்வதி இணைந்த உடலினைத் துளைத்து வலம் வந்து சிவபிரானை மட்டும் வணங்கிச் சென்றார். முனிவரின் சிவபற்றினை கண்ட பார்வதி தேவியார் மனம் மகிழ்ந்து அவருக்கு அருள்பாலித்தார். இவ் இணைந்த உருவமே அர்த்த நாரீசுவரர் எனப்பட்டது. இந் நோன்பானது புரட்டாதி மாதச் சுக்கில பட்சத்துத் தசமி தொடக்கம் ஐப்பசி மாதச் கிருஷ்ண பட்சத்து தீபாவளி அமாவாசை வரை 21 நாள்களும் நோற்கப்படுவது. தினமும் வில்வத்தினால் சிவலிங்கத்திற்கு அர்ச்சனை செய்து 21 இழையினால் ஒரு கயிறு முறுக்கித் தினமும் ஒரு முடிச்சாக 21 நாள்களும் முடிந்து, கடைசி நாள் அக்கயிற்றை இடக்கையில் அணிந்து விரதத்தை முடிப்பர்.

அர்த்த நாரீசுவரர் சிற்பங்களில் வலப்பக்க ஆண் தலையில் சடை முடியும் பிறை மதியும் வலக்காதில் மகர குண்டலம் அல்லது பாம்புக் குண்டலமும் காட்சியளிக்கும். நெற்றிக்கண்ணில் பாதி அர்த்தநாரீசுவரரின் வலப்பக்க நெற்றியில் காணப்படும். வலப்பாகம் ஆண்மார்பினைக் கொண்டு விளங்கும். வலப்பக்கம் முழுவதும் திருநீறு பூசப்பட்டு இடை புலித்தோலாடையுடன் விளங்கும். பாம்பிலான பூணூல் வலப்பக்க மார்பில் காணப்படும். வலப்பாகம் முழுவதும் ஆண்மைக்கே உரித்தான அமைப்புறுப்புக் களை பெற்று கணுக்காலில் சிறிது வளைந்து நின்று கொண்டிருப்பர்.

இடப்பாகம் பெண்மைக்கு உரிதான அழகினையும் பொலிவினையும் பெற்று பார்வதிதேவியாரின் சிறப்புக் கூறு களைக் கொண்டிருக்கும். இடப்பாகத் தலையில் மகுடமும், நன்றாகச் சீவப்பட்டு ஒரு கயிற்றினால் கட்டப்பட்ட தலைமுடியும் காட்சியளிக்கும். இடப்பக்க காதில் 'வாலிகா' என்னும் குண்டலமும், கண்ணில் மை பூசப் பெற்றும், இடப்பாக நெற்றியில் பொட்டிடப்பட்டிருக்கும். இடப்பக்க கழுத்தில், கழுத்தணிகளும் கைகளில் பெண்கள் அணியும் வளையல்களும், உருண்டு திரண்ட மார்பினைக் கொண்டு விளங்கும். பெண்கள் அணியும் வெண்மையான ஆடை இடப்பக்க இடையில் திகழும். இடப்பக்க கணுக்கால் சிலம்புடனும் பாதம் மருதாணியிட்ட சிவப்புடனும் காட்சியளிக்கும். பெண்மை உறுப்புக்களைப் பெற்ற இடப்பக்கம் முழுமையும் கருநிறம் அல்லது கிளப்பச்சை நிறம் கொண்டிருக்கும். அர்த்தநாரீஸ்வரர் திருவுருவம் அருகில் நந்தி காணப்படும்.

சிவாகம சிற்ப நூல்களில் அர்த்த நாரீசுவரரின் சிற்பங்கள் பற்றி கூறப் பெற்றுள்ளன. இவை நான்கு, மூன்று அல்லது இரண்டு கைகளைப் பெற்றுக் காணப்படுகின்றன. நான்கு கைகள் உள்ள மாதொரு பாகனின் வலது கைகளுள் ஒன்று மழு அல்லது சூலத்தையும், மற்றையது வரதமுத்திரை அல்லது அபய முத்திரையையும் கொண்டிருக்கும். இடது பக்க கைகளுள் ஒன்று சிறிது வளைந்து சென்று நந்தியின் தலையினைத் தொட்டும், மற்றொரு கரம் காடக முத்திரையுடன் நீலோற்பலம் எனும் மலரினைப் பெற்றிருக்கும்.

மூன்று கரங்களை கொண்ட அர்த்த நாரீசுவரர் வடிவத்தில் இரண்டு கரம் வலது புறத்திலும், ஒரு கரம் இடதுபுறத்திலும் காணப்பெறும். வலப்பக்க கைகளில் சூலமும் அட்ச மாலையும் இடப்பக்க கரத்தில் மலர் அல்லது கண்ணாடி அல்லது கிளியும் இருக்கும்.

இருகரங்களை கொண்ட அர்த்த நாரீசுவரரின் வலதுபுறத் திருக்கரம் வரத முத்திரை அல்லது கபாலம் என்னும் மண்டை ஓட்டைக் கொண்டும் இடது கரம் கீழ் நோக்கி வளைந்து நந்தியின் தலையினை தொடுவதுபோல் காணப்பெறும்.

எமது சமயநெறியில் நாம் வழிபாட்டியற்றும் திருவுருவங்களின் பொலிவு, சிறப்பு, அது தொடர்பான தத்துவார்த்த புராணக் கதைகள் யாவும் மகிமை பொருந்தியவை யாகும். சிவனது ஆனந்த வடிவமான நடராஜர் வடிவம் போலவே அர்த்தநாரீசுவரரின் வடிவமும் மகிமை பொருந்தியதாகும். ஆலயத்தில் சிவபிரான் சிவலிங்க திருவுருவில் ஆவாகனம் பெற்று எமக்கு அருள் பாலிக்கின்றார். இத்திருவடிவமும் ஆண் பெண் இரண்டும் இணையப் பெற்றது. இவ் வடிவம் இறைவனின் அருவுருவ வடிவமாம். சிவலிங்க வடிவத்தின் மேற்பாகம் சிவமாயும் கீழ்ப்பாகம் சக்தி பீடமாயும் விளங்கும். எமது சமய நெயியின் மகிமை ஆண் பெண் இருவரும் இணைந்தே தமது வாழ்வினை சமய நெறியுடன் வாழ வேண்டுமென்பதனை எடுத்துக் காட்டுவதாகும். எனவே வாழ்க்கையை சமயநெறியுடனும், நாம் வாழுவோமேயானால் வாழும் காலத்தில் சமய பாரம்பரிய கலாசாரத்தினை எமது வரும் தலை முறையினர் ஒழுகுதற்கு வழிவகுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



இருக்கு வேதகாலத்தில் சூரியனைப் பற்றிய நம்பிக்கைகள் பல்வகைப்பட்டவனாகக் காணப்பட்டன. அதாவது ஒற்றைச் சக்கரத்தையுடைய ரதத்தை ஏழு பச்சைக் குதிரைகள் இழுத்துச் செல்ல இடுப்புக்குக் கீழ் உடலற்ற பூசன் எனும் சாரதி ஓட்டுகிறான். ஒற்றைச் சக்கரமானது விண்ணில் சூரியனைக் காணும் பரிதி வடிவத்தையும் ஏழு குதிரைகளும் ஒளியின் ஏழு நிறங்களையும்; ஆன்மாவின் ஏழு பிறப்புக்களையும், ஏழு ஞான பூமிகளையும் குறிக்கின்றன. ரதத்தினுள் எழுந்தருளியுள்ள சூரிய பகவான் சங்கு, சக்கரத்தையும் ஏந்தியுள்ளார். சங்கு, சக்கரங்கள் பிரபஞ்சம் யாவும் அவனிடமிருந்து வந்தவை என்பதையும் சக்கரமானது பிரபஞ்சம் அவன் ஆணையின் கீழ் ஒழுங்குடன் இயங்குகின்றது என்பதையும் குறிக்கின்றது.

மேலும் "இடுப்பில் கச்சை கட்டியிருப்பவன்" என்றும், "பாதங்கள் வரை மூடப்பட்டிருப்பவன்" என்றும் வேதகாலத்தில் நம்பப்பட்டது. ஆகமங்கள் சூரிய வழிபாடு பற்றிப் பலவாறு எடுத்துக் கூறுகின்றன. சூரியனுடைய இருதயத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்வதாலும் ஆன்மார்த்த, பரார்த்த பூசைகளிலே முதலிலே சூரிய பூசை செய்யும் படி ஆகமங்கள் கூறுகின்றபடியாலும் சூரியன் அட்ட மூர்த்தங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. பரசொரூப வணக்கம், படிகம் வைத்து வணங்கல் போன்றவை சூரிய வழிபாட்டுக்குரிய சிறப்புக்களாகக் காணப்படுகின்றன. சந்தியா வந்தனக் கிரியைகளின் போது காயத்திரி மந்திரம் ஓதப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆலயக் கிரியைகளில் சிவப்புப் பட்டு, சிவப்புப் பூ, சிவப்புத் தானியம் என்பன இடம் பெறுவது சூரியனை மகிழ்விப்பதற்கேயாகும். நவக்கிரகங்களில் சூரியன் நாயகனாக இருப்பதும், ஆலயங்களில் நவக்கிரகங்கள் உள்ள ஆலயங்கள் சிறப்புப் பெறுவதும் முக்கியமானதாகும்.

மேலும் இதிகாசங்களில் கூட சூரிய வழிபாடு சிறப்புப் பெறுவதைக் காணமுடிகின்றது. இராமாயணத்தில் இராமன் அகத்தியரிடமிருந்து "ஆதித்ய ஹிருதயம்" எனும் அற்புத மந்திரத்தைக் கற்று அதனைக் கொண்டே இராவணனை வென்றான்

# இந்து சமய வளர்ச்சியில் சூரிய வழிபாடு பெறும் முக்கியத்துவம்

*திரு. கி. புண்ணியமூர்த்தி* B.A, (Dip. in. M.Ed.)

இயற்கை பொருட்களில் சூரியனே முதன்மையானதாகும். இருக்கு வேதத்தில் சூரியன் "சவித்திரு" எனும் பெயரில் வழிபடப்பட்டுள்ளான். சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு போற்றும் சமயம் சௌர மதமாகும். சூரியனை வழிபடும் காயத்திரி மந்திரம் இருக்கு வேதத்தில் முதன்மை பெறுகிறது. கண்ணூடாக சூரிய பகவானை நாம் காண்பதாலேயே அவனுக்கு விக்கிரகமோ, கோயிலோ அவசியமற்றதாகிறது. எனினும் பாரதத்தில் சில கோயில்கள் சிறப்புப் பெறுகின்றன.

சூரியன் தன்னை வணங்குபவர்களின் அக் இருளை நீக்கி மெய் ஞானத்தைக் கொடுப்பவனென்று யசூர் வேத சுலோகங்கள் கூறுகின்றன. இதே போன்று சாம அதர்வ வேதங்களில் சூரிய வணக்கத்துக்குரிய பல சுலோகங்கள் காணப்படுகின்றன. காயத்திரி மந்திரத்தின் மூலப்பொருளானது "யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்த சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக" என்பதாகும். அதாவது பிரபஞ்சம் முழுவதும் பரம்பொருளில் தோன்றி மீண்டும் அதனிடமே ஒடுங்கும் என்பதே இதன் அடிப்படைக் கோட்பாடாகும்.

எனப்படுகிறது. மேலும் மகாபாரதத்தின் இதய ஸ்தானமான பகவத்கீதை சூரியனுக்கு மிக முக்கிய இடம் வழங்குகின்றது. "ஒளி வீசுகின்ற பொருட்களில் நான் கதிரவன் ஆவேன்" என்று கிருஷ்ண பகவான் கீதையில் உரைத்தருளியுள்ளார்.

மேலும் சூரியனின் பெருமை பற்றி விஷ்ணு புராணம், பாகவதபுராணம் முதலிய நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. மந்திரங்களின் தாயாகக் காயத்திரி மந்திரத்தைப் புராணங்கள் போற்றுகின்றன. இதனை வேதவித்து எனவும், இது பிரணவத்தில் இருந்தே ஆரம்பமாகியது எனவும் புராணங்கள் போற்றுகின்றன.

சங்க இலக்கியங்களிலும் சூரியனின் பெருமை பறைசாற்றப்படுகிறது. இளங்கோவடிகள் தனது காப்பியத்தை ஆரம்பிக்கும் போது முதலாவது அடியாக "ஞாயிறு போற்றுதும்" என்று ஆரம்பிக்கிறார். கண்ணகி சூரியனைப் பார்த்து "நீ அறிய என் கணவன் கள்வனா" எனக் கேட்கிறாள். திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் " புகழ் ஞாயிறு" எனப் போற்றுகின்றார். வட இந்தியாவில் குஷானர், கனிஷ்கர் போன்றோர். சூரிய வழிபாடு செய்ததாக சான்றுகள் காணப்படுகின்றன. "முல்தரான்" என்ற இடத்தில் சூரியன் கோயில் ஒன்று காணப்படுகிறது. அதேபோல் ஒரிசா புவனேஸ்வரம் சூரியன் கோயில் பிரசித்தி வாய்ந்ததாகும். காஷ்மீரிலும் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த சூரியன் கோயில் காணப்படுகிறது. ஆவடுதுறை சூரியன் கோயிலும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும்.

சூரிய பகவான் இந்துக்களால் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றான். அவை பற்றிப் பார்ப்போமானால்;

| | | |
|---|---|---|
| ஆதித்யன் | – | தேவர்க்கெல்லாம் தலைவன் |
| திவாகரன் | – | பகல் செய்பவன் |
| பாஸ்கரன் | – | ஒளியை உண்டு பண்ணுபவன் |
| சூரிய நாராயணன் | – | செயலைத் தூண்டும் கடவுள். |

இவை தவிர தினகரன், பகலவன், ஞாயிறு, வெய்யோன், பரிதி எனப் பல பெயர்களைக் கொண்டவனாகச் சூரியன் காணப்படுகின்றான்.

சூரியன் உறையுமிடத்தைச் "சௌர மண்டலம்" என சௌர மதத்தவர்கள் அழைக்கின்றனர். இறைவன் சூரிய வடிவிலிருந்து கொண்டு இருளை அகற்றி, மழையைக் கொடுத்து, உயிரினங்களை வாழ வைக்கின்றான் என்பது சௌர மதத்தினரின் கொள்கையாகும். சூரியனின் தேவியர்களாக உஷா தேவியும், ப்ரத்யுஷா தேவியும் காணப்படுதவாக சௌரர்கள் நம்புகின்றனர்.

மகர சங்கராந்தி எனப்படும் தைப்பொங்கல் திருநாளில் சூரியனுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகவே தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. தைமாதம், விளைந்த நெற்பயிரை அறுவடை செய்யும் காலமாகும். இக்காலத்தில் கிராமங்களில் மகிழ்ச்சி காணப்படும். இம் மகிழ்ச்சிக்கு மூலகாரணமானவன் சூரியன். அதனாலேயே புது அரிசியால் பொங்கல் செய்து நிவேதித்து மகிழ்கிறோம். பொதுவாகப் புது அரிசியைச் சமைத்தால் குழைந்து போகும். அப்படிக் குழைவாகச் செய்யப்படுவதே பொங்கலாகும்.

சூரியன் தெற்கிலிருந்து வடக்காகப் பூமத்திய ரேகையைக் கடக்கும் போது தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்கு இடம் மாறுகிறது. இவ் இடப்பெயர்ச்சியியே "மகர சங்கிராந்தி" ஆகும். இதனை 'உத்தராயண சங்கிராந்தி' எனவும் அழைப்பர். சூரியனின் இவ்வகை இடப்பெயர்ச்சி உழவர்களுக்கு வளமான காலநிலையைத் தோற்றுவிக்கிறது. வடபாரதத்தில் இச்சங்கிராந்தி பன்னிரு ஆண்டுகளுக்கொரு தடவை "கும்பமேளா" எனும் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் தைப்பொங்கலின் முதன்நாள் (மார்கழி இறுதித்தினம்) போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

சூரியன் மேடராசியிற் புகும்போது தமிழ்ப் புத்தாண்டு பிறக்கிறது. அதேவேளை வடதிசை நோக்கிச் செல்லும் சூரியன் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் மூலத்தானத்தைக் கடந்து செல்லும் தினம் சித்திரைப் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது. அத்துடன் சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் தட்சிணாயத்தின் தொடக்க தினம், அதாவது ஆடிமாத முதல்நாள் இந்துக்களால் ஆடிப்பிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. எனவே இந்துக்களின் பண்டிகைகள் சூரியனை மையமாக வைத்து உருப்பெற்றிருப்பதைக் குறிப்பிட்டுக் கூற முடியும்.

மேலும் "ஆவணி ஞாயிறு" சூரியனுக்குரிய விரத நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது. அத்துடன் சூரிய வழிபாட்டில் உள்ளடக்கியிருக்கும் தத்துவக் கருத்துக்களைப் பார்ப்போமானால், இந்துக்களால் சூரியன் பிரமமாகவே காட்சி பெறுகிறான். அதாவது உபநிடத மகாவாக்கியங்களான "தத்துமஷி", "சோகம் அஷி", "அகம் பிரமாஷ்மி" போன்றவை குறிப்பிடுவது போல், இரண்டுக்குமிடையே வேறுபாடு காணமுடியாது. சூரியனை இந்துமதக் கோட்பாடுகள் விழிக்கும்போது "ஏ போகனே (பூஷன்) ஒரே ஒளியே! ஏகரிஷியே; ஏ ஆஞ்ஞனே (யமன்) பிரசாபதியின் வழித்தோன்றலே" என விழிக்கின்றன. அத்துடன் "உன் கதிர்களின் பரப்பில் உன் கதிரொளியை கூட்டிவை. உன்னில் நான் பார்க்கும் எழிலார்ந்த உன் உருவம் என்னே! தொலைவில் இருக்கும் அவனே நான், நானே அவன்". இக் கருத்துக்கள் சூரியன், பிரமமாகவும், ஆன்மாவாகவும் அனைத்துமாகவும் அமைந்திருப்பதைக் காட்டுகிறது.

மேலும் கிரேக்கர்கள் சூரியனை "அப்பலோத் தெய்வம்" என அழைப்பர். கிரேக்கர்கள் மாத்திரமின்றி பாரசீகர், யப்பானியர் போன்றோரும் சூரியனை வழிபடுகின்றனர். தாய்லாந்தில் 'உழவுத் திருவிழா' விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஜாவாவில் மிக அழகான சூரியனார் சிலை காணப்படுகின்றது. அத்துடன் சூரியனை வணங்குவதன் மூலம் ஆரோக்கியமான உடலையும் சிறந்த அறிவையும், நல்ல கண் பார்வையையும் பெற்றுக் கொள்ள முடியும் என தற்கால விஞ்ஞானிகளும் கருதுகின்றனர்.

சூரிய வழிபாடு சௌரம் எனும் தனி மதமாக இருந்த போதிலும் சைவத்தோடு இணைந்து (சிவமூர்த்தங்களுள் ஒன்றாகவும் அமைந்து) ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிகாட்டுகிறது. மேலும் சூரிய பகவானை இந்துக்கள் மட்டுமன்றி உலகம் முழுவதுமே போற்றி வழிபடும் பண்பாடு பெருகி வருகின்றது எனலாம்.



# இசைக்கலையின் வளர்ச்சி

திருமதி ப. சரோஜினிதேவி B.A. Dip. in. M. Ed.

இந்திய நாட்டிலே பெரும்பாலான கலைகள் கோவில்களுடன் இணைந்து வளர்ந்தவையாக காணப்படுகின்றன. கலைகளைத் தெய்வத்துடன் தொடர்பு படுத்திப்பார்ப்பது இந்திய மக்களுடைய வழமையாகும். எந்தக் கலையானாலும் அதனை ஆரம்பித்து வைத்த பெருமை இறைவனையே சாரும் என்பார்கள். இக்கருத்தினை நாம் ஆராயும்பொழுது ஓர் உண்மை எமக்கு தெரிய வருகின்றது. அதாவது ஒரு சாதாரண மனிதனுடைய கண்பார்வைக்கும் ஒரு கலைஞனுடைய பார்வைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. ஓர் பார்வையிலே சாதாரண மனிதனுக்குத் தெரியாத பல உண்மைகள் கலைஞனுடைய கண்களுக்கு தெரிகின்றன. இந்தக் கலைக்கண்ணை இறைவன் தந்த கொடை என்பார்கள் இதனால்தான் இறைவனைப் போன்று கலைஞனும் ஒரு சிருஷ்டிகர்த்தாவாக காணப்படுகின்றான். இவ்வாறு வளர்ந்த கலைகளுள் இசைக்கலை முக்கியமானது. "இசையால் வசமாகா இதயமேது" என்பதற்கிணங்க மாந்தரின் மனதைக் கொள்ளை கொள்ளும் மகத்தான சக்தியே இசையாகும்.

இசைக் கலையானது மனிதன் தோன்றிய காலம் தொட்டு இன்று வரையும் வளர்ச்சியடைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. இசை ஆரம்ப நாகரீக காலங்களிலும் இருந்துள்ளது என்பதை மொகஞ்சதாரோ ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல் பொருட்களான புல்லாங்குழல், மத்தளம் என்பவற்றினைக் கொண்டும் அறியமுடிகின்றது. இசைக்கலையின் தோற்றத்தினைப் பற்றி அறிவதற்கு முதலாவதாகக் கிடைத்த இலக்கியச் சான்று வேதங்கள் ஆகும். இவ் வேதங்களுள் பிற்பட்ட காலங்களில் இசைக்கலை வளர்வதற்கு அத்திபாரமாக அமைந்தது சாமவேதம் ஆகும்.

புராண இதிகாச காலங்களில் இசைக்கலைப் பற்றி கூறப்படும் கதைகளில் இறைவனே இசைவடிவினன் என்னும் கருத்து கூறப்படுகின்றது. இறைவனை இசையினால் பாடி வழிபட்டால் வாழ்வு சிறக்கும் என்னும் கருத்தும் கூறப்பட்டது. மேலும் இக்காலத்தில் கடவுளர் திருவுருவங்கள் இசைக்கருவியோடு சித்தரிக்கப் பட்டிருப்பது நோக்கத் தக்கது. சிவன் – உடுக்கையும், சரஸ்வதி – வீணையும், கண்ணன் – புல்லாங்குழல் சங்கும், நாரதர் – தம்புராவும் கொண்டு விளங்குவது இசைக்கலையின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இசையுடன் இறைவன் புகழ் கூறும் தேவாரங்களைத் திரும்பத் திரும்பப் படிக்கும் போது பக்தி உணர்ச்சி அதிகரிக்கின்றது. இராவணன் சாம கீதம் இசைத்து இறைவனிடம் அழியாத வரம் பெற்றான். அகத்தியரின் இசையால் கற்பாறையும் உருகியது. தேவாரங்களும் பண்ணுடன் பாடித்துதிக்கும் தன்மை வாய்ந்தனவாகின. தேவார முதலிகளின் தேவாரங்கள் திருநீலகண்ட யாழ்ப்பாண மரபில் வந்த பெண்ணொருவர் பண் வகுத்தார்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்பன"

இத்தேவாரங்கள் இறைவனை இசையின் வடிவாய்க் கண்டு நாயன்மார் துதித்தனர்.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியே
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"

என அப்பரும்

"பண் ஆர் தரு மழையாய் உயர்பொருளால் இறைவனாய்"

என சம்பந்தரும்

இசைவடிவான இறைவன் புகழைப் போற்றிப் பாடினர். இறைவடிவான தேவாரங்கள் இறை நம்பிக்கையையும் இறை பக்தியையும் வளர்க்கின்றன. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் காணப்படும் இசைத்தூண்கள் ஆலயங்கள் இசையுடன் இணைத்துள்ளதை உணர்த்துவதாக உள்ளது. இராவணன் சாமகானப்பிரியனாகவும், தனது பத்துத்தலைகளில் ஒன்றினை உடைத்து நரம்புகளின் துணையுடன் இசை மீட்டி சிவனிடம் வரம் பெற்ற வரலாற்றிலிருந்தும் இசையின் தன்மையை அறிந்து கொள்ள முடிகின்றது. குப்தர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களின் இசைக்கலை சிறப்புற்று இருந்தது என்பதை அங்கு கண்டெடுக்கப் பட்ட நாணயங்களில் சமுத்திரகுப்தன் வீணை வாசிப்பது போன்ற நிலையும், இவனது இசையினை இலக்கியங்கள் போற்றுவதிலிருந்தும் இக்கால இசைக் கலையின் வளர்ச்சியினை அறிய முடிகின்றது.

சுவாமிவீதிஉலாவின் பொழுது வாத்தியம் இசைக்கப்படுகின்றது. திருவிழாக் காலங்களின் போது இசைக்கச்சேரிகள் செய்யப்படுகின்றன. சம்பந்தருக்குச் சிவபெருமான் பொற்றாளம் வழங்கிய கதையிலிருந்தும் இறைவன் இசையுடன் பாடும் பாடலில் லயித்து விடுகின்றான் என்பது தெளிவாகின்றது. ஆலயங்களில் ஓதுவார்களை நியமித்து அவர்களுக்கு மானியங்களை வழங்கி வந்தமையும் இசைக்கலையின் வளர்ச்சிக்கு எடுத்துகாட்டாக விளங்குகின்றது.

அடுத்த ஒவ்வொரு காலபகுதியிலும் இசைக்கலையானது எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதைப் பார்க்கும் போது சங்ககாலத்தில் இசையானது மக்களின் வாழ்வுடன் இரண்டறக்கலந்து காணப்பட்டது. இசை இறைவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டதை

"செறிதொடி முன்னகை கூப்பிச் செல்வேன்
வெறியாடு மகளிரொடு செறித்தாய்க்
குழலகல, யாழ் முரல, முழுவதிர, முரசியம்ப
விழவறா வியல் ஆவணத்து"

என வரும் பட்டினப் பாலை அடிகளால் உணரலாம். பரிபாடல் முதலிய சங்க நூல்களில் கடவுளரை ஏத்திப் போற்றும் பழந்தமிழ் இசைப்பாடல்கள் பல காணப்படுகின்றன. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவே தமிழுக்குரிய ஏழிசைகளாகும். சங்க காலத்தில் ஐவகை நிலப்பாகு பாடு நிலவியது. அந்தந்த நிலத்துக்கு ஏற்றவாறு மனவுயர்ச்சியை இனிய முறையில் வெளிப்படுத்தக் கூடிய இசையும் அதற்குரிய துணைக்கருவிகளும் தோற்றம் பெற்றன. ஐவகை நிலத்தாரும் அந்தந்த நிலத்துக்குரிய பண்ணைகையாண்டனர். குறிஞ்சி நிலத்தார் குறிஞ்சிப் பண்ணையும் இதற்கு உ+மாக: குறிஞ்சி நிலமகள் ஒருத்தி தழைத்து நீண்ட தனது கூந்தலை கையாற் கோதிக்கொண்டு பெரிய மலையின் பக்கத்தே குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நின்றாள். தினைக் கதிரினைத் தின்று கொண்டு நின்ற யானை ஒன்று அப்பாடலைக் கேட்டதும் தினைக்கதிரினை உட்கொள்ளாது துயில் வரப் பெறாத கண்கள் துயில் வரப் பெற்று விரைவாகத் தூங்குவதாக அகநானூறு குறிப்பிடுவது இசையாலே உயிர்கள் மயங்கி நிற்கும் என்பதை வெளிப்படுத்துகின்றது.

அடுத்து முல்லை நிலத்தார் முல்லைப் பண்ணையும், நெய்தல் நிலத்தார் நெய்தற் பண்ணையும் பாலைநிலத்தார் பாலைப் பண்ணையும் பாடி மகிழ்ந்தனர். ஆதிப் பண்களாகிய இவ்வைந்திலும் இருந்தே இன்று நாம் காணும் பண்கள் அனைத்தும் தோற்றம் பெற்றன என்பர். மேலும் போர்முனையில் புண்பட்டு வீரன் ஒருவன் கிடக்க அப்புண்ணை உண்ணவரும் பேய்களை தடுக்கும் நோக்குடன் காஞ்சிப்பண்ணை பாடி, யாழையும், குழலையும் இசைப்போம் என தலைவி கூறியதாகப் புறநானூறு கூறுகிறது.

பண்களைத் தோற்றுவித்தது போலவே ஐவகை நிலத்திலும் வாழ்ந்தோர் தத்தமக் குரிய இசைக் கருவிகளையும் தோற்றுவித்தனர். அது மட்டுமல்லாமல் எந்தெந்தப் பண் எந்தக் காலத்தில் பாடப்பட வேண்டும் என்பதையும் நுணுகி அறிந்தார்கள். அந்தக் காலத்தில் பாணர் என்ற வகுப்பினர் பாடுதலையே தம் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். பாணர் பண்பாட அவர்களின் மனைவிமார் நடனம் ஆடினர். பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை முதலிய இலக்கியங்கள் வாயிலாக இதனை அறிய முடிகின்றது. பழந்தமிழ் இசையைப் பற்றி அறிய முத்தமிழ் காப்பிய மான சிலப்பதிகாரமும் அதன் உரைநூல்களும் உதவுகின்றன. பெருநாரை, பெருங்குருகு, இசைநுணுக்கம், தாளசமுத்திரம், இந்திர காரீயம் போன்ற இசை நூல்கள் பல பழந்தமிழ் நாட்டில் இருந்தமை சிலப்பதிகார உரைகளால் அறியக்கிடக் கின்றது.



"யாழும் குழலும் சீரும் மிடரும்
தாழ்குழல் நண்ணுமை ஆடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையாகும்"

எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

சங்கமருவிய கால இறுதிப் பகுதி பழந்தமிழ் நாட்டில் செழித்து வளர்ந்து வந்த இசைக்கலைக்கு இருண்ட காலமாகும். இக்காலப்பகுதியில் இசை அருகி மறையத் தொடங்கியது. பௌத்த, சமணச் செல்வாக்கு அதிகரித்தமையால் மக்கள் இசை முதலிய கலை நலன்களை மறக்கலாயினர். எனினும் இக்காலத்தில் இசையிலே மூழ்கிக் கிடந்தவர் சிவபக்தரான காரைக்கால் அம்மையார். இவர் அருளிச் செய்த திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை போன்ற பக்திப் பனுவல்கள் தமிழிசை மீண்டும் வலுப்பெற சிறப்புடைய இலக்கியங்களாக கைக்கொடுத்து உதவின.

பல்லவர் காலம் இசைவரலாற்றிலே பொற்காலமாக மிளிர்கின்றது. சங்கமருவிய கால பிற்பகுதியில் காரைக்கால் அம்மையார் மற்றும் முதலாழ்வார்கள் ஆரம்பித்துவைத்த பக்தி இயக்கத்தினை பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் பின்வந்த ஆழ்வார்களும் தொடர்ந்து வளர்த்துச் சென்றனர். தேவார முதலிகள் அவைதீக மதங்களின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க அயராது முயன்றனர். இவ்வாறு பக்தி இயக்கத்தை வளர்ப்பதற்கு கருவியாக இன்னிசையால் இறைவனைப் பாடினர். தேனினும் இனிய தேவாரப் பதிகங்களை பாடிக் கொண்டு தலங்கள் தோறும் யாத்திரை செய்தனர். இதுவரைக் காலமும் அகப்பாட்டாக இருந்த இசை நாயன்மார்கள் காலத்தில் தெய்வீக இசையாக மாறியது.

ஆழ்வார்களும் இதே முறைகளைப் பின்பற்றி பண்கனிந்த பாடல்களை இசைக்கருவிகளின் துணைகொண்டு இறைவனை ஏற்றிப் பாடினர். நம்மாழ்வார் பண்களை அமைத்துப்பாடுவதிலும் தலைசிறந்து விளங்கினர். பாணர் குலத்தில் வந்த திருப்பாணாழ்வார் பரந்தாமனின் புகழை பலவாறு வர்ணித்து இசையின் பெருமையை மக்களுக்கு உணர்த்தினர். இவ்வாறு நாயன்மாரும் ஆழ்வார்களும் தோன்றி சமயத்தோடு இசைக்கலையையும் வளர்த்தனர்.

பல்லவ மன்னர்களில் முதலாம் மகேந்திரவர்மன் இசைவளர்த்தோர் வரிசையில் சிறப்புப் பெறுகிறான். இவன் இசையில் விருப்பம் உடையவன் என்பதை அவனது கால்வெட்டுக்களில் அறியலாம். "இசைப்பாக்களே எனது செல்வமும் வாழ்வும்" என்று தானியற்றிய மத்தவிலாசப் பிரஹசனம் என்பதில் கூறியுள்ளார். அத்துடன் மகேந்திரவர்மன் பரிவாதினி என்னும் பெயர் கொண்டதனால் வீணையில் வல்லவனாக விளங்கினான் என்பதையும் அறிய முடிகின்றது. மகேந்திரவர்மன் பல்லாவரம் குகைக் கோயில் கல்வெட்டில் தன்னைச் சங்கீரண சாதி எனக் கூறியுள்ளான். இவன் தானவகைகள் ஐந்தினுள் கடைசியில் உள்ள சங்கீரணம் என்பதை புதிதாகக் கண்டு அதன் வகைகளையும் ஒழுங்குகளையும் அமைத்தவன் என கூறப்படுகின்றது.

இராஜசிம்மனும் இசையில் வல்லவனாக விளங்கினான். அவனுடைய பல விருதுப் பெயர்களுள் வித்தியாதரன் வீணாதரன் போன்ற பெயர்கள் அவனுடைய இசைப்புலமையை எடுத்துக் காட்டுவதுடன் இசைக்கலையை வளர்த்துச் சென்றான் என்பதையும் விளக்குகின்றது. தேவாரகாலத்து இசைக் கருவிகளும் பல்லவ அரசர் காலத்திலிருந்தே தென்னிந்திய கோயில்களில் இசையுடன் தேவாரம் பாடப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றது. மூன்றாம் நந்திவர்மன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் திருப்பதிகம் பாடுவதற்கு ஆவண செய்யப் பெற்ற செய்தி ஒன்றும் காணப்படுகின்றது.

# திருமூலரின் வாழ்வியல் சிந்தனைகள்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்



திருமூலர் உண்மையை தேடியவர், நாடியவர் அம்முயற்சியில் இடையறாது ஈடுபட்டவர். தாம் பெற்ற ஞானத்தை உண்மையை உணர்வதற்காகவே பயன்படுத்தியவர். அச்செயன்முறையில் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் ஞானத்தையும் தமிழில் மூவாயிரம் பாடல்களில் திருமந்திரம் நூலாக வடித்துத் தந்தவர்.

''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்னும் திருமூலரின் பெருநோக்கிற்கமைய அவர் தாம் பெற்ற மெஞ்ஞான அனுபவ இன்பத்தை இவ்வுலகில் உள்ள எல்லா மனிதர்களும் சகல ஜீவராசிகளும் எக்காலத்திலும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக திருமந்திரம் அருளப்பட்டது.

உண்மை கால தேச வர்த்தமானங்களைக் கடந்து நிற்பது. உண்மையோடு ஒன்றித்து நின்று உயிர்களுக்கு அன்போடு பணிசெய்வதால் பெறப்படும் இன்பமே உண்மை இன்பம் எனத் திருமூலர் கண்டவர். உண்மை இன்பத்தை எல்லோரும் அடைய வேண்டும் என்பது திருமூலரின் வாழ்வியல் நோக்கு.

உலகம் உடல் உயிர் மனித வாழ்வு என்பன பற்றிய உண்மை நிலைகளை தெளிவாக்கும் அதே வேளை இவை அனைத்துக்கும் மேலாக மனிதன் மனிதத் தன்மைகளோடு மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய உண்மை நெறி முறைகளையும் உலகில் வாழ்வாங்கு வாழும் வழிகள் பற்றிய வாழ்வியல் நடைமுறைச் சிந்தனைகளையும் மனிதன் தீயவற்றிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திர மனிதனாகச் சமுதாயத்தில் வாழ மேற்கொள்ளவேண்டிய உபாயங்களையும் திருமூலர் வழங்கியுள்ளார். இந்த வகையில் திருமந்திரம் ஓர் வாழ்க்கை நூல் ஆகும்.

பண்டுதொட்டு சமுதாயத்தில் மாறுதல்கள் பல நிகழ்ந்து வந்தாலும் தற்காலத்தில் தீவிரமாகி வந்தாலும் மனித வாழ்க்கையில் அடிப்படை உண்மைகளில் மாற்றம் இல்லை என்பது உணர்தற்பாலது. திருமூலர் அத்தகைய நிலையான வாழ்க்கை உண்மைகள் பலவற்றை செம்மையாக உணர்ந்து தெளிவாக உணர்த்திய சான்றோர் என்பதில் சிறப்புப் பெற்றவர். திருமந்திரம் இன்று வாழும் நூலாக விளங்குவதற்கு அதுவே காரணம்.

திருமூலர் வரலாறு வாழ்ந்த காலம் என்பன பற்றி முரண்பாடான கருத்துக்கள் உள்ளன. அவையாவும் பெருமளவில் ஊகங்களே. அவற்றை நீக்கி அவர் வழங்கியுள்ள காலத்தையும் இடத்தையும் வாழ்ந்த சூழ்நிலைகளையும் கடந்து நிலைத்து நிற்கின்ற வாழ்வியல் சிந்தனைகளை அவற்றின் உண்மையை நோக்க வேண்டும்.

திருமந்திரத்தை திருமூலர் தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழில் செய்தார். ஆயினும் தமிழ் மக்களுக்கென மாத்திரம் செய்யவில்லை. உலகமாந்தர்களின் உய்விற்காக செய்தார். உலகினை ஒன்றாகக் கண்டவர் திருமூலர். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்றவர் அவர். மனித குலம் முழுவதற்குமான பொதுக்கருத்துக்களை வாழ்வியல் உண்மைகளை உணர்த்தி எழுதி என்றும் வாழும் உலகப் பொது நூலாக திருமூலர் திருமந்திரத்தை தந்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தினரின் பழங்காலத்து வாழ்க்கை நிலையையும் முறையையும்: அவர்கள் கடைப்பிடித்த வாழ்க்கை நெறிகளையும் தத்துவங்களையும் நிரல்படுத்தி நூலில் விரிவாகக் கூறியிருக்கலாம். திருமூலர் அவர் வாழ்ந்த காலத்துத் தமிழ் நாட்டு வாழ்க்கை முறைகளை அப்படியே உரைத்திருக்கலாம். தற்காலத்தில் அவை பயனற்றவையாகப் போயிருக்ககூடும். இன்றைய சூழ்நிலையில் அக்கருத்துக்கள் தேவைப்படாமல் இருத்திருக்கலாம். இன்று நிலைமைகள் மாற்றம் பெற்றுவிட்டன. ஆனால் மனித வாழ்வின் உயர் நோக்கு வாழ்வு சிறப்பதற்கான நெறிமுறைகள் வாழ்வில் உண்மை இயல்பு வாழ்க்கை விழுமியங்களில் சிறப்பு வாழ்க்கை நெறிகளைத் தவறவிட்டவர்களின் இழிவு மற்றும் வாழ்வியல் சிந்தனைகள் ஆகியவற்றைப் பொதுவாக்கி உலகத்தவர் அனைவருக்கும் எக்காலத்தவர்களுக்கும் பொருந்தக் கூடிய முறையில் திருமந்திர நூலில் தெளிவாக விளக்கியிருத்தலால் இன்றைய தலைமுறையினரும் திருமூலரின் அச்சீரிய உண்மைகளைப் படித்துப் பயன் பெறக்கூடியதாக உள்ளது. வருங்காலத்தவர்க்கும் பயன் தரத்தக்கதாக

உள்ளன. மனித வாழ்வுக்கு அடிப்படையான, எல்லாச் சமூகத்தவர்க்கும் உடன்பாடான,மனித குலத்திற்குப் பொதுவான வாழ்க்கை உண்மைகளைத் தூய நிலையில் கண்டு, உணர்ந்து, தெளிந்து திருமூலர் வெளிப்படுத்தியுள்ளார்.அதனால் அவற்றைக் கற்கும் மக்கள்,தாம் வாழும் காலத்து உணர்வோடு பொருத்திப் பார்த்து,அங்கு பொருத்தம் கண்டு,ஏற்று வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ள முடிகின்றது.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கும் ஏற்றதாய் விளங்குவது உண்மை.அப்படியானால் உண்மைக்குப் பழமை,புதுமை என்ற நிலைகள் இல்லை.உண்மை மாறா அழகும், நிரந்தரமும் கொண்டு விளங்குகின்றது

உண்மையோடு மனித வாழ்வு தொடர்புபட்டு இருக்கும் வரை அது சிறப்பாக அமையும். திருமூலர் மனித வாழ்க்கையை உண்மையோடு தொடர்புபடுத்தி இணைத்து அதன் பயனாக வாழ்வினைச் செம்மைப்படுத்தியும் ஒழுங்குபடுத்தியும் அமைத்து சிறப்பெய்துவதற்கு வேண்டிய நெறியும் முறையும் தந்துள்ளார்.

மனுக்குலத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நெறி காட்டும் திருமூலர் வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் பகுத்து ஆராய்ந்து அவற்றின் இயல்புகள் இயல்பினின்றும் விலகுவதால் ஏற்படும் விளைவுகள் மனித இயல்புகள் மனித உரிமைகள் என்பவற்றைப் பேணுவதால் ஏற்படும் பயன்கள் ஆகியவற்றை விளக்கியுள்ளார். அவற்றைத் தேர்ந்தெடுத்து வாழ்வின் தரத்தை மேம்படுத்தும் பொறுப்பையும் சுதந்திரத்தையும் மக்களிடமே விட்டுள்ளார். இந்த அணுகுமுறை இவற்றைச்செய், இவற்றைச் செய்யாதே எனக் கட்டளைகளாக வழங்கும் தத்துவ ஞானிகள் பலரின் அணுகுமுறையினின்றும் வேறுபட்டு உள்ளது.திருமூலர் சிந்தனைகள் அறிவுக்கு விருந்து படைப்பதாக மாத்திரம் அமையாமல் அவை உணர்வதற்கும் ஒழுகுவதற்கும் உரியவை ஆக விளங்குகின்றன. வாழ்வின் முழுமைத்துவம் உணரப்பட்ட நிலையில் வாழ்வியல் சிந்தனைகள் திருமந்திரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆகமங்களின் பிழிந்தசாரம் அதன் உள்ளடக்கம்.

திருமூலரின் சமயச்சிந்தனைகள், சமூகச்சிந்தனைகள், ஒழுக்கச்சிந்தனைகள், கல்விநெறிச் சிந்தனைகள், என்பன ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துப் பார்க்க முடியாதவாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. ஆன்மீகமும் உலகியலும் இணைந்துள்ளன. இங்கு தான் முழுமைத்துவம் உணரப்படுகின்றது. இவையனைத்தும் வாழ்வியல் சிந்தனைகளாக மலர்கின்றன. மனிதரை மனிதர்களாக வாழ்வாங்கு வாழவைக்கின்றதும். அதன் மூலம் வாழ்வின் தரத்தை உயர்த்துவதுமான சிந்தனைகளாக அமைவது திருமூலர் சிந்தனைகள்.

இக்கட்டுரையில் வாழ்வியல் சிந்தனைகளாக சைவசமயம், சமூகம், ஒழுக்கம், கல்வி, சார்ந்த திருமூலரின் சிந்தனைகள் ஆராயப்படுகின்றன. இவையனைத்தும் சுருக்கமாக கூறவேண்டியுள்ளதால் விரிவாக ஆராயும் வாய்ப்பும் சுருங்கிவிட்டது சமயம், சமூகம், ஒழுக்கம், கல்வி, என்பன மனித வாழ்க்கையோடு தொடர்புபட்டவை. எனவேதான் வாழ்க்கை நெறிகளாக அவை நோக்கப்பட்டுள்ளன. அவை ஒன்றாக இணைக்கப்படவேண்டியவை. வாழ்வு முழுமைத்துவம் எய்துவதற்கு அவற்றின் ஒன்றிணைப்பு அவசியம்.

## மாமன்றச் செய்தி

### "40ல் திருமணங்கள் 40" - 07 தம்பதியிருக்கு முள்ளியவளையில் திருமணம்

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் தனது 40 ஆண்டுப் பூர்த்தியினை முன்னிட்டு தனத பூரண நிதிப்பங்களிப்பின் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து 40 மணமக்களுக்கு இலவச திருமண திட்டம் ஒன்றினை நடாத்தியிருந்தது. அத்திட்டத்தினகீழ் திருமண வயதினை அடைந்தும் வறிய நிலை காரணமாக திருமண பந்தத்தில் இணைய முடியாமலிருக்கும் 40 மணமக்கள் தெரிவுசெய்யப்பட்டு இத் திட்டத்தின் கீழ் திருமணம் செய்து வைக்கப்பட்டனர். ஒவ்வொரு மணமக்களுக்கும் தாலி, கூறைப்புடவை, பட்டு வேட்டி சால்வை, இரண்டு மோதிரங்கள் ஆகியவற்றுடன் வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் திருமணச் செலவுக்கென நிதியுதவியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முதற்கட்டமாக 33 தம்பதியினருக்கு நிகழும் ஏவிளம்பி ஆண்டு ஆவணி மாதம் 30ம் நாள் (15-09-2017) வெள்ளிக்கிழமை அன்று காலை 6.17 முதல் 8.33 வரையுள்ள சுபமூகூர்த்த வேளையில் பம்பலப்பிட்டி, சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் திருமண வைபவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

மேலும் 07 தம்பதியினருக்கு . முள்ளியவளை தண்ணீருற்று ஊற்றங்கரை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த 20-10-2017ந் திகதி திருமணம் செய்து வைக்கப்பட்டது.



# SOME ASPECTS OF GOD SIVA

God Siva is known by several names and worshipped in various forms. Some of His most famous aspects are as follows:

**(1) Lingothpava Murthy**
This figure signifies the importance of God Siva in the form of Linga. To enlighten Brahma and Vishnu who argued over who was greater of the two God Siva appeared in the form of pillar of light that has no beginning nor end, to prove His infinity. Those who worship Him in this form will have good physical gains.



**(2) Suhasana Murthy**
It is in this form God Siva who as a catechist, preached the truth of the Vedha Aagamas to his consort Uma, Those who worship this seated form will be relieved of sorrows.



**(3) Sakthi Murthy**
From the left side of God Siva appeared Umadevi in order to enable Brahma and Vishnu to do their functions. Those who worship Him will prosper.



**(4) Kalyanasundara Murthy**
When Umadevi took the avathar of Thadchayini, daughter of Malaiarasan, and grew up, God Siva came in as a Bridegroom to marry her. Those who worship Him will forever be blessed with auspiciousness.



**(5) Arthanareeswarar Murthy**
In this form God Siva appears on the right side of his body, the left side is Umadevi. Those who worship this form will enjoy all mundane pleasures.



**(6) Somaskantha Murthy**
Here God Siva is with Umadevi and Skanda. Those who worship this form would be blessed with children.



**(7) Sakkeravarathar**
It is when in this form that God Siva granted the chakkera weapon (disc) to Lord Vishnu. He grants luxuries to devotees.



**(8) Thirumurthy**
It is in this form he helped Brahma, Vishnu, and Rudra to perform their functions. He helps reduce the difficulties of His devotees.



**(9) Hariathar**
In this form Lord Vishnu occupied God Siva's left side because of His (Vishnu's) semblance to Umadevi. He balances the merits and demerits and bestows His grace upon the devotees.



**(10) Thedchanamurthy**
Siva as the universal teacher teaches the secrets of yogas, tantras, yantras, alchemy to disciples. He also taught to play the Veena to Thumpruvar, Narathar and Suker. He teaches facing the south. Hence, thachana (Southern) moorthy.



**(11) Pichchadanar**
He taught the rishis of Tharukavanam the worth of Siva worship. Removes desires.




**(12) Sarabamurthy**
God Vishnu took the form of Narasinghar (half man, half lion) to vanquish Iranyan. Later to destroy Narasinghar's ego God Siva took this form. He lowers the effect of the Karma.



**(13) Neelakandamurthy**
When the milky sea was churned with

the snake Vasugi as the rope, the snake spat the obnoxious poison and to protect the Devas, God Siva swallowed it. Umadevi held His throat. So the poison could not go down. Hence He is called Neela (blue) Kandan (throated). He suppresses ego.



**(14) Thirupadamurthy**

At the end of a deluge Brahma, Vishnu and Rudra merge with Maheswara. By worshipping Him the devotees will get the beneficial results of performing Sariyai, Kiriyai and Yoga.



**(15) Ekapathamurthy**

At the time of total annihilation, He manifests Himself in this form. He grants spiritual wisdom to the devotees.



**(16) Bairavamurthy**

He took this form to vanquish Andakakara, son of Iranniadchan. He gives all forms of comfort to the devotees.



**(17) Idaparudamurthy**

During the annihilation of the three kingdoms, Lord Vishnu on knowing the Angel of Charity was the bull bearing God Siva, himself took the form of the bull on whom God Siva rode. Worshipping this form would give charitable thoughts to the devotees.



**(18) Kankalamurthy**

This form was taken to suppress Vishnu when he wanted to destroy the world when he took the Vaman (shortman) Avatar.

*Some texts say God Siva took this form when he plucked off the 5th head of Brahma to punish him.



**(19) Kamari**

God Siva left Uma and sat in meditation. Urged by the Devas, Kaman (cupid of Hindu Mythology) aimed an arrow at Him to disturb Him and pay attention to Uma. God Siva angered by this burnt Kaman to ashes. Those who worship God Siva in this form overcome desires.



**(20) Kalasambaramurthy**

The form in which he defeated Yaman to save His Devotee Markandayar.

**(21) Salantharavimurthy**

This is the form in which he destroyed Salantharan an Asura who was formed from the sweat of Rudramurthy.



**(22) Tripurari**

The form in which he destroyed the three forts of gold, silver and iron to protect the Devas

**(23) Sandrasekarar**

This is the form of Siva with the crescent moon. He will reduce the difficulties of men.



**(24) Gangadaramurthy**

He keeps Ganga in his crown. He bestows Moksha to devotees.



**(25) Nadarajamurthy**

He took this form to perform the five functions: creation, protection, destruction, absorption and granting grace. Gives bliss to devotees.

These are the forms of God Maheswarar.

**Idol Worship – an elucidation**

The principle of all sects of Hinduism is idol worship. The origin of origins is referred to as natureless cosmos and cosmos of nature and worshipped. They are called idol stage and formless stage respectively. The wise will worship the former in idol form and the latter as many idols. Hinduism calls the latter as idol worship. Vedas call it Isvaran. Vedanda says Isvaran and the Cosmos are one and the same, but says Isvaran as an idol is second to the Cosmos, where as Saivasidhantha says Isvaran denotes the origin of origins.

While there is general condemnation of idol worship in this world, Hinduism says its principles and philosophies and development of culture originated from idol worship – that is the origin of origins. As a result of worshipping this supreme spirit, was born bakthi cult (devotion). Hence the Tamil

Language is known as the Language of Devotion (Bakthi).

Saint Navukkarasar sings of the bow-shaped eyebrows of God Siva in one of his devotional songs (Thevaram). He ends the songs with the line if one could see the raised leg of Lord Natarajah, it is worth being born a human on earth. Further, he says I cannot describe Him, hail Him; how can I describe Him. Vedas say O! Lord, You are the supreme being undivided and invisible and all pervading. He cannot be described as such and such a form having such and such a complexion and so on. So idols which symbolise His great powers, His compassion, His grace become inevitable. This is how idol worship originated. From the Himalayas to South of India and Ealam (Sri Lanka) temple were built and villages formed around them A Tamil proverb says "Do not dwell where there is no Temple", such is the significance of temples.

There are many texts on the philosophy of idol worship. Among these the book on the "Dance of Siva" written by Kalayogi Anandacumarasamy is notable. Among all forms of idols the Lingam is the most ancient and noted for its philosophical significance. Those sages like Karaikal Ammayar and the four realized saints have witnessed the dance in the open space of Thillai (Chithamparam) where there is no remembrance or forgetfulness nor was there night or day. There is evidence of their creative works of great standards in Sri Lanka. The best way to worship all divine forms like Brahama is to have the ancient supreme spirit on the Lingam and worship it.

Like the unreachable fire gives light in a lamp, the Ganga river becomes the water to drink, the strong wind may be the air we breathe so does this ancient supreme spirit manifests itself on any form worshipped by the devotees.

## மாமன்றச் செய்தி

### தெய்வ விக்கிரகங்களை சேதப்படுத்தும் விசம செயல்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கடும் கண்டனம்

கடந்த காலங்களில் இந்து ஆலயங்கள் மற்றும் தெய்வ விக்கிரகங்கள் மீது நடாத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் இந் நாட்டில் வாழும் இந்து மக்களை மிகவும் வேதனை கொள்ளச் செய்துள்ளது.

மன்னாரில் இருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் பாதையில் தள்ளாடி விமான நிலையத்தினருகில் காணப்பட்ட விநாயகர் விக்கிரகம், நாயாற்றுச் சந்தியில் உள்ள விநாயகர் விக்கிரகம் மற்றும் மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் செம்மணத்தீவுப் பகுதியில் இருந்த விநாயகர் விக்கிரகம் என்பனமீது மேற்கொள்ளப்பட்ட மனிதத்தன்மையற்ற - திட்டமிட்ட சேதப்படுத்தலானது மன்னார் மாவட்டத்தில் வாழும் இந்துக்களையும் இலங்கை வாழ் இந்துக்களையும் மிகவும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.


இவ்வாறக தெய்வ விக்கிரகங்களை சேதப்படுத்துதல் போன்ற அதர்மமான செயற்பாடுகளால் இந் நாட்டில் மேலும் மேலும் அழிவுகளும் இயற்கை அனர்த்தங்களும் ஏற்படும் என்பது இயற்கையின் வழிப்பட்டு அனாதியாய் தோன்றிய இந்து மதம் உணர்த்தி நிற்கும் யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

எவரொருவர் அடாத்தாக மற்றொருவர் அல்லது அவரது மத நம்பிக்கை மீது அதர்மமான காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை அல்லது சேதப்படுத்தலை செய்கின்றாரோ அவர் அல்லது அந்த சமூகம் தர்மத்தின் தீர்ப்புக்கு உட்பட்ட சொல்லொணாத் துயரங்களையும் அழிவையும்கூட எதிர்கொள்ளும் என்பதை தொன்மையான இந்துமத புராணங்களும் இதிகாசங்களும் உணர்த்தி வருகின்றன. அதை நாம் கடந்கால நிகழ்வுகளினூடாக நேரிலும் கண்டிருக்கின்றோம். இவ்வாறான தொடர் செயற்பாடுகள் வளமான இலங்கையின் எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே இவ்வாறான மிலேச்சத்தனமான சேதப்படுத்தல்களை மேற்கொள்பவர்கள் தமது தீய நோக்கத்தை கைவிட்டு எதிர்காலத்தில் இவ்வாறான செய்பாடுகளை கைவிட வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

மன்னார் மாவட்ட காவல்துறையினர் இது தொடர்பான நீதியானதொரு விசாரணையை முன்னெடுத்து தவறு செய்தவர்களை நீதியின்பாற் பாரப்படுத்தும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

# EXPLANATION OF AASAUSAM



Brahma soothiram which the lady poet Avvaiyar praised, says that only by birth one can become mature enough to gain divine knowledge. Dharma sasthiras say there are forty births among these the saiva aakamas stress on sixteen processes (samskara means purifying which is done through many births).

Why is it so? Is that which is necessary for spiritual life necessary for the present day life too?. These questions are in the minds of saivaites. Those who are orthodox feel that those who return from a funeral house should bathe and be clean. This has a scientific basis they say and satisfy themselves.

They do not realize the difference between hygienic cleaning and cleanliness by performing kiriyai. The aim of this article is to clarify the doubts of those who go in different directions.

When saivaities go to the temple or for a wedding the following words "I have aasausam" are often heard. Some support it and some speak against it.

"Suhi" means cleanliness. Sausam means it is clean. Asusi means unclean. Aasausam (by means of kiriyai) is un-cleanliness for the person who performs kiriyai for the redemption of the aathma, and for the one who has the right to do so, aasuthi does not mke It possible to do the kiryais That is this un-cleanliness does not allow the person to do the kiriyai.

The aasausam is also known as thudakku in tamil and taboo in the English language. All auspicious events can be done only after the thudakku (taboo) is over. Otherwise it causes mental displeasure and the mind will not concentrate on the spiritual kiriyais.

There are three ways to remove the "asuhi" (un-cleanliness). They are the time, bathing and these together make the three ways.

There is a funeral going on in the village. Sound of crying and the funeral drum and the loud speaker announce the instance of death. People get to know about the funeral and the temple poojahs are stopped and as long as the body is in the village, the people also have to observe thudakku. Once the dead body is removed then the people's thudakku is also over.

The aasausam brought about by visiting the funeral house, by the neighbours and relations will be removed by bathing. Blood relations (by the male side) who observe thudakku are sad at heart. They cannot think of the dead, and cry and with a sad heart perform the spiritual kiriyais. Hence within a certain time they can bathe and remove the aasausam. Here time and bathing are both necessary.

Aasausam may occur in ten ways.

1. Birth
2. Death
3. Cremation
4. Following the coffin
5. Carrying the coffin
6. Crying
7. Eating in the house of the funeral
8. Mixing with them
9. Within a certain period not removing the hair
10. A relation of the dead, not doing the sabindi karanam

These traditions are observed even now in villages

**Birth**

The thudakku at the birth of a child is of four kinds.

1. Abortion within four months
2. Second, fifth and sixth month abortion occurs
3. Within third, seventh, eighth and ninth month abortion occurs.
4. At the beginning of the tenth month natural birth occurs. In the first two instances, in which month the foetus comes out then as many days

the thudakku is observed. for example if the abortion is in the sixth month the thudakku is for six days. If it happens after that and natural birth occurs the thudakku is observed for forty days if it is a female child and for thirty days for the male child. This is for both the parents. If within the first six months abortion take place the father by a head bath removes the thudakku. Those relations who observe thudakku after the fifth month remove it with a bath. If there is complete abortion or if the child dies after birth the father must observe thudakku for ten days. If the child dies within ten days thuddakku by death need not be observed. In natural birth thirty days thudakku must be observed. For the mother for forty days it is observed. On the fortieth day the child is taken to the temple. This tradition is followed even now.

The saiva Kurukkal (one who has received aasariya abishekam) may become clean during the aasausa event. Those saivaites who received theedchai and those who have not strayed from the norms of saiva conduct, praying twice a day (santhiyavanthanam) may observe aasausam for twenty five days, and those who do temple duties observe thudakku for twenty days. For the bramachaari there is no thudakku, because he lives in the guru's abode and learns all the divine books. But the bramachaari who lives with the relations cannot be exempted. Those who receive the third kind of theedchai known as nirvana theedchai and do regular Shiva poojah have only three days thudakku. Those who chant religious hymns (thevaram) in the temple have fifteen days thudakku. Those who sing and dance and play instruments have to observe thudakku for fourteen days.

**Death**

It is the tradition of our country to observe the aasausam of death. That is why this section is written. If a child dies within one month before it is named, immediately it is purified. If death occurs before cutting teeth (about six months) one day thudakku is observed. If a child dies after eleven years total thudakku has to be observed. If a girl dies before marriage the parents should observed thudakku for three days. If the marriage is fixed and the girl dies before marriage, the husband and his relations must observe thudakku for three days. All the shanthy kiriyais must be done by the husband's people. A child that dies after one month may be cremated or buried. After eleven years it is preferable to cremate.

If a male dies, from his side people of seven generations (of his ancestors) will have to observe thudakku. If there is a connection between guru and disciple the thudakku is for three days. For the maternal grandfather, grandmother, uncle and aunt, daughter and son-in-law, and daughter's son all have to observe thudakku for three or six days.

If in the midst of alms giving, sacrifice, or wedding and such auspicious event, or during a civil war, land slide, trees falling, earth quake and such disasters, thudakku caused will be immediately removed. If the thudakku occurs during fasting pleading for a boon, then avoid alms and archanai and continue the fast.

The bride groom, and the one who gives away the bride, the aasariyar who conducts temple festivals, the sponsor, and helpers can be purified immediately. If thudakku occurs while doing srartham or pilgrimage it can be purified immediately.

**Heroic Death**

If a government servant dies while in service during the war, for the relations it is immediate purification. The same way the funeral rites for the dead can be done immediately.

**Tragic Death**

This is of two kinds

1. Done with knowledge
2. Done without knowledge.

In the first instance without manthiras funeral rites (cremation) can be done. Later during the proper time the kiriyai can be done chanting manthiras. The person who does the kiriyais, sabinder has no thudakku. After six months or one year while doing kiriyai for the ancestors of seven generations, he can observe thudakku for one day. If due to insanity one commits suicide one can do service with water and observe thudakku. In the second instance it may happen by thunder, fire, floods or being bitten by poisonous creatures. Here aasausam may be observed and kiriyai can be done.

**Cleaning the articles**

The articles used by the one observing thudakku are also un-clean. When the thudakku is over by sprinkling water and washing may remove the un-cleanliness. If certain things are put aside before thudakku starts, then these articles are not unclean. They can be used for alms or poojah. Gold, cereals, sugar, salt, milk and ghee can be obtained from the house observing thudakku.

**Aasausam in the village**

As long as there is a corpse in the village all will have to observe thudakku. Temple poojah must not be conducted. It is so with siva poojah and other observances. After the corpse is removed from the village, and after atonement, the karma kiriyai is done. This is alright for small villages. In towns where there are many roads people who are far away from the funeral house need not observe thudakku. The boundary is limited by the distance where the poojah bell is heard. This distance may be about 55 yards. If the corpse is in the next road, and this distance is there thudakku need not be observed.

During the temple festivals and kiriyais, a death occurs in the village, the body may be taken to the crematorium and kiriyai may be done. In a metropolis there is no thudakku. Only the persons who touched the body and carried the body and went behind the coffin have to observe thudakku.

The number of days of thudakku has to be calculated. The day of death, for those who have not stuck to the orthodox method of having the three fires lit, it must be observed from the day of death. (to those gurus who light the sacrificial fire, it is calculated from the day of cremation. If birth or death occurs in the night consider it as the day before sunrise. The western custom of taking it as the next day after twelve midnight should not be followed.

If one is born during the thudakku of death, calculate the days according to the day of death. If it happens in the midst of the thudakku of death along with the funeral thudakku the birth thudakku also is removed. If before the thudakku of a funeral is over there is another funeral then the thudakku of the latter and that of the former one are removed together.

If among the sabinders news of death from a far country is heard on the day of the thudakku being removed, for another two days thudakku is observed. For example if a death in a foreign country is known after three months observe thudakku for three nights, and if the news reaches after one year observe thudakku for one day. If a death is heard about the person living abroad, and his brother got the news on the 20th then aasausam is observed for the balance 10 days only. If news of death of one's parents is heard, the son must go through the total aasausam. If the funeral rites or kiriyais are done for them abroad then he should observe aasausam for three days.

During the time of thudakku twice a day prayers (santhiya vanthanam) can be done even mentally. Those who received samaya theedchai may avoid chanting religious texts for a day. Those who got special theedchai while observing aasausam, may perform Shiva poojah. Just as the water on a lotus leaf is detached from it, so he also must be detached from the thudakku. Those who have no piety, strength of mind, and no wisdom may do the poojah within oneself. At that time if there is no guru somebody equal to him must perform the poojah externally. But whatever the status of a person he should not do poojah for the sake of somebody else, in the temple. Those who have aasausam may stay outside the temple premises and worship. Those who have received the highest form of theedchai may enter the outer hall. During thudakku time they should not take flowers for the temple nor wear Rudraksha chain.

**Poopu**

When for the first time a girl has the periods thudakku must be observed for three days. If it occurs within eighteen days thudakku is for one day. Within nineteen days it is for two days, and three days if periods occur within twenty days. Those who believe in the spiritual life will not have a head bath for three days. They can worship in their minds. If knowingly, or unknowingly, they are touched, by head bath and chanting a prayer they can be purified.

**Removing the hair**

When the thudakku is removed a hair cut is necessary, say our elders. In some villages before the funeral rites are done, now shaving is done as a custom. On the day the thudakku is removed, before the kiriyais, hair cutting is done. Hair cutting should not be done after mid noon. When the head is shaved it is called "munditham". If the son cannot do the duty, and another person does the duty with fire, then he can also shave his head.

*Courtesy – Ausausa explanation – by Mr. A. Sabaratnam*

# இந்து ஒளி
மாமன்றச் செய்தி மடல்
All Ceylon Hindu Congress Newsletter

## அமரர் தி. இராசநாயகம் அவர்களுக்கு மாமன்றத்தின் அஞ்சலி



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமாகிய கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமத்தினால் நடாத்தப்பட்டு வந்த மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தின் தலைவராகவும் அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப்பேரவை உறுப்பினராகவும்.

திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபையின் முன்னை நாள் உபதலைவராகவும் அமரராகும்வரை பேரவை உறுப்பினராகவும் திகழ்ந்த முன்னைநாள் கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் திரு.தி. இராசநாயகம் அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு மாமன்றம் தனது வேதனையையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொண்டது.

அமரர் இராசநாயகம் அவர்கள் அரச அதிபராக பதவிவகித்த மிக நெருக்கடியான யுத்தகாலத்தில் தமிழ் மக்களுக்கு தோளோடு தோள்நின்று தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் ஆற்றி அம்மக்களின் மனதில் நீங்காத இடம்பிடித்திருந்தார். தனது பணிக்காலம் நிறைவுற்று முதுமையடைந்தாலும் அன்னார் ஆற்றிவந்த தொண்டு அவரின் முழுமையான அரப்பணிப்புடன் இருந்து வந்தது. கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தின் தலைவராகவும் தொண்டாற்றி இல்லச் சிறுவர்களின் சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்து தன்னை வாட்டிய நோயையும் பொருட்படுத்தாது தொண்டாற்றிய ஓர் உத்தமர். அன்னார் எமது முகாமைப்பேரவை உறுப்பினராக இருந்த காலத்தில் மாமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு தோளோடு தோள் நின்று அளப்பரிய பங்காற்றியவராவார்.

அமரர் இராசநாயகத்தின் இழப்பானது தமிழ்ச்சமூகத்திற்கு முக்கியமாக இந்து மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாரின் துயரில் மாமன்றமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமனை வணங்கிப் பிரார்த்தித்தது.

## மட்டக்களப்பில் நாவலர் மாநாடும் சிவதொண்டர் ஆன்மீக எழுச்சிச் சிந்தனைக்களமும்

அகில இலங்கை இந்து மாமன்றமும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் இணைந்து நடாத்திய நாவலர் மாநாடும் சிவதொண்டர் ஆன்மீக எழுச்சிச் சிந்தனைக்களமும் நிகழ்வானது ஏவிளம்பி வருடம் கார்த்திகைத்திங்கள் 15ம் நாள் (01-12-2017வெள்ளிக்கிழமை காலை 08.30மணிக்கு கல்லடி அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து நாவலர் அவர்களின் திருவுருவ ஊர்வலத்துடன் ஆரம்பமாகி, மட்டக்களப்பு நாவற்குடா, சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவனத்தை அடைந்து அங்கமைந்துள்ள இராசதுரை அரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்விற்கு ஈழத்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் பிரபு பிரமானந்தஜீ ஆகியோர்களின் திருமுன்னிலையில் நடைபெற்றதுடன், மாமன்ற உபதலைவரும், யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குனருமாகிய சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் பிரதம அதிதியாகவும், மாண்புமிகு சீ. யோகீஸ்வரன் அவர்கள் தலைமையும் வகித்துச் சிறப்பித்தனர். மட்டக்களப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.க.பாஸ்கரன், ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.எம்.பவளகாந்தன், சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் திரு.சி.ஜெயசங்கர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டதுடன், விசேட உரையினை இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை தலைவர் திருமதி சாந்தி கேசவன் அவர்கள் நிகழ்த்தினார். மேலும் சைவப்புலவர் திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியம், திரு.ந.புவனசுந்தரம் ஆகியோரது சிற்றுரைகளும் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்து சிவதொண்டர் சிந்தனைக்களம், கலைநிகழ்ச்சிகள் அகியவை மாணவ மாணவியரால் சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டதுடன் மாநாட்டிற்கு வருகை தந்த மாணவ மாணவியருக்கு இலவச அப்பியாசக் கொப்பிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## ஆன்மீகப்பெரியார், தலங்கம க. இராமச்சந்திரா அவர்களின் ஆக்கங்களின் தொகுப்பு (ஆங்கிலத்தில்) நூல் வெளியீடு

ஆன்மீகப்பெரியார், தலங்கம ஸ்ரீ. கதிரேசு இரமச்சந்திரா அவர்களின் ஆக்கங்களின் தொகுப்பு (ஆங்கிலத்தில்) நுஸல் வெளியீடானது, ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 24ம் நாள் (10-12-2017) ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிமுதல், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்க அமரிக்காவின் ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திருமுன்னிலையையும் திரு மா. தவயோகராஜா (பிரதித்தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்) அவர்கள் தலைமையும் வகித்தனர். மாமன்ற சக்தி இல்ல மாணவியரின் இறைவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அமரர் ஸ்ரீ க.இராமச்சந்திரா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்நாடு, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் குமாரவயலூர்

தி.பாலசந்திரன் ஓதுவார் அவர்களின் பண்ணிசை நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடரந்து அமரரின் புத்திரர் வைத்தியகலாநிதி இராமச்சந்திரா பரராஜசேகரம் அவர்கள் வரவேற்புரையை நிகழ்த்தினார்கள்.

ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் 'சர்வோதயம்' இயக்குநர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன மற்றும் மாமன்ற பிரதித் தலைவர் ஆகியோரின் உரைகள் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினரான ஜனாதிபதி சட்டத்தரணியும், மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவருமான கலாநிதி கனகநாயகம் கனக-ஈஸ்வரன் அவர்கள் நுலலை வெளியிட்டு தனது உரையினை நிகழ்த்தினார்.

இறுதியாக அமரரின் மற்றோர் புத்திரரான திரு. இராமச்சந்திரா பாலசுப்பிரமணியம் அவர்களின் ஏற்புரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

1895, நவெம்பர் 05ல் பிறந்த தங்கள் குடும்பத் தலைவரின் 125வது பிறந்த ஆண்டு நிறைவையொட்டி, அன்னாரின் புதல்வர்களால் 2015ல் வெளியிடப்பட்ட, ஸ்ரீ கதிரேசு இராமச்சந்திரா (1895 - 1976) அவர்களின் தத்துவஞானக் கருத்துகளினதும், சொற்பொழிவுகளினதும் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது .

தன் வாழ்வின் இறுதி ஆண்டுகளில், கொம்பிலிருந்து வெளிவந்த "சுநடபைழைரள னுபைநளவ" என்ற ஆன்மீக சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து வெளியிட்டு வந்த, எல்லோரும் போற்றிய சிந்தனையாளரும் எழுத்தாளருமான ஸ்ரீ க.இராமச்சந்திரா, சமயங்களை ஒப்புநோக்குதல், மகாத்மா காந்தி, உலக சமாதானம் போன்ற பல பொருள்களில் பாரெல்லாம் பரவி நடந்த சர்வதேச மாநாடுகளில் உரையாற்ற அழைக்கப்பட்ட ஆன்மீகப் பேரெளியுமாவார்.

## தெய்வ விக்கிரகங்களை சேதப்படுத்தும் விசம செயல்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கடும் கண்டனம்

கடந்த காலங்களில் இந்து ஆலயங்கள் மற்றும் தெய்வ விக்கிரகங்கள் மீது நடாத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் இந் நாட்டில் வாழும் இந்து மக்களை மிகவும் வேதனை கொள்ளச் செய்துள்ளது.

மன்னாரில் இருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் பாதையில் தள்ளாடி விமான நிலையத்தினருகில் காணப்பட்ட விநாயகர் விக்கிரகம், நாயாற்றுச் சந்தியில் உள்ள விநாயகர் விக்கிரகம் மற்றும் மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் செம்மண்தீவுப் பகுதியில் இருந்த விநாயகர் விக்கிரகம் என்பனமீது மேற்கொள்ளப்பட்ட மனிதத்தன்மையற்ற - திட்டமிட்ட சேதப்படுத்தலானது மன்னார் மாவட்டத்தில் வாழும் இந்துக்களையும் இலங்கை வாழ் இந்துக்களையும் மிகவும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

இவ்வாறாக தெய்வ விக்கிரகங்களை சேதப்படுத்துதல் போன்ற அதர்மமான செயற்பாடுகளால் இந் நாட்டில் மேலும் மேலும் அழிவுகளும் இயற்கை அனர்த்தங்களும் ஏற்படும் என்பது இயற்கையின் வழிபட்டு அனாதியாய் தோன்றிய இந்து மதம் உணர்த்தி நிற்கும் யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

எவரொருவர் அடாத்தாக மற்றொருவர் அல்லது அவரது மத நம்பிக்கை மீது அதர்மமான காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை அல்லது சேதப்படுத்தலை செய்கின்றாரோ அவர் அல்லது அந்த சமூகம் தர்மத்தின் தீர்ப்புக்கு உட்பட்ட சொல்லொணாத் துயரங்களையும் அழிவையும்கூட எதிர்கொள்ளும் என்பதை தொன்மையான இந்துமத புராணங்களும் இதிகாசங்களும் உணர்த்தி வருகின்றன. அதை நாம் கடந்கால நிகழ்வுகளினூடாக நேரிலும் கண்டிருக்கின்றோம். இவ்வாறான தொடர் செயற்பாடுகள் வளமான இலங்கையின் எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே இவ்வாறான மிலேச்சத்தனமான சேதப்படுத்தல்களை மேற்கொள்பவர்கள் தமது தீய நோக்கத்தை கைவிட்டு எதிர்காலத்தில் இவ்வாறான செய்பாடுகளை கைவிட வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

மன்னார் மாவட்ட காவல்துறையினர் இது தொடர்பான நீதியானதொரு விசாரணையை முன்னெடுத்து தவறு செய்தவர்களை நீதியின்பாற் பாரப்படுத்தும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## தெற்காசியாவின் மதங்களுக்கிடையிலான நல்லிணக்க மாநாட்டில் இந்து மாமன்றப் பிரதிநிதி

தெற்காசியாவில் பன்முகத்தன்மை உள்ளடங்கும் சமூகங்களை வளர்ப்பது தொடர்பாகவும் அதற்கு மதத்தலைவர்கள் மற்றும் நடிகர்களின் பங்கு தொடர்பாகவும், தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கடந்த நவெம்பர் மாதம் 29ந் திகதி முதல் 30 திகதி வரை சர்வதேச பிரதிநிதிகள் அடங்கிய மநாநடு ஒன்று இடம்பெற்றது.

அம் மாநாட்டில் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் சார்பில் மாமன்றத்தின் பிரதித் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய கலாநிதி ம.பாலகைலாசநாதசர்மா அவர்கள் பங்கேற்று சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

இம்மாநாடானது ஆசிய நாடுகளில் மதங்களின் பெயரில் நடைபெறும் வன்முறைகளைத் தடுத்தல், அனைத்து மதங்களும் நல்லிணக்கத்துடன் தத்தம் மக்களை வழிநடாத்தல், ஒரு மதம் இன்னொரு மதத்தின்மீது ஏற்படுத்தும் சவால்களை எதிர்கொள்ளல், இவ்விடயத்தில் மதத் தலைவர்கள், நடிகர்கள் மற்றும் நிறுவனங்களின் வகிபாகம் - பரஸ்பரம் மதித்தல் போன்ற பல முக்கியமாக செயற்பாடுகளினூடாக தெற்காசியாவில் சமாதானத்தை கட்டியெழுப்புவதை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகின்றது.

## கொழும்பில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா மற்றும் குருபூசை நிகழ்வு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை மற்றும் ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் அகில இலங்கை இந்து மாமன்றம், இந்து சமய கலாசார அலவல்கள் திணைக்களம் மற்றும் இந்து வித்தியாவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையில் 16-12-2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா மற்றும் குருபூசை நிகழ்வு நடைபெற்றது.

திரு.எஸ். தில்லைநடராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மேல்மாகாண ஆளுநர் கௌரவ கே.சி.லோகேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

யாழ். பல்கலைக்கழக வேந்தர், பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் கௌரவ அதிதியாகவும், மாமன்ற பொதுச் செயலாளரும் இந்து வித்தியாவிருத்திச் சங்க தலைவருமாகிய திரு.வே.கந்தசாமி, பிரித்தானிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையைச் சேர்ந்த வைத்தியகலாநிதி சி.சோமசேகரம், நாவலர் நற்பணி மன்றத் தலைவர் திரு.ந.கருணை ஆனந்தன், ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றதத் தலைவர் திரு.சி.தியாகராஜா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கனடா சைவசித்தாந்த பீடத்தினைச் சேர்ந்த வைத்தியகலாநிதி இ.லம்போதரன் அவர்கள் நாவலர் தொடர்பான சிறப்புரையினை ஆற்றினார்.

## தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 93வது பிறந்தநாள் அறக்கொடை விழா

யாழ். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 93வது பிறந்தநாள் அறக்கொடை விழா 07-01-2018 அன்று ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு முன்னாள் பிரதம நீதியரசர், உயர்திரு க.ஸ்ரீபவன் தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பெண்கள் பிரிவு, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, உதயம் விழிப்புலனற்றோர் சங்கம் (மட்டக்களப்பு) ஆகிய நிறுவனங்களுக்கு அறக்கொடையும், மன்னார் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரத்தில் 2018ல் கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவரையும் கருத்திற்கொண்டு 100 மாணவர்களுக்கு சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியமும் அறக்கொடைகளாக வழங்கப்பட்டன.

மேலும் வாழ்நாட் பேராசிரியர் கலாநிதி உமா குமாரசாமி, திரு.நாகலிங்கம் தவநாதன் (நிர்வாக அலுவலர் - ஸ்ரீ துரக்காதேவி தேவஸ்தானம்), சிவத்திரு சி.சுப்பிரமணியம் செட்டியார் (பிரதம அறங்காவலர் - புதிய கதிரேசன் கோயில், பம்பலப்பிட்டி), இசைவித்தகர் திரு.வி.கே.நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், அளவெட்டி), செல்வி வைத்தியகலாநிதி ஈஸ்வரி கந்தையா (தெல்லிப்பழை) ஆகியோர் 2018ம் ஆண்டுக்கான "சிவத்தமிழ் விருது" இனையும் பெற்றுக் கொண்டனர்.

# இந்தச் சுடரில்...


| | |
|---|---|
| ❖ பஞ்ச புராணங்கள் | 1 |
| ❖ ஆன்மீகச்சுடரின் அருள்மடல் | 3 |
| ❖ மாமன்றத்தின் தைப்பொங்கல் செய்தி | 4 |
| ❖ நேர்காணல் | |
| ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் | 6 |
| சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் | 7 |
| ❖ மாமன்றத் தலைவரிடமிருந்து... | 9 |
| ❖ இதயங்கள் பேசுகின்றன... | 10 |
| ❖ தெய்வத்திருமகளின் இந்துசமயப் பிரசுரங்கள், வெளியீடுகள் | 11 |
| ❖ ஆளுமைமிக்க அம்மையாரின் ஆலய முகாமைத்துவம் | 14 |
| ❖ தைப்பூச திருநாளும் அதன் சிறப்பும் | 18 |
| ❖ தமிழர் திருநாள் | 20 |
| ❖ மார்கழி மாத சிறப்பு | 22 |
| ❖ நாவலர் வகுத்த புதுப்பாதை | 25 |
| ❖ இந்து ஒளி சஞ்சிகையின் இருபத்தொரு ஆண்டு நிறைவும் யாழ்.பிராந்திய பணிமனையின் பங்களிப்பும் | 26 |
| ❖ "கடவுளைக் கண்ணால் காண முடியுமா?" | 27 |
| ❖ மனிதனே அழித்துவரும் மனிதனின் கற்பகவிருட்சம் - II துளசி | 28 |
| ❖ வாழ்வை வளப்படுத்தி இருப்பை வெளிப்படுத்தும் சமயக்கல்வி | 31 |
| ❖ இருக்கு வேதம் கூறும் அறிவியல் கருத்துக்கள் | 32 |
| ❖ உருத்திராக்கம் | 34 |
| ❖ பிட்டுக்கு மண் சுமந்த பெருமான் | 36 |
| ❖ ஆறுமுகநாவலர் அடிச்சுவட்டை பின்பற்றிய வகையிலான சிறப்புச் சொற்பொழிவு | 40 |
| ❖ திருவெம்பாவை - திருப்பாவை ஒரு முழுமைப் பார்வை | 42 |
| ❖ சாமகானமும் பழந்தமிழ் இசையும் | 46 |
| ❖ விவேகானந்தர் வாழ்க! | 47 |
| ❖ விரதங்களும் விஞ்ஞானமும் | 48 |
| ❖ சிவயோக சுவாமிகள் காட்டிய வழி | 50 |
| ❖ இறைவனின் அர்த்தநாரீஸ்வர வடிவம் | 52 |
| ❖ இந்து சமய வளர்ச்சியில் சூரிய வழிபாடு பெறும் முக்கியத்துவம் | 54 |
| ❖ இசைக்கலையின் வளர்ச்சி | 56 |
| ❖ திருமூலரின் வாழ்வியல் சிந்தனைகள் | 58 |
| ❖ Some aspects of God Siva | 60 |
| ❖ Explanation of Aasausam | 63 |
| ❖ மாமன்ற செய்திமடல் | 66 |

# வளர்ச்சிப் பாதையில் இந்து ஒளி



HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/37/NEWS/2018

# வளர்ச்சிப் பாதையில் இந்து ஒளி



50வது ஆண்டு
பொன் விழா மலர்
பாகம் I - II

60வது ஆண்டு
வைர விழா மலர்
பாகம் I - II







இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.